சிவமயம்

# திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்

(பாஞ்சாலங்குறிச்சிச் சண்டைகளுள்பட)

1120

10 AU 1931

இது

எட்டயபுரம்

எஸ். குருகுஹதாஸப் பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்றது.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

---

1931

*All Rights Reserved*] [விலை ரூபா 1-12-0.

TO

HIS HIGHNESS

RAJA JAGA VIRA RAMA KUMARA VENKATESVARA

ETTAPPA MAHARAJAH AIYAN AVERGAL

RAJAH OF ETTAYAPURAM

WHOSE ILLUSTRIOUS GREAT GRAND FATHER WITH

UNFLINCHING LOYALTY STOOD

BY

THE PARAMOUNT BRITISH EAST INDIA COMPANY

DURING POLIYAGAR WARS

THIS WORK

IS


WITH PERMISSION

DEDICATED

BY


HIS HIGHNESS' GRATEFUL, SINCERE AND HUMBLE SERVANT

*THE AUTHOR*





H. H. THE MAHARAJAH OF ETTAYAPURAM



எஸ். குருகுஹதாஸப் பிள்ளை

# முன்னுரை

இந்நூற்குத் திருநெல்வேலி ஜில்லாச் சரித்திரம்
எனப் பெயர் புனையாது திருநெல்வேலிச் சீமைச் சரித்
திரம் என்றதென்னையோ வெனின், 'ஜில்லா' என்ற
சொல் நம்நாட்டில் 1744 கி. பி. க்குப் பிற்பட்ட காலத்
தியதாலும், இதனுட் காணப் படுவனவாயுள விஷயங்
கள் பல அக்காலத்திற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு
முன்னர் நிகழ்ந்தனவென்றது பற்றியுமாம் என்க.
அந்தகாரங் குடிபுகுந்துள்ள இடத்திற் சிறியதோர்
ஜ்வாலையைப் பொருந்தியுள்ள வெளிச்சம் எவ்வாறு
அவ்விருளைப் போக்குவிக்குமோ அவ்வாறே இந்
நூலும் இந்த ஜில்லாவின் பூர்வ-மத்திய-தற்கால நிலை
கள் எத்தன்மையனவாக இருந்தன வென்பதைத் தெரி
யாதாரின் உள்ளக்கிடைக்கையின் அந்தகாரத்தைச்சிறி
தளவேனும் அகற்றல் கூடுமென்றது எமது துணி
பாதலால் இதனை இயற்றியுள்ளேம். ஒரு நாட்டின்
முன்னேற்றத்திற்குக் காரணங்களாம் பல்வேறு சாத
னங்களை அடையுமாறுள வழிகளைத் தோற்றுவிக்கும்
ஆற்றல் சரித்திர நூல் ஒன்றிற்கே சிறப்பாதல் பற்றி
அதனை, அநுபவ வாயிலாகக்கண்ட தத்துவ நூல் என்
றார் அறிவின்மிக்கார். இதனுட் புதைந்து கிடக்கும்
விஷயங்களில் இராஜபக்தி பிரதானமென்றதற்குப் பிர
மாணங்கள் காணப்படுவனவுட் புறப் பொருட்டுறை
களிற் காணப்படும் 'மூதின் முல்லை' என்ற துறைக்குச்
சான்றுகளும் ஆங்காங்குள. அத்துறை வருமாறு :—

> " அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
> மடவரல் மகளிர்க்கும் மறமிகுத்தன்று,"

என்றதனாற் பண்டைத் தமிழகம் வீரம் செறிந்து
நின்றதெனத் தெரிவதுடன், அவ்வீரர்கள் தங்களது

தேயத்துக்கும் அரயற்கும் உயிரைப் பக்தியினீட்டால், தியாகஞ் செய்திருக்கின்றனர் என்றும் பெறலாகின்றது. இத்தகைய வீரத்தையும் பக்தியையும் அத்தாய்மார் அவர்களது புதல்வர்களுக்கு முலைப்பாலூட்டும் பருவமுதற் புகட்டியுளார் என்றது திண்ணம். அத்தகைய மக்களை வீரர்களாக்குவிக்கும் கடமைகள் எவர் எவர் பாற்பட்டன என்றதையும் நன்குபட வோர் நல்லிசைப் புலமைவாய்ந்த பொன்முடியார் என்னும் பெண்மணியார் கூறியுளார். அஃதாவது :—

" ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே.
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே.
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே.
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே.
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே "

—புறம். 312.

என்புழி, ஆண்டன்மை கொண்டு உருவெடுக்கும் ஒவ்வோர் மகற்கும் வீரம் என்றது உடன்பிறந்த வோர் முக்கிய அம்சமென்றதும் அம்மகனை நன்னடக்கையிற் செல்லுமாறு செய்வித்தல் அரயற்குரித்தென்றும் பெறலாயது. மேலும் இந்நூலிடை காணப்படும் ஒரு வீரனது செய்கைக்கும் அன்னையின்றாயின் பெருந்தகைக்குஞ் சான்று சிறிதொத்த தன்மையிற் புறநானூறிற் காணக்கிடக்கின்றது. அஃதாவது :—

" நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள், சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற,
மண்டமர்க் குடைந்தன னாயின், உண்டவென்
முலையறுத் திடுவென், யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய



படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

—புறம் 278.

நரம்புந் தோலுமாக வற்றியவோர் கிழவி, தன் மகன் ஒருவன் போர்முனையில் வலியழிந்து யுத்தத்தில் வெங்காட்டிச் சென்றனன் எனப் பலர்சொல்லக்கேட்டு 'அவ்வாறு அவன் புறங்கொடுத்து ஓடினனாயின், அவன் பாலுண்டு வளர்தற்குக் காரணமாயிருந்த என் முலையை அறுத்திடுவேன்' என்று கோபங்கொண்டவளாகி வாள் ஒன்றைக் கையிற்பிடித்துப் போர்க்களம் புகுந்து, வீழ்ந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டித் தேடி வருபவள், இருதுண்டங்களாகக் கிடந்த தன் மகனைக்கண்டு அவனைப்பெற்ற போதடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியுற்றனள்" என்றது இதன் கருத்தெனினும் அன்னவள் தன் அரயற்குரிய நலத்தை எவ்வாறு பொன்னேபோல் மானித்திருந்தனள் என்றது மிதனாற்பெறக் கிடைக்கின்றதன்றோ ?

" தருமமும் ஈதேயாம் தானமும் ஈதாம்
கருமமுங் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப என்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின் "—(புறத்திரட்டு)

என்மகன் றன்னலங் கருதாது அரயனின் நலங் கருதிப்போர்செய்து அக்களத்திலேயே இறந்ததால், அச்செயலினும் சிறந்த தருமமும் தானமும் கருமமும் பிறவில்லை என்று அவ்வீரனது தாய் மகிழ்வுற்றனள் என்றது கருத்தாம். இம்மகிழ்ச்சியும் இராஜபக்தியால் மீதூற்றதாம்.

வயிற்றிற் சிசுவுடன் இறக்கும் பெண் ஒருத்தியின் வயிற்றைக் கிழித்து அதனுட்கிடக்கும் பிண்டம் ஆண் எனத் தெரியின் அதனை வாள்கொண்டு வெட்டிய பின்னர் அவ்வெட்டுண்ட பிண்டத்தையும் அதன் தாயுடன் சேர்த்துக்கொளுத்தி விடுவது முற்காலத்

திய வழக்கமென்றதிற் போர்க்களத்தில் வாள்பிடித்துக் காயமடைந்து சாகவேண்டியதிருக்க அதற்கு மாறாக உனக்கு இவ்வாறானதால் உன்னை இவ்விதம் செய்ய நேர்ந்ததென்றது குறிப்பாற் காட்டப்படும் அநுஷ்டானமாம். இக்காலத்திலோ அவ்வாறுசெய்தல் அநாகரிகமெனக்கருதி அதன் உடலின் ஏதேனுமோர் பாகத்தில் முட்கொண்டு கீறிவிடுகின்றனர்.

சீமந்தம் செய்து கொள்ளும் ஒரு பெண்டிரை 'வீரம் பொருந்தியவோர் ஆண் குழந்தையை நீ பெறக்கடவாய்' என்று பெரியார் ஆசீர்வதிப்பது பண்டைக் காலத்திய வழக்கமென்றதில் ஆடவர்க்கு வீரம்தாயிடமிருந்தே தோன்றுகிறதென்றது தெளிவு.

மேலே சொல்லிய வாங்கு தமிழ்நாடு ஆதியில் அரும்பெருஞ் செயல்களுக்கு நிலைக்களமாயிருந்ததுடன் அதிற்றோன்றிய வீரர்களும் தேயத்தின்பொருட்டும் வேந்தன் பொருட்டும் தங்கள் தங்களது உயிரை ஆத்மபரித்தியாகஞ் செய்திருக்கின்றனர்கள். அத்தகைய வீரர்களுள் எவரேனும் அரயற்காவது நாட்டின் பொதுநலத்திற்குமாறாகவாவது தகாதவைகளைச் செய்யின் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையோ அதே குற்றத்திற்கு இக்காலத்தில் விதிக்கப்படுந்தண்டனையிலுங்கொடியதாகவே இருந்ததென்று தெரிய வருகிறது.

யாமும் நம்முன்னோர்களை யொப்ப இராஜபக்தி வாய்க்கப்பெற்றவராகி நாட்டிற்கும் அரயற்கும் மாறுபடாததன்மையில் நிஜவிசுவாசிகளாக இருந்துகொண்டு வரவேண்டியதென்றதை வற்புறுத்துவதுடன் நம் சக்கரவர்த்தியார்க்கு நீண்ட ஆயுளைக் கொடுக்குமாறுஞ் சதா ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.

எட்டயபுரம், } எஸ். குருகுஹதாஸப் பிள்ளை,
14—4—1931. }

நூலாசிரியர்.

## இந்நூலுக்கு மேற்கோள்களாக எடுத்துக்கொண்ட புஸ்தகங்களாவன

### I. தமிழ்

1. தேவாரம்.
2. திருவாசகம்.
3. திருப்பணிமாலை.
4. சுலோசன முதலியார் மீதுள்ள தனிப்பாடல்.
5. கான்சாசண்டை.
6. சாமிதீக்ஷிதரின் வம்சமணித்தீபிகை.
7. தனிப்பாடற்றிரட்டு.

### II. இங்கிலீஷ்

1. ஆரம்துரையின் ஹிந்துஸ்தான் சரித்திரம்.
2. உவெல்ஷ்துரை எழுதியுள்ள இராணுவச் செய்கைகளின் முன்னுள்ள ஞாபகங்கள்.
3. ஸ்டுவேர்ட்டு துரையின் திருநெல்வேலிச் சரித்திரம்.
4. நெல்ஸன் துரையின் மதுரைச் சரித்திரம்.
5. டெயிலர்துரையின் சரித்திரக் கையெழுத்துப்பிரதிகள்.
6. திருநெல்வேலி கெஜட்டீர்.
7. மதுரை கெஜட்டீர்.
8. பேட்டுதுரையின் திருநெல்வேலிச் சரித்திரம்.
9. இராஜாராமராவின் இராமநாதபுரம் மானுயல்.
10. ஸூவெல்துரை எழுதிய ஞாபகத்தைவிட்டுக் கழிந்த ஏகாதிபத்தியம்.
11. ப. சூரியநாராயணராவ் எழுதிய என்றும் ஞாபகத்தைவிட்டுக் கழியாத ஏகாதிபத்தியம்.
12. ஆனந்தரங்கம் பிள்ளை டைரி (1736—61).

13. கிரன்பாதிரி துரையின் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரின் யுத்தங்கள்.
14. பிஷொப்கால்டுவெல் துரையின் திருநெல்வேலிச்சரித்திரம்.
15. சங்குண்ணி மேனனின் திருவாங்கூர்ச் சரித்திரம்.
16. கணபதி பிள்ளையின் எட்டயபுரத்துச் சரித்திரம்.
17. தமிழியன் ஆன்றிகொரி என்ற தமிழரின் பழமை.
18. பூரணலிங்கம் பிள்ளையின் தமிழ்ப் பாஷை.
19. வைபர்ட்டு துரையின் மதராஸ் இஞ்சினீர்.
20. இந்தியாவில்ஆங்கிலேயர்களின் இச்சைகளின்நோக்கம்.
21. ஸுவெல் துரையின் சிலாசனம்.

அரசாங்கத்துச் சிலாசன பரிசீலன அதிகாரியால்த் தயாரிக்கப்பட்டு 28-7-1910-ல் அரசாங்கக் கட்டளையில் பஹிரங்க இலாகா 665-வது எண் எனக் காணப்பட்டு வெளியிடப்பட்ட குறிப்புப்படி திருநெல்வேலிச் சீமையில் அவ்வப்போது பிற்காலத்தில் பாண்டியர்களாக அதிகாரம் பெற்றவர்கள் :—

| | | | |
|---|---|---|---|
| 1. | பராக்ரம பாண்டிய தேவ ... | கி. பி. | 1365 |
| 2. | பராக்ரம பாண்டியன் ... | ... | 1384 |
| 3. | ஜடவர்ம குலசேகரன் ... | ... | 1395 |
| 4. | அரிகேசரி பராக்ரம பாண்டியனும் | | |
| 5. | மாறவர்ம வீரபாண்டியனும் ... | ... | 1422 |
| 6. | அழகன் பெருமாள் குலசேகரன் | ... | 1430 |
| 7. | வீரபாண்டியன் ... | ... | 1437 |
| 8. | ஷை ஷை ... | ... | 1475 |
| 9. | பராக்ரமபாண்டிய குலசேகர தேவ | ... | 1479 |
| 10. | பராக்ரம பாண்டியன் ... | ... | 1516 |
| 11. | ஜடிலவர்ம ஸ்ரீ வல்லபன் என்ற அபிராம பராக்ரமனும் ... | ... | |



| | | | |
|---|---|---|---|
| 12. | மாறவர்ம ஸுந்தர பாண்டியனும் | கி. பி. | 1533 |
| 13. | குலசேகரன் என்ற பெருமாள் பராக்ரமனும் ... | ... | 1543 |
| 14. | விக்ரமபாண்டியனும் ... | ... | |
| 15. | கோனேரிமெய் கொண்டான் | ... | 1550 |
| | குலசேகர தர்மப்பெருமாள் ... | ... | 1562 |
| 16. | ஸ்ரீவல்லப அதிவீரராமன் ... | ... | 1572 |
| 17. | குலசேகரபராக்ரம அழகன் சொக்கன் | ... | |
| 18. | அபிராம வரதுங்கராமனும் ... | ... | 1586 |
| 19. | வீரபாண்டியனும் ... | ... | 1615 |
| 20. | சீவலமாறன் ... | | |

குறிப்பு :—6-வது எண்ணிலுள்ளவர் 4-வது எண்ணிற் கண்காட்டப்பட்டாருக்குத் தம்பியார். 13-14-15 எண்களிற் சொல்லப்பட்டிருப்பவருக்குச் சுதர் டோர் 11-வது எண்ணிற் கூறப்பளாவர், 16-வது தொகையிலுள்ளார் 15-வது எண்ணிற் கூறப்பட்டாரின் புதல்வர் எனத் தெரியவருகிறது.

உ

# திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்

## முதலாவது அத்தியாயம்

### பூர்வ காலத்தியது

*திருநெல்வேலி என்ற பேருக்குக் காரணம்*

இந்த ஜில்லாவின் தலைநகரான திருநெல்வேலி
என்றது மூங்கில் அடர்ந்த காடாக ஆதியில் இருந்த
தாகவும் ஆங்குச் சிவலிங்கம் ஒன்று
உற்பத்தியாக, அதன் விசேஷ காரண
மாக ஜன சமூகம் ஆங்குக் குடியேறின
வென்றும், அவருள் வேதசன்மா என்ற
வர் ஒரு நாள் அவரது வீட்டின் வாச
லின் முன்பாக நெல்லை யவித்து உலரும்படி போட்டு
விட்டு ஸ்நானத்தின் பொருட்டு நதிக்குச் சென்றதாக
வும், அங்கு ஸ்நானம் பாதி முடிந்தும் பாதி முடியாமலு
மிருக்கையில் மேகங்கள் ஆகாயத்தில் திரள்கள் திரள்
களாகக் கூடிப் பெரும் மழையைச் சொரியவும், நெல்
பூராவும் மழையினால் அரித்துக்கொண்டு போயிருக்கப்
படுமோ என்ற கவலையுடன் ஓரே ஓட்டமாக வீடு
வந்து சேர்ந்து நெல்லைப் பார்க்கவும், நெல்லில் ஒரு
துளியேனும் படாமலும் பாவலாகக் கிடந்த நெல்
லைச் சுற்றித் தண்ணீர் ஓட்டம் சிறிதளவேனு மில்லா
திருக்கக்கண்டு போனந்தத்தில் மூழ்கினவராகி, சிவ

பிரானை ஸ்தோத்திரம் செய்து, ஆநந்தத்தால் கண்மாரி பொழிந்து கடவுளே அவருடைய வருமைக்கிரங்கி நெல்லைச் சுற்றி வேலியாக நின்று காப்பாற்றினாரென்று பலவாறாகத் துதித்தன ரென்றும், அதன் காரணமாக மூங்கிற்காடென்ற பூர்வ நாமம் அதற்கு நீங்க, அன்று தொட்டு அதற்குத் திருநெல்வேலி யென்ற பெயருண் டாயதாம்.

இந்த மூங்கிற்காடு சம்ஸ்கிரதத்தில் வேணு வனம் எனப்படும். இதனை மூங்கிற்காடு, வேணுவனம், நெல்வேலி, நெல்லையம்பலம், நெல்லூர், சாலிவேலி, சாலிவாடி, சாலிநகர் என்றாதிய பெயர்களாற் குறிப் பிடலாயிற்று. இதற்குச் "செப்பறை" என்றோர் மறுபெயர் காணப்படலால், அம்பலங்கள் ஐந்தினுள் செப்பறை யென்றதனை நெல்லையம்பலம் எனக் கூறலு முண்டாம். அம்பலங்கள் ஐந்தாவன :—இரத்ந சபை என்ற திருவாலங்காடு, பொன்னம்பலம் என்ற கனக சபை அதாவது சிதம்பரம், வெள்ளியம்பலம் என்ற மதுரை, செப்பறை என்ற நெல்லையம்பலம், அதா வது திருநெல்வேலி, சித்திரசபை என்ற திருக்குற் றாலமுமாம்.

இது பூர்வமுதல் பாண்டிய நாட்டினுள் அடங்கி யது. தற்காலத்தில் திருநெல்வேலி என்று அழைக் கப்படும் பெயரால் ஓர் ஊர் சங்ககாலத்தியச் செய் யுள்களிலேனும், அன்றேல் அதனை யடுத்துள்ள பிந் திய காலத்திய நூல்களிலேனுங் காணப்படவில்லை என்றது உறுதியாயதால், இந்த மாகாணத்திற்கு ஏதேனும் ஒரு மறுபெயர் சங்க காலத்திலேனும் அல்



லது அதனை யடுத்துள்ள பிந்திய காலத்திலேனு மிருந் திருக்க வேண்டுமென்ற கேள்விக்குத் தக்க விடை யைத் தேடிப் பார்த்ததில், பாண்டியிலடங்கிய இப் பகுதிக்கு அக்காலம் தென்பாண்டி என்ற பெயருள் அடங்கி யிருந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தேவாரத்தில் திருநெல்வேலி காணப்படல்

தேவாரம் பாடிய மூவர்களில் ஒருவரான திரு ஞானசம்பந்த சுவாமிகளால் திருநெல்வேலி என்ற பெயருடன் அன்னாரது தேவாரத் திருப்பதிகத்தில் அது காணப்படலால், அவரது காலத்திற்குச் சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்ன ரேனும் திருநெல்வேலி இப்போதுள்ள ஸ்தல விசே ஷத்துடன் சிறந்து விளங்க நியாயமிருக்கலா மென்று ஊகித்தல் தவறுடையதாக மாட்டாது.

திருஞானசம்பந்த மூர்த்திகளின் தேவாரம், பண் - சாதாரி, மூன்றாம் திருமுறை,

"மருந்தவை மந்திர மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்து தண்புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
யுறைசெல்வர் தாமே"

"என்றுமோ ரியல்பின ரெனநினை வரியவ ரேறதேறிச் [வே
சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும் பலிகொளு மியல்பது
துன்றுதண் பொழில்நுழைந் தெழுவிய கேதகைப் போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வேலி யுறைசெல்வர் தாமே"

“பெருந்தண் மாமலர்மிசை யயனவ ரனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வேலி யுறைசெல்வர் தம்மை
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுண் ஞானசம்பந்தன் சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியாடக் கெடு மருவினையே”

தாருகாவன ஐதிஹ்யம் இங்கு நடந்ததாகப் புராணங் கூறுகின்றது. பிக்ஷாடனத் திருவுருவம் சுவாமியின் முதற் பிரகாரத்தின் மேற்பக்கத்திற் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளது.

அனவாத நாதன் என்றது

இந்த ஜில்லா, நவாபுவின் ஆக்ஷியிலிருந்த சிறிய கால அளவின்போது, ஒரு முகமதிய உத்தியோகஸ்தரின் மனையாளுக்குநோய்கண்டு மரணத் தருவாயி லிருக்கிறாள் எனத் தெரிந்து கொண்ட அன்னவளது புருஷன், ஆண்டுள்ள வைதிகப் பெரியாரை அழைப்பித்து அன்னோரிடம் வியாதி நீங்கும் வகைக்குப் பரிகாரங்களைக் கேட்க, அதற்கு அன்னோர் ‘ஆங்குள்ள கோயிலுக்குப் பிரார்த்தித்துக் கொள்ளின் நோய் விலக இடனுண்டு’ எனச் சொல்லக்கேட்டு அவ்வாறு பிரார்த்தித்துக் கொள்ளவும், அன்னாரது பத்தினியார் நோயினின்றும் விடுதலை யடையப்பெற்று, சுகஜீவியாக இருக்கக் கண்ட அன்னார், அவ்விந்துக் கோயிலுக்குப் பெரும் பொருளை ரொக்கமாகவும் நிலமாகவும் சாஸ்வதமாகக் கொடுத்து, அக்கோயிலின் தென்கிழக்கின் மூலையின் உட்பிரகாரத்தில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து, அதனை ‘அனவரதகான்’ என்ற பெயரால் அழைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுவதில் ஒரு கால் திருநெல்வேலிச் சீமையை முகமது அலி நவாபு



வின் ஸ்தானாதிபதியாக ஆண்டுகொண்டு வந்த அன்னார்
சகோதரர் முகமது மாவஸ்கானின் பத்தினியாராக
இருக்க, அன்னாரது சகோதரரான நவாபுவிற்குந் தனக்
கும் பிதாவான அன்வார்-உட்-டீன் கானின் பெயரை
இப்பிரதேசத்தில் சாஸ்வதமாக்குவதற்கு அன்னோர்
பெயரால் ஓர் ஆலயம் கோயிலினுட் கட்டப்பட,
அஃது நாளடைவில் அனவரதநாதன் என்று மாறி
யது போலும். கான்=கோன்=நாதன் ஆகியவை
ஒரு பொருள் குறித்தல் என்றதால், அது அன்று
தொடங்கி அனவரதநாதன் என்று வழங்கலாயது
போலும். நெல்லைநாதருக்கு அனவரத நாயகம் என்ற
பெயரைக் குறித்துள்ள செய்யுள்கள் 18-ம் நூற்
றாண்டிற்கு முன்னம் இருந்தில வென்றதும் இதனை
வற்புறுத்துகின்றன. அன்னாள் அதற்கு மறுவருஷம்
ஓர் ஆண் மகவையும் ஈன்றனள். நவாபு அன்வார்
உட்டீன்கானுக்கு மற்றோர் சகோதரர் அப்துர்ரஹிம்
என்றொருவ ரிருந்தனர். அவர் திருநெல்வேலிச்
சீமைக்கு இன்னிஸ் துரையுடன் சென்றிருந்த விவரங்
கள் பின்னர் குறிப்பிடப்படும்.

இந்த ஜில்லா இந்தியாவின் தென்கோடியில் ஒரு
சிவிலியன் கலெக்டரின் பரிசீலனைக்குட்பட்டு இரா
ஜாங்க அமைப்பில் நடைபெறுகின்றது.

தாம்பிரவருணி நதியின் பெருமை

சென்னை இராஜதானியில் செழிப்பில்
காவேரிக்கு அடுத்த தரமாக மதிக்கப்
படுவதும் இந்த ஜில்லாவே எனினும்,
காவேரி தீரத்திலுள்ள நஞ்சைகளின் வளப்பத்தைக்
காட்டிலும் இந்த ஜில்லாவின் பிரதான நதியான தாம்

பிரவருணியின் தீரத்திலுள்ள நஞ்சைகளே மேலான
வை யெனலாம். தஞ்சாவூர் ஜில்லாவில் வேலி ஒன்
றுக்கு முதல் தரத்தில் நயமான நஞ்சையின் மதிப்புக்
கிரயம் இப்போதுள்ள கால விலைப்படி பதினாயிர
ரூபாய்களாகு மெனில், அதே தரமுடையதும் நான்
கில் ஒரு பங்குமான கோட்டை ஒன்றுக்கு நயமான
நஞ்சையின் மதிப்புக் கிரயம் அம்பா சமுத்திர
முதலிய இடங்களில் ஏழாயிர ரூபாய்களாகு மெனில்,
காவேரியின் செழிப்பிலுந் தாம்பிர வருணியின்
செழிப்பே சிறந்ததென்பது நிச்சயமாகும். தாம்பிர
வருணி நதி வளப்பமுடையதென்ற காரணத்தால்
அதன் தீர வாசிகளும் அறிவிற் சிறந்துள்ளார் எனச்
சொல்லல் பொருத்தமுடைத்தாம். நமது பரதநாட்
டின் வாசிகளுள் கங்கை, பிரமபுத்திரா, சிந்து, காவேரி,
தாம்பிரவருணியாகிய நதிகளின் தீரங்களில் வசிப்
போர்களே அறிவிற் சிறந்து விளங்குவதுங் குறிப்
பிடத் தக்கதோர் விஷயமாகும். தாம்பிரவருணி விஸ்
தீரணத்திற் சிறியதாயினும் வளப்பத்திலும் தூய்மை
யிலுஞ் சிறந்து விளங்கல் பற்றி அதனை இந்தியாவி
லுள்ள புண்ணிய நதிகளில் ஒன்றாகக் கொண்டாடப்
படுவதுமன்றி பூர்வகாலந் தொட்டுப் புராணங்களிலும்
இதிகாசங்களிலும் அதன் பெருமை நன்கு கொண்டா
டப்பட்டு வந்திருக்கின்றது. புண்ணிய தீர்த்தங்
களுக்கு அநுஷ்டான தெய்வமான புஷ்கரராஜன் ஒவ்
வொரு வியாழன் ஆண்டினும் ஒரு ராசியினின்று மற்
றோர் ராசிக்குப் பிரவேசிக்கும்போது, மேஷம் முதல்



மீனம் ஈறாக ஒவ்வொரு நதியிலும் வருடந்தோறும்
பிரவேசமாவதில் கங்கை முதல் பிராணீதா ஈறாகப்
பன்னிரண்டு நதிகள் குறிப்பிடப் பட்டுள்ளவைகளில்
வியாழன் விருச்சிக ராசியில் பிரவேசிக்குங் கால அள
வில் தாம்பிரவருணியில் பிரவேசிக்கிறான் என்றதும்
அதன் புராதனத்துக்குந் தூய்மைக்குஞ் சான்றென்
றது தெளிவாகும். அஷ்ட முகூர்த்தங்களில் பிரதான
தீர்த்த வடிவ தெய்வமே புஷ்கரன் என்ற தீர்த்த
ராஜன். பாண்டிய ராஜ்யத்தின் பெருமையைக் குறித்
துள்ள தசாங்கங்களில் பொருநை (தாம்பிரபரணி)
யைப் பாண்டிய நாட்டின் நதிக்குச் சிறப்பாகவும்,
பொதியமலையை அந்நாட்டின் மலைக்குச் சிறப்பாகவும்
சொல்லப்பட்டிருப்பவை தாம்பிரவருணியின் பூர்வத்
துக்குச் சான்றாகும்.

திருநெல்வேலிப் பாலம்

பாளையங் கோட்டை
திருநெல்வேலியையும் இப்புண்ணிய
யையும் வேறு பிரித்துச் செல்லும் உத்தரவாகினி
நதி சிந்துபூந்துறையில் தூயஸ்தலத்
யாகப் பாய்ந்தோடுகிற தனிகருப்
தில் பேரருளாளரான
ப ஸ்ரீமான் சுலோ
கர்ப்
நெயிப் சிரஸ்ததாருமாக இருந்த
சன முதலியாரென்பார், பரோபகார நிமித்தம் தமது
சொந்த ஐவேஜிலிருந்து இந்தியாவில் வேறு எப்
பக்கங்களிலுங் காணக்கூடாத அவ்வளவு வனப்பு
வாய்ந்த பதினொன்று கண்களால் அமையப்பெற்ற
சிறந்த வாராவதி யொன்றைக் காப்டன் வேபர்
(Captain Faber) என்றவரால் தயாரித்து முடிக்கப்

பெற்ற பிளானைப் பின்பற்றி *லெப்டனென்று ஹார்ஸ்லி (Lieutinant Horsley) என்ற இஞ்சினீயரால் 1843-ம் வருஷம் நவம்பர்மீ கட்டி முடித்தனர். இவ்வாராவதி உவாட்டர்லூப் பாலத்தினைக் கட்டிட அமைப்பில் ஒத்ததாகுமென்றதால் இதன் சிறப்பு எவ்வளவு என்றதனை எடுத்துச்சொல்லல் தேவையில்லை. இதனை வெள்ளோட்டம் பார்த்த தினத்தன்று முதலில் இதன்மீது நடந்து சென்றது ஒரு யானையாகும். அதன் பின்பு சகலவிதமான இராஜாங்க விருதுகளுடன் காலாட்படையும் பீரங்கிப்படையும் புடைசூழ சுலோசன முதலியார் முன் செல்ல, அவர் பின் அப்போதிய கலெக்டர் தாமஸ் துரை, ஜட்ஜி டக்ளஸ் துரை, இஞ்சினீர் லெப்டனென்று ஹார்ஸ்லி துரை ஆகியவர்களுடன் எண்ணிறைந்த கனவான்கள் ஒருவர் பின்பு ஒருவர் அணிவகுத்துச் சென்றதும், அக்காக்ஷியினைக்கண்டு களிக்கவந்த ஜனத்திரள்களின் ஆரவாரங்களும் நிகரற்றனவென்பார் அதனைக் கண்டுவந்தோர். சுலோசனம் என்ற பெயருக் கேற்ப அப்பாலத்திற்கமைந்துள்ள கண்கள் பதினொன்றும் சுலோசனங்களாகவே யிருப்பனவும் ஆச்சரியமே. இராஜாங்கத்தாரின் உத்தரவின் பேரில் 1845-ம் வருஷம் அதன் ஞாபகார்த்தமாக ஒரு பெரும்ஸ்தம்பம் அதன்மாட்டு நாட்டப்பட் டிருப்பதையும் காணலாம். பாலத்தின் நீளம் கொஞ்சங் குறைய 1000 அடிகளாகும். இரு

* சித்திரா நதியின்மீது 7 கண்களமைந்துள்ள வாராவதி எட்டயபுரத்தாரால் கங்கைகொண்டானில் மேலேசொல்லிய இஞ்சினீயரைக் கொண்டு முடிக்கப் பட்டது.



பக்கங்களிலுமிருக்கும் திண்டுகளையும் ஒட்டணைகளை
யும் நீக்கிக் கண் ஒன்றுக்கு 65 அடிகள் நீளமாம்.
தற்காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின்
தென்கோடிபாகமான அகஸ்தியர் மலையில் ஐந்து சிக
ரங்களடங்கிய ஐந்துதலைப் பொதிகை

**பொதிகை மலையும் ரிக்வேதமும்**

யென்ற சிகரங்களிருக்கின்றன. இவை
களே இம்மலைத் தொடர்பின் இப்
பகுதியில் எல்லாச் சிகரங்களிலும்
உன்னதமானவைகள். இவைகளிலிருந்து தாம்பிர
வருணி உற்பத்தியாகின்றது. அதன் நீளம் 75 மைல்
கள். ஐந்து தலைப்பொதிகை பாளையங்கோட்டையிலிரு
ந்து நன்கு காணப்படினும் திருவனந்த புரத்திலிருந்து
பார்ப்பவர்களுக்குத் தெரிவதுபோல் அவ்வளவு தெளி
வாகக் காணப்படாது. பொதிகை மலை யென்றதன்
மறுபெயரான அகஸ்தியர் மலையில் அகஸ்தியர் வசித்த
தாலும், ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ள ரிஷி அகஸ்தி
யர் ஒருவரே யாதலாலும், அவர் தமிழ்நாட்டு ரிஷி
என்றதாலும் தமிழ் நாட்டின் பெருமை ரிக்வேத
காலத்துக்கு முற்பட்டதென்பது பெறலாயிற்று.
ஐந்துதலைப் பொதிகையில் திருவாங்கூர் கவர்ன்
மெண்டாரால் டாக்டர் புரூன் Dr. Broun என்றவ
ரின் பரிசீலனையின்கீழ் ஒரு நக்ஷத்திர

**மழை வளம்**

சாலை அமைக்கப்பட்டிருந்தது. ஆங்கு
வருஷந்தோறும் சராசரி 300 அங்குல அளவு மழை
பொழிவதாகக் கணக்கிட் டிருக்கிறார்கள். ஆனால்
இவைகளுக்கும் கடலுக்கும் சமதூரத்திலுள்ள திரு
நெல்வேலி, பாளையங்கோட்டைகளில் வருஷம் ஒன்

முக்கு 30 அல்லது 35 அங்குல அளவுக்கு மிஞ்சி சராசரியாக மழை பெய்திருப்பதில்லை.

**பூர்வ குடிகள்**

இந்த ஜில்லாவிலுள்ள பூர்வகுடிகள் இன்னாரெனச் சொல்வதற்குக் கூடாதெனினும் மலைப் பிரதேசங்களிற் காணப்படும் "பழைஞர்களை"த் தவிரவேறு எவருமிலரென்றது மட்டுந் தெரியவருகிறது. ஆனால் இந்த ஜில்லா பூர்வகால முதல் நாகரிகத்திற் சிறந்து விளங்கியதென்பதைக் காட்டுவதற்கு இராமாயணம், மஹாபாரதம், ரெகுவம்சம் முதலியவைகளிற் கூறப்பட்டிருப்பதுடன், பூர்வகிரேக்கர்களுடனும், ரோமர்களுடனும், பார்ஸீகர்களுடனும் செய்துவந்துள்ள வியாபாரங்களும் ஆதாரங்களாவதுடன், சீனதேசத்தவர்களுடனும் அரேபியர்களுடனும் வியாபாரம் செய்திருந்தனர் என்பதைப் பூமியைத் தோண்டிச் சோதித்ததிலிருந்து கிடைத்துள்ள பாத்திரங்களினாலும் தெரிய வருகின்றது. சில இடங்களைத் தோண்டிப் பார்த்ததில் பிரேதங்களை யடக்கஞ் செய்து வைத்திருந்த மதமதக்கத்தாழி என்று சொல்லப்படும் முதுமக்கட்டாழி (முது + மக்கள் + தாழி)களும் (Urns) கல்ஆயுதங்களும் ரோம நாணயங்களும் அகப்பட்டிருக்கின்றன.

**பூர்வதொழிலும் வியாபாரமும்**

சேர்மாதேவியென்ற ஊருக்குச் சமீபத்தில் பூமியின்கீழ் அகப்பட்ட கல் ஆயுதங்கள் வேலைப்பாட்டில் திறமை யமைந்திருந்தன எனக்கண்டு ஆச்சரியமடைந்த ஓர் ஐரோப்பிய சாஸ்திரியான டாக்டர் ஜாகோர் (Dr. Jagor) என்றவர் தம்முடைய ஜனன பூமியான ஜெர்மனியின் தலைநகரான பர்லினில் கொண்டுபோய்



அவைகளை உலகாதிசயப் பொருள்களின் காக்ஷிகளில்
ஒன்றாகப் பாதுகாத்து வைக்கும்படியான ஏற்பாட்
டைச் செய்துள்ளார். அவை இன்றும் பர்லின் நக
ரத்திலுள்ள மியூசியத்திலிருக்கின்றன. அரிசி, சந்
தனம், பீலி, தோகை, மயில், இஞ்சி, தேக்கு, நாரங்
காய், நாவாய், சர்க்கரை முதலிய சரக்குகளில் இந்
நாடு பூர்வ காலத்தில் கிரேக்கர்களுடனும், ரோமா
புரியார்களுடனும் வியாபாரஞ்செய்து வந்ததென்ப
தற்கு இன்றுஞ்சான்றாக நிற்பன அவ்வப்பாஷைகளில்
அவைகள் வழங்கப்படுவனவேயாம். மேலும் நந்தமிழ்
நாட்டில் அகப்பட்ட முத்துக்களும் கீர்த்தியுடன் அக்
காலங்களில் கொண்டாடப் பட்டமையால், அவை பல்
வேறு தேசங்களுக்கு இச்சையை யூட்டின என்று
சொல்வதும் ஞாபகத்திற்கு எட்டாத கால முதல் நாம்
நாகரிகம் படைக்கப்பட்டோரென்றும், கப்பல் வியா
பார முதலியவைகளை அக்காலந் தொட்டு ஆக்ஷி புரிந்து
வந்திருக்கிறோமென்றுந் தெரியவருவதால் நமது பூர்வ
தமிழர்களின் பெருமை எவ்வளவு உயர்வு அடைந்
திருக்க வேண்டியதென்றதும் தெரிய நியாயம் கிட்டு
வதற் கிடனாயது.

**தமிழரும் பைபிலும்**

ஈஸ்ரவேலர்களுக்குள் புத்தியில் வியாழனைப்
போலவும் நீதியில் மநுவைப் போலவும் அரசாண்ட
வரும், பைபில் என்ற விவிலிய நூலின்
பழைய ஏற்பாட்டுப் பகுதியில் காணப்
படுபவருமான சாலமன் என்ற சிலையு
மான் அரசன் இந்த ஜில்லாவிலுள்ள நாங்குநேரித்
தாலூகாவைச் சேர்ந்த உவரி என்ற (Ophir) துறை
முகப் பட்டணத்துடன் வியாபாரப் போக்குச் செய்

தன ரென்றதும் யூகித்தற் கிடனாதலால் அநேக ஆயிர வருஷங்களுக்கு முன்னரே நமது ஜில்லா வாசிகளான தமிழர்கள் நாகரிகமடைந்திருக்க வேண்டு மென்றது நிச்சயம். இதன்றி காயல், கொற்கை, சபாடபுரம், மணலூர், மணிபுரம், மதுரையாதிய பெயர்கள் பூர்வ கிரேக்கர் ரோமர்களுக்கும், யவனர் சீனர்களுக்கும் தெரிந்திருந்தன என்பது அவ்வந் நாட்டின் சரித்திரங்களிலிருந்து அறிகிறோம். மேலும் இராமாயணம், மஹாபாரதம், பிரஹத் சம்ஹிதை, ரகுவம்ச முதலியவைகளில் அவ்வூர்கள் காணப்படலும் தமிழர்களின் பெருமைக்கோர் உயர்வின் காரணமெனலாம். அசோகராஜனின் காலத்தும் நமதுநாடு குறிப்பிடப்பட்டிருத்தலால் நமது ஜில்லாவைப் பழமையிற் புதுமை எனக் கொள்ளாமல், பழமையிற் பழமை எனக் கொள்ளலே பொருத்தமாகும் என்பதைப் "பாண்டிநாடே பழம்பதியாகவும்", என்றதனையும் "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோட்டங் கொடுங் கடல் கொள்ள" என்பவாதிய மூதுரைகளையும் உற்று நோக்கின் நம் நாட்டின் தொன்மையை அநாதி எனக் கூறின் மிகையாகா தெனலாம்.

பாண்டியர்களின் வரலாற்றுச் சுருக்கம்

பாண்டிய நாட்டிலடங்கிய மதுரை, திருநெல்வேலிச் சீமைகளை ஆண்ட பாண்டியர்களில் 14 பேர்கள் 250 வருஷங்களாகவும் இரண்டாம் வகுப்புப் பாண்டியருள் 75 பேர்கள் சுமார் 2000 வருஷங்களாகவும் பிந்திய வகுப்பினருள் 40 பேர்கள் 1000 வருஷங்களாகவும் ஆட்சி புரிந்த பின் கபாடபுரம் நீருள் முழுகிவிட, கொற்கை, மணலூர் முதலிய இடங்களை இராஜஸ்தான நகரங்களாக்கிக்கொண்டு ஆண்ட பாண்டியர் பன்மரும் அதன் பின்னாட்களில் இப்போதிய மதுரைக்குச் சிறிது தூரம் தென்கிழக்கிலிருந்து நதியால் கொள்ளப்பட்ட மதுரையில் அரசு புரிந்த பாண்டியர் பலரும், அதற்கப்பால் இப்போதுள்ள மதுரையில் ஆண்ட பாண்டியர்கள் அநேகரு மாவார்கள்.



பல்லவர் சாளுக்கியர் சோழர் வரலாறு

பாண்டிய நாட்டைப் பல்லவர்களும் அதன் பின்னர் சாளுக்கியர்களும் கொஞ்சங் கொஞ்ச காலங்களாக வெற்றிபெற்று ஒருவர்பின் ஒருவராக ஆட்சி புரிந்தனரென்றாலும், அவர்களது வெற்றிகள் நிலை நிற்காததால் அன்னார்களது இராஜாங்கப் பெருக்கம் இங்கு நிலையுறவில்லை. இவர்களுக்குப் பின்னர் சோழர்களில் முதலாவது பிராந்தகசோழன் பாண்டிய நாட்டையும் ஈழ நாட்டையும் ஒருங்கே தன் புய வலியால் வெற்றி கொண்டான். அதன் காரணமாக அன்னவனுக்கு "மதுரையும் ஈழமும் கொண்ட சோழன்" என்ற சிறப்புப் பெயர் சூட்டப் பெற்றது. அதன் பின்பு வீரபாண்டியன் காலத்தில் பாண்டிய நாடு சுவாதீனம் அடைந்தது. சோழனும் பாண்டியனும் இதற்கப்பாலும் மாறி மாறி ஜெயமும் தோல்வியுமாக அடைந்துகொண்டு வர, கடைசியாகப் பாண்டியரின் ஆட்சியிலேயே நிலை நின்றுவிட பராக்கிரம பாண்டியன் ஆட்சியில் தில்லி நகரத்தில் சக்கரவர்த்தியாக விளங்கிய அல்லா-உட்-டீனின் தலைவரான மாலிக்காபர் பாண்டிய நாட்டைப் பிடித்துக் கொண்டனர் என்றாலும்

பாண்டிய நாடு மறுபடியும் சீக்கிரத்தில் சுவாதீனம் அடைந்துவிட்டது.

முகமதியர் படையெழுச்சி

இவ்விதம் சுவாதீனம் பெற்றுள்ள மதுரையை சுந்தர பாண்டியன் காலத்தில் 1374 கி. பி. யில் முஜாஹிட் என்ற ஒரு முகமதியத் தலைவர் பாண்டிய நாட்டைக் கன்னியாகுமரி வரையிலும் பாழாக்கிவிட்டுத் திரும்பிய செய்தி விஜயநகர பூபாலர்களுக்குத் தெரியவும், அவர்களின் சைனியத் தலைவரான மைசூர் கம்பண்ணஉடையார் என்ற ஒரு கன்னடஸ்தரை உடனே அனுப்பி பாண்டி நாட்டை ஒழுங்கு படுத்தவும், அது முதல் பாண்டிய நாடு விஜயநகர சம்ஸ்தானத்தின் பாதுகாப்புக்குட் பட்டிருந்த தென்ப. அப்படி விஜயநகர சம்ஸ்தானாதிபதிகளால் 1404 கி. பி. யில் முதல் பிரதிநிதியாக பாண்டிய நாட்டில் நியமிக்கப் பட்டவர் லக்ஷ்மணநாயுடுகாரு என்பவராம். இவரது ஆக்ஷி நமது நாட்டில் 50 வருஷ காலமாகும்.

---

# இரண்டாம் அத்தியாயம்

## மத்திய காலத்தியது

பாண்டிய நாடு விஜயநகர சம்ஸ்தானத்தின் கீழ்ப்படல்

இலக்ஷ்மண நாயுடுவும், அவர் பின் ஒன்றன்பின்
ஒன்றாக நியமிக்கப்பட்டிருந்த கவர்னர்களை யொத்த
14 நாயக்கர்கள் விஜயநகர பூபாலர்க
ளது ஆக்ஞையின்படி பாண்டிய நாட்
டை ஆண்டு வந்தவர்களில் கடைசி
யானவர் விட்டல் நாயுடுவாகும். இவர்க
ளது ஆக்ஷியின் காலம் 1404 கி. பி.
முதல் 1558 கி. பி. முடிய எனச் சரித்திர வாயி
லாக அறிவதிலிருந்தும் வேறு இதர சாசனங்களைக்
கொண்டும் இந்த அரசாக்ஷியை நிதானித்துப் பார்க்கும்
அளவில் விஜயநகர சம்ஸ்தானத்தின் மேற்பார்வைக்
குட்பட்டு மட்டும் பாண்டிய நாடு அப்போதிருந்திருக்
கலாமென்றது பெறலாகும். ஆதலால் அக்காலத்தில்
பாண்டிய நாட்டில் விஜயநகர சம்ஸ்தானத்தின்
தேசிய மேல்பார்வை (Territorial Influence) புண்
டெனத் தெரிகிறது. இதன் பின்னர் பாண்டிய
நாடான மதுரை, திருநெல்வேலி, இப்போதிய இராம
நாதபுரம், திருச்சிறுப்பள்ளி ஆகிய ஜில்லாக்களில்
அடங்கிய மாகாணத்தை விஜய நகரத்தார் ஒரு
வருக்கே ஆக்ஷியின் பொருட்டுக் கொடுத்துவிட, அவ
ரும் அவருக்குப் பின்னுள்ள, நேர்வாரிசுகளான சந்ததி
யார்களும் விஜயநகர சம்ஸ்தானாதிபதிகளுக்கு வரு
ஷம் ஒன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்க
மாகவும் வேறு பல்வகையான விலையுயர்ந்த சாமான்

களாகவும் கப்பரூபமாகக் கொடுத்து விடவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு செலுத்தி வந்திருக்கின்றார்கள்.

நாயக்கர் அரசாக்ஷியில் ஏற்பட்டுள்ள பாசனங்கள்

மைசூரிலிருந்து விஜயநகர ஏகசக்கிராதிபதிகளால் அனுப்பி வைக்கப்பட்ட கன்னடியர்களாலேயே திருநெல்வேலியில் நீரோடைகளும் நதிப் பாசனங்களும் அமைக்கப் பட்டன. தாம்பிரவருணி நதியின் கால்களில் பிரசித்திபெற்ற கன்னடியன் காலென்றதும், பாளையங்கால் என்றதும் திருமங்கை நகரத்தில் கட்டப்பட்டு இப்போது அழிந்து கிடக்கும் கோட்டை ஒன்றும் பாளையன் என்றவோர் கன்னடியரால் அமைக்கப் பெற்றனவாம். அவரது காலந்தொடங்கி "திருமங்கை நகரம்" என்றது பாளைய(ன்)ங்கோட்டை என்று மாறியது. அணைக்கட்டுகளின் விவரம் :—(1) அரிய நாயகபுரம் அணைக்கட்டு, (2) சுத்தமல்லி அணைக்கட்டு, (3) பழவூர் அணைக்கட்டு, (4) மருதூர் அணைக்கட்டு, (5) புதுக்குடி அணைக்கட்டு. மருதூர் அணைக்கட்டை 1792-ம் வருஷம் கலெக்டர் டோரின் (Mr. Torin) துரை புதிப்பித்தனர். புதுக்குடி அணைக்கட்டை ஷெப்பார்டு என்றதுரை (Mr. Shepphard) புதுப்பித்தனர். மற்றவைகளை அப்போதைக் கப்போது ரிப்பேர் முதலிய சீர்திருத்தங்களைச் செய்து இராஜாங்கத்தார் பாதுகாத்துக்கொண்டு வருகின்றனர்.

இலக்ஷ்மண நாயுடுகாரு கவர்னராக இருக்கும் காலத்திலிருந்து விட்டல் நாயுடுகாரு கவர்னராக இருக்



குங் காலம்வரை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சிறாப்பள்ளி முதலிய ஜில்லாக்களை உண்மையில் ஆண்டு வந்தவர்கள் நாயுடுகள் என்றாலும், பழைய பாண்டியர்களின் வம்சத்தினர்கள் பேருக்கு மாத்திரத்தில் அரசர்களாக விளங்கினார்கள்.

பாளையக்காரர் களின்உற்பத்தி விவரம்

1404 கி. பி. க்கும் 1558 கி. பி. க்கும் இடையிலுள்ள
காலங்களில் அப்போதைய பாண்டிய நாடான இப்
போதைய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம்,
திருச்சிறாப்பள்ளி ஜில்லாக்களில் இடைவிடாமல் கல
கங்களும் சச்சரவுகளும் நிகழ்ந்தன வென்பதை
யறிந்த நாயக்கர் கவர்னர்களால் விஜயநகர சம்ஸ்தா
னாதிபதிகளிடமிருந்து நாயுடு சைனியங்களின் தலை
வர்களை அனுப்பினாலன்றி இப்பிராந்தியங்களில் காரி
யங்கள் சீர்படமாட்டா வென்பதைச் சக்கிரவர்த்தி
யாருக்குத் தெரிவிக்கவும், அவர்களும் அதே பிரகாரம்
மேலே காட்டிய ஜில்லாக்களில் கலகங்கள் மிகுத்
துள்ள முக்கிய ஸ்தலங்களுக்கு நாயுடு சேனைத் தலைவர்
களை அனுப்பி வைத்து அதன் பின்னர் அவர்களை
யாங்காங்கு சிற்றரசர்களை யொத்த தன்மையில் திசை
காவலர்களாக நியமுகம் செய்தனர். ஆதியில் இந்த
நிலையில் நியமிக்கப் பட்டவர்களின் நேர் சந்ததியார்
களே அதன் பின்பு நாளடையில் தங்கள் தங்கள்
ஸ்தலங்களுக்குச் சிற்றரசர்களானார்கள். ஆதலால்
மேலே சொல்லிய ஜில்லாக்களிற் காணப்படும் நாயக்
கர்களின் பாளையப்பட்டுகளின் உற்பத்திக்குக் காரணங்
களிவையே.

சிற்றரசர்களை யொப்ப சிவில், கிரிமினல், ரெவினியு, இராணுவம் முதலிய சகல அதிகாரங்களுடன் ஆண்டுவந்த தெலுங்குப் பாளையப் பட்டுகளில் கீழே காட்டியுள்ளவைகள் குறிப்பிடத் தக்கவை.

*பாண்டிய நாட்டில் தெலுங்குப் பாளையப் பட்டுகள்*

எட்டயபுரம், மேல்மாந்தை, காடல்குடி, ஆற்றங்கரை, நாகலாதபுரம், குளத்தூர், கோல்வார்பட்டி, பாவாலி, கொல்லபட்டி, அம்மைய நாயக்கனூர், நிலக்கோட்டை, போடி நாயக்கனூர், கோம்பை, தேவாரம், கண்டம நாயக்கனூர், தொட்டப்ப நாயக்கனூர், காமயநாயக்கனூர், மாதவநாயக்கனூர், தும்பிச்சி நாயக்கனூர், எழுமலை, கௌண்டன் கோட்டை, கன்னிவாடி, விருபாக்ஷி, ஆயக்குடி, எமகேலாபுரம், ஒன்பதூர், கூழப்ப நாயக்கனூர், இரசக்க நாயக்கனூர், சத்திரப்பட்டி, மாத்தூர், மருங்காபுரி, செங்குறிச்சி, கடலூர் என்ற பிள்ளை விழுங்கி, இராமகிரி, இடையகோட்டை, தோகை மலை, வீரமலை, வெள்ளிய குன்றம், சிறுபாலை, மாம்பாரை, பள்ளியப்ப நாயக்கனூர், எரியோடு, சொக்கம்பட்டி, (இது பழனியை அடுத்துள்ளது) மாறனூற்று, தவசிமேடு என்ற தவசிமடை, அம்பாத்துறை, தேவதானப்பட்டி, தொட்டியன் கோட்டை, அம்பலத்தாறு, மறவநாடு, பழனி, ஆகிய இவைகளில் பெரும்பாலன கம்பளத்தாரின் பாளையப்பட்டுகளாகும்.*

---

* நாம் பிரஸ்தாபிக்கும் இது காலத்தில் பாஞ்சாலங்குறிச்சி என்றது ஏற்படவில்லையென்றது குறிப்பிடத்தக்கதோர் விஷயமாகும்.



முன் காலத்தில் தில்லியில் அரசாண்ட மகமத்-பின்-துக்லாக் என்ற சக்கிரவர்த்தியார் தன்னுடைய அடுத்த தாயாதியானவரும் ஒன்று விட்ட சகோதரருமான பஹாப்-உட்-டீன் என்பவரை தெக்ஷிண இந்தியாவிற்கு கவர்னராக நியமிக்க அவர்

*கம்பளத்தார் என்ற பேருக்குக் காரணம்*

அங்கு சென்றதும் தில்லி சக்ரவர்த்தியாருக்குக் கீழ்ப் படியாமல் சுயேச்சையாக ஆக்ஷி புரிவதைக்கேட்ட தில்லி சக்ரவர்த்தி யாருக்குக் கோபமுண்டு உடனே குஜராத்திய தேசத்தில் கவர்னராக இருந்த காஜா-ஜீ-கான் என்றவரின் தலைமையின்கீழ் பஹாப்-உட்-டீனுக்கு விரோதமாகப் பெருஞ்சேனை ஒன்றை அனுப்பி வைக்க அச்சைனியம் தெக்ஷிணத்துக்குவர, இருதரத்தாருக்கும் நிகழ்ந்த கடும்போரில் பஹாப்-உட்-டீன் தோல்வி யடைந்து உயிர் தப்பியோடி, அக்காலத்தில் விஜயநகர சம்ஸ்தானாதிபதிகளின் அரண்களில் வலுவுற்று விளங்கியவைகளில் ஒன்றான கம்பிலா என்ற கோட்டையைச் சேர்ந்து அடைக்கலம் புகுந்தனர். கம்பிலா என்ற கோட்டையானது விஜயநகர சம்ஸ்தானத்துக்குப் பூர்வ இராஜதானி நகரமான ஆனகுந்திக்குச் சுமார் எட்டு மைல் தூரத்துக்குக் கிழக்கிலுள்ளது. இந்த ஆனகுந்தியையும் அதைச் சுற்றிலும் வளைந்துள்ள நாட்டையுந்தான் "கிஷ்கிந்தா" என்று சொல்வது. அங்கு வாலியின் எலும்பு பூமியில் கிடப்பதாகவும், ஆங்கு செல்வோர் அதனைக் கிள்ளி எடுத்து நெற்றியிற் பூசிக்கொள்வதாகவுங் கூறப்படுகிறது. இது இக்காலத்திலும் வழக்கமாக இருக்கிறது. அங்கு அடைக்

கலம்புகுந்த பஹாப் - உட் - டீன், மறுபடியும் சுவாதீன மடைந்து தில்லிக்கு விரோதமாகக் கிளம்பி தெக்ஷணத்துக்குத் தனக்குத் தானாகவே இராஜாவாக்கிக்கொண்டு விளம்பரங்களைப் பஹிரங்கப் படுத்தவும், ஆங்கு சக்ரவர்த்தியாருக்கு தில்லிக்கு இச்சங்கதி எட்டவும்,ருத்ராவேசமாகித் தன்னுடைய சைனியங்களுள் பொறுக்கி 50,000 பேர்களைச் சித்தப்படுத்தித் தானே அதற்குத் தலைமைபூண்டு தெக்ஷணம் புறப்பட்டு வந்து கம்பிலாக் கோட்டையை முற்றுகை போட்டு பஹாப்-உட்-டீனுடன் அகோராத்திரமாகப் போர்புரிய, அந்தக் கோட்டையைப் பந்தோபஸ்தில் வைத்துக் காத்துத் தைரியத்துடன் முற்றுகையைத் தடுத்த யுத்த வீரர்களின் தைரியச் செயல்களை சரித்திரங்களில் அழிவு படாதிருந்தமையை யறிந்த நம்மவரும் அந்த யுத்தத்தையே அந்நாளில் நேரிற் பார்த்த அப்போதுள்ளவர்களும் அக்கோட்டையின் காப்பாளிகளைத் தெலுங்கு பாஷையில் இன்னாரென்று சொல்வதற்கு அன்னோர்களை, அவர்களது தைரியச் செயல்களைக் காட்டுவதற்குக் காரணமாக இருந்த அக்கோட்டையின் பெயரையிட்டே சுட்டிக் காட்டுவதற்குக் குறிப்பிடப் பட்டதால் அவர்களுக்கு இன்னும் கம்பலவாரு என்ற சிறப்புப் பெயர் விளங்கலாயிற்று. இதை யறியாத சிலர் தமிழில் வழங்கும் கம்பளர் என்றவோர் ஜாதியினர் பெயரை, கம்பலர் என்றதுடன் கலந்து மயக்கங் கொள்கின்றனர். இவர்கள் கம்பலாக் கோட்டையில் ஆண்மையும் வீரமுங் காட்டிய வீரசிகாமணி



களின் இனத்தவர்களென்று சொல்வதற்கு இவர்களைக் கம்பலவாரு என்று தெலுங்கில் குறிப்பிட அச்சொல் நாளடைவில் கம்பளத்தார் என்றாயது. "வாரு" என்ற தெலுங்கு மொழிக்குப் பதில் "ஆர்" என்ற தமிழ் விகுதி சேர, அஃது நம் தமிழ் நாட்டில் கம்பளத்தார் என்றாயது. அதாவது கம்பலாக்கோட்டை முற்றுகையில் பேர்பெற்றவர்கள் என்றதே இவர்களுக்கு அது முதல் இதுவரை வழங்கும் சிறப்புப் பெயராம். ஆனைகுந்தி என்ற தெலுங்குச் சொல்லுக்கு யானை மந்தைகளடர்ந்த வீதி என்று பொருள்.

பாண்டிய நாட்டின் இராஜாங்க அமைப்பு மாறுதல்கள்

பாண்டிய நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கவர்னர்களை ஒத்த பிரதிநிதிகளான 14 நாயக்கர்களும் சரியானபடிக்கு ஆக்ஷி புரியாததைக் கண்ணுற்ற விஜய நகரச் சக்கரவர்த்தியார் மனதில் வியாகூலம் அடைந்திருக்கும்போது அந்த பாண்டிய நாட்டைப் பேருக்குமட்டும் பொம்மை போல் ஆண்டு கொண்டு வந்த சுந்தர பாண்டியனுக்குப் பதிலாக சோழன் உரிமை கொண்டாடி நாயக்கர்களின் பிரதிநிதிகள் சொல்லியவைகளையும் கவனியாமல் நாட்டைப் பிடித்துக் கொள்ளவும், இது சங்கதி விஜய நகரத்திற்கெட்டவும் நாகம நாயக்கரைப் பெரும் சைனியத்துடன் விஜய நகரத்திலிருந்து அனுப்பிவைக்க அவர் சோழனை விரட்டிவிட்டு நாளடைவில் எஜமானுக்குத் துரோகமாகப் பாண்டிய நாட்டிற்கு இராஜத்துவத்தையும் வகித்து விஜயநகரத்தாருக்குக் கீழ்ப்படிதலையும் மறுத்துவிட்டனர். இச்சங்கதியைக்

கேள்வியுற்ற சக்கரவர்த்தியார் துக்கசாகரத்தில் மூழ்கினவராகி சபையிலுள்ளாரிடம் " அந்த வெறுந் துரோகி நாகம நாயுடுவின் கொட்டத்தை யடக்கி என் முன்பு கொண்டுவரும் ஆற்றலை எவரே உம்முள் பெற்றிருக்கின்றனர்" எனலும் நாகம நாயுடுவின் குமாரரான விசுவநாத நாயுடு இதைக் கேட்டுச் சகிக்காதவராகி எழுந்து " சுவாமிகளின் திருவுளப்படி எது செய்யத் தக்கதோ அதனைச்செய்து முடித்து அத்துரோகியையும் இட்டுவரச்சித்தமாக இருக்கிறேன். 'இதனைச்செய் யென்று திருவுளம்பணிக்குமாயின் அதனைச்செய்வல்' என்றார். பிதிர்வாஞ்சையினால் ஒருக்கால் நாகமநாயுடுவை எதுவுமே செய்யாது, இவனும் அங்கு சென்றதும் துரோகியாகிவிடுவானோ என்று முதலில் சக்கரவர்த்தியார் சந்தேகங்கொண்டு பின்னர் தீர்க்கமாக யோசித்து அவரையும் அரியநாயக முதலியாரையும் பாண்டிய நாட்டிற்கு அனுப்பிவிக்க, ஆங்குச் சென்று நாட்டையும் ஒழுங்குபடுத்தி நாகம நாயுடுவுக்கும் தக்கசிக்ஷையையும் விதித்தனர். நாளாவிர்த்தியில் சக்கரவர்த்தியின் தயாளம் ஏதோ அத்துரோகிக்கு ஏற்படலும், அவருக்கு மன்னிப்புக் கிடைத்தது. இக்காலந் தொட்டு விசுவநாதநாயுடுவும் அன்னோர் சந்ததியினரும் பாண்டிய நாடான திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களுக்கு வாரீசு வாரீசாக விஜயநகரத்துக்குக் கீழடங்கிய அரசர்களானார்கள். இந்த நிலையில் பாண்டிய நாட்டையாண்டவர் 16 பேர்களாவார்கள் என்றாலும், திருமலை



நாயுடுவின் அரசாக்ஷியில் பாண்டிய நாடு விஜயநகர சம்ஸ்தானத்துக்குக் கட்டுப்படவில்லை யென்பதையும் சரித்திரம் படிப்போர் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

பாளையக்காரர்களின் சுய ஆட்சி

பாண்டியநாடு விசுவநாதநாயுடுவுக்கு ஒப்படைக்கப்படுங் காலத்துக்குமுன்னரே கம்பளத்தார்களின் பாளையப்பட்டுகள் சிற்றரசர்களை யொப்ப சுவாதீன நாடுகளாக விளங்கின வென்றாலும் அவ்விதம் அவர்களால் அடைந்துள்ள சுவாதீனம் பெரும்பாலர்களுக்குள் நிலையுற்றதாக இல்லாது அப்போதைக்கப்போது மாறுபட்ட நிலைமையிலிருந்து கொண்டிருந்ததென்பது தெளிவு. நாயக்கர்களின் வலுவோங்கி வரும் காலங்களில் பாண்டிய நாட்டில் பராக்கிரமசாலிகளான தமிழர்களில் சிலர் திசைகாவலர்களாக நாயுடு சம்ஸ்தானாதிபதிகளால் நியமிக்கப் பட்டனர்கள். அவர்களும் மேலே சொல்லியுள்ள தெலுங்குப் பாளையப் பட்டார்களைப் போல நாளடைவில் சுவாதீனம் பெற்றுள்ள பாளையக்காரர்களானார்கள். அவைகளாவன :—

பாண்டிய நாட்டில் தமிழ்ப் பாளையப் பட்டுகள்

இரமநாதபுரம், புதுக்கோட்டை, சொக்கம்பட்டி என்ற வடகரை, ஏழாயிரம் பண்ணை, நெயக்கட்டஞ்செவல் என்ற ஆவுடையாபுரம், வீரகேரளம் புதூர் என்ற ஊத்துமலை, சிவகிரி, சேத்தூர், சிங்கம்பட்டி, தலைவன்கோட்டை, கொல்லன் கொண்டான், அழகாபுரி, ஊர்க்காடு, சுரண்டை, கடம்பூர், மணியாச்சி முதலியவைகளே. அக்

காலத்தில் சிவகங்கை என்றது தனித்ததோர் பாளை
யப்பட்டல்ல. தெலுங்கு நாட்டினர்களாகிய பாளையக்
காரர்களிற் சிலரும், தமிழ்நாட்டினரான பாளையக்காரர்
களிற் சிலரும் நமது ஜில்லாவில் போர்த்துக்கேசிய
களுடனும், டச்சுக்காரர்களுடனும், முகமதிய நவாபு
களுடனும், பிரிட்டிஷ் ஈஸ்ட்டு இந்தியா கும்பெனியார்
களுடனும் நடந்துகொண்ட விவரங்களைப்பற்றி சவிஸ்
தாரமாக எடுத்துச் சொல்வதற்கு முன் விசுவநாத
நாயுடு பாண்டிய நாட்டிற்குச் செய்த சில முக்கிய
நன்மைகளைக் குறித்துச் சொல்வோம்.

மதுரையில் முன்னிருந்த கோட்டையையும் கொத்
தளத்தையும் பலப்படுத்தியும், ஜல வசதியின் பொரு
ட்டு அநேக கால்வாய்களை யுண்டு
பண்ணியும், வைகையில் பேரணை,
சிற்றணை முதலியவைகளைக் கட்டி
அவைகளின் ஜலத்தைப் பாசனத்
துக் குதவும்படி செய்து வைத்தும்,
கன்னியா குமரியிலிருந்து ஸ்ரீரங்கம்
வரை சாலைகளை யுண்டாக்கிக் காதவழி
தூரத்திற்கு ஒரு தர்மான்னசத்திரத்தை அமைத்தும்,
ஸ்ரீரங்கம் முதல் இராமேஸ்வரம் வரைக்கும் காத
வழிக்கோர் போஜனசாலையையும் சதாவிருத்தி மண்
டப சாலையையும் அமைத்தும், திருச்சினப்பள்ளியில்
பழையகோட்டை யிருந்த இடத்தில் புதிதாகவோர்
கோட்டையை எழுப்பியும், அதனைச் சூழ்ந்து ஆழமான
அகழைத் தோண்டியும், நகரத்தில் ஒழுங்காகப் பல
வீதிகளை அமைத்துப் பசுந்து செய்து வைத்தும்,

விசுவநாத நாயுடுவின் குணதிசயங் களும் பரோபகாரச் செயல்களும்



மலைக்கோட்டையில் பல வீதிகளை உண்டாக்கியும், திரு
நெல்வேலியில் நெல்லையப்பர் கோவிலில் நந்தியை
அமைத்தும், கற்றாண் பணிகளிற் சிறந்தவைகளான
தூண்களைப் பிறர் அதிசயிக்கும்படி உண்டுபண்ணி
நிறுத்தியும், திருமதில் திருப்பணிகளைச் செப்பனிட்
டும், சின்ன வாய்க்கால், பெரிய வாய்க்கால், கல்லணை
முதலிய வாய்க்கால்களை உண்டுபண்ணியும், முன்
சொல்லியுள்ளபடி தாம்பிரவருணி நதியிலுள்ள அணைக்
கட்டுகளைச் சீர்திருத்தம் செய்தும், நகரத்தில் மதுரை
யைப் போலத் திருமதில்களைச் சுற்றிப் பெரிய ரத
வீதிகளை உண்டுபண்ணியும், கோவிலிலிருந்து திருமஞ்
சன நீர் எடுக்கப் போகும் தாம்பிரவருணி நதி வரை
யுள்ள பாட்டையை அடி கல்லால் போட்டுத் தள
மிட்டு நகரத்தைப் புதுப்பித்துக்கொண்டு வரும் தரு
ணத்தில், திண்டுக்கல்லை அடுத்த பிராந்தியங்களில்
கம்பங் கூடலூர்ப் பாளையக்காரர்களின் கலகம் முதிர்
ச்சியடைய ஆங்கு அவர் செல்ல நேரிட்டிருந்தும், இங்
குள்ள நமது ஜில்லாவில் நாயுடு அவர்களின் ஆக்ஞை
யின்படியே நீதியில் வழுவின்றி நடந்து கொண்டு வர
சகல ஜனங்களும் திருப்தியிலாழ்ந்தவர்களாக இருந்
தனர்கள். தென்காசிக் கோவிலில் உருவங்களுடன்
செதுக்கப்பட்ட தூண்களையும் இவரே ஆக்கியிருக்க
வேண்டுமெனத் தெரிய வருகின்றது. ஸ்ரீரங்கம்
கோவிலிலும் அநேக சீர்திருத்தத்தை ஏற்படுத்தியுள்
ளார். இத்தகைய பரோபகார குணமும் தெய்வ
பக்தியிலீடுபட்ட தன்மையும் வாய்ந்துள்ள வேறு மன்
னரைக் காண்பதரிதே. சந்திரசேகர பாண்டியனின்

போகஸ்திரி மூலமாகப் பிறந்த சந்ததியினருள் ஐவர் இளம்பஞ்ச பாண்டவர்கள் எனப் பெயர் புனைந்து விசுவநாத நாயுடுவின் ஆக்ஷியைக் குறித்து ஒத்துக் கொள்வதில் முரண்பட்டு, கயத்தாற்றண்டைபெரும் சேனையைத் திரட்டிப் போர்புரிய, அரியநாயக முதலியாரால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சின்னபின்னமானார்கள். நாயக்கர்களின் ஆக்ஷி இங்கு 1744 கி. பி. முடியும்வரை இருந்ததால் அதனைப்பற்றிய பின்னுள்ள விவரங்களைச் சொல்லி முடிப்பதற்குள் விசுவநாத நாயுடுவைக் குறித்து மதுரையைப் பொறுத்துள்ள செய்யுளை மட்டும் மதுரைத் திருப்பணி மாலையினின்றும் காட்டுவோம். செய்யுள் வருமாறு:—

“ செஞ்சொல் புனைமதுரேசர் திருவால வாயிறைவர்
 திருவுள மகிழ்ந்து புனையச்
செம்பொற் பதக்கமுட னைவா பரணமுஞ்
 சேர்ந்த பரிகல மாதருங்
கஞ்சவயல் சூழுகொம் மட்டிமாதனை யின்மேற்
 கயல்குதி கொடாத னூரும்
காக்கள் செறியும் திருக்கானையும் பூகவயல்
 காட்டு மேலைப் பரம்பும்
மஞ்சுதவழ் சோலை சூழிளமை நல்லூரையும்
 மருவு மிந்திர விமானம்
வளமையொடு பழமை புதிதாகவே பொன்பூசி
 மகிமை யுடனே யுதவினன்
விஞ்சிவரு திருவடிதனைப் பொருதுநிறை கொண்டு
 மீனவ னைவாழ் வித்தமால்
மேவுதன் கச்சநாயகன் விசுவநாத னுயர்
 வெற்றிப் பிரதாப முகிலே.”



| பாண்டிய நாட்டில் நாயக்கர் அரசர்களின் கால விவரம் | | கி. பி. கி. பி. |
|---|---|---|
| 1. | விசுவநாத நாயக்கர் .... | 15[illegible]9—1563 |
| 2. | குமார கிருஷ்ணப்ப நாயக்கர் .... | 1563—1573 |
| 3. | கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற பெரிய வீரப்ப நாயக்கரும் .... | 1573—1595 |
| 4. | விசுவநாத நாயக்கரும் ஒத்து ஆண்டது .... | |
| 5. | லிங்கவ நாயக்கர் என்ற குமார கிருஷ்ணப்ப நாயக்கரும் .... | 1595—1602 |
| 6. | விசுவப்ப நாயக்கர் என்ற விசுவநாத நாயக்கரும் ஒத்து ஆண்டது .... | |
| 7. | முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் .... | 1602—1609 |
| 8. | முத்துவீரப்ப நாயக்கர் .... | 1609—1623 |
| 9. | திருமலை நாயக்கர் .... | 1623—1659 |
| 10. | முத்து அழகாத்திரி நாயக்கர் .... | 1659—1662 |
| 11. | சொக்கநாத நாயக்கர் .... | 1662—1682 |
| 12. | இரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் .... | 1682—1689 |
| 13. | மங்கம்மாள் .... | 1689—1704 |
| 14. | விஜயரங்கசொக்கநாத நாயக்கர் .... | 1704—1731 |
| 15. | மீனாக்ஷி அம்மாள் .... | 1731—1736 |
| 16. | விஜயகுமார முத்துத் திருமலை நாயக்கர் (சுவீகாரம்) .... | 1736—1744 |

மேலே காட்டியுள்ள காலங்களுக்குட்பட்ட இடைகளில் விஜயநகர சக்கரவர்த்திகளால் அனுப்பி வைக்கப்பட்ட தெலுங்கு சைனியங்களின் தலைவர்களான வீரர்களுக்கும் தமிழ்நாட்டில் அப்போதைக்கப்போது உதவிபுரிந்த தமிழ் வீரர்களுக்கும் சாஸ்வதமான நன்மையைச் செய்யக் கருதி ஒவ்வோர் திசை காவலர்களையும் இராஜாங்கத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஸ்திதியில் பாளையக்காரச் சிற்றரசர்களாக்கினார்கள். அப்படி ஆக்கப் பட்டவர்களின் தொகை மொத்தங் கூடியது 72. இந்த எழுபத்திரண்டுகளில் பெரும்பான்மையானவைகளின் பெயர்களை நாம் முன்னம் பிரஸ்தாபித் திருக்கின்றோம்.

---

# மூன்றாம் அத்தியாயம்

## மத்திய காலத்தியது

பாண்டிய நாட்டில் போர்த்துகேசியர்

ஐரோப்பா கண்டத்தின் தென்மேற்குக் கோடி
யில் போர்த்துகல் என்று ஒரு தேசமும் இருக்கின்
றது. அதனை ஆள்பவர் ஒரு காலத்
தில் வியாபாரத்திலும் ஆக்ஷியின் திற
னிலும் சிறந்து விளங்கியவர்களாக
இருந்த காரணத்தால் அந்த அரசாக்ஷி
யின் ஆதிக்கம் உலகில் நாலாபக்கங்
களிலும் விருத்தி யடைந்திருந்தது. அப்போது இந்த
ஜாதியார் கடல்வலி படைத்துள்ளோர்களாக இருந்
தமையால் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குச்
செல்லும் வழியொன்று இருக்க வேண்டுமென்று
வாஸ்கோடிகாமா (Vasco-de-Gama) கருதி ஆப்பிரிக்
காவின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனை
யைச் சுற்றி மலையாளக் கரையிலுள்ள கள்ளிக்கோட்
டையில் 1498 கி. பி.யில் வந்திறங்கி தங்களது ஜாதி
யாரின் ஆக்ஷியின் பெருக்கத்தை மலையாளக் கரையி
லும் கீழ்கரையிலும் வளர்த்தனர். அக்காலத்தில்
நமது ஜில்லாவின் கீழ்கரையில் வியாபாரத்திற் சிறந்து
விளங்கியவை புன்னைக் காயலும் காயற்பட்டணமுமே
யாம். இவைகளைப் போல மலையாளக் கரையில் வியா
பாரத்தில் அது சமயம் மிகுந்து விளங்கியது
கொச்சி ஒன்றேயாகும். அங்கு அப்போதைய காலத்
தில் வியாபாரத்தில் ஊக்கங் காட்டி நானாவித நாடு
களுக்கும் பல்வகைப் பண்ட மாற்றங்களைச் செய்வதில்

கை தேர்ந்தோர் மூரிஷ் அரேபியர்களாவார்கள். இவர்களைத்தான் மரக்காயர்கள் என்று சொல்வது வழக்கம். மரக்காயர் என்றது மரக்கலாளர் என்ற தமிழ்ச் சொல்லின் சிதைவாதலால் மரக்காயர் என்றதும் மரக்கலாளர் என்றதும் கப்பலாளிகள் என்று பொருள்படும் என்று தெரிக.

மரக்காயர்களின் செல்வாக்கு

வாஸ்கோடிகாமா போர்த்துகல் தேசத்து அரசருக்கு எழுதிய நிருபம் ஒன்றில் காயல் என்றவோர் வியாபார ஸ்தலம் துருக்கர்களின் அரசுக்குட் பட்டதென்று குறிப்பிட்டுள்ளார். இதன் உண்மை சந்தேகத்திற் கிடனாவதென்றாலும் ஒருக்கால் காயற்பட்டண முதலிய இடங்களில் இராஜாக்களைப் போன்ற பெரும் அந்தஸ்திலிருந்த அக்காலத்திய மரக்காயர்களையே இவர் அதன் அதிபதிகள் என்று ஐயுற்றுப் பின்னர்த் தெளிந்து மிருக்கலாம். சீதக்காதி முதலியவர்கள் அப்பிரதேசங்களில் உண்மையில் இராஜாக்களை யொத்த செல்வவான்களாகவும் அந்தஸ்துடையவர்களாகவுமிருந் திருக்கின்றனர்கள் என்றது ஒப்புக்கொள்ளக்கூடிய தெனினும், வாஸ்கோடிகாமா இந்தியாவிற்கு வந்தும் வராமலுமிருக்கும் சமயத்தில் அவர் கொண்ட அபிப்பிராயம் எத்தன்மைத்தாகும் என்பதை இதனை வாசிக்கும் நீங்களே அறிந்து கொள்ளுங்கள். அதுவுமின்றி நாயக்கர் அரசரால் துன்புறுத்தப்பட்ட கீழ் கரையிலுள்ள பரவர்கள், தங்களுக்கு நாயக்கர்களால் ஏற்பட்ட கஷ்டங்களை நிவிர்த்திசெய்து கொடுக்கவேண்டுமென்று வாஸ்கோடிகாமா வந்திறங்கிய சமயத்தில்,



துருக்க அரசரைப் பிரார்த்தித்துக் கேட்க, அவரும்
அதற்கிணங்கி அவர்களுக் கேற்பட்ட தொந்தரவை
நீக்கி யிருப்பதாகவும் சொல்லப்படுவதால் கீழ்கரை
யை அடுத்துள்ள நாட்டை அப்போது ஒரு துருக்க
அரசரே ஆண்டிருக்கலா மென்று பிஷோப் கால்டு
வெல் துரை (Bishop Caldwell) அபிப்பிராயங்
கொள்ளுகிறார். இஃதென்னோ? அறிகிலேம்! இவ்வித
மான அபிப்பிராயத்தை அவர் கொண்டதற்கு, வாஸ்
கோடி காமாவினுடைய தேச நிலைமையின் அனுபோகக்
குறைவில் எழுதியுள்ள நிருபமே காரணமெனலாம்.
கீழ் கரையை யடுத்த காயல் பட்டணம், குலசேகர
பட்டணம், புன்னைக் காயல் முதலிய இடங்களில்
இராஜாதிராஜனை யொத்த செல்வம்வாய்க்கப் பெற்றிரு
ந்த மரக்காயர்கள் பலர் நாம் பிரஸ்தாபிக்கும் அக்காலத்
திற்குச் சிறிது முற்பட்ட காலங்களாக இருந்திருக்
கின்றனர்கள். இவர்கள் தங்களுக்கிருந்த செல்வாக்
கைக் கொண்டு நாய்க்க அரசரிடம் பரவர்களின் கஷ்ட
நிஷ்டூரங்களைக் கூறி அவைகளை விலக்கியிருக்கலாமே
யன்றி பிஷோப் கால்டுவெல் துரை கொள்ளும் அபிப்
பிராயம் போல் நிகழ்ந்திருக்க மாட்டா தென்றது நிச்ச
யம். மேலும், பார்போசா (Barbosa) என்றவோர்
போர்த்துக்கேசியக் கப்பல் தளகர்த்தர் காயற் பட்
டண முதலிய நாடுகளுக்கு 1514 கி. பி. யில் வந்து
அவைகளைப் பார்வையிட்டு அவைகள் கொல்லம் அரச
ரின் கீழுள்ளவை என்றார். 1498-ம் வருஷத்தில் வாஸ்
கோடி காமா காயல் பட்டண முதலிய கீழ் கரையி
லுள்ள துறைமுகங்களை அவர் எழுதியிருக்கும் நிரு
பத்தில் துருக்கரின் ஆட்சிக்குட்பட்ட தென்றார்.

இதனையே கால்டுவெல் துரையும் பின்பற்றுவாராயினர். இவ்வகையில் கிடைத்துள்ள இரண்டு சாக்ஷியங்களையும் சிறிது இணைத்துப் பார்த்து முடிவு சொல்வதில் கீழே கண்ட அபிப்பிராயமே சரியானதாகுமெனலாம். அதாவது, வாஸ்கோடி காமாவிற்குப் பதினாறு வருஷங்களுக்குப் பிற்பட்டு வந்துள்ள பார்போசா என்றவர் அவைகளைக் கொல்லத்து அரசருக்குச் சொந்தமென்றார் என்ற நியாயம் ஒன்றே 1498ல் வாஸ்கோடி காமாவின் காலத்துக்கும் 1514ல் பார்போசாவின் காலத்துக்கும் இடையிலுள்ள பதினாறு வருஷங்களுக்குள் ஓர் இராஜாங்கம் கெடவும், மற்றோர் இராஜாங்கம் தோன்றவும் நியாயம் இருத்தல் கூடுமோ என்றதையும் கவனித்துப் பார்க்குமிடத்தில் அவ்விருவர்களும் நிதானியாது கொண்ட அபிப்பிராயங்களே இவ்வகைச் சந்தேகங்களுக்குக் காரணமென்கலாம். இதனை எது பற்றி கால்டுவெல் துரையும் பின்பற்றினாரோ தெரியவில்லை. நிற்க, பார்போசாவின் அபிப்பிராயத்தையும் ஒருவாறு கவனிக்கின், திருச்செந்தூர் முதலிய ஸ்தலங்களுக்குக் கொல்லத்தரசரால் கீழ் கரையையடுத்துள்ள இடங்களில் கிரயங்கொடுத்து வாங்கிவிடப்பட்டிருந்த தர்மாசன பூஸ்திதியையிட்டும் தேவாலயங்களில் கொல்லத்தரசர் பேரால் நடத்திவிக்கப்பட்டிருந்த அர்ச்சனைக் கட்டளைகளையிட்டும் போத்திமார்களுக்கு மலையாளத்திலுள்ள செல்வாக்கையிட்டும் அந்த பிராந்தியங்கள் கொல்லத்தரசரின் கீழுள்ளவை எனத் தோற்றுவித்தன போலும். திருவாங்கூர் அரசரைக் கொல்லத்தரசரெனச் சொல்லல் இன்றும் வழக்கிலுள்ளது.



இந்த ஜில்லாவின் கீழ்கரை இப்படியிருக்க 1532 - கி. பி. யில் பரவர்களில் 70 பேர்கள் கொச்சிக்கு நிரோஜன சபையார் (Deputation) களாகச் சென்று தங்களுக்கு மூரிஷ் காரர்களாலும் நாயக்கர்களாலும் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நிவிர்த்தி செய்துகொடுக்க வேண்டுமென்று அங்கிருந்த போர்த்துக்கேசியரிடம் தெரிவிக்க, அவர்கள் அவ்விதம் செய்வதில் தங்களுக்கு ஆக்ஷேபனையில்லையென்றும் தங்களது மதத்தை அவர்கள் அனுஷ்டிக்க வேண்டுமென்றுங் கட்டாயப்படுத்த, அவ்விதமாகவே மதப்பிரவேசமாகித் தங்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். இவ்விதமாக இவர்களைக் கிறித்தவ மதத்திற் சேரத் தூண்டியவர், கொச்சிவாசியாயும் அப்போது கிறித்தவ மதத்திற் சேர்ந்துள்ளோருமான ஜோம் - டி - காஸ் (Joam-de-cruz) என்றவர். நிரோஜன சபையினர் 70 பேர்களையும் கொச்சியில் ஞானஸ்நானம் செய்து வைத்தவர் வாஸ் என்ற பாதிரியார் (Father Vas). பிரான்சிஸ் சேவியர் (Francis Xavier) காலமான 1542 கி. பி. யில் காயற்பட்டணம், மணப்பாடு, புன்னைக்காயல், தூத்துக்குடி, வேம்பாறு முதலிய இடங்கள் யாவும் அநேகமாக கிறித்தவ மதவாசிகளின் ஸ்தலங்களாகவே மாறிவிட்டன.

பரவர்கள் கிறித்தவ மதத்தைத் தழுவல்

நமது ஜில்லாவிலிருந்து கொச்சிக்குச் சென்றிருந்த 70 பரவர்களடங்கிய நிரோஜன சபையார்களின்

வேண்டுகோளை அன்னோர்கள் கிறித்தவ மதத்திற் சேர்ந்ததும் பூர்த்தி செய்து கொடுப்ப

**திருநெல் வேலியின் மீது போர்த்துக் கேசியர் கடற் படையெழுச்சி**

தற்காகக் கொச்சியிலிருந்து போர்த் துக்கேசியரின் கடற்படை ஒன்று 1532 கி. பி. யில் நமது ஜில்லாவிற்கு விரோதமாக அனுப்பிவிக்கப் பட்டது. அந்தப் போர்க்கப்பலுடன் மிக்கேல் வாஸ் (Father Michael Vaz) என்ற பாதிரியார் அநேக குருக்கள்மார்களுடன் புறப்பட்டு இங்கு வந்த பின்னரே கீழ்கரையிலுள்ள மேலே சொல்லியுள்ள துறை முகங்களில் வசித்த பரவர்களில் சுமார் 20,000 பேர்கள் கிறித்தவர்களாக ஞான ஸ்நானம் செய்து வைக்கப்பட்டனர்கள். முத்துச் சிலாபத்தில் போர்த்துக்கேசியர் செய்த வஞ்சனையால் அவர்களது செல்வாக்கு நமது ஜில்லாவில் நிலைகுலைய ஆரம்பித்து விட்டது. அத்துடன் டச்சுக்காரர்களுந் தோன்றிப் போர்த்துக்கேசியர்களுக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டனர்கள். இதுவே நமது ஜில்லாவில் போர்த்துக்கேசியரின் முதற் கடற்படை எழுச்சியாகும்.

கீழ் கரையில் இந்த நிலைமையில் வந்து குடியேறியுள்ள போர்த்துக்கேசியர் முத்துச் சிலாபத்தையும்

**போர்த்துக் கேசியரும் முத்துச் சிலாபமும்**

கையாக்ஷி செய்து அதிகமான லாபங் களை யடையலானார்கள். இது நாயக்க அரசர்களுக்கு நஷ்டத்துக்கிடமெனத் தெரிந்து போர்த்துக் கேசியர்களின் மளிகைகளடங்கியுள்ள ஊர்களையும் அவர்களுக்குச் சகாக்களாகவும் நூதனமாய்க்கிறித்தவ



மதத்திற்சேர்ந்துள்ளவர்களுமான பரவர்களையும் விணு
கத் தொந்தரவு செய்து கடைசியாக நாய்க்க அரசர்
களே அவைகளைச் சுவாதீனமாக்கிக் கொண்டார்கள்
என்று குர்ரீரோ (Guerrero) எழுதியிருக்குஞ் சரித்
திரத்தாலும் அவர் பின்னுள்ள பிஷோப் பாரெட்டோ
(Bishop Barretto) 1615 கி. பி. யில் எழுதிய சரித்
திரத்தாலும் தெரியவருகிறது. கீழ்கரையில் போர்த்
துக்கேசியரின் அரசாக்ஷியின் செல்வாக்கு மேலே
குறித்துள்ள நிலைமையில் 50 வருஷங்களாக ஓங்கி
வளர்ந்திருந்தது.

1578 கி. பி. யில் ஜேயோ - டி - பாரியா (Father Joao-de-Fario) முத்துச்சிலாபம் நடக்குங் கீழ்கரை யில் சில தமிழ் அச்சுக்களை வார்த்துத் தமிழ்ப் பாஷையில் கிறித்தவக் கோட்

**திருநெல் வேலியில் பிரசுரிக்கப் பட்டஆதி தமிழ் அச்சுப் புஸ்தகங்கள்**

பாடுகள் என்ற நூலையும் கிறித்தவ நாயன்மார்களின் சரித்திர நூலையும் நமது ஜில்லாவில் முதல் முதல் அச்சுப் புஸ்தகங்கள் மூலமாக வெளியிட்டிருக் கின்றனர். நமது ஜில்லாவில் போர்த் துக்கேசியர்களின் செல்வாக்கும் இத்துடன் ஒடுங்கி விட்டது.

ஐரோப்பா கண்டத்தில் கடல்வலி படைத்துள்ள மற்றோர் ஜாதியினரான டச்சுக்காரர்கள் கீழ் நாட்டார் களுடன் வியாபாரப் போக்கு வரவு

**நமது ஜில்லாவில் டச்சுக்காரர்கள்**

காரணமாக 1595 கி. பி.யில் ஒரு வியா பாரக் கப்பலை அனுப்பி வைக்க, அது 1602 கி. பி. யில் சிலோனில் வந்திறங் கியது. அது முதல் சிலோனைவிட்டுப் போர்த்துக்கேசி

யரை விரட்டும் வரையுமுள்ள காலமான 1658 கி. பி. போர்த்துக்கேசியருக்கும் டச்சுக்காரருக்கும் இடைவிடாமல் சச்சரவுகளும் சண்டைகளும் நிகழ்ந்தனவாகவேயிருந்து கடைசியாக 1655 கி. பி. யில் டச்சுக்காரர்கள் கொழும்பைப் பிடித்துக் கொள்ளவும், கீழ்நாட்டில் போர்த்துக்கேசியருக்குத் தத்தளித்துக் கொண்டிருந்த செல்வாக்கும் 1658 கி. பி. யில் தூத்துக்குடி பிடிபடவும் கீழே விழுந்து விட்டது. அவ்விதங் கெட்டுவிட்ட போர்த்துக் கேசியரின் ஸ்தானத்தில் டச்சுக்காரர்கள் கிளம்பிவிட்டனர்கள். தூத்துக்குடியைப் பிடித்துக் கொண்ட டச்சுக்காரர் அத்துடன் நின்று கொள்ளாமல் வேம்பாறு, வைப்பாறு, புன்னைக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி முதலிய இடங்களை நாளாவிருத்தியில் நாய்க்க அரசர்களின் தயவைக் கொண்டு கைப்பற்றிக் கொண்டனர் எனினும் போர்த்துக்கேசியரைப் போல ஆங்காங்குள்ள குடிகளை எல்லாம் ஐரோப்பாவிலுள்ள தங்களது அரசருக்குச் சொந்தமெனக் கருதாது நாயக்க அரசர்களின் குடிகளே எனக் கருதியதுடன் அக்கருத்தினையும் அனுஷ்டானத்திலுங் காட்டிவிட்டனர். ஆதலால் நாயக்க அரசரின் நம்பிக்கைக்கும் பாளையக்காரர்களின் சிநேகத்துக்கும் தங்களைப் பாத்திரர்களாக்கிக் கொண்டு தங்களது ஸ்தானங்களையும் வலுப்படுத்திக் கொண்டார்கள்.

மதுரை அரசர்களிடம் தெரிவித்து முத்துச்சிலாபத்தையும் குத்தகைக்கு எடுத்துக் கொண்டனர். இவ்



**டச்சுக்காரர்களும் முத்துச் சிலாபமும்**

வகைகளால் வியாபாரத்தில் செழித்தோங்கிவந்த டச்
சுக்காரர் அக்காலத்தில் மதுரையில்
நெய்த ஆடைகளை வெளி நாடுகளுக்கு
அனுப்பியும்ஜப்பான், சீனா, மொலுகஸ்
முதலிய த்வீபாந்தர நாடுகளிலிருந்து
தோல், பட்டு, வாசனை திரவியங்கள் முதலியவைகளை
உள்நாடுகளுக்கு வருவித்தும் வியாபாரம்செய்து ஜனங்
களுடைய பிரீதிக்கும் பாத்திரர்களானார்கள். கடற்
பக்கத்துள்ள முத்துச் சிலாபத்தையும்சங்கு முதலி
யவைகளையும் டச்சுக்காரர் எடுத்திருந்த குத்தகை,
போர்த்துக்கேசியருக்கு அதில் கிடைத்திருந்த லாபத்
தைப்போற் கொடுத்திருப்பதில்லை என்று அக்காலத்
தில் சிலாப சூப்பிரண்டாக (Fishery Superinten-
dent) இருந்த இர்வின் (Irwin) துரை எழுதியிருக்
கிறார்.

**எட்டயபுரத்தாரும் பாதிரியாரும்**

பாளையக்காரர்களின் உதவியும் போர்த்துக்கேசி
யர் டச்சுக்காராதியவர்களுக்கு வேண்டியதாக இருந்த
தால் அன்னோர்களிடமும் இவர்கள்
விரோதமின்றி ஒத்து நடப்பதாக
உறுதிமொழிகள் கூறி சமநட்புடன்
இருந்திருக்கின்றனர்கள். இது சமயந்
தான் காமயநாயக்கன் பட்டியிலுள்ள வேதக் கோவில்
பெருத்து கட்டப்பட்டதென்றும் போர்த்துக்கேசிய
ராலேயே அங்கோர் காங்கிரி கேஷன் உண்டாக்கப்
பட்டிருந்த தென்பதும் கத்தோலிக் பாதிரியான ஜாயி
(ஸ)-டி-கெல்லோ என்றவர் டி-கோ-எல்லி என்ற
வருக்கு 1686 கி. பி. யில் எழுதிய கடிதத்தில் எட்டய

புரத்து அரசரின் உதவியே அங்கு நமக்கு இச்சாதனத்துக்குக் காரணமான தென்றுதிய வக்கணைகளடங்கியவை காணப்பட்டிருக்கின்றன.

டச்சுக்காரின் பிற்காலத்திய இராஜாங்க சூழ்ச்சி

டச்சுக்காரர்களுக்கு நாயக்கர் அரசைக்ஷீணித்து விடவும் பிரன்சுக்காரர்களையும் இங்கிலீஷ்காரர்களையும் முகமதிய நவாபுகளின் ஆட்சியையும் கெடுத்துத் தங்களுடைய பலத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கம் மனதில்உதிக்கவும், பலவகைகளான சூழ்ச்சிகளைச் செய்யலாயினர். பாளையக்காரர்களிடம் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டும் அவர்களுக்குப் போதுமான இனாங்களை அப்போதைக் கப்போது கொடுத்தும்வந்திருக்கின்றனர். இத்துடன் இவர்களது சூழ்ச்சிகளை நிறுத்திக் கொள்ளாது இங்கிலீஷ்காரர்களையும் விரட்டிவிட வேண்டிய உபாயங்களையும் செய்யலாயினர் என்றதை ருஜுப்படுத்தக்கூடிய தஸ்தாவேஜுகள் கர்னல் புல்லர்ட்ன் (Colonel Fullerton) துரைக்கு 1783 கி. பி. யில் கிடைத்தன. இவ்வித உடன்படிக்கையினால் இங்கிலீஷ்காரருக்கு நன்மைக் கிடமில்லை என்று தெரிந்துவிட்ட வுடனே இங்கிலீஷ்காரர் டச்சுக்காரருடன் ஓர் உடன்படிக்கையை 2-9-1783ல் செய்து கொண்டு இங்கிலீஷ்காரரால் 1782 கி. பி. யில் பிடித்துக் கொள்ளப்பட்ட தூத்துக்குடியை மறுபடியும் டச்சுக்காரருக்கு 1785ல் கொடுத்துவிட்டனர். நமது ஜில்லாவில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் 1825-ம் வருஷம்வரை நிலையுற்றிருந்ததால் அவர்களைப்பற்றி இனி அடிக்கடி ஆங்காங்கு சொல்ல



நேரிடும் என்றதால் இங்கு இத்துடன் நிறுத்திக் கொள்வோம். போர்த்துக்கேசியர் கெடவும் டச்சுக்காரர் கிளம்பவுமுள்ள இடையின் காலத்தில் பாண்டி நாடாகிய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களை ஆண்டவர் திருமலை நாயக்கராவர். இவர் காலத்தில் நம்நாடு சுவாதீனம் பெற்று விஜயநகரத்தாரின் கீழடக்கத்தையும் உதறிவிட்டு சுற்றிலுமுள்ள நாடுகளையுந் தனக்குள்ளாக்கிக் கொண்டது. பாதிரிமார்களுக்கு எண்ணிறந்த நன்மைகளையும் இவர் செய்துள்ளார். இவரால் நடாத்தியபோர்களுக்கும் கட்டிடங்களுக்கும் செலவுகள் எண்ணிறைந்த கோடிக்கணக்கான ரூபாய்களாம். ஸ்ரீ மீனாக்ஷியம்மன் மீது இவருக்கு விசேஷப்பற்றுண்டென்றாலும் இவர் சமமதக் கொள்கையையே நாடியிருந்தனர் என்பதை இவரால் கிறித்தவப் பாதிரிமார்களுக்கும் முகமதியக் குருக்கள்மார்களுக்கும் விடுக்கப்பட்டிருந்த மானியங்களும் தைக்காக்களும் மற்றுமுள்ளவைகளும் நன்கு விளக்குகின்றன.

எட்டயபுரத்தார் திருமலை நாயக்கருக்கு விரோதமாகப் போர்புரிதல்

எட்டயபுரத்தாருக்குச் சொந்தமான மதுரைப் பிராந்தியங்களை யடுத்துள்ள நாடுகளை திருமலை நாயக்கர் காரணமின்றி எடுத்துக் கொண்டதற்குச் சரியானபடி நஷ்ட ஈடு முதலியவைகளைக் கொடுக்க ஆலசியம்செய்ததுமின்றி அடிக்கடி நாணய விஷயமாக எட்டயபுரத்தாரைக் கப்பத்துப்பாக்கி என்ற சாக்கை வைத்துக்கொண்டு நிர்ப்பந்திக்க அதனைப் பொறுக்க மாட்டாத எட்டயபுரத்

தார் கோபங்கொண்டு திருமலை நாயக்கருக்கு விரோதமாகப் பாளையக்காரர்களடங்கிய ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு மதுரையை நோக்கிப் போர் புரியச் சென்றனர். இப்போரில் திருமலை நாய்க்கர் எதிர்பாராத வண்ணமாக எட்டயபுரத்தார் காட்டிய சாகஸங்கள் மிகுந்து வருவதைக் கண்டு உடனே சேதுபதியை மதுரைக்குத் தனக்கு உதவியாக வரும்படி திருமலை நாயக்கர் ஆக்ஞாபிக்க, அதன்படியே அன்னோர் சேனையும் மதுரைச் சேனையும் ஒன்றுபட்டு எட்டயபுரத்தாருக்கு விரோதமாகப் போர்புரிந்து சண்டையில் வெற்றி பெற்றன. இச்சண்டையில் திருமலை நாயக்கருக்கு சேதுபதியின்மீது சந்தோஷம் பிறந்து, மன்னார் தீவையும் அதன் முத்துச்சிலாபத்தையும் சுதந்தரமாகக் கொடுத்துவிட்டனர். இது முதல் அங்கு நடக்கும் சிலாபத்தில் சேதுபதிக்குப் பங்கு ஏற்படலாயிற்று *

---

* இது சமயந்தான் இந்நூலாசிரியரின் முன்னோர் எட்டயபுரம் வர சேர்ந்தது.

## நான்காம் அத்தியாயம்

## மத்திய காலத்தியது

நாயக்கர் ஆக்ஷியின் முடிவும் இராஜாங்க மாறுதல்களும்

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆண்சந்ததியற்று இறக்கவும், அவரது பத்தினியாரான இராணி மீனாக்ஷியம்மாள் பங்காரு திருமலை நாயுடுவின் குமாரரான ஒரு சிறிய பையனைப் பாண்டிய நாட்டுக்கு அரசனாக, தத்து புத்திரனாக எடுத்து நாட்டின் ஆளுகையை, சிறிய பையனாக இருந்த சுவீகார விஜயகுமாரமுத்து திருமலைநாயக்கருக்குப் பிரதிநிதியாக ஆண்டுவந்தாள். இதில் சிலர் வெறுப்புற்று தத்து புத்திரனின் தகப்பனைப் பிரதிநிதியாக ஆக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். இந்தத் தாவாவினால் பாண்டிய நாட்டின் ராஜரீகம் கேவலத்துக்கு வந்து விடுமென்று தெரிந்த மாற்றரசர் சந்தோஷமடைந்திருந்தனர்.

இராணி மீனாக்ஷியம்மாளும் சண்டா சாஹிபும்

டாஸ்ட் அலிகான் ஏவுதலினால் சண்டாசாஹிபு முன்னவாது குமாரரான சாவ்தர் அலிகானின் தலைமையின்கீழ் மதுரைக்கு ஓடி வந்து இராணி மீனாக்ஷியம்மாளுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வங்காரு திருமலையின் கக்ஷியைத் தலையெடுக்க விடாமல் செய்து விடுவதாயும் இராணி மீனாக்ஷியம்மாளுக்குத் துரோகம் செய்வதில்லையென்றுங் கொரான் புஸ்தகத்தில் சத்தியம் செய்துகொடுத்து இராணியம்மாளை நம்பும்படிசெய்து,

மோசடியாக இராஜ்யத்திற்குள் பிரவேசித்து இராஜ்ய உளவுகளைத் தெரிந்துகொண்டு இராணியம்மாளைச் சிறையிலிட்டுப் பாண்டிய நாட்டிற்குத் தன்னை அரசனாக்கிக் கொண்டார். வங்காரு திருமலைநாயுடுவின் கக்ஷியின்போதும் இராணி மீனாக்ஷியம்மாளிடமே பொக்கிஷசாலைகளும் பண்டகசாலைகளும் வரவு செலவு கணக்குகளும் சுங்கம் முதலிய தீர்வைக் கணக்குகளும் இராணுவங்களும் இருந்தனவென்பதால் அந்தக் கக்ஷியினால் இராணி சிறிதுகூடச் சஞ்சலப்படவில்லையென்பது தெரியவருகிறது. இவ்விதம் ஜெயிலில் அடைத்து வைத்திருப்பது வீண் செலவுக்குக் காரணமானதாகுமென்றும் நாளடைவில் இப்படி இவளை வைத்திருப்பதில் ஜனங்கள் சகிக்காதவர்களாகித் தன்னிடத்தில் அதிருப்திகொண்டு சண்டைக்குக் கிளம்பவோ அல்லது பாளையக்காரர்களிடம் சென்று தெரிவித்து, தனக்கு விரோதமாகச் சண்டையை ஆரம்பிக்கும்படி செய்யவோ கூடுமென்ற பயத்தினாலும் சண்டாசாஹிபு அவளைக் கொன்று விடுவதாக உறுதி கொண்டான் !

**இராணி மீனாக்ஷியம்மாளின் தற்கொலை**

இதைத் தெரிந்து கொண்ட இராணியம்மாள் பெண்பழி அத்துரோகியைச் சேராதிருக்க வேண்டுமென்ற பரோபகார நோக்கத்தைக் கொண்டோ அல்லது க்ஷத்திரியக் குடும்பத்தில் பிறந்த வீரசிகாமணியான தன்னையொத்த ஒரு பெண்பால் அதர்ம வழியிற் செல்லும் ஒரு மதப்பிரஷ்டனது வாளுக்கு உணவாவதிலும் தற்கொலை புரிந்து கொள்வதே க்ஷத்திரிய தர்மமென்ற எண்ணம் மனதிற்றோன்



றியோ உடனே விஷத்தை உட்கொண்டு உயிர் விண்டனள். என்னே இவளது வீரம்! இதன் பயனாக அக்கொடியோனான சண்டாசாஹிபு அடைந்த கேட்டை அவாது பின்னாட்களின் வாழ்வில் தெரிந்து கொண்டோம்.

**மகாராஷ்டிரர்களின் படையெழுச்சியும் சண்டா சாஹிபைச் சிறைப்படுத்தலும்**

சண்டா சாஹிபு பாண்டிய நாட்டைச் சுவாதீனமாக அடைந்து கொண்ட துரோகவழி, பங்காரு திருமலைநாயுடு கக்ஷியில் தலைமை பூண்டவர்களுக்குச் சகிக்கொணாததால் அவரை நம்பி தங்களுடைய கக்ஷியை நிலைபெறச் செய்வது மோசத்துக்குள்ளாகி விடுமென்று தெரிந்து 1739-ம் வருஷத்தில் சத்தாராவிலுள்ள மகாராஷ்டிரத் தலைவர்களுக்குத் தெரிவித்து அன்னார்களது உதவியை நாட இரகுஜி போன்ஸலும் உட்டாசிங்கும் பெருங் குதிரைப் படைகளுடன் தெற்கு நோக்கிச் சென்று பாண்டி நாட்டின் புதிய தலைநகரான திருச்சினாப்பள்ளியை அடைந்து தஞ்சாவூர் அரசரையும் சில பாளையக்காரர்களையும் அனுசரணையாக வைத்துக்கொண்டு போர் செய்யத் திருச்சினாப்பள்ளிக் கோட்டை பிடிபடுந் தருணத்தில் சண்டாசாஹிபு சரணாகதி யடைந்தார். அவரை உடனே சத்தாராவுக்குக் கைதுசெய்து அனுப்பிவிட்டார்கள். இவ்வித சம்பவம் நிகழும் சமயத்தில் சண்டாசாஹிபுவின் சகோதரரும் மதுரையில் சண்டா சாஹிபுவின் பிரதிநிதியுமான படேசாஹிபு இறந்துவிட்டார். திருச்சினாப்பள்ளி, மகாராஷ்டிரரது

கைவசப்படவும், முராஹரிராயரைப் பாண்டிய நாட்டிற்கு மகாராஷ்டிர அரசனின் பிரதிநிதியாக்கினர். அவ்விதம் நியமனம் பெற்றிருந்த முராஹரிராயர் மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் காரியஸ்தராக அப்பாஜிராயரை நியமித்திருந்ததாக ரிக்கார்டுகளில் தெரியவருகிறதேயன்றித் திருநெல்வேலி ஜில்லா ஒன்றில்மட்டும் அனுபோகத்தில் மகாராஷ்டிரர்களின் செல்வாக்கு இருந்திருப்பதாகத் தெரியவில்லை என்பதைத் திருநெல்வேலியிலுள்ள முக்கிய பாளையக்காரர்களான எட்டயபுரம், நெய்க்கட்டஞ் செவல், சிவகிரி முதலியவர்களுடைய ஆக்ஷியின் சம்பந்தமான மாறுதல்களும் கிளர்ச்சிகளும் எவையுமே காணப்பட்டில வென்பன போதுமான ஆதாரங்களாகுமென்று சரித்திரநூலோர் அபிப்பிராயங் கொள்ளற்கிடனாகின்றது. இதுவுமொருவாறு பொருத்தமுள்ளதே.

*சப்தர் அலிகானும் திருவாங்கூரும்*

இராஜா சர். டி. மாதவராவ் தனக்குக் கிடைத்த ஒரு சாசனத்தை ஆதாரமாகக்கொண்டு பின் வருமாறு கூறுகிறார் :—'' டாஸ்டு அலிகான் தன்னுடைய சகோதரரான சப்தார் அலிகானுக்கு (Safdar Alikhan) ஒரு இராஜியத்தை எப்படியாவது எவரிடமிருந்தேனும் பிடுங்கிக் கொடுத்து அதற்கு அவரை அதிபதியாக்க வேண்டுமென்று சண்டா சாஹிபையும் படேசாஹிபையும் திருவாங்கூருக்கு அனுப்பி வைத்தார். அவர்களிருவரும் ஆரம்பொழிக் கணவாய் மார்க்கம் 1740-ல் திருவனந்தபுரம் போகவும், அது சமயம் திருச்சியிலோ ஆற்காட்டிலோ மகாராஷ்டிரர்



ளாலேயோ வேறு எவராலேயோ நடந்த அமளிகளைக் கேள்வியுற்று அங்கு திருவனந்த புரத்தில் எதுவுமே செய்யாது திருவாங்கூர் மகாராஜாவிடம் வேண்டிய சன்மானங்களை மட்டும் பெற்றுக்கொண்டு திரும்பி விட்டார்கள்'' இவ்வித மிருத்தலுங் கூடுமென்போம்.

*பாண்டிய நாட்டின்மீது நிஜாமின் படையெழுச்சி*

பாண்டிய நாட்டை மகாராஷ்டிரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள் என்ற சங்கதியைக் கேள்வியுற்ற ஹைதராபாத் நிஜாம் ஒருபெரும் சேனையைத் திரட்டிக்கொண்டு பாண்டிய நாட்டின் புதிய தலைநகரான திருச்சிறுப்பள்ளிக்குச்சென்று1743ல் மகாராஷ்டிரர்களைத் துரத்தி யடித்துவிட்டு அன்வார்-உட்-டீனுக்கு அதனை ஒப்புவித்து அதற்கு அவரையே நவாபாக 1744ல் நியமித்துவிட்டார் என்றதிலிருந்து பாண்டிய நாடான திருச்சிறுப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்கள் நவாபுவின் ஆக்ஷியின்கீழ் 1744-ல் வந்துவிட்டன எனத் தெரிந்தோம். 1748-ம் வருஷத்தில் அன்வார்-உட்-டீன் இறந்துவிட்டார். அதற்கு மறுவருஷம் அவர் குமாரர் பட்டத்துக்கு வந்தார். ஆனால் 1748-ல் சத்தாராவில் கைதியாக இருந்த சண்டா சாஹிபு சுவாதீன மடைந்து அன்வார்-உட்-டீனுடைய குமாரரான முகமது அலி ஆற்காட்டு நவாபு என்றதை ஆக்ஷேபித்து பிரெஞ்சுக்காரரின் உதவியினால் அவரே நவாபாகிக் கொண்டார். இவ்விதம் நிகழ்ந்த தாவாவின் காரணமாக இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் ஒவ்வொருவரும் ஒவ்வொருத்தரின்

கக்ஷிக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு போரைக் கிளப்பிவிட்டார்கள். ஆனால் திருநெல்வேலி ஜில்லா எந்த விதமாக இருந்த தென்பதைமட்டும் நாமிங்கு கவனிக்கவேண்டியதால் அதனைப்பற்றிய விவரங்களை மட்டும் குறிப்பிடுவோம்.

திருநெல்வேலியின்மீது இங்கிலீஷ் காரரின் படை எழுச்சி

பாண்டியநாட்டிலுள்ள பாளையக்காரர்களும் மற்றுமுள்ள பிரமுகர்களும் முகமது ஆலிக்கும் சண்டா சாஹிபுக்கும் இராஜாங்க விஷயமாக நிகழ்ந்த தாவாக்களில் தலையிடாமல் பொதுவாக இருந்துவிட்டார்கள். முகமது ஆலி என்றவர் தன்னுடைய சகோதரரான அப்துர் ரஹிம் என்றவரின் தலைமையின்கீழ் 2500 குதிரைப் படையையும் 3000 சைனியங்களையும் 30 ஐரோப்பியப் பட்டாளத்தையும் திருநெல்வேலிக்கு அனுப்பிவைத்து அதனை ஒழுங்குபடுத்தி தன் ஆக்ஷியைச் செலுத்தினர். அப்துர் ரஹிமானுடன் ஐரோப்பியப் பட்டாளத்தை நடத்திக் கொண்டுவந்தவர் லெப்டினென்று இன்னிஸ் (Lieutenant Innis) என்ற ஓர் இங்கிலீஷ்காரராவர். இவர்தான் திருநெல்வேலிக்கு வந்த இங்கிலீஷ்காரருள் முதலானவர். இவரது படையெழுச்சியே திருநெல்வேலி ஜில்லாவில் இங்கிலீஷ்காரர்களின் முதற்படையெழுச்சியுமாம். மேலேசொல்லிய பட்டாளங்கள் திருநெல்வேலிக்குச் சென்றதும் அங்கு எதுவுமே அவர்களுக்கு விரோதமாக நடந்திருக்கவாவது அல்லது நடப்பதாகவாவது காணப்படாததால் ஒரு வகையில் சமாதானம் அடைந்திருந்தார்கள். ஆனால் பாளையக்காரர்களின் கிஸ்துப் பாக்கிகள் குவிந்திருப்பதாகக்



கேள்வியுற்ற நவாபு அவைகளை வசூலித்துக் கொண்டு தங்களுடைய சைனியங்களுக்குள்ள பாக்கிச் சம்பளங்களைக் கொடுத்து விடலாமென்று கொண்டிருந்த எண்ணம் நிறைவேறாமற் போய்விடவும், சிப்பாய்கள் ஏமாற்றத்தை அடைந்தவர்களாகி வீணான கலகங்களை ஆரம்பிக்கவும், அவைகளை இன்னிஸ் துரையின் சாமர்த்தியத்தாலும் அப்துர் ரஹிமானின் நிதானமான புத்தியின் திறனாலும் ஒருவாறு சமாளித்து அவர்களைத் திருப்தி யடையச் செய்து சம்பளப் பாக்கிப்புகார்களையும் எவ்விதமாகவோ அடக்கி விட்டார்கள்.*

பாளையக் காரர்களுக்கு சண்டா சாஹிபு கூறிய ஆசை வார்த்தைகள்

பாளையக்காரர்களின் கப்பத்துப்பாக்கிகளைப் பூராவும் வஜாசெய்து விடுவதாயும் அவர்களது சைனியத்தின் சம்பளப்பாக்கிகளுடன் அவைகளுக் கேற்படும் செலவுகளைத் தானே ஒத்துக் கொள்வதாயும் அப்படிக்குத் தன்னாற் செய்யப்படும் உபகாரத்துக்குக் கைம்மாறாகப் பாளையக்காரர்களும் அவர்களது சைனியங்களும் தன் பக்கத்திற் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் அடிக்கடி சண்டா சாஹிபு தூதர்களை அனுப்பி வைத்துத் தூண்டிக் கொண்டிருந்த தருணத்

* இதற்குச் சிறிது காலங்களுக்கு முன்னர் புதுச்சேரி கவர்னரான டூப்ளே (Dupleix) யின் பிரதம துபாஷ் கனகராய முதலியாரென்றவர் திருநெல்வேலிச் சீமையின் உளவுகளை இரகசியமாகத் தெரிந்து கொண்டு வருவதற்கென்று அனுப்பப் பட்டிருந்தார். இவர் திருநெல்வேலியிலிறங்கியிருந்த இடம் இன்னும் இவரது பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது. இதே இடத்தில்தான் இன்னிஸ் துரையும் வந்திறங்கியிருந்தனர். அதனை இன்னும் சட்டைக்காரர் தெருவென்பர்.

தில் சண்டா சாஹிபினிடம் சிப்பாயாக இருந்து இராணுவ உத்தியோகத்தில் உயர்ந்த ஸ்தானத்தை வகித்து பின்பு தஞ்சாவூர் அரசரிடம் சேவித்து அதனையும் விட்டு விட்டு மறுபடியும் சண்டா சாஹிபினிடம் இராணுவத்தில் தலைமை பூண்டுகொண்ட ஆலம்கான் என்றவர் மதுரையைப் பிடித்துக் கொண்டு சண்டா சாஹிபே அதற்கு அரசர் என்றார். திருச்சிராப்பள்ளிக்குந் திருநெல்வேலிக்கும் இடையிலுள்ள மதுரை பிடிபடுமாயின் திருநெல்வேலிக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் தேவையான இராணுவத் தளவாடங்களின் வரத்துப் போக்குகளில் தடைபட்டு இராஜாங்க முறையை நடாத்துவதும் கஷ்டத்துக்குள்ளாகி விடுமென்ற காரணத்தால் சிறிதேனுந் தாமதமின்றி கியாப்டன் கோப்பு (Captain Cope) என்ற துரை மதுரைக்குச் சைனியங்களுடன் புறப்பட்டுச் சென்றும் அவருடைய சைனியத்தில் நஷ்டமடைந்து காரியத்தையும் நிறைவேற்றிக் கொள்ளாமல் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பிச் சென்றார்.

*கர்னல் ஹிரான் துரையின் படை எழுச்சியும் முகமது யூஸுப்கானின் உத்தியோகமும்*

இதை யறிந்த நவாபு அப்போது சீமையிலிருந்து வந்திறங்கிய கர்னல் ஹிரான் (Colonal Heron) துரையின் தலைமையின்கீழ் 500 ஐரோப்பியப் பட்டாளங்களையும் 2000 சுதேசப் பட்டாளங்களையும் கும்பினியாரின் உத்தரவின்படிக்கு அனுப்பி வைத்து அவருக்கு உதவியாக நவாபுவின் மூத்த சகோதரரான மாவஸ்கான் என்பவரையும் 1755 கி. பி. யில் அனுப்பி வைத்துத் தானும் திருச்சிராப்பள்ளியிலிருந்து மணப்பாறைவரை சைனியங்களுடன் புறப்பட்டு வந்து வழியனுப்பிவிட்டு மறுபடியும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றனர். கும்பினிச் சைனியங்கள் யாவற்றிற்கும் தலைமை வகித்த கம்மாண்டர் - இன் - சீப்பாகிய ஜெனரல் லாரன்ஸ் (General Lawrence) 1754 கி. பி.யிலோ, அல்லது அதற்குச் சிறிது முன்னரோ கும்பினிச் சிப்பாய்கள் யாவற்றிற்கும் கும்மாந்தராக நியமிக்கப்பட்டிருந்த முகமது யூஸுப்கானுக்கு இராணுவ சம்பந்தமான அதிகாரங்களுடன் ரெவினியு, சிவில், கிரிமினல் முதலிய சகல அதிகாரங்களையும் 1756 ல் கொடுத்து, திருநெல்வேலிப் பாளையக்காரர்களின் கிஸ்துப்பாக்கிகளை வசூலிக்கவோ அல்லது அவைகளைச் சமயத்துக்குத்தக்கபடி வஜாசெய்யவோ, அடங்கல், தவணை முதலிய கணக்குகளைப் புதிப்பிக்கவோ, தீர்வைகளை அப்போதைக்கப்போது கூட்டவோ, குறைக்கவோ எடுத்து விடவோ அல்லது அவை சம்பந்தமாக எதையும் செய்து கொள்ளவோ ஆகிய சகல பொறுப்புகளுமடங்கிய அதிகாரப் பொறுப்பை அவருக்குக் கொடுத்து அவரால் செய்யப்படுகிற ஏற்பாடுகளுக்கு விவரமான ரிப்போர்ட்டுடன் வசூலித்த பணத்துக்குச் சரியான கணக்கையும் அவ்வப்போது கியாப்டன் கலியாட்டு (Captain Calliaud) த்துரைக்கு அனுப்பப்பட வேண்டியதென்றவோர் உத்தரவைப் பெற்று 14 - 3 - 1756ல் திருநெல்வேலிச் சீமையை ஒழுங்குபடுத்தப் புறப்பட்டனர்.

ஜெனரல் லாரன்ஸ்துரை முகமது யூஸுப்கானிடம் விசேஷ மதிப்படைந்திருந்த காரணத்தால் மிலி

*ஜெனரல் லாரன்ஸ் துரையும் முகமது யூஸுப்கானும்*

டெரி, சிவில், ரெவினியு, கிரிமினல் ஆகிய இலாகாக்களில் பெரும் அந்தஸ்துள்ள உத்தியோகங்களுக்குப் பாத்திரரானது மன்றி இவரிடம் அவைகளைப் பொறுப்புடன் பார்க்கும் அபாரசக்திகளும் காணப்பட்டிருந்தன வென்பதைப் பின்னுள்ள செயல்களால் இதை வாசிப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள். இவரையே நமது ஜில்லாவில் "கான்சா" என்று இப்போதும் வழங்கப்பட்டு வருகிறது. லாரன்ஸ் துரைக்கு இவரிடமுள்ள மதிப்பின் காரணமாக இவருக்குப் பொற்பூப் பதக்கங்கள் அளிக்கப்பட்டிருந்தன. இத்தகைய வீரரின் பாதுகாப்புக்குள்ளிருந்த திருநெல்வேலி ஜில்லாவில் கர்னல்ஹிரான் துரை மேலே சொல்லியுள்ள தளவாடங்கள் சகிதம் வந்திறங்கி ஜில்லாவின் நிலைமைகளை யூஸுப்கான் சொல்லக் கேட்டுத் தெரிந்து "பாண்டிய நாட்டிற்கு நவாபு முகமது ஆலியே அரசரென்றும் சண்டா சாஹிபுக்குப் பாண்டிய நாட்டில் இராஜ்யாதிகாரிய விஷயங்களில் எதுவுமே கிடையாது" என்றும் ஓர் இராஜாங்க விளம்பரத்தை பகிரங்கப்படுத்தியும் அறிக்கைகள் மூலமாயுந் தெரிவித்தனர்.

மேலே சொல்லிய விளம்பரங்கள் மூலமாகத் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எல்லோரும் ஏகோபித்துப் பாண்டிய நாட்டிற்கு நவாபு முகமது ஆலியே அரசரென்று அங்கீகரித்துக் கொண்டதால் திருநெல்[illegible] ஜில்லாவிற்கும் அவரே நவாபு என்றதைச் சொ[illegible] மலே தெரிந்து கொள்வீர்கள். பாளையக்காரர்கள்



*கிஸ்துப் பாக்கிக்காக எட்டயபுரமும் பாஞ்சாலங் குறிச்சியும் கபர்ஜாமீன்களை ஒப்புக் கொடுத்தல்*

கொடுக்க வேண்டிய கப்பங்கள் மிகுந்துப் பாக்கிகள் கிடப்பவைகளை வசூலிக்க மார்க்கமில்லை என்பதைத்தெரிந்து ஏதேனும் முக்கியமான பாளையக்காரர்களில் சிலரைச் சிக்ஷித்தாலன்றி பாக்கிகளை வசூலிக்க மார்க்கமில்லை யென்றும் அப்படி அவருள் சிலரை அடக்கிவிட்டால் மற்றப் பாளையக்காரர்களும் செலுத்த வேண்டிய பகுதித் தொகையின் பாக்கிகளைப் பீதி அடைந்து செலுத்தி விடுவார்கள் என்றும் கருதி முதலில் பாஞ்சாலங் குறிச்சி கட்ட பொம்மையையும்எட்டயபுரத்தாரையும் தாக்கினார்கள். இதுவே பிற்காலத்தில் நிகழ்ந்துள்ள பாளையக்காரர்களின் கலகங்களுக்கு முதற் காரணமாகும். இந்த கட்ட பொம்முவுக்குப்பின் வந்துள்ளோர் ஒவ்வொருவரும் இங்கிலீஷ்காரரையும் அவரது ஆக்ஷியையும் முற்றும் வெறுத்ததுடன் வைரம் பூண்ட விரோதத்தையுங் கொண்டிருந்தார்கள். பாஞ்சாலங் குறிச்சி யாரைக் கட்டபொம்மு என்று சொல்வதே சரித்திரத்தில் காணலாகும். கப்பத்துப்பாக்கிகளை வசூலிப்பதற்காக எட்டயபுரத்துக்கும் பாஞ்சாலங் குறிச்சிக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கும்பினிச் சைனியம் எல்லைய நாயக்கன் பட்டியைப் போய்ச் சேரவும், கும்பினிதுரைமார் சொல்லுகிறபடியே நடந்து கொள்ளுவதாகவும் பாக்கியுள்ள தொகையில் இப்போது கொடுக்கப்படுவதைப் பெற்றுக்கொண்டு மீதம் செல்லாகும் வரை அவர்களால் ஒப்படைக்கப்படும் கபர் ஜாமீன்

களை அங்கீகரித்துக்கொண்டு பாக்கி செல்லாகவும் நபர் ஜாமீன்களை வாபீஸ்வாங்கிக்கொள்ள சித்தமாக இருப்பதாகவும், தூதுவர் மூலம் சொல்லியனுப்ப; அதற்குக் கும்பினிதுரைமார் இசைந்து கொண்டு செலுத்தப்பட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு பாக்கித் தொகைக்கு அவர் அவர்களால் ஒப்படைக்கப்பட்ட நபர் ஜாமீன்களையும் கர்னல் ஹிரான்துரையே ஆங்காங்கு நேரில் சென்று பெற்றுக்கொண்டனர். மற்றுஞ் சில சிறிய பாளையப்பட்டுக்காரர்களும் பாக்கிகளைச் செலுத்தியதில் மொத்தங்கூடிய ரூபாய் எழுபதாயிரத்துக்கு மேலாகவில்லை. இப்படி இருக்கும் மத்தியில், சைனியங்கள் திரும்பிவர வேண்டுமென்று மேலான அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வரவும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முவிடம் நபர்ஜாமீன்களை மீட்டுக்கொண்டு பாக்கித்தொகையைச் செலுத்திவிடவேண்டுமென்றுகேட்க, சிறிது காலம் தாமதப்படுத்தினால் அவசர நிமித்தம் பாக்கியை வசூலிக்காமலே திரும்பிப் போய் விடுவார்களென்று கருதி இழுத்துக் கடத்தவும்; நபர் ஜாமீன்கள் சகிதம் அவர்கள் புறப்பட்டுப் போய் விட்டார்கள். அப்படிப் புறப்பட்ட கர்னல் ஹிரான் துரை நேராகத் திருச்சினாப்பள்ளிக்குச் செல்லாமல் மாவஸ்கானின் சொல்லுக்கிசைந்து முகமது ஆலியின் ஆக்ஷிக்கு விரோதமாகவும் இங்கிலீஷ்காரரிடம் துவேஷ எண்ணமுங் கொண்டிருந்த நெய்க்கட்டஞ் செவல் பூலித்தேவரிடம் போய்ச் சேர்ந்துவிட்டார். நவாபு அன்வார் - உட் - டீனுக்கு மூத்த குமாரர் மாவஸ்கானாக இருக்க முகமது ஆலி நவாபாகிய விவரம் எதுபற்றியென்பது நன்கு புலப்பட்டிலது !



பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப் பட்டின் உற்பத்தி

முன்பக்கங்களில் நாம் பிரஸ்தாபித்துள்ள கம்பளத்தார் பாளையப்பட்டுகளில் அப்போதிய காலத்தில் பாஞ்சாலங் குறிச்சி ஏற்படவில்லையென்று சொல்லியுள்ளது ஞாபகமிருக்கலாம். அப்படிக்கிருக்க இப்போது அதனைக் குறித்துப் பேசுவதால் அது எவ்வாறு எப்போது உண்டாயதென்ற சங்கை சிலர்க்குத் தோன்றல் நியாயமானதால் அதன் உற்பத்தியின் வரலாற்றைச் சிறிது விளக்கிக் காட்டுவோம்:—மதுரையை ஆண்ட பாண்டியருள் கடைசியவரான சந்திரசேகர பாண்டியரின் போக ஸ்திரியின் வயற்றிலுதித்த ஐவர்கள் விசுவநாத நாயக்கரின் ஆக்ஷியை ஒப்புக் கொள்வதற்கிணங்காதவர்களாகி வீணான சச்சரவுகளைக்கிளப்பவும், நாயக்கர் அரசருக்கு அன்னோர்கள் மாட்டுத் துவேஷங்கொண்டு அவர்களை விரட்டியடிக்கவும் அவர்கள் கயத்தாறு, கெங்கை கொண்டான், சீவிலிப்பேறி முதலிய இடங்களில் நிலையூன்றி அப்பிராந்தியங்களுக்கு அவர்களே அரசர்கள் என்று வீண் ஆரவாரம்செய்து கொண்டும் இராஜாங்கத்துக்குத் தீங்கிழைத்துக் கொண்டும் தங்களை இளம்பஞ்ச பாண்டவர்கள் என்று சொல்லிக் கொண்டும் ஆக்ஷிபுரியலாயினர். இது சமயத்துக்குச் சிறிது முன்னம் முதுகுடிநாடு என்ற இளசை நாட்டிலுள்ள மறவர்களின் கலகங்களை அடக்குவதற்கென்று அனுப்பி வைக்கப்பட்டிருந்த இப்போதைய எட்டயபுரத்தரசரான கருணைக் கடலின் முன்னோர்களிலொருவர் அப்பிரதேசங்களில் கலகங்களை அடக்கி, சமாதான

வழியிலிருக்கும்படி செய்துவிட்டனர் என்ற சங்கதி
யைத் தெரிந்து கொண்ட நாயக்க அரசர் தன் மந்திரி
யான அரிய நாயக முதலியாரை இப்போதைய எட்
டய புரத்தரசரின் முன்னோரான முதுகுடி நாட்டரச
ரைச் சகாயமாகக் கொண்டு கயத்தாறு முதலிய இடங்
களுக்குச் சென்று இளம்பஞ்ச பாண்டவர்களின்
கோட்டத்தையடக்கும்படி ஆக்ஞாபிக்க அவ்விருவரும்
அவ்வாறே ஆங்குச் சென்று பஞ்ச பாண்டவருள்
சிரேஷ்டத்துவம் வஹித்த "ஜெகவீரராம பாண்டி
யனையும்'; அன்னார் சகோதரரும் சேனைக்குத் தலைமை
வஹித்துள்ளவருமான தளவாய்ப் பாண்டியனையும்
எவ்வளவோ கேட்டுக்கொண்டும் அவர்கள் அதற்கிசை
யாததால் உடனே கடும்போரைத் தொடர்ந்து விட்ட
னர். அப்போரில் இளம் பஞ்சபாண்டவர்கள் பஞ்சா
கப்பறந்தோடினார்கள் என்பதைக் கேள்வியுற்ற மதுரை
அரயரான கர்த்தாக்கள் எட்டயபுரத்தார்மீது சந்தோ
ஷங் கொண்டு இளம்பஞ்சபாண்டவர்களின் சிரேஷ்
டரின் பட்டப் பெயரான "ஜெகவீரராமன்" என்ற
பட்டத்தையும் எட்டயபுரத்தாருக்குக் கொடுத்து
முதுகுடி நாடான இளசை நாட்டின் தலைநகராக இப்
போதுள்ள எட்டயபுரத்தையே ஆக்கிக்கொள்ளவும்
கட்டளையிட்டனர். அதன்படி 1567 கி. பி. ஜனவரி
மாதத்திற்குச் சரியான தை மாதம் ஓர்நல்ல முகூர்த்த
தினத்தில் எட்டயபுரம் முதுகுடி நாட்டிற்கு இராஜ
தானி நகரமாயிற்று. இந்நிகழ்ச்சிகளின் சிறிது காலத்
துக்குப் பின்னால் கர்த்தாக்களுக்கு இளம் பஞ்ச
பாண்டவர்களின் பின் சந்ததியாரின்மேல் ஏதோ



கருணை யுதிக்கவும், அவர்களுக்கு மேலே சொல்
லிய நாட்டுப் பக்கங்களை அடுத்துச் சில பூமிகளை ஜாரி
செய்து அவர்களையும் அவர்களது நேர் வாரீசுகளான
பிந்திய சந்ததியினர்களையும் அபிமானித்து வந்தனர்.
அப்படி அபிமானிக்கப்பட்டு வந்துள்ள அக்குடும்பம்
சந்ததியற்ற காரணத்தாலோ கர்த்தாக்களின் அபி
மானங் குறைந்த காரணத்தாலோ அந்நாட்டின் சுவா
தீனத்தை யிழக்க, ஆங்கு அப்போது ஸ்தலங் காவ
லாக இருந்த தோக்கிலவார் கம்பளத்தார் வகுப்பின
ரான கட்டபொம்மு நாயக்கர்—ஊமத்துரையின் முன்
னோர்களிலொருவர்—மதுரையை அது சமயம் அர
சாண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் ஆக்ஷித்
திறனின்மையைக் கண்டு அந்நாட்டிற்கு அவரே
தன்னை அரசராக்கிக் கொண்டு இளம் பஞ்சபாண்ட
வர்களினதும் அவர்களினது சிரேஷ்டரின் பெயரு
மான ஜெகவீரராம பாண்டியன் என்ற பெயரையும்
அவர் கைப் பற்றிக்கொண்ட நாடு (இளம்) பஞ்சபாண்
டவர்களின் நாடானதால் அதற்குப் பாஞ்சாலங்
குறிச்சி யென்ற பெயரையுங் கொடுத்து அவரது
இராஜதானிநகரத்துக்கு ஜெகவீரபாண்டியபுரமென்று
மழைப்பித்தனர். பாஞ்சாலங் குறிச்சியின் முதற்
பாளையக்காரரின் காலம் 1709 கி. பி. என்றும் அவ்வர
சாக்ஷி 92 வருஷ காலங்களே ஜீவித்திருந்த தென்றும்
தெரியவருகின்றது. விஜயரங்க சொக்கநாத நாயக்க
ரின் அரசாக்ஷியின் காலந்தொடங்கி மதுரையில் நாயக்
கர் அரசுபடத் தொடங்கிய தென்க. பாஞ்சாலங்
குறிச்சிப் பாளையக்காரர்களின் வம்சவழி ஜாப்தா.

- (1) வீரபாண்டிய கட்ட பொம்மு நாயக்கர் 1709—1736
  - (2) பொல்லபாண்டிய நாயக்கர் 1736—1760
    - (4) ஜெகவீர கட்ட பொம்மு நாயக்கர் 1760—1791
      - (9) கட்டபொம்மு நாயக்கர் 1791—1799
      - (10) குமாரசாமி நாயக்கர் புத்திசாலி வயது 26
      - (11) சுப்பா நாயக்கர் என்ற குமாரசாமி நாயக்கர் ஊமை
        - ஒரு பெண் குழந்தை
      - (12) ஈஸ்வர வடிவு அம்மாள்
      - (13) துரைக் கண்ணம்மாள்
    - (5) சின்னபொம்மு நாயக்கர்
  - (3) சின்னபொம்மு நாயக்கர்
    - (6) தளவாய் குமாரசாமி நாயக்கர்
      - (14) கலியாணமில்லாத ஒரு சிறுமி
  - (7) பூஞ்சனம்மாள்
    - (8) சுப்பிரமணிய நாயக்கர்
      - ஆண் ஆண் ஆண் ஆண் பெண்

குறிப்பு:— நான்காவது அயிட்டத்திற் காட்டியுள்ள ஜெகவீர கட்டபொம்மு நாயக்கருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும், ஐந்தாவது அயிட்டத்திலுள்ள சின்ன பொம்மு நாயக்கர் அவாது



தமையனுருக்கு மந்திரியாக இருந்து காரியங்களை ஒழுங்கு பட நடாத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். ஒன்பதாவது அயிட்டத்திற் கண்டுள்ளவர் பட்டம் அடைந்து சீமையைக் கொள்ளவும் ஐந்தாம் நம்பர் சின்ன பொம்மு நாயக்கரிடம் வெறுப்படைந்து அவரை நீக்கிவிட்டார். அவருக்கு அப்போது வயது 42. இந்த சின்னபொம்மு நாயக்கர் நைட்டிக பிரமசாரி யாகவும் சிவபக்தராகவும் புலால்மறுத்தவராயும், மகாகல்விமானுயு மிருந்தனர். எட்டாவது நம்பரிற்கண்ட சுப்பிரமணிய நாயக் கருக்கு ஆண்கள் நான்கும் பெண் ஒன்றும் அவர்களுள் பெண் குழந்தை 1797-ம் வருஷம் மின்னல் ஒளிதாக்க இறந்து விட்டது. எட்டாம் நம்பர் சுப்பிரமணிய நாயக்கரின் மூத்த குமாரரே ஐந்தாம் நம்பர் சின்னபொம்மு நாயக்கரின் ஸ்தா னத்தை அடைந்து இராஜ்ய விஷயங்களை மேல் பார்த்துவந் தனர். இவர் சின்னபொம்மு நாயக்கரைப் போன்ற பெருங்குண மில்லாதவராயும் மூர்க்க சுபாவம் வாய்க்கப் பெற்ற கொடியவ ராயுமிருந்தார். சுப்பிரமணிய நாயக்கரின் குமாரியைக் கயத் தாற்றில் பான்னர்மான் துரையால் 16 - 10 - 1799ல் தூக்கி லிட்டுக் கொல்லப்பட்ட ஒன்பதாவது நம்பர் பாளையக்காரர் மணந் திருந்தனர். இவருக்கு சந்ததியில்லை. பன்னிரண்டாம் நம் பரிற் கண்ட ஈஸ்வர வடிவம்மாளை சுப்பிரமணிய நாயக்கரின் இரண்டாவது குமாரருக்கு விவாகமாகியிருந்தது. பதின்மூன்ரு வது நம்பர் துரைக்கண்ணம்மாளை சுப்பிரமணிய நாயக்கரின் மைத்துனருக்குக் கட்டப்பட்டிருந்ததென்பதும் இந்தக் கொடி வழி ஜாபிதாவுமாகிய வைகளில் பெரும்பான்மை 9 - 6 - 1798ல் கலெக்டர் டப்ளியு வி. ஜாக்சன் துரையால் தயாரிக்கப்பட்டதில் குறித்துள்ளதாகும்.

திருநெல்வேலி ஜில்லாவை இரண்டு சமபாகங் களாகக் கிழக்கிலும் மேற்கிலும் பிரிக்கின், நெய்க் கட்டஞ் செவலென்றது மேல் பாகத்தி

நெய்க்கட்டஞ் செவல்

லுள்ளவோர் சிறிய பாளையப்பட்டாக இருந்தாலும் அக்காலத்தில் அதன்

தலைவரான பூலித்தேவர் மகா பராக்கிரம சாலியாயும் அஞ்சாத நெஞ்சம் படைக்கப்பட்டவராயுமிருந்தனர். சைனியம் நெய்க்கட்டஞ் செவலையடையவும் கும்பினியார்களின் உத்தரவுகளைச் சிறிதுகூட லக்ஷியப்படுத்தாமல் நிராகரித்து விட்டதை யறிந்து எப்படியாவது இருபதினாயிரம் ரூபாய் கொடுக்கிறதானால் சைனியத்துடன் போய் விடுவதாகக் கும்பினியார் சொல்ல, அதற்குப் பூலித்தேவர் தன்னுடைய பாளையப்பட்டில் பூராவும் வசூலித்துப் பார்த்தாலும் அத்தொகை கிடைக்காதென்றும் பணத்தின் அருமை அவருக்குத் தெரிந்திருப்பதுபோல் மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தால் இப்படி கும்பினியார் தன்னைக் கேட்டிருக்க மாட்டார்கள் என்றும், தன்னால் ஒரு ரூபாய்கூட கொடுக்க சக்தியற்றிருப்பதாயும் சொல்லிவிட்டார். சைனியத்துக்கு நேரிட்ட ஆகாரக் குறைவினாலும் சம்பள பாக்கிகள் கொடுபடாமலிருந்ததினாலும் சைனியங்கள் கலகத்துக்கு ஆரம்பித்து விட்டன. இது பூலித்தேவருக்கு "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" போலாய்த்து. மாவஸ்கானும் கர்னல் ஹிரான்துரையும் வசூலித்த மொத்தத்தொகை சொற்பமாக இருந்ததால் பட்டாளத்துக்குள்ள செலவு அழிவுகளுக்குக் கூடப் போதுமானதாக இருக்கவில்லை என்றதாக அவர்களிருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு தோற்றுவித்த வெளிச்சூழ்ச்சியில் திருநெல்வேலி ஜில்லாவின் வரும்படி குறைவுள்ளதென்று தங்களது நலத்தைக் கருதி நவாபுக்குத் தெரிவித்தனர்.



**மாவஸ்கானின் சூழ்ச்சிகள்**

திருநெல்வேலியின் வருமானம் செலவுக்குப் போதுமானதல்லாததால் மாவஸ்கான் விரும்பும் வண்ணமே அவருக்கு வருஷம் ஒன்றுக்குள் பதினைந்து லக்ஷ ரூபாய்க்குக் குத்தகைக்கு விட்டுவிடலாமென்ற உத்தரவைப் பிறப்பிப்பதற்குக் கர்னல் ஹிரான் துரைக்கு வேண்டிய பொருளைக் கைக் கூலியாகக் கொடுத்து, தனது கோரிக்கையை ஆமோதிக்கச் செய்த ஏற்பாடுகளும் மாவஸ்கானுக்கு கர்னல் ஹிரான் துரையால் திருநெல்வேலி ஜில்லாவை வருஷம் ஒன்றுக்குப் பதினைந்து லக்ஷ ரூபாய்க்குக் கட்டுக் குத்தகைக்கு விட்டு ஜாரி பண்ணிய உத்தரவு பிறந்திருக்கிறதென்பதும் கர்நாடக (தேசத்து) நவாபுக்குத் தெரிந்து விட்டது.

**கர்னல் ஹிரான் துரைமீது குற்றம் ஏற்படல்**

கும்பினியாரின் உத்தரவையும் நவாபுவின் காரியங்களையும் சீர்குலையச் செய்ததைக் கண்டு தெரிந்துகொண்ட கும்பினியார், உடனே மாவஸ்கானையும் புறப்பட்டு வரச்சொல்லி உத்தரவு கொடுத்தனுப்ப, அவர்கள் அதன்பிரகாரம் ஆங்குச் செல்லவும், சென்னபட்டணத்துக்கு வரவழைக்கப்பட்ட கர்னல் ஹிரான் துரைமேல் குற்றஞ்சாட்டி இராணுவச் சட்டப்படி அவரை விசாரணைக்குள்ளாக்கி. அவ்விசாரணையில் சிறிது காலத்துக்கப்பால் அவர் குற்றவாளிதான் என்று நிரூபிக்கப்பட்டு வேலையினின்றுந் தள்ளப்பட்டார்.

**ஆலம்கான் மூன்று பட்டாணி உத்தியோகஸ்தர்களை நியமுகம் செய்தல்**

முன்னம் சண்டா சாஹிபின் கக்ஷிக்காகப் பரிந்து மதுரையைப் பிடித்துக்கொண்ட ஆலம்கான் என்றவர் முகமது ஆலிக்கு விரோதமாகவும் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் சண்டா சாஹிபுக்குப் பிரதிநிதிகளாக ஆளவும் மூன்று பட்டாணி உத்தியோகஸ்தர்களை நியமித்து விட்டார். அவர்களாவன :—முகமது பர்கி (Mohamad Barki) (2) முகமது மெய்நாக் (Mohamad Mainack) இவரைத் தமிழர் மூட்மையா (Moodmiah) என்பார்கள், (3) நபிகான் கட்டாக் (Nabi Khan Cuttack) ஆகிய இந்த மூவரும் முகமது யுஸூப்கான், மாவஸ்கான், கர்னல் ஹிரான் முதலியவர்களின் சைனியங்களுடன் திருநெல்வேலிக்குவர, அங்கு அவர்களுடைய ஆரவாரங்களைக்கண்டு பயந்து முகமது ஆலியைத் தங்களுடைய நவாபாக அங்கீகாரம் செய்துகொண்டு சத்தியமும் செய்து கொடுத்தனர். ஆயினும் தங்களுடைய இஷ்டப்படிக்கு உத்தியோக வலுவைக்கொண்டு யுத்த நஷ்ட ஈடுகளை வாங்கவும், கப்பங்களை வஜா செய்யவும், ரொக்கமாக விலை கொடுத்தவர்களுக்கு மாகாணங்களையுங் கோட்டைகளையும் விற்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். இவ்விதம் இவர்கள் பணப் பயித்தியத்திலீடுபட்டுச் செய்த நடவடிக்கைகள் பாளையக்காரர்களுக்கு நல்ல தருணமாக இருக்க அவர்களும் இது சமயம் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்" என்று தங்களை முன்னிலும் பலப்



படுத்திக் கொள்ள நினைத்து அவ்வாறே செய்து கொண்டனர்கள். இவ்விதமாக பட்டாணியர் மூவர் செய்தவை வெறுப்புக்கு இடமாகிவிட்ட தென்பதை அறிந்த அவர்களில் முகமது பர்கி மதுரையிலிருந்து ஈத்தம் சீமைக்குச் சென்று ஒளிந்துகொண்டார். முகமது மெய்நாக் என்ற மூட்மையாவும் நபிகான் கட்டாக்கும் திருநெல்வேலியிலிருந்து நெய்க்கட்டஞ் செவலுக்குப் போய் அதன் பாளையக்காரரான பூலித்தேவரிடம் சென்று மறைந்து கொண்டனர். கும்பினிச் சைனியம் திருச்சிறுப்பள்ளிக்குத் திரும்பிப் போகும் வரை சில நாட்களாக ஒளிந்து திரிந்தால் மாவஸ்கானுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துப் பின்பு அவரைக் கொண்டு இராஜகோபத்திற்குப் பாத்திரர்களாகாமல் விலகிக்கொள்ளலா மென்று நினைத்தனர். இதுவுந் தவிர இந்த மூன்று பட்டாணி உத்தியோகஸ்தர்களும் முன்னம் நடத்தி வந்த அக்கிரமச் செய்கைகளில் கிடைத்த லாபங்களில் ஆங்காங்கு கொள்ளையிட்ட பக்கங்களை யடுத்துள்ள பாளையக்காரர்களுக்கும் சமபாகங் கொடுத்து அவர்கள் நட்பையும் அடைந்திருந்தனர்.

**களக்காட்டுச் சீமையைத் திருவாங்கூருக்கு விற்றுவிடல்**

மூட்மையா என்றவர் களக்காட்டுச் சீமையை யடுத்துள்ள இடங்களை கன்னியா குமரிவரையிலுமுள்ள முப்பதுமைல்விஸ்தீரணமுள்ள நாட்டை, திருவாங்கூர் மகாராஜாவிற்கு விற்றுவிட்டார். அதே சமயத்தில் திருவாங்கூர் மகாராஜா பிளிமிஷ் (Flemish) ஜாதியாரான டிலானுய் (De Lanoy) என்பவரின் கீழ் இராணுவ முறையில் பழக்கப்பட்ட பதினாயிரம் சைனியங்களை

யும் இருபதினாயிரம் சாதாரண ஆட்களையும் யுத்த காலத்திற்கென்றே தயாரித்து வைத்திருந்தார்.

அது போலவே எட்டயபுரத்தில் ஆறாயிரம் சைனியங்களுடன் ஐந்நூறு குதிரைப் படையும்

**பாளையப்பட்டுகளிலிருந்த சைனியம்**

பாஞ்சாலங் குறிச்சியில் நாலாயிரம் சைனியங்களும் இருநூறு குதிரைப் படையுமிருந்தன வென்பது மட்டுந் தெரியவருகிறதேயன்றி நமது ஜில்லாவில் மற்றப் பாளையக்காரர்களிடம் அப்போதிருந்த சைனியங்களின் எண்ணிக்கை எவ்வளவென்று ஒவ்வொருவருக்குந் தனித்தனியாகத் தெரியாவிட்டாலும் நெய்க்கட்டஞ் செவல், சொக்கம்பட்டி என்ற வடகரை, சிவகிரி முதலிய பாளையப்பட்டுகளிலும் சைனியங்களிருந்தன வென்பதுந் தெரியவருகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் மட்டுமுள்ள பாளையக்காரர்களுக்கு நாம் பிரஸ்தாபிக்குங் காலத்தில் முப்பத்தையாயிரம் சைனியங்களிருந் திருப்பதாக கீர்த்தி பெற்ற சரித்திர ஆசிரியர் ஆம் துரை (Orme) கூறியிருப்பதுங் குறிப்பிடத் தக்கதாகும்.

திருவாங்கூர் மகாராஜாவுக்கு விற்கப்பட்ட களக்காட்டை பந்தோபஸ்தில் காத்து வருவதற்கு மகா

**ஆராம்பொழிக் கணவாய்ச் சண்டை**

ராஜாவின் சைனியத்தில் 2000 அங்கு வைக்கப்பட்டிருந்தன. கர்னல்ஹிரான் துரை திருநெல்வேலிக்கு வந்துவிட்டாரென்ற செய்தியைக் கேட்டு ஆராம்பொழிக்கு ஆறு மைல் தூரத்தில் கிழக்கிலிருக்கும் நட்டுக் கோட்டை என்ற நல கோட்டைச் சண்டையில்



மேலே சொல்லிய துரையின் சைவரியம் அங்கு காட்
டிய வீரத்தையும் அட்டகாசத்தையும் பார்த்து, திரு
வாங்கூர் சைனியங்கள் பயப்பட்டுப் போய்விட்டன.
ஜெனரல் லாரன்ஸ் துரையின் கீழ்ப் பழக்கப்பட்டு,
திருச்சிணுப்பள்ளி ஜில்லாவின் மைதானங்களில் நிகழ்
ந்த போர்களில் கீர்த்தி பெற்றவை எந்த இங்கிலீஷ்
சைனியங்களோ அதே சைனியங்களே இந்தச் சண்
டையில் காட்டிய கொடுஞ் செயல்கள் வெட்கத்திற்
கிடமாகின்றன. உடனே அந்நாட்டைக் கைப்பற்றித்
திருநெல்வேலியுடன் சேர்த்துக் கொண்டார்கள். கர்
னல்ஹிரான் திருச்சிணுப்பள்ளிக்குப்போக சன்னத்த
மாக இருக்கிறார் என்றதைக் கேள்வியுற்ற மூட்டையா,
திருவாங்கூர் மகாராஜாவிடம் போய் சைனியங்களால்
எதிரிகையில் ஒப்புவிக்கப்பட்ட களக்காட்டு நாட்
டைத் திரும்பக் கைப்பற்ற வேண்டுமென்று தூண்ட,
பூலித்தேவரும் தன் கைவசமுள்ள ஆட்களைச் சேர்த்
துக் கொண்டு உதவிக்கு வருவதாகச் சொல்லியிருப்ப
தால் திருவாங்கூர் மகாராஜாவின் சைனியத்துடன்
சேர்ந்து வேண்டியவைகளைச் செய்து வைப்பதற்கு
ஒரு பெருங் கூட்டங் கூட்டி ஏற்பாடுகளைச் செய்ய
லாயினர். நத்தம் சீமையில் ஒளிந்திருந்த முகமது
பர்கியும் இந்தக் கூட்டத்தில் சேர்ந்து திருவாங்கூர்
போகும் செய்தி நாடெங்கும் பரவி விடவும், மாவஸ்
கான் வசத்தில் கர்னல் ஹிரான் ஒப்படைத்து விட்டுப்
போன கும்பினிச் சிப்பாய்கள் 1000 பேர்களுடனும்,
நவாபு அனுப்பிவைத்த 600 பேர்களுடனும் முன்
னுள்ள குதிரைப் படையுடன் புதிதாய்ச் சேர்க்கப்

பட்ட குதிரைப் படையும் சேர்ந்து 2500, காலாட் படை 4000 ஆகிய இவைகளில் மதுரையின் பாதுகாப்புக்கு வைத்துக் கொண்ட சைனியங்களும் இத்தொகையில் அடங்கியவையாகும்.

இப்படிக்குச் சைனியங்களையும் மற்றயுத்த தளவாடங்களையும் தயாரித்துக் கொண்டிருக்கையில் மூட்

**மாவஸ்கானின் தோல்வி**

மையாவின் தலைமையின்கீழ் திருவாங்கூர் மகாராஜாவால் 2000 சைனியம் அனுப்பிவைக்கப்பட, அது களக் காட்டை அடையவும், பூலித்தேவரும் முன் செய்து வைத்திருந்த ஏற்பாட்டின்படி மூட்டமையாவின் தலைமையின்கீழ் வந்துள்ள 2000 நாயர் சைனியத்துடன் சேர்ந்துகொண்டார். அதற்குச் சமீபமாகவே மாவஸ்கானும் தன்னுடைய சைனியங்களுடன் தங்கியிருந்தார். யுத்தத்தை இருகக்ஷிக்காரர்களும் ஆரம்பித்து விட்டனர். மாவஸ்கானும் அவரது சைனியமும் துரத்தி யடிக்கப்படவும், மாவஸ்கானின் சைனியத்தைச் சேர்ந்த முன்னூறு பேர் உயிர் தப்பியோடும் சமயத்தில், தங்களிடமிருந்த தளவாடங்களும் ஆயுதங்களும் சிரமமாக இருந்ததை அறிந்து அவைகளை யுத்தகளத்தில் போட்டுவிட்டோட ஆரம்பிக்க, அவைகளை எல்லாம் பூலித்தேவரின் சைனியங்கள் எடுத்துத் தங்களது சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டன. இதன் மத்தியில் திருவாங்கூர் மகாராஜாவின் சைனியம் உள்நாட்டில் ஏதோ அவசர காரியத்தின் பொருட்டுப் போகவேண்டுமென உத்தரவாகியிருப்பதாகச் சொல்லி திருவனந்தபுரம்



போய்விட்டது. உண்மையில் மாவஸ்கான் இரண்டாம் முறையாகக் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட குதிரைப் படையின் பெருக்கமும் காலாட் படையின் பெருக்கமும் பயத்தை யுண்டாக்கியிருக்கலாமென்று சிலர் அபிப்பிராயங் கொண்டனர். இவ்வித அபிப்பிராயங் கொண்டதின் ஆதாரம் எது பற்றி யெனத் தெரியவில்லை.

மூட்டமையா திருவாங்கூருக்குச் சென்றனர். பூலித்தேவர் தன்னுடைய பாளையப்பட்டான நெய்க்கட்டஞ் செவலுக்குத் திரும்பிவிட்டனர். பூலித்

**பூலித்தேவரின் வெற்றியும் மாவஸ்கானின் நஷ்டமும்**

தேவர் திருநெல்வேலி முதலிய இடங்களில் ஏதேனும் அகிர்த்யங்களைச் செய்யாம விருப்பதைக் கவனித்து ஒழுங்குபடுத்த மாவஸ்கான் வந்து விட்டார். ஆனால் பூலித்தேவரும் அந்த நிலைமையில் எதுவும் செய்துகொள்ள அசக்தராக இருந்தார். சிறிது காலம் திருநெல்வேலி ஒழுங்குக்குள்ளிருக்கலாமென்று நம்பி இருந்ததும் வீணாகியது. மாவஸ்கான் மறுபடியும் களக்காட்டைத் தாக்கினார். மூட்டமையா பெரும் சைனியத்துடன் திருவாங்கூரிலிருந்து வந்து களக் காட்டைச் சுவாதீனமாக்கித் திருவாங்கூருடன் சேர்த்து விட்டு மாவஸ்கானுக்கும் பெருத்த நஷ்டத்தை யுண்டுபண்ணி இருநூறு குதிரைகளையும் ஐந்நூறு சிப்பாய்களையும் பிடித்துக்கொண்டு திருவாங்கூருக்குப் போய்விட்டார்.

அந்தச் சமயம் அந்தப் பிராந்தியங்களில் அறுப்புக் காலமாக இருந்ததால் அங்கு வசூலான பணத்தையும் திருநெல்வேலிக்குச் சேரவொட்டாமல் தடுத்துத் திரு

வாங்கூருக்கு அனுப்பி விட்டார்கள். இரண்டு கும்பினிப்படையும் தளகர்த்தர்களும் கொல்லப் பட்டார்கள். மாவஸ்கானுடைய சைனியங்களுக்குச் சம்பளப் பாக்கியும் கொடுபடவில்லை. நாணயமோ கிடைப்பது அரிதாகிவிட்டது. பூமிகளை விலை சாட்டினாலன்றி நாணயங்கள் கிடைக்க மாட்டாவென்பதையும் மாவஸ்கான் அறிந்துகொண்டார். இந்த நிலைமையில் காரியங்கள் நாள்தோறும் விபரீதமாகிக் கொண்டு வருவதையும் மாவஸ்கான் தெரிந்தும் அவரது மனதில் வேறு எண்ணம் உதயமாகிக் கொண்டிருந்ததால், நியாய நிலைமையை அவருடைய ஆசையென்ற திரை மறைத்துவிடக் கடைசியாக, அவருடைய நிலைமையே மோசத்துக்குள் வந்து விட்டது. கும்பினியார்களுக்கும் மாவஸ்கானின் முறை பிடிக்கவில்லை, என்றாலும், நவாபுவின் தாக்ஷணியங்களுக்குள் எடங்கியவர்களாகி மாவஸ்கானின் சீர்கேடான காரியங்களை வளர்த்துவிட்டார்கள்.

பணக்கஷ்டம்

நாம் பிரஸ்தாபிக்கும் சமயத்தில் நெய்க்கட்டஞ்செவல் பாளையப்பட்டுக்கு அதிபரான பூலித்தேவர், அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். இராணுவ முறையில் கை தேர்ந்தவர்களும் மெச்சும்படியான யுத்தப்பயிர்ச்சியின் நுண்ணறிவையும், சைனியங்களின் நிதானங்களைக் குறிப்பினால் அளவிடும் சக்தியையும், சைனியங்களுக்கு உத்சாகத்தை யூட்டும் வாக்கு வல்லமையையும், ஒரே நாளில் 40—50 மைல்கள் தூரம் யுத்த தளவாடங்கள் சகிதம் களைப்பில்லாமல் நடக்கும் ஆற்றல் படைக்கப்பட் டிருந்ததையும் அவர் அடைத்

பூலித்தேவரின் குணாதிசயங்கள்



திருந்ததுடன், பார்வைக்கு உயர்ந்து நிதானமான ஆகிருதியுடன் கண்களும், நெஞ்சும், புயங்களும் பரந்து விசாலமாகவும், ஆஜானுபாகுவான கைகளையும், சிறுத்து நீண்ட விரல்களையு முடையவராயு மிருந்தார் என்பது கர்ண பரம்பரை. க்ஷாமுத்திரிகா லக்ஷணப்படிக்கு இவைகள் அவருக்குப் பொருத்தமுடையனவாம்.

பூலித் தேவருக்குக் களைக்காட்டில் கிடைத்த வெற்றி, அவரது வீரத்தை முன்னிலும் அதிகமாகத் தூண்டிற்று. திருநெல்வேலி ஜில்லாவின் மேற்குத் திசையில் அக்காலத்தில் பூமி விஸ்தீரணத்திலும் பணச் செல்வாக்கிலும் சிறந்து விளங்கியது சிவகிரியாம். ஆனால் சாமர்த்தியத்திலும், இராஜதந்திர விஷயத்திலும், காரியங்களைச் சமயோசிதமாக இராஜதந்திர நிபுணத்துவத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல், அக்காலத்தில் மேல் படாகையில் பூலித் தேவர் ஒருவருக்கே சிறந்திருந்ததால், அவரது அக்கிராசனத்தின்கீழ் ஒரு யுத்த ஆலோசனை சபை நிகழ்ந்தது. அதுபோலவே, திருநெல்வேலி ஜில்லாவின் கீழ்பாகத்தில் எட்டயபுரம் பாளையப்பட்டு பெரியதாக இக்காலத்திலிருப்பது போலவே அக்காலத்திலுமிருந்திருப்பினும் பூலித்தேவரைப் போலவே அக்காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டபாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரும் கீழ்படாகையில் விளங்கியதால், அவரைத் தலைமை வகிக்கும்படி பூலித்தேவர் கேட்டுக்கொள்ள, அதற்குக் கட்டபொம்மு நாயக்கர் பூலித்தேவர் சொல்லுகிறபடிக்கு அவர்

பாளையக்காரர்களின் யுத்த ஆலோசனை சபை

நடந்துகொள்வதில் ஆக்ஷேபணையில்லை யென்றும் அதுவே அவருடைய உட்கருத்தாகுமென்றும், ஆனால் அவ் விஷயமாக எட்டயபுரத்தாரைக் கேட்டதற்கு "நாம் இருவரும் இச்சமயம் அப்படிச் செய்வதானால் நம்மால் கிஸ்துப் பாக்கிக்காக கர்னல் ஹிரான் வசம் ஈடாகக் கொடுக்கப்பட்ட நபர்ஜாமீன்கள் திருச்சிறாப்பள்ளியி லிருக்கிறார்கள். அவர்களுக்கு மோசம் வந்துவிடும். நம்முடைய வாக்கையும் பின்பு அவர்கள் நம்புவதற் கிடமில்லாமற் போகும்" என்று எடுத்துச் சொல்ல, பாஞ்சாலங்குறிச்சியும் அது சரியென்று ஒப்புக்கொண்டு பூலித்தேவர் கேட்டுக்கொண்டதற்குச் சம்மதிக்கவில்லை. இதுபோலவே மதுரைச் சீமையின் மேற் றிசையிலுள்ள பாளையக்காரர்களுக்குச் சொல்லியனுப்பும்படி நத்தம் சீமையில் ஒளித்திருந்த மையானா என்ற பர்கி பூலித்தேவரைத் தூண்ட, அவர் அதன்படி செய்ய, மதுரையிலுள்ள மேல்த் திசைப் பாளையக்காரர்கள் நத்தம் பாளையக்காரரின் சொற்படிக்கு இசைந்துகொண்ட சங்கதியும் பூலித்தேவருக்கு எட்டிவிட்டது. அவர்களுடைய வேலை அங்கு மதுரையை முதலில் கைப்பற்றுவதென்று தீர்மானித்துக் கொண்டார்கள். இத்தகைய பெரும் இராஜாங்க விஷயத்தை எவ்வளவோ பரம இரகஸியமாக அவர்கள் வைத்திருந்தும் சென்னபட்டணத்திலுள்ள கும்பினித் துரைமார்களுக்குத் திருச்சிறாப்பள்ளியிலிருந்து கியாப்டன் கலியாட்டுத் துரைமூலம் தெரிந்துவிட்டது. கர்நாடக நவாபான முகமது ஆலிக்கும் மதுரையிலிருந்தே செய்தி நேராக எட்டிவிட்டது.



இச் செய்தி உண்மையில் நிகழ்வதானால் கும்பினிக்கும் முகமது ஆலி நவாபுக்கும் திகிலைக் கொடுக்கக் கூடியதே.

**மாவஸ்கானின் சீர்கேடான ஆக்ஷி**

மதுரையே திருச்சி திருநெல்வேலி ஜில்லாக்களுக்கும் மத்தியிலிருந்து அவை மூன்றையும் இணைக்கும் சங்கிலியின் மத்திய வளையத்தைப்போன்றதாகின்றது. அப்படிக்குள்ள மத்திய வளையமான மதுரை எதிரி கையிற் பிடிபடுமாயின் அந்த மத்தியிலிருக்கும் வளையமானது தனக்கு இரு பக்கங்களிலுமுள்ள சங்கிலித் தொடர்ச்சியினின்றும் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் வெவ்வேறு தனிவளையங்களாகிவிடுவதைப் போல, திருச்சிறாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இவைகள், மதுரை பிடிபடுமாயின் தனித்தனியாக ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமற் போய்விடும். நவாபுவின் ஆக்ஷியும் நிலைகுலைந்து விடுமென்பது திண்ணமென்பதை யறிந்த சென்னபட்டணத்திலுள்ள கும்பினித் துரைமார்கள், மாவஸ்கானின் சீர்கெட்ட ஆக்ஷியை இன்னும் பொறுத்துக் கொண்டு சும்மா இருப்பதானால் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்களின் சூழ்ச்சி முதிர்ந்து ஆபத்தை விளைக்குமென்ற திகில் அடைந்தவர்களாகி முன் எச்சரிக்கையுடன் இருந்துகொள்ள வேண்டியது அவசியமெனத் தெரிந்து, மாவஸ்கானின் ஸ்தானத்தில் தாங்களே ஆக்ஷியைக் கொள்வதாகத் தீர்மானித்துவிட்டார்கள்.

இப்படி இருக்கையில் திருநெல்வேலியிலிருக்கும் இப்போதைய தளவாய் முதலியாரின் இனத்தவருள்

ஒருவரான தீத்தாரப்ப முதலியார் என்பார் மதுரைக்குச்சென்று திருநெல்வேலி ஜில்லாவைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளச் சித்தமாக இருப்பதாக அதிகாரிகளிடந் தெரிவித்தார். தேசத்திய வருமானக் கணக்கு முதலிய விவரங்களைச் சோதித்துக் குத்தகையை நிதானிக்க வேண்டியதென்பது ஒழுங்காவதால் அதை யுடனே செய்து முடிக்கச் சாத்யப்படவில்லை.

முதலியார் குத்தகையை விரும்பிக் கேட்டல்

பூலித்தேவர், மூட்டையா, நபிகான் கட்டாக் ஆகிய மூவரும் ஸ்ரீவில்லிபுத்தூரைத் தாக்கினார்கள். அப்போது ஸ்ரீவில்லிபுத்தூரும் அதைச் சார்ந்துள்ள கோட்டைகளும் முன்னம் 1751-ல் லெப்டினென்டு இன்னிஸ் துரையுடன் கூட வந்துள்ளவரும் நவாபுவின் சகோதாருமான அப்துர்ரஹிமின் பாதுகாப்பிலும் நவாபுவின் பந்துக்களிலொருவருமான அப்துல்மாலியின் பாதுகாப்பிலுமிருந்தன. யுத்த காலங்களில் வழக்கமாகக் கூடுகிற கூட்டங்களை நீக்கி 2000 சிப்பாய்களும் மாவஸ்கானின் கைவசமிருந்த தேர்ச்சிபெற்ற குதிரைப்பட்டாளங்கள் என்றதில் 500யும் வைத்துக்கொண்டு சண்டையிற் பயிற்சி காணாதவர்கள் என்று இகழ்ச்சியாக எதிரிகளை நினைத்துக்கொண்டு போரைத்தொடங்கவும், எதிரிகள் கொஞ்சங்கூட அஞ்சாது போருக்கு மத்தியில் சென்று சின்னபின்னமாகச் சைனியங்களை உடைத்துத் தள்ள, மதுரையிலும் திருநெல்வேலியிலுமிருந்து தங்களுக்கு

ஸ்ரீ வில்லிப்புத்தூர் சண்டையில் பூலித்தேவர் வெற்றி கொள்ளல்



உதவியாக வரும் சைனியத்தைக் கொண்டு எதிரிகளை
விரட்டிவிடலா மென்று எண்ணியிருந்ததும் வீணாகி
யது. குதிரைப்படைவீரர்கள் வீணாகத் தங்களுடைய
குதிரைகளை இறக்கக்கொடுக்கச் சம்மதிக்கவில்லை. தங்
களைப்போல்,குதிரைகளையும் பணக்கஷ்டத்தால் இரை
யின்றி வைத்திருக்கச் சம்மதியாமல் படைவீரர்கள்
எல்லாம் சம்பளப் பாக்கிக்காகக் கூக்குரலிட்டார்கள்.
அவர்களிற் சிலர் பூலித்தேவர் பக்கம் போய்ச் சேர்ந்து
கொண்டார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரும் அதைச் சார்ந்த
கோட்டைகளும் பூலித்தேவர் கையிற் பிடிபட்டுவிட்
டன. அப்துர்ரஹிமும் அப்துல்மாலியும் தங்கள் தங்
கள் உயிரைத் தப்பித்துக் கொண்டது தெய்வப்பிர
யத்தனமாயது. பூலித்தேவரின் வெற்றியைக் கேட்ட
மதுரைப் பாளையக்காரர்கள் தாங்கள் முன் கொடுத்
திருந்த வாக்குப் பிரகாரம் பூலித்தேவருடைய கக்ஷி
யில் சேர்ந்துகொள்வதற்குத் தயாராக இருப்பதாகத்
தகவல் கொடுத்து அதே கக்ஷியில் சேர்ந்துங் கொண்
டார்கள். இப்படிச் சேர்ந்துள்ள கூட்டுறவுப் பாளை
யக்காரர்களின் சைனியத்தின் மொத்த எண்ணிக்கை
25,000; குதிரைப்படையின் எண்ணிக்கை 1000. இவ்
வளவு சைனியங்களையும் ஏககாலத்திற் பார்த்த பாளை
யக்காரர்கள் உத்சாகமடைந்து மதுரையை முன்னம்
யோஜித்து வைத்திருந்த வண்ணம் பிடிப்பதைக்காட்
டிலும் மாவஸ்கான் இருக்கும் திருநெல்வேலிக்கு
நேராகப் போய், போர் புரிவதே ஆண்மை எனத் தீர்
மானித்துக் கொண்டார்கள்.

> திருநெல்வேலிச் சண்டையில் மாவஸ்கான் அடைந்த வெற்றியும் மூட்மையா கொலையுண்டதும்

இதன் மத்தியில் மாவஸ்கான் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரருக்கும், எட்டயபுரத்தாருக்கும் சில பூமிகளை விட்டுக் கொடுப்பதாகவும் வேறு வகைகளில் அவர்கள் இருவருக்கும் சாஸ்வதமான பிரயோஜனங்களைச் செய்து வைப்பதாயும் பாஞ்சாலங் குறிச்சிக்கு அஞ்சல் விடுத்தார். குதிரைப் படைகளையும் காலாட் படைகளையுஞ் சேகரித்ததில் கும்பினியாரைச் சேர்ந்த புதியவர்களும், ஜாமுல் சாஹிபின் தலைமையின் கீழுள்ள ஆயிரம் சிப்பாய்களும், புதிதாகச் சேராத குதிரைப் படைகள் ஆயிரத்து ஐந்நூறுமடங்கியுள்ளன. திருநெல்வேலிக்கு 7 மைல் தூரத்தில் யுத்தகளத்தைத் தெரிந்து கொண்டார்கள். இந்தச் சண்டை பிடிவாதத்திலும் முரட்டுத்தனத்திலும் முன்னுள்ள சண்டைகளைக் காட்டிலும் வலுவுடையதாகவே இருந்தது. கடைசியாக மூட்மையாவைத் தோற்கடித்து அவரையும் அவரது குதிரையையும் துண்டந் துண்டங்களாக வெட்டி எறிந்து விட்டனர். அவரையும் அவருடைய குதிரையையும் வெட்டுண்டு சாகப்பார்த்த எதிரிகளின் சைனியங்கள் ஓட்டம் பிடித்தனர். இரண்டாயிரம் பேர் எதிரியின் பக்கத்தில் மரணமானார்கள். முன்னூறு குதிரைகளையும் யுத்தகளத்திலிருந்த பீரங்கிகள் அனைத்தையும், யானைகளையும் மாவஸ்கான் பிடித்துக் கொண்டார். மதுரையைப் பிடித்துக் கொள்ளவேண்டுமென்ற பாளையக்காரர்களின் கூட்டுறவில் நிகழ்ந்த



சதியாலோசனையின் பயனும் இத்துடன் அடியோடு தொலைந்து விட்டது. மகாவீரரான பூலித்தேவரும் பயத்தாற் பிடிக்கப்பட்டு மற்றவர்களைப்போல உயிரைத் தப்பித்துக் கொள்ள ஓடியும் ஒளித்தும் கடைசியாக அவரது நாடுபோய்ச் சேர்ந்தார். இந்த வெற்றியால் மாவஸ்கான் வீரர்களின் மதிப்புக்குப் பாத்திரரானார்.

> முகமது யுஸுப்கான் திருநெல்வேலிக்குப் புறப்படுமுன் எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி நபர் ஜாமீன்களைப் புதுக்கோட்டைத் தொண்டைமானிடம் ஒப்படைத்து விடல்

இந்த யுத்தம் 21-3-1756ல் நிகழ, அதிற் கிடைத்துள்ள ஜெயம் திருச்சினாப்பள்ளிக்கு 24-3-1756ல் எட்ட, யாவருக்குங் குதூகலத்தைக் கொடுத்தது. அதே சமயத்தில் தற்செயலாகத் திருநெல்வேலியை நோக்கிப் புறப்படச் சித்தமாக இருந்த முகமது யுஸுப்கான் 1500 சிப்பாய்களுடனும் 100 காப்பிரிகளுடனும் 150 கள்ளர்களுடனும் 4 ஐரோப்பிய பீரங்கிப் பட்டாளங்களுடனும் புறப்பட்டு விட்டார். இப்படிக்குள்ள யுத்த தளவாடங்களுடன் முகமது யுஸுப்கான் புறப்படுவதற்கு முன்னமே பாஞ்சாலங்குறிச்சியாரும் எட்டயபுரத்தாரும் இஸ்துப் பாக்கிக்காக ஒப்படைத்திருந்த நபர் ஜாமீன்களை மீட்டுவதைக் குறித்து கியாப்டன் கலியாட்டுத்துரையுடன் சமாசாரப்போக்குவரவு செய்து கொண்டிருந்ததில் நபர்ஜாமீன்கள் புதுக்கோட்டைத் தொண்டைமானிடம் ஒப்புவிக்கப்படுமென்றும், பணத்தைக் கொடுத்துவிட்டு அவர்களை மீட்

டிக்கொள்ளவேண்டியதென்றும், அதன் பிரகாரமே
முகமது யுஸுப்கான் பாஞ்சாலங் குறிச்சி, எட்டயபுரம்
நபர்ஜாமீன்களைப் புதுக்கோட்டைக்குக் கொண்டுபோய்
அவர்களைத் தொண்டை மானிடமே ஒப்படைத்து விட்
டுப் புறப்பட்டுவிட்டார். மதுரைக்கு 6-5-1756 ல்
போய்ச்சேர்ந்தார். அங்குள்ள யுத்த தளவாடங்களையும்
மற்றுமுள்ள சாமான்களையும் சரிபார்த்து விட்டு அங்கு
சிறிது தாமதித்துப் பின்னர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப்
புறப்பட்டார். ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூரும் அதன் பக்க
முள்ள கோட்டைகளும் முன் பிடிபட்டிருந்தபடிக்கே
பூலித்தேவரின் கீழாகவே யிருந்தன. முகமது யுஸுப்
கான் அங்கு செல்லவும் எதிரிகள் கோட்டையைவிட்டு
ஓட்டம் பிடித்து விட்டார்கள். அவைகளுக்குத் தக்க
காவல்களை நியமித்துவிட்டு, கயத்தாற்றில் தன்
னுடைய வரவை எதிர் பார்த்திருந்த திருநெல்வேலி
யுத்தத்தில் ஜயமடைந்த மாவஸ்கானைப் போய்ச்
சேர்ந்து கொண்டார்.

கயத்தாற்றை விட்டுப் புறப்பட்ட முகமது
யுஸுப்கானும் மாவஸ்கானும் எட்டயபுரம் அரணியத்

**முகமது யுஸுப்கானும் மாவஸ்கானும் எட்டயபுரம் போகுதல்**

துக்குள் பிரவேசித்து எட்டயபுரம்
போய்ச் சேர்ந்தார்கள். எட்டயபுத்
தாரும் பாஞ்சாலங் குறிச்சியாரும் தண்
டெடுத்துப் போயிருப்பதாகத் தெரி
ந்து அவர்களிடம் போய் நபர்ஜாமீன்
களைத் திருப்பிக்கொள்ளும்படி கேட்ட
தில், பாஞ்சாலங்குறிச்சியார் இதன் மத்தியில் ஜாமீ
னளிகளை மீட்டுக்கொண்டதும் அவர்களுக்கு எட்டிவிட்



டது. எட்டயபுரத்தாரிடம் நபர் ஜாமீன்களைத் திருப்பிக்
கொள்ளக் கேட்டதற்குச் சொல்லிய பதிலில் காலதா
மதம் செய்வதாக அவ்விருவரும் தெரிந்து கொண்
டாலும் எட்டயபுரத்தாரை அடா மோடியாக ஒன்றுங்
கேட்காமலிருந்து விட்டதற்கு அது சமயம் எட்டய
புரம் பாஞ்சாலங்குறிச்சியாகியவர்களின் நட்பு அவசி
யம் வேண்டியதென்பதை முகமது யுஸுப்கானும்
மாவஸ்கானும் அறிந்து, அவர்களைப் பகையாளிகளாக
ஆக்கிக் கொள்ள இஷ்டமில்லாத காரணம் என்னலாம்.
இந்த இரண்டு கான்களும் சைனியங்கள் சகிதம் எட்
டயபுரம் வந்திறங்கிய மைதானமே இன்னும் கான்சா
புரம் என்று வழங்குகிறது. இதே கான்சாபுரத்தில்
தான் இப்போது எட்டயபுரம் கஸ்பாவிலிருக்கும்
நாடார்கள் குடியிருக்கிறார்கள். அங்கு இப்போது
சுமார் 120 நாடார்களின் வீடுகளுக்குக் குறைவின்றி
யிருக்கின்றன.

எட்டயபுரத்தை விட்டுத் திரும்பிய இரண்டு
கான்களும் கோல்வார் பட்டிக்குச் சென்று கப்பத்
தின் பாக்கியைக் கேட்டு நெருக்கினர். அதன் பாளையக்

**கோல்வார் பட்டிச் சண்டை**

நாயக்கர்
காரரான கலங்காத கண்ட
காலந் தாழ்த்திக் கொண்டும் சாக்குப்
போக்குகளைச் சொல்லிக் கொண்டும்
சமாளித்தது, முகமது யுஸுப்கானுக்
குப் பிடிக்காமல் கோபத்தையுண்டாக்க, கோட்டை
யையும் அவரது நாட்டையும் பிடிப்பதற்கு உடனே
சைனியத்துக்கு உத்தரவு பிறப்பிக்கவே சண்டை
ஆரம்பமாகி விட்டது. கான்சாஹிப் சைனியத்தில்

எட்டுப்பேர்கள் மரணமடைந்தும் அறுபதுபேர் காயப்பட்டும் காப்பிரிகளின் சார்ஜண்டு ஒருவருமாக இறக்கக் கடைசியாக கோல்வார்பட்டி பிடிபட்டு விட்டது. பாளையக்காரரையும் அவருடைய சைனியங்களில் பெரும்பாலர்களையும் கைதியாக்கிக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போகவும், அப்பக்கங்களிலுள்ள பாளையக்காரர்கள் தங்களது கதியும் கோல்வார்பட்டிபோலாகி விடுமோ என்ற பயத்தால் அவரைப் பேட்டி செய்து கொண்டு அவருடைய வருதிக்குக் கட்டுப்படுவதாயும் உறுதி கூறினார்கள். இவருள் பூலித்தேவரும் தன்னுடைய சம்பிரதி மூலமாக சமாதான உறுதிமொழிகளைக் கூறிவிடுத்தனர். ஏழாயிரம் பண்ணையாரும் நபர் ஜாமீனைக் கப்பத்துப்பாக்கியைக் கொடுத்து மீட்டிக் கொண்டனர். கொல்லன் கொண்டான் பாளையக்காரரோ எதையும் லக்ஷியப்படுத்தாமலிருந்ததால் அங்கு செல்லவும் அவரது கோட்டையும் பிடிபடலாயிற்று.

**நாணயக் கஷ்டம்**

சிப்பாய்களுக்கும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளப்பாக்கிகள் நாளுக்குநாள் குவிந்து அதிகரித்து விட்டன. இத்துடன் இராஜாங்கத்தில் செலவுகளும் அதிகமாகிவிட, நாணய முடை பெருத்த கவலையைக் கொடுத்து விட்டது. கர்னல் ஹிரான் துரை திருநெல்வேலியை மாவஸ்கானுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து லக்ஷத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்ட நிபந்தனைகளின்படிக்கு யாதொரு பைசாவும் அன்னோர் வசமிருந்து வரவு வந்ததுமில்லை. தீத்தாரப்ப முதலியார் கேட்டுக்கொண்ட பிரகாரம் அவருக்



குக் குத்தகைக்கு விடுவதற்கு செட்டில்மெண்டு விஷயமாகிய கணக்குகள் நுட்பமாகத் தெரியவில்லை என்ற காரணம் தடையாக இருந்தது. இப்படி இருக்கும் நிலைமையில் பொக்கிஷ வரவு செலவுகளில் அசட்டையாக இருப்பது சரியல்லவென்று தெரிந்து அது சம்பந்தமான முயற்சிகளை ஜரூராகச் செய்து முடிக்க ஆரம்பித்தனர்.

**மாவஸ்கான் நவாபிடம் போதல்**

முகமது யுஸுப்கானும் மாவஸ்கானும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்துகொண்டு அப்பிரதேசங்களிலுள்ள பாளையக்காரர்கள் எல்லோரையும் தங்களுக்குக் கீழ்ப்படியும்படி செய்து விட்டார்கள். இது முடியவும் மாவஸ்கானை அவருடைய சகோதரரான நவாபின் உத்தரவுப்படிக்கு ஆற்காட்டுக்குச் செல்லும்படிக்கும் நவாபு கட்டளையிடும் வண்ணம் பாக்கியுள்ள சம்பளங்கள் முதலிய யாவற்றையும் நவாபு தீர்த்துவிடத் தயாராக இருக்கிறாரென்பதையும் அவருக்குச் சொல்லி ஸ்ரீவில்லிபுத்தூரை ஆறு கும்பினிப் பட்டாளங்களின் பாதுகாப்பில் வைத்து இரண்டாயிரம் சைனியங்களுடன் மாவஸ்கானைத் திருச்சிறாப்பள்ளிக்குப் போய் நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டு வரும்படிக்கும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து அனுப்பிவிட்டுத் தானும் திருநெல்வேலி சென்றார்.

சென்னபட்டணத்திலுள்ள கும்பினித் துரைத்தனத்தார் அங்கு சென்றிருந்த முதலியாருடன் சகல கணக்குகளையும் பரிசோதித்துத் திருநெல்வேலியை

மட்டும் வருஷமொன்றுக்கு, சகல செலவும் போக
பன்னிரண்டு லக்ஷ ரூபாய்களுக்குக்
குத்தகைக்கு விட்டு ஜாரி உத்தர
வையும் முதலியாரிடம் கொடுத்து
விட்டனர். ஷிராப்பு முதலியவர்களை
முதலியாரின் சொந்த ஜவாபுதாரியின்
மேலேயே மூன்று மாதத்திய தவணைக்குள் நியமித்
துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கும்
சம்மதித்து உத்தரவைப் பெற்றுக் கொண்டனர்.
குத்தகைத் தொகையை வருஷத்துக்கு மூன்று சம
காலங்களான தவணைகளில் சமயீடுள்ள தொகைக
ளாகக் கட்டுவதாயும் உடன்படிக்கை செய்துகொண்டு
அவருடைய பந்தோபஸ்துக்குக் கும்பினிச் சைனி
யத்தில் ஆயிரம் பேர்களும் அவர்களுக்கு வேண்டு
வனவான இராணுவ உத்தியோகஸ்தர்களுக்குச் செல்
லும் செலவை அவரே ஒத்துக்கொள்வதாயும் உடன்
படிக்கையில் கண்டிருந்தது மன்றி அத்துடன் சகல
அதிகாரங்களையும் குத்தகைக் காலம் தீர்ந்து விடும்
வரை வகித்துக் கொள்ளவும் அவருக்கு உத்தரவு
பிறந்து விட்டது.

**முதலியாருக்குக் குத்தகை ஜாரியாதல்**

மாவஸ்கான் செல்லவும் அவருடைய ஸ்தானத்
தில் மீயர்ஜாபர் என்றவர் நியமுகம் பெற்றார். முகமது
யூஸுப்கான் ஸ்ரீ வில்லிப்புத்தூரி
லிருந்து புறப்பட்டவர் திருநெல்வே
லியை அடைந்தார். மாவஸ்கானின்
ஸ்தானத்தில் நியமிக்கப் பட்டிருந்த
மீயர்ஜாபர் முதலியாருடைய காரியஸ்
தர்களை சட்ட விரோதமாக நடத்தியதாகவும், வேறு

**மாவஸ்கானின் ஸ்தானத்தில் மீயர்ஜாபர் நியமுகமாதல்**



வகைகளில் அவமரியாதையைச் செய்ததாயுமான
புகார்கள் கிளம்பிவிட்டன என்றாலும், முகமது யூஸுப்
கான் தன்னுடைய சாமர்த்தியத்தினால் அவைகளை
எல்லாம் பூசி மெழுகிவிட்டு மறுபடியும் இவர்களுக்குள்
நெருசல்கள் ஏற்படாமலிருக்கவேண்டுமென்ற நோக்
கத்துடன் மீயர்ஜாபரை வேண்டிய பரிவாரங்களுட
னும் மூன்று பீரங்கிகளுடனும் ஐந்து கும்பினிச்
சைனியங்களுடனும் அவரது பெண்டு பிள்ளைகளுட
னும் வழிப்போக்கின் பந்தோபஸ்துக்காக மதுரை
போய்ச் சேரும்படிக்கு அனுப்பிவிட்டார்.

மாவஸ்கானுடைய குத்தகையை ரத்து செய்து
விட்டு முதலியாருக்கு ஜாரியானதில், மதுரையில்
பெருங் கூச்சலும் அமளியுமுண்டாகி,
கடைசியாகக் கலகமே ஆரம்பித்து
விட்ட சமயத்தில் சென்னபட்டண
மிருந்து குத்தகைதாரரான முதலியார்
மதுரை வழியாகத் திருநெல்வேலிக்
குத் திரும்பும் சமயமாக இருந்ததால்,
அவருடைய பந்தோபஸ்துக்கு இரண்டு கும்பினிச்
சைனியத்துடன் மதுரை மார்க்கத்தைவிட்டு இராம
நாதபுரம் சிவகங்கைச் சீமைகள் வழியாகத் திருநெல்
வேலிக்குச் சென்றனர். அங்கே இவரது வரவைக்
கேட்டுள்ள சில பாளையக்காரர்களும் அன்னாருள்
பூலித்தேவரும் பாஞ்சாலங்குறிச்சிக் காரியஸ்தரும்
எதிர்கொண்டு உபசரிக்கச் சென்றிருந்தார்கள். இவ்
விதமாக வந்துள்ள பாளையக்காரர்களும் அவர்களது
பரிவாரங்களும் சைனியங்களும் ஒன்று சேர்ந்து

**குத்தகை விஷயமாக மதுரையில் ஏற்பட்ட அமளிகள்**

கோஷித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் முதலியாருக்குக் கொடுக்கப்பட்டிருந்த கமிஷன் சன்னதை அக்காலத்திய வழக்கப்படி பகிரங்கப்படுத்தலாயிற்று. அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த கமிஷன் உத்தரவையும் எல்லோரும் ஏகோபித்து ஆமோதித்துக் கொண்டார்கள்.

*திருநெல்வேலியைப் பாளையக்காரர்களின் சைனியங் கொள்ளையிடல்*

முதலியாரது சன்னது விசேஷக் கொண்டாட்டத்திற்கு வந்திருந்த பாளையக்காரர்களின் பரிவாரங்களும் சைனியங்களும் அன்றிரவு ஊர் அடங்கவும் நகரத்துக்குள் பிரவேசித்துக் கொள்ளையிட்டு ஜனங்களுக்குள் நஷ்டங்களையும் அவமானங்களையும் உண்டுபண்ணி விட்டன. விடியவும் விஷயங்கள் வெட்ட வெளிச்சமாக, ஊர் ஜனங்கள் யாவரும் விசேஷத்துக்கு வந்திருந்த பாளையக்காரர்களின் சைன்யங்களை உடனே தாமதிக்காமல் அனுப்பி வைத்திருந்தால் இப்படிக்கு நஷ்டங்களும் அவமானங்களும் நேரிட்டிருக்கமாட்டா வென்று முதலியாரையே குறை கூறியுமிருக்கலாம். ஆனால் சிப்பாய்களோ கொள்ளையிற் கிடைத்த லாபங்களைத் தாங்களே அடைய வேண்டியதாக இருக்கப் பாளையக்காரர்களின் சைனியங்கள் அடைந்ததிலிருந்து முதலியார்மீது குறை கூறாது இருந்திருக்கமாட்டார்கள் என்றதைக் கொள்ளையிட்ட பாளையக்காரர்களின் சைனியங்களுக்குச் சிப்பாய்களால் விதிக்கப்பட்ட சிக்ஷைகளே சாக்ஷியமாகின்றன.



திருவாங்கூர் சைனியங்கள் மறுபடியும் களைக் காட்டில் பிரவேசித்துப் பாழாக்கிவிட்டன. மூட்

*முகமது யுஸுப்கானுக்கும் முதலியாருக்கும் ஏற்பட்டுள்ள தாவாக்கள்*

மையா தோற்கடிக்கப்பட்டுக் கொலை யுண்டது முதல் ஒளித்திருந்த நபி கான் கட்டாக் மறுபடியும் வெளிக் இளம்பி மாவஸ்கானிடம் சமாதானத் தை நாடித் தூதர்களை அனுப்ப, அப்ப டியே சமாதானமும் நடந்துவிட்டது. இப்படி யிருக்குந் தருணத்தில் கும்பி ஏற்பட் னிச் சிப்பாய்களுக்கும் முதலியாருக்கும் டிருந்த விரோதம் அதிகரித்து கேட்டை உண்டுபண் முதலியார் செய்து னுதவதற்கு அல்திவாரமாயது. முதலியாரிடமிருக்கும் கொடுத்த ஒப்பந்தப்படிக்கு முதலியாரிடமிருக்கும் கொடுத்த ஒப்பந்தப்படிக்கு அழிவுகளுக்கு மட் கும்பினிச் சைனியத்தின் செலவு அழிவுகளுக்கு மட் டும் ஜவாபுதாரியே யன்றி முகமது யுஸுப்கான் கொண்ட அபிப்பிராயப்படிக்கு இந்த ஜில்லாவின் நாலா பக்கங்களிலுமிருக்கும் கும்பினிச் சைனியத்துச் சம்பளத்துக்கும் அதற்குள்ள முன்னிரண்டு மாதங் களின் சம்பளப் பாக்கிக்கும் முதலியார் பாத்தியப் பட நியாயமில்லாதிருக்க, முகமதுயுஸுப்கான் அவரை மிக்க நிர்பந்தித்து விட்டார்.

*ஜாமுல் சாஹிபு முதலியாரை நிர்பந்தித்ததும் பூலித்தேவனை விரட்டலும்.*

இதையறிந்த ஜமேதார் ஜாமுல் சாஹிபு முதலியா ரிடம் நடப்புக்கும், முன்னுள்ள பாக்கி மாதங்கள் இரண்டுக்கும் திருநெல் வேலி ஜில்லாவிலுள்ள கும்பினிச் சைனியங்கள் பூராவுக்கும் சம்பளத் தைப் பட்டுவாடாச் செய்ய நிர்பந்திக்க அவர் முடியாதெனவும் ஜாமுல் சாஹிபுக்குக் கோபம் பிறந்தது. முதலியாரைப் பந்தோபஸ்திலிட்டு, முதனி

யாருக்குச் சகாயமாக இருந்த பூலித் தேவரையும் அவரது சகாக்களான மற்றப் பாளையக்காரர்களையும் அந்த க்ஷணமே திருநெல்வேலியைவிட்டுப் புறப்பட்டு ஓடாதிருந்தால் அவர்களின் ஸ்திதி கேவலமாகி விடுமென்று பயமுறுத்தவும், அவர்கள் யாவர்களும் முதலியாரைவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டார்கள். இப்படி ஓட்டம்பிடித்த பூலித்தேவரும், அவரது சகாக்களான பாளையக்காரர்களும், நபிகான் கட்டாக்கிடம் போய் அவருக்கு வேண்டிய சகல உதவிகளையும் தாங்களே செய்துவைப்பதாக உறுதி சொன்னார்கள். இந்த நிபந்தனைகளின்படிக்கு நபிகான் கட்டாக்கு உறுதிகூறி அவரிடம் சேர்ந்து கொண்ட பாளையக்காரர்கள் 1757-ம் வருஷம் ஜனவரி மாதம் யுத்த சன்னத்தர்களாகிப் புறப்படவும், மாவஸ்கான் திரும்பி வருவதான பிரஸ்தாபங்களும் எட்டி விட்டன.

பாஞ்சாலங் குறிச்சியார் பூலித் தேவருக்குப் பயப்படல்

பூலித்தேவர் வகையராப் பாளையக்காரர்களால் அதுசமயந் தயாரிக்கப்பட்டுப் போர்முனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்த சைனியம் பதினாயிரமும் குதிரைப்படை ஆயிரமுமிருந்தன. முதலில் அவர்கள் பாஞ்சாலங் குறிச்சியையும் எட்டயபுரத்தையும் தாக்குவதான எண்ணத்துடன் கீழ் சீமைக்குப் புறப்பட்டார்கள். பாஞ்சாலங் குறிச்சிக்கு நேர்முகமாகச் சென்று அதன் பாளையக்காரரான கட்டபொம்முவைத் தங்கள் வசம் சேரவேண்டுமென்று கேட்க, அவர் அதுசமயம் கலகக்காரரின் சொல்லுக் கிணங்கிப்போவதில் முறண்



பட்டால், சீமை முழுமையும் அழிந்துவிடுமென்ற பயத்தால் பீடிக்கப்பட்டு அதற்கிசைந்து, தன்னுடைய சைனியம் நாலாயிரம் பேர்களுடன் எதிரியின் பக்கம் போய்ச் சேர்ந்து கொண்டார். எட்டயபுரத்தாரையும் அதேமாதிரி கேட்க, அவர்கள் அதற்குச் சம்மதமில்லை என்று சொல்ல, அப்படிக்குச் சம்மதிக்காவிட்டாலும் சைனியத்தில் சில ஆயிரம் பேர்களையாவது தன்னுடைய சகாயத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று பூலித்தேவர் கேட்டுக்கொள்ள அதனையுங் கட்டோடு மறுத்துவிட்டார்கள். இந்த ஜவாபைக்கேட்ட பூலித் தேவர் "சரி, இருக்கட்டும் பார்த்துக்கொள்வோம்" என்ற வர்மம் அடங்கிய வார்த்தைகளைப்புகன்றுவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சி வழியாகவே திருநெல்வேலிக்கு நேராகச்சென்று அதனைக்கொள்ளையிடுவதாக உறுதி செய்துகொண்டார். திருநெல்வேலியை அப்போது சைனியங்கள் சகிதங் காத்துக்கொண்டிருந்தவர் வசவப்பநாயக்கர். இவரைத்தான் சரித்திரங்களில் Bussiponaigue என்றும் Basappa Naig என்றுங் காணலாகும்.

பூலித்தேவர் எட்டயபுரத்துச் சீமையைத் தாக்கல்

திருநெல்வேலியில் யாதும் செய்துகொள்ள முடியாதென்று தெரிந்து அங்கிருந்து வடதிசையை நோக்கிப் படை எடுத்து வந்து தங்களுக்கு உதவியை மறுத்துவிட்ட எட்டயபுரத்துச் சீமையில் அநேக பாகங்களைக் கொள்ளையிட்டு அவர்கள் கைவசம் அக்கொள்ளையிற் கிடைத்த ஐயாயிரம் கால்நடைகளையும் ஏராளமான

பொருள்களையும் அங்கிருந்தபடியே நெயக்கட்டஞ் செவலுக்கு அனுப்பி வைத்தார். கியாப்டன் கலியாட்டுத்துரை இதுசமயம் எந்த வழியாக வருவார் என்ற விவரம் உத்தியோக இலாகா மூலம் கிடைக்காததால் முதலியாரும் முகமதுயுஸுப்கானும் ஏதோ மதுரையை அடுத்துவரக் கூடுமென்று ஸ்ரீவில்லிபுத்தூரில் காத்துக் கொண்டிருக்கும்போதுதான் பூலித்தேவரின் படாடோபங்களான மேலே சொல்லியுள்ள செய்கைகள் நிகழ்வனவாயின. ஸ்ரீவில்லிபுத்தூரில் கலியாட்டுத் துரையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த முகமதுயுஸுப்கான் திருநெல்வேலிக்குப் போய் வசவப்பநாயக்கருக்கு உதவியாகச்சேர்ந்து கொண்டு தங்கள் சைனியங்களைச் சின்னபின்னமாக உடைத்தெறிந்து விடுவார்கள் என்ற பயத்தினால் பூலித் தேவர் வகையராக்கள் திருநெல்வேலியை நோக்கிச் சென்றபடிக்கு அதனைக் கொள்ளையிட அஞ்சி எட்டயபுரத்துச் சீமைக்குச்சென்று அமளிகளைச் செய்தனர்கள். ஆழ்வார் திருநகரிக்குச் சென்று கொள்ளையிடப் போவதாயுமுள்ள சங்கதியும் எட்டியது. முகமதுயூஸுப்கான் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருக்கும் சமயத்தில் சிவகிரியாரும் சில சைனியங்களை உதவியாக முகமதுயுஸுப்கானுக்கு அனுப்பி வைத்தனர்.

திருநெல்வேலிக்கு மேற்கு இருபது மைல் தூரத்திலிருக்கும் ஆழ்வார் குறிச்சியையும், அதிலுள்ள மண்கோட்டையையும், அதன்மேல் வைக்கப்பட்டிருந்த மூன்று பீரங்கிகளையும் அவ்வூரையுங் காத்துக்



கொண்டிருந்த 150 சைனியங்களையும் மேல் பார்வையில் வைத்துக் கொள்ளும்படிக்கு அதிகாரம்பெற்றிருந்தவர் அழகப்ப முதலியாராவர். இவர் குத்தகைதாரருக்கு உறவினர். இவ்விதம் அரண் அமைந்துள்ள கோட்டையைப் பூலித்தேவர் வகையரா பாளையக்காரர்கள் தாக்கி அழித்துவிட்டு அதன் காப்பாளியான அழகப்ப முதலியாரையும் கைது செய்து நெய்க்கட்டஞ் செவலுக்கு பூலித் தேவரிடம் அனுப்பி விட்டார்கள் என்ற சங்கதி முகமது யுஸுப்கானுக்கு 4-3-1757ல் இரவு சுமார் எட்டுமணிப்போது கிடைக்கவும், உடனே சைனியங்களை ஆயத்தமாக்கிக் கொண்டும் தன்பக்கமுள்ள பாளையக்காரர்களைத் தனக்கு உதவிக்கு வரும்படி ஏற்பாடுகளைச் செய்தும் மறுநாட் காலையிலேயே சுமார் ஏழுமணிக்கு எதிரிகள் ஆழ்வார் குறிச்சியிலிருப்பதாகத் தெரிந்து அங்கு போய்ச் சேர்ந்தார். அங்கு சேரவும் இருதரத்தாருக்கும் போர் நிகழலாயிற்று. அதில் எதிரிகள் தோல்வியடைந்து ஓட்டம் பிடித்துவிட்டார்கள். இச்சண்டையில் ஊத்துமலைப் பாளையக்காரருக்கு இரண்டு கால்களும் துப்பாக்கிச் சூட்டால் முறிந்தன. பூலித் தேவரின் சைனியத்தலைவர் கொல்லப்பட்டார். பூலித்தேவருக்கு இதில் விளைந்த நஷ்டம் பெரிதானதே. இது முடியவும், முகமது யுஸுப்கான் சிங்கம்பட்டிக்குச் சென்று அதனையுங் கைவசப்படுத்திவிட்டு அதனை 100 சிப்பாய்களின் பாதுகாப்பில் வைத்துவிட்டுத் திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கு கலியாட்டுத்துரை

*பூலித்தேவர் வகைப் பாளையக்காரர்கள் ஆழ்வார் குறிச்சிக் கோட்டையை அழித்தல்*

17-3-1757ல் வந்து சேர்ந்தார். முகமது யூஸுப்கானைச் சேர்ந்த சைனியம் தொகையில்மட்டும் பெருத்திருந்ததன்றி வீரத்திலும் சிறந்து விளங்கியதாகும். ஆனால் பணக்கஷ்டம் இவ்வளவவ்வளவு என்று சொல்லக் கூடியதாக இல்லை. முதலியாரும் பணத்தைச் செலுத்த அசக்தராயிருந்தார். நாணய சாலைகளிலும் பணம் "செலாவணி" செய்யக் கூடாதென்று ஷிராப்புகளுக்கு உத்தரவுகள் பிறந்துவிட்டன. கியாப்டன் கலியாட்டுத்துரையின் அகட விகட சாமர்த்தியத்தால் இரண்டுலக்ஷ ரூபாய் முதலியாரைக்கொண்டு வாங்கி சைனியத்துக்குள்ள சம்பளப் பாக்கிகளையும் சைனியச் செலவுகளையும் சமாளித்துக் கொண்டனர்.

பாஞ்சாலங் குறிச்சி அரண்மனையில் நிகழ்ந்த திருமண வைபவம்

இந்தச் சமயத்தில் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரின் அரண்மனையில் ஒரு திருமணம் நிகழ, அதற்கு முதலியாருள்பட அநேகமாக பிரமுகர்கள் யாவர்களும் அங்குச் சென்றிருந்தனர்கள். அதுசமயத்தில் முதலியாரை நோக்கி ஏதோ பூலித்தேவரின் பேச்சுக்கிணங்கி அவர் மோசம்போன வகையையும் அவருடைய முன்னடத்தைகளான தகாத செய்கைகளுக்கு க்ஷமித்துக் கொள்ளும் வகைகளை எடுத்துச் சொல்லிவிட்டுக் கும்பினியாரின் தயவையே அவர் எப்போதும் எதிர்பார்த்துப் பிழைக்கக் காத்துக்கொண்டிருப்பதாயும் இவைகளை எல்லாம் கும்பினித் துரைகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் முதலியாரை மிக்க விநயத்துடன் கட்டபொம்மு நாயக்கர் கேட்டுக்கொண்டார்.



அதன்பிரகாரமே கியாப்டன் கலியாட்டுத்துரைக்கு இவைகளனைத்தையும் முதலியார் தெரிவித்தனர்.

பூலித்தேவரால் எட்டயபுரத்துக்கு நேர்ந்த நஷ்டத்திற்கு ஈடாகக் கப்பத்தின் பாக்கித் தொகையில் பெரும் பாகத்தை வஜா செய்தல்

திருநெல்வேலியிலிருந்து கியாப்டன் கலியாட்டுத்துரை எட்டயபுரம் போய்ச்சேர்ந்து பூலித் தேவர் செய்த நஷ்டங்கள் உண்மையில் மிகுந்திருந்தன என்பதை நேரிற்கண்டு தெரிந்து கொண்டார். பாஞ்சாலங் குறிச்சி யாரும் எட்டயபுரத்துக்கு நேர்ந்த நஷ்டத்தை சகிக்காதவராகி, கியாப்டன் கலியாட்டுத் துரைக்கு எடுத்துச் சொல்லப் புதுக்கோட்டையில் நபர்ஜாமீன்களாக இருக்கும் பாக்கி வகையில் எட்டயபுரத்தார் செலுத்த வேண்டிய தொகையில் பெரும்பாகத்தைவஜாசெய்து வைப்பதாயும், எட்டயபுரத்தாருக்கு நேரில் வாக்குக்கொடுத்தனர். இதன் மத்தியில் பாளையங்கோட்டையை எதிரிகள் முற்றுகை போட ஆரம்பித்தும், அது பிரயோஜனமற்றுவிட்டது. கெங்கை கொண்டானிலும் சச்சரவுகள் ஏற்பட்டு நின்று விட்டன. பாளையக்காரர்கள் தங்கள் தங்களது பாசறைகளுக்குப் போய்ச் சேர்ந்தனர்கள். பாரக்லோ மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார். இதன் மத்தியகாலங்களில் வேறு சில முக்கிய விஷயங்களும் நடந்திருந்தன. அவைகளை இங்கு சொல்லாது நிறுத்திக்கொண்டால் சரித்திரத் தொடர்ச்சியின் சம்பந்தங்களின் சாரங்கள் விட்டுப்போவதுடன் சரித்திர விஷயங்களிலும் குறைவுபட்டுக் காணப்படும் என்பதால் அவைகளையும் சொல்லி முடிப்போம்.

## ஐந்தாம் அத்தியாயம்

# மத்திய காலத் தொடர்பு

**ஐமேதார்களின் கலகங்கள்**

மாவஸ்கான் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து மதுரைக்
குச் செல்லவும், குதிரைப் படைகள் யாவும் அவரது
வரவை எதிர்கொண்டு உபசரிப்பதற்
கென்று தயாராக இருந்ததில், அவற்
றுள் இரண்டாயிரம் குதிரைப் படை
கள் மிகச் சிறந்தவைகளாம். இவர் மதுரையிலிறங்கிய
மறுதினம் பட்டாளத்துள்ள ஐமேதார்கள் எல்லோரும்
ஒன்று கூடித் தங்களுக்கும் தங்களது சைனியங்
களுக்குங் கொடுக்க வேண்டிய சம்பளப் பாக்கித்
தொகை ரூபாய் ஏழு லக்ஷத்தையுங் கொடுத்துவிட்டு
மறு ஜோலி பார்க்க வேண்டுமென்றும் அவருடைய
வீட்டைச் சூழ்ந்துகொண்டு அவரை அக்கம்பக்கம்
விலகாதபடி தடைசெய்தும் விட்டார்கள். இந்தக்
கலகத்தில் தலைமை பூண்டவர் டானிஷ்மெண்டுகான்
என்றவோர் கவர்னர். இவரை பெர்க்கட்டுலாவென்றும்
மேலே சொல்லியபடி பாரக்லோ என்றும் சரித்திரத்
தில் காணப்படும். 1753-ம் வருஷத்தில் திருவண்ணா
மலையைப் பிடித்த பெர்கட்லோ வேறு; இவர் வேறு.
இப்படிக்குக் கலகம் செய்தவர்களுடன் மையாணுவின்
சகோதரர் நத்தம் சீமையிலிருந்து இரண்டாயிரங்
கள்ளர்களையும் வேண்டிய உணவுப் பொருள்களையும்
ரொக்க நாணயங்களையுங் கொண்டுவந்து சேர்ந்து
கொண்டார். இவ்விதமாகத் தங்களிடம் வந்துசேர்ந்
துள்ள இவர்களுக்குத் திருவெறும்பூரையும் கோயிலடி
யையும் கொடுத்துவிட்டார்கள். முகமது பர்க்கிக்கு



மையாணுவென்றும் முகமது மெய்நாக்குக்கு மூட்
ஊமையா என்றும் மறுபெயர்கள் வழக்கத்திலிருந்தன.

**குத்தகையில் ஏற்பட்ட தாவா**

இதன் மத்தியில் மதுரைச் சீமையிலுள்ள எல்
லாப் பாளையக்காரர்களுக்கும் மாவஸ்கான் என்றவரே
குத்தகைதாரர் என்றும், முதலியார்
குத்தகை தாரராக மாட்டாரென்றும்
ஒரு விளம்பரத்தைப் பகிரங்கப்படு
த்தி கூட்டத்திலுள்ள ஒருவன் யானையின்மீது ஏறிக்
கொண்டு மாவஸ்கானுக்கு நவாபுவிடமிருந்து முன்
னங் கொடுக்கப்பட்டிருந்த ஜாரி உத்தரவைக்கொண்டு
வந்திருப்பதாகச் சொல்லி ஆரவாரம் செய்ய, நவாபு
வின் சன்னதானதால் அந்த உத்தரவிற்கு யானையின்
மீது வைத்து ஊர்கோலம் முதலியன வெகு சிறப்
பாக நடைபெற்றன. கூட்டக்காரர்களுள் சிலர் முதலி
யாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை வைத்து
ஆங்காங்கு கட்டப்பட்டிருந்த (கும்பினி) இங்கிலீஷ்
பாவட்டாக்களை எல்லாம் எடுத்து எறிந்துவிட்டனர்.

**ஜாமூல் சாஹிபை நியமித்து விட்டு முகமது யுஸூப் கான்மதுரைக் குத் திருநெல் வேலியினின் றும் போதல்**

இச்சங்கதிகள் யாவும் முகமது யுஸூப்கானுக்குச்
சகல விவரங்களுடன் திருநெல்வேலி
க்கு எட்டவும், நாம் முன்னம் பிரஸ்தா
பித்துள்ள மீயர்ஜாபரின் பந்தோபஸ்
துக்காக மதுரைக்கு அனுப்பப்பட்
டிருந்த சைனியத்தை வழியில் தாம
திக்கும்படி அவசர அஞ்சல்களை
அனுப்பி வைக்க அவ்விதம் அவர்களை
அஞ்சல்காரர்கள் போய்த் தொடர்
ந்து கொண்டனர்கள். திருநெல்வேலி
யை விட்டு விஜயம் செய்த முகமது யுஸூப்கான்

ஆயிரம் சிப்பாய்களுடன் திருநெல்வேலியைக் காத்துக்கொள்ளும்படிக்கு ஜாமூல் சாஹிபிடம் ஒப்படைத்தார். மதுரை செல்லும் முகமது யுஸுப்கானுக்கு மதுரையைப் போய்ச் சேர்வதற்குள் எழுநூறு சிப்பாய்கள் அதிகரித்துவிட்டனர்கள். இவர்கள் சகிதம் ஸ்ரீ கந்தர்மலை என்ற திருப்புரங் குன்றத்துக்குள் பிரவேசித்தனர். ஆயிரத்து ஐந்நூறு சிப்பாய்களும் ஆறு பீரங்கிகளும் மாத்திரமே இருந்தன. எதிரியின் பக்கமோ சைனியம் பெருத்திருந்தது. முகமது யுஸுப்கானும் நிதானமற்று எதையும் அவசரமாகச் செய்தால் தீமைக்கிடனாகுமென்று பயந்து ஆலோசிக்கலாயினர்.

பாளையக்காரர்கள் நடுவு நிலைமையை நாடல்

திருநெல்வேலியோ ஜாமூல் சாஹிபிடம் ஒப்படைப்பாகிவிட்டது. பூலித் தேவர், பாஞ்சாலங் குறிச்சியார், எட்டயபுரத்தார் ஆகிய பாளையக்காரர்களும் ஏனைய பிரமுகர்களும் ஒன்றுகூடி ஆழ்ந்து யோஜனை செய்ததில் மதுரைக் கலகக்காரர்களிடம் அவர்கள் சேர்ந்துகொள்வதானால் அவர்களால் நாளடைவில் எதையும் சாஸ்வதமாகத் தங்களுக்குச் செய்துவைக்க முடியாததால் பிற்காலத்தில் ஆபத்துக்கிடனாகுமெனத் தெரிந்தும் தற்காலத்தில் அன்னோர்களிடம் சேர்ந்துகொள்ளாவிட்டால் அவர்களின் பகையினால் தங்களுக்கு ஏதேனுந் தற்காலத்திய கஷ்டங்கள் ஏற்படலாமேயன்றி வேறல்ல எனத் தெரிந்தும் எவர்கள் கக்ஷியிலுஞ் சேராமல் நடுவு நிலைமையிலிருந்து விட்டார்கள்.



ஜமீதார்கள் மன்னிப்புக் கேட்டல்

ஜமீதார்கள் எதிர்பார்த்தவண்ணம் எவர்களுமே திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து மதுரைக் கலகக்காரர்களின் சகாயத்துக்கு வாராததை யறிந்துகொண்ட ஜமீதார்கள் ஏமாற்றத்தை அடைந்தவர்களாகி, சென்னபட்டணத்துத் துரைத்தனத்தாருக்கு ஜமீதார்களுக்கு நேர்ந்த பணத்தின் கஷ்டத்தினால் அவ்விதம் அவர்கள் செய்யும்படிக்கு நேர்ந்ததென்றும் தங்களுக்குச் செல்லாகவேண்டிய பாக்கி ரூபாய் ஏழுலக்ஷத்தையும் நான்குலக்ஷரூபாய்களாகக் குறைத்து வாங்கிக்கொள்ளச் சம்மதிப்பதாயும் அவர்களின் அக்கிரமச் செய்கைகளை மன்னிக்க வேண்டியதென்றும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டனர்கள்.

சென்ன பட்டணத்துத் துரைத்தனத்தார் கியாப்டன் கலியாட்டுத் துரைக்குச் சர்வாதிகாரங் கொடுத்ததைக் கேட்டு மாவஸ்கானுக்குக் கோபம்பிறத்தல்

நாம் பிரஸ்தாபிக்குங் காலத்தில் வங்காள தேசத்திலுள்ள நடவடிக்கைகளைச் சரிப்படுத்தக் கர்நாடக தேசத்திலுள்ள சைனியங் களிற் பெரும்பாகம் சென்று விட்டது. சென்னபட்டணத்துத் துரைத்தனத்தார் கியாப்டன் கலியாட்டுத் துரைக்கு ஜமீதார்களைக் குறித்துள்ள சகல நடவடிக்கைகளையும் அவரது யுக்தம் போல நடத்தி மதுரையை மீட்டுக் கொள்வதென்ற சர்வ அதிகாரத்தையுங் கொடுத்துவிட்டனர். இந்த அதிகாரத்தைக் கொண்டு கியாப்டன் கலியாட்டுத்துரை திருச்சிராப்பள்ளியிலுள்ள தன்னுடைய முனிஷியை மதுரைக்கு மாவஸ்-

கானிடம் அனுப்பிவைக்க, அவர் அவ்வாறே அங்கு
சென்று மாவஸ்கானிடம் கலியாட்டுத்துரை சொல்லி
விடுத்த விஷயங்களைக்கூறியும் கூறுமலுமிருக்க மாவஸ்
கானுக்குக் கோபாவேசம் பிறந்து தன்னுடைய குத்த
கையின் அதிகாரத்தின் கீழிருக்கும் சீமையை
நிதானிக்காமல் முதலியாருக்கு எந்த நியாயங்கொண்டு
குத்தகைக்கு விடப்பட்டதென்றும் அதன் காரணத்
தைத் தனக்குத் தக்கபடிக்கு மெய்ப்பித்துக் காட்ட
வேண்டுமென்றும் இச்செய்கைள் "தன்னைச் சிங்காரி
த்து மூக்கை அறுத்துவிட்டதற் கொப்பாகும்" என்று
பலவாறுகச் சொல்லி முதலியாருக்குக் கொடுக்கப்
பட்ட நிபந்தனைகளின்படி தனக்குத் குத்தகையை
ஜாரி செய்யாவிட்டால் மதுரையையும் திருநெல்வேலி
யையும் விட்டுக் கொடுக்கப் போகிறதில்லை என்றும்
முரட்டுத்தனமாகச் சொல்லிவிட்டார். மாவஸ்கான்
மூர்க்கமாக இருப்பதால் சிறிதுகூட வசத்துக்கு வரு
வதற்கு மார்க்கமில்லைஎன்று தெரிந்கொண்ட முன்ஷி
கலகக்காரர்களான ஜமேதார்களிடம் வினயமாகச்
சென்று அவர்களுக்கு இதே நிமிஷத்தில் 50 ஆயிர
ரூபாய் கொடுத்துவிடுகிறதென்றும் மதுரையை விட்டு
அவர்கள் காலியாகிக்கொண்டால் 1½ லக்ஷ ரூபாய்
கொடுத்து விடுகிறதென்றும் சொல்ல, அவர்களும்
அதற்குட்பட்டு ஸ்ரீகந்தர்மலையில் வந்து இறங்கியிருக்
கும் முகமது யுஸுப்கானையுங் கலந்து கொள்வதாகச்
சொல்லிவிட்டுத் திருப்பரங்குன்றத்துக்குச் சென்று
கேட்க, அதற்கு அவர் "மிக்கச் சரியே நீங்களும்
அந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டுக்கொள்ளுங்கள்.



கலியாட்டுத்துரையும் அதை ஆக்ஷேபிக்க மாட்டார்"
என்று உறுதி கூறினர். இந்த விவரங்கள் எல்லாம்
உத்தியோக இலாகா மூலம் கலியாட்டுத்துரைக்குத்
தெரிவிக்கப்படலும், அதற்கு அவர் சம்மதித்து மது
ரையைக் கலகக்காரர்கள் ஒப்புக் கொடுக்கும் சமயத்
தில் மாவஸ்கானையும் பெர்கட்டுலாவையும் சேர்த்தே
ஒப்படைக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனை ஷரத்தில்
கூட்டிக் காணப்பட்டதையும் ஜமேதார்களும் சம்
மதித்துக் கொண்டனர்கள். ஜமேதார்களுக்குப் பணத்
தைக் கொடுத்துத் தீர்த்துவிட வேண்டி முதலியாருக்
குத் திருநெல்வேலிச் சீமையின் வரவு செலவு கண
க்குகளையும் பாக்கியுள்ள தொகையையும் அனுப்பி
வைக்க வேண்டுமென்று முகமது யுஸுப்கான் தகவல்
கொடுத்துவிட்டார். இந்த விவரங்கள் எல்லாம்
சென்னபட்டணத்திலுள்ள துரைத்தனத்தாருக்குப்
"போய்விட்டுத் திரும்புவதற்குள்ள கால அளவின்"
இடையிலேதான் முந்தியுள்ள பாராக்களிற் சொல்
லிய விஷயங்களிற் சில நடந்தன.

மதுரைக் கலகக்காரர்களான ஜமேதார்களுக்கு
கலியாட்டுத் துரையின் முன்ஷி சொல்லியபடிக்கும்
அதனை ஆமோதித்து முகமது யுஸுப்கான் முதலிய
வர்கள் கொடுத்திருந்த வாக்குப் படிக்கும் நாணயம்
கொடுபடாமல் வீணை காலதாமதமாவதை அறிந்த
ஜமேதார்களில் ஒருவரும் பெர்கட்டுலாவிற்கு வேண்
டியவரும் மகா வினயமும் தந்திரசாலியுமான சீர்கான்
என்றவர் நம்மிடம் முன்ஷி "அழுகிற குழந்தை
களுக்குக் கற்கண்டை கொடுத்து ஏமாற்றுவதுபோல"

இனிமையான வார்த்தைகளைப் புகன்று இன்றைக்கு நாளைக்கென்று ஏமாற்றிக் கடைசியாக ஸ்ரீ கந்தர்மலையில் சைனியங்களுடன் தயாராக வந்து காத்துக் கொண்டிருக்கும் முகமது யுஸுப்கானுக்கு உதவியாக மேல் பலமுள்ள சைனியங்கள் வந்து சேரவும் திடீரென்று நாம் அஜாக்கிரதையாக ஏமாந்திருக்கும் சமயத்தில் மதுரையைத் தாக்கி நம்மை விரட்டிவிட்டு அதைப் பிடிப்பதற்கே யோஜித்து இவ்விதமான நடவடிக்கைகள் முற்றுப் பெறுகின்றனவென்று சொல்லிவிட்டு இன்னார் இன்ன நோக்கத்துடனிருக்கிறார் என்ற தன்மையை ஆராயாது, அன்னார் பக்கமாக நம்பிச் சேர்வதிலும் நமது புதுப்பகைவரான பழைய சிநேகிதர்களிடம் சமாதானமாவதே சிறந்ததாகும் என்ற ஆலோசனையை அவர் நாளாரம்பமாகச் சொல்லிக்கொண்டு வந்ததைக் கேள்விப்பட்ட மாவஸ்கானும் பெர்கட்டலோவும் கலகக்காரர்களுக்குத் தங்களுடைய எதிரிகளால் கொடுக்கப்படுவன எவையோ அவைகளைத் தாங்களே கொடுப்பதாகச் சொல்லி அதிக ஆசை வார்த்தையைப் புகட்டி ஜமேதார்களைத் தங்களுடைய பக்கத்தில் இழுத்துக் கொண்டார்கள். இவ்விதம் இருதரத்தார்களும் சமாதானமானவுடனே 500 குதிரைப் படை நபிகான் கட்டாக் குதிரைப் படையைப் போய்ச் சேரும்படிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மாறுதல்களை அடையப் பார்த்துக் கொண்டிருந்த முனிஷி, அவர்களை இனி எப்படியும் சமாதானம் செய்து விடலாமென்ற நம்பிக்கையைக் கொண்டு அங்கேயே இருக்கவும், கலியாட்டுத் துரை



...தம் சீமைக்குச் சமீபமாக இருந்துகொண்டு காரி
...களின் உளவுகளை அறிவதுதான் சமயத்துக்
கேற்றதென்று மனதிற்கொண்டு தன்னுடன் திருச்சி
ஞப்பள்ளியில் அக்காலத்தில் "தெக்ஷண குபேரன்"
என்று பேர் விளங்கிய கோடீஸ்வரனை பக்கான்ஜி
யின் காரியஸ்தரையும் அழைத்துக்கொண்டு போயிருந்
தார். இந்த சௌக்கார் சொல்லும் வார்த்தையே
நாணயமாக அக்காலத்தில் மதிக்கப்பட்டிருந்தது.
கலியாட்டுத்துரை நத்தம் சீமையில் 25-10-1756ல்
வந்திறங்கவும், மதுரையிலிருந்த அவரது முனிஷியும்
ஆற்காட்டு நவாபிடமிருந்து ஜமேதார்களுடன் காரி
யங்களைச் சீர்படுத்த வேண்டியவைகளுக்கு விவரமான
சமாசாரச் செய்தியைக்கொண்டு வந்திருந்தவருமான
ஒரு காரியஸ்தரும் அங்குப் போய்ச் சேர்ந்தனர்கள்.
காரியஸ்தர் சொல்லிய விவரங்களைக் கேட்டுக்கொண்ட
கலியாட்டுத் துரை அந்த நவாபுவின் காரியஸ்தருக்
குப் பின்வருமாறுள்ள பதிலைக் கூறினர். "ஆம்,
நவாபு துரை சொல்வது மெத்தச் சரியானதுதான்; அப்
படிக்குச் செய்யலாம். ஆனால் மாவஸ்கானும் பெர்கட்
டேலாவும் எதற்கும் கடைசி வரை இசைய இஷ்டப்
படுவதாகத் தெரியவில்லை. நவாபு துரையவர்களிடத்து
அவ்விருவர்களுக்கு நம்பிக்கையுமில்லை. நவாபு துரை
சொல்லும் நிபந்தனைகட்குச் சென்னபட்டணத்துத்
துரைமார்கள் ஜாமீனாளிகளாக இருக்கவேண்டுமென்று
சொல்லுகிறார்கள். பெர்கட்டேலோ பெரும் நிதி படைத்
துள்ளார். அவருக்குப் பணத்தில் ஆசை யிருக்க
...சியாயமில்லை. ஆனால் அவருக்கும் அவரது பெண்டு

பிள்ளைகளுக்கும் அவரைச் சார்ந்த மற்றைய உறவினர்களுக்கும் அவருடைய உத்தியோகஸ்தர்களுக்கும் உயிரைப் பாதுகாத்துக் கொடுப்பதான அபயாஸ்தம் ஒன்றுமட்டும் போதுமென்கிறார். மாவஸ்கான் தன்னுடைய பிறப்பின் அந்தஸ்துக்குத் தகுந்துள்ள தன்மையில் அவரைச் செய்துவைக்க வேண்டுமென்கிறார்'' என்று சொல்லி முடித்தார். இவைகளை எல்லாம் அவர்கள் கூடி ஆலோசித்துவிட்டுக் கடைசியாக ஜமேதார்களுக்குச் செல்ல வேண்டிய பாக்கிக் கணக்குகளுக்கு ஒரு புது நகல் ஒன்றை எடுத்துக்கொடுக்கத் தன்னுடைய முனிஷிக்குக் கலியாட்டுத் துரை உத்தரவைப் பிறப்பித்தார். அதன் பின்பு மாவஸ்கானுக்கும் பெர்கட்லோவிற்கும் தானே நேரில் வாக்குக் கொடுத்தார். அவ்விதம் வாக்களித்ததில் மாவஸ்கான் கலியாட்டுத்துரையுடன் கூடவே திருச்சினாப்பள்ளிக்கு புறப்பட்டுவிட வேண்டுமென்றும் உறுதி செய்து கொள்ளப்பட்டது. இருவர்களும் ஒத்தமனத்தினர்களாகச் சேர்ந்து சந்தோஷ மடைந்தனர்கள். அக்காலம் மழையும் ஆரம்பித்து விடுமெனத் தெரிந்து கொண்டு அங்கு இனித் தாமதித்தால் திருச்சினாப்பள்ளிக்குப்போய் எட்டுவது பாதையின் சீர்கேடால் கூடாமை என்பதை அறிந்து வெகு துரிதத்தில் திருச்சிக்குச்செல்லலாயினர். அங்கு கலியாட்டுத்துரை செல்லவும், அவரது முனிஷியும் மாவஸ்கானின் ஏஜண்டுமான ஓர் ஜமேதாரும் பின்பற்றி அவரைக் கிட்டிச் சேர்ந்து பேட்டி கண்டுகொண்டு மாவஸ்கான் அனுப்பி வைத்த நிருபத்தைக் காரியஸ்தர் கொடுக்க, அதனைத்



திறந்து வாசித்துப் பார்த்ததில் கீழேகண்ட கருத்
தடங்கியவிதமாக அதில் எழுதப்பட்டிருந்தது.''கியாப்
டன் கலியாட்டுத் துரையவர்கள் சமூகத்துக்கு அநேக
சலாம். என் கைவசமிருந்த ஏராளமான நிதிகள்
யாவையையும் சைனியத்தின்பொருட்டும் யுத்தங்
களின் நிமித்தமும் செலவுசெய்து இழக்கும்படிநேர்ந்து
விட்டது. எனது பிறப்போ பெரும் அந்தஸ்துள்ள
தென்பதை யான் தங்களுக்கு எடுத்துச் சொல்லத்
தேவை இருக்கமாட்டாது. என்னுடைய நிலைமைக்குக்
குறைவின்றி ஒரு ஸ்தானத்தை என்வாழ்வின் பிற்
காலமாகிய இதிலிருந்து பெற்றுள்ளதாக இருக்க
வேண்டும். அப்படிக்கிருப்பதற்குக் கர்நாடக தேசத்
தில் எங்கேயாவது வருஷம் ஒன்றுக்கு இரண்டுலக்ஷ
ரூபாய்கள் வருமானமுள்ள சீமையை சாஸ்வதமாக
எனக்கு ஜாடாவாக ஜாரிசெய்துவிடவேண்டும்'' என்று
திய வக்கணைகள் அடங்கியிருந்தன. அதற்குக் கலி
யாட்டுத்துரை காரியஸ்தருக்குச் சொல்லிய வாய்
மொழிப்பதில்: ''இதோ சென்னபட்டணம் போகி
றேன்; அவர் கேட்டுக்கொள்ளுகிற ஒப்பந்தப்படிக்கு
அங்குள்ள கும்பினித் துரைத்தனத்தாருக்கு நாட்டின்
கால இயல்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லி மாவஸ்
கானுக்கு உத்தரவுவாங்கிக் கொடுக்கிறேன்''என்பதை
நான் சொல்லியதாக நீபோய் அவருக்குத் தெரிவி
என்று சொல்லி அவனைப் போகும்படி சொல்லி
விட்டார்.

முன்னம் நாம் சொல்லியுள்ளபடிக்குப் பாளையக்காரர்கள் தங்கள் தங்கள் பாசறைகளுக்குச் செல்ல

வும் பெர்கட்டூலா மதுரை போய்ச் சேரவும் நபிகான் கட்டாக் ஸ்ரீவில்லிபுத்தூர் போய்ச் சேர்ந்து கோட்டை மதில்கள்மீது ஏறுவதற்கு அவருடைய கைவசம் சாமக் கிரியைகளில்லாததாலுங் கோட்டையைச் சிப்பாய்கள் காத்துக்கொண்டிருந்ததாலும் கோபுரத்தினுள் வாசல்வழி சென்று காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் பிரவேசிக்க எத்தனிக்கவும், இப்படிக்கோர் முகமதியன் கையினால் கோயில் தீண்டப்படுமென்பதைச் சகிக்கக்கூடாத ஒரு வைஷ்ணவப் பிராமணன் "கோவிலினுள் 'கான்' பிரவேசிப்பானாகில் என்னுடைய பழி அந்தக்கானையே பிடிக்கக்கடவது" என்று சொல்லிக்கொண்டு கோபுரத்தின் உச்சி வாசலிலிருந்து ஒரே குதியாகத் தரைமட்டத்திற் குதித்து அவனுடைய மண்டையைத் தேங்காய் ஓட்டைப்போல் துண்டந் துண்டங்களாகச் சிதறி யோடும்படிக்குச் செய்து கொண்டான். இதையும் மீறிக்கொண்டு கோவிலினுட் பிரவேசிப்பது ஜனங்களின் வீணை அதிர்ப்திக்கும் பெருத்த கலகங்களுக்கும் ஆஸ்பதமாகி விடுமென்று நிதான புத்தியுடன் அவர் சும்மா இருந்துவிட்டனர்.

ஒரு வீர வைஷ்ணவப் பிராமணனின் பிடிவாதம்

மேலே சொல்லியுள்ள நபிகான் கட்டாக் மதுரையிலுள்ள வடக்குக் கோபுரமான மொட்டைக் கோபுரத்தில் அரைகுறையாகக் கட்டிவிடப்பட்டிருந்தஇடத்தின்மீது ஒரு பள்ளிவாசலைக் கட்ட முயன்றதில் அவரது எண்ணத்தை அங்கும் நிறைவேற்றிக் கொள்ள மார்க்கமில்லாது ஜனங்கள் செய்துவிட்டனர்கள். இப்



படி அரைகுறையாக விடப்பட்டிருந்த மதுரை வடக்
குக் கோபுரம் சுமார் 40-வருஷங்களுக்
க்கு முன்னர் பூர்த்திசெய்து வைக்கப்
பட்டது. ஒருகால் திருப்பரங்குன்
றத்தின்மீது இவரே பள்ளிவாசல் ஒன்
றை ஸ்தாபித்திருக்கவுங் கூடுமென்ற
ஐயப்பாடு ஆதார மற்றதென்று
சொல்லல் பொருத்த முடையதாக

மதுரை மொட்டைக் கோபுரத்தின் உச்சியில் ஒரு பள்ளிவாசலைக் கட்ட முயலல்

அப்பள்ளிவாசலுக்குச் சிக்கந்தர் பள்ளி
மாட்டாது. வாசல் எனப் பெயர் விளங்குவதில் ஸ்ரீகந்தர் (அதா
வது சுப்பிரமணியர்) என்ற தொனியை ஒத்தது சிக்
கந்தர் என்றது வெளிப்படையாவதுடன் ஸ்ரீ கந்தர்
என்றதே அலக்சாந்தர் (Alexander) எனவும் பாஷா
மொழி வல்லுநர் கொள்கையாவதால் ஸ்ரீ கந்தர்,
Alexander அலக்சாந்தர், சிக்கந்தர் என்பவை யாவும்
ஒன்றெனக. இவற்றுள் Alexander என்றதிலுள்ள
"Al" என்றது ஸ்ரீ கந்தரிலுள்ள "ஸ்ரீ" அல்லது
"திரு" என்றதை நிகர்வதால் அதனை நீக்க ஸ்கந்தர்
என்றதும் காண்க.

மாவஸ்கானின்
இயாப்டன் கலியாட்டுத்துரை
ஏஜண்டுக்குச் சொல்லி யனுப்பிவைத்த பின்பு வேறு
சில அசந்தர்ப்பங்களும் அங்கு நிகழ்
ந்து விட்டனவாகச் செய்தி எட்டிவிட்
டது. பெர்கட்டூலா மதுரையிலிருந்து
நத்தம்போய் அங்குள்ள விஷயங்களில்
அவருந் தலையிட்டுக்கொண்டனர், என்
றாலும் கும்பினித் துரைத்தனத்தாரு
க்கு நம்பிக்கை கெட்டுவிடவில்லை. ஏனெனில் ஜமேதார்

கலியாட்டுத் துரை ரம்போல்டு துரையை தூது அனுப்பல்

களில் சிலர்களுக்கு, இப்போர்க்கோத்த வீணான கலகங்களும் அதன்பயனாக நேரிடுகிற உயிர்ச் சேதங்களும், காரியங்கள் எதுவுமே கைகூடாத நிலைமையில் நிகழ்ந்துகொண்டிருப்பன என்றதில் வெறுப்புக்கொண்டிருந்தார்கள் என்பதை நன்கு தெரிந்துகொண்ட கலியாட்டுத் துரை, அநேக பாஷைகளைச் சாதுர்யமாகவும் சமயோசிதமாகவும் பேசுவதில் வல்லமை வாய்ந்துள்ளவரும், கும்பினிச்சைனியத்தில் லெப்டினண்டு பதவியை அடைந்திருந்தவருமான உவில்லியம் ரம்போல்டு துரையையும் இவருக்கு அனுசரணையாகத் தன்னுடைய முனிஷியையும் அனுப்பிவிடுத்து, இன்னுமொரு முறை அன்னோர்களின் வாக்குறுதியைச் சோதித்தறிய எண்ணங்கொண்டவராகி அவ்விதமே செய்யவுமாயினர்.

ஒரு கும்பினிச் சைனியம் ரம்போல்டு துரைக்குச் சகாயமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மதுரையை 3-12-1756ல் போய்ச் சேர்ந்த

**முகமது யூஸுப்கான் பெர்கட்டூலாவைத் தோற்கடித்தல்**

மறுதினம் அங்குவந்திருந்த பெர்கட்டூலாவின் குதிரைப் படையை முகமது யூஸுப்கான் முற்றிலுந் தோற்கடித்துவிட்டார். ரம்போல்டு துரையை மாவஸ்கான் மிகுந்த மரியாதையுடன் உபசரித்து வரவேற்று இருவர்களும் சில முக்கிய விஷயங்களைத் தனித்துக் கலந்துகொள்ள வேண்டுமென்று சொல்ல, அவ்விதமே அங்கிருந்தார் யாவரையும் அப்புறப்படுத்திவிட்டு அந்தரங்கமாக இருவர்களும் பேசிக்கொண்டிருந்தார்கள்.



சிறிது நேரத்துக்குள் நாம் முன் பிரஸ்தாபித்த ஜமேதார்களில் ஒருவரான சிர்கான் என்றவர் இவ்விருவர்களுக்குள் தனித்து நிகழ்ந்த சம்

**சிர்கான் மாவஸ்கானைச் சிறைப்படுத்தல்**

பாஷணையைக்கவனித்துக்கேட்டிருந்துவிட்டு வெளியிற் சென்று மாவஸ்கான் ஜாகைக்குச் சென்ற ஒருமணி நேரத் துக் குள்ளாகக் குதிரைப் படையுடன் அவரது ஜாகையைச் சூழ்ந்து மாவஸ்கானைச் சிறைப்படுத்தி விட்டார். ரம்போல்டு துரையையும் முப்பது குதிரைப் படையைக்கொண்டு தாக்கி அவரை அதேக்ஷணத்தில் நகரத்தைவிட்டுக் காலிசெய்து கொள்ளும்படி வற் புறுத்த, அவரும் அதற்கிசைந்து எதிர்கரையில் தண் டிறங்கியிருந்த தன்னுடைய சைனியங்களுடன்போய்ச் சேர்ந்து கொண்டார். ரம்போல்டு துரை போய் விட்டாரென்ற சங்கதியைத் தெரிந்துகொண்ட சிர் கான் ஜமேதார்கள் அடங்கிய ஒரு கூட்டம்கூடி மாவஸ் கானின் விரோத எண்ணத்தைக் கண்டனம் செய்து தங்களையும் மதுரையையும் எதிரியிடம் காட்டிக் கொடுப்பதாக ரம்போல்டு துரையிடம் சதி ஆலோ சனை செய்ததையும் எடுத்துப் பேசினர். இதைக் கேள் விப்படலும் அங்கிருந்த ஜமேதார்கள் யாவர்களுக் கும் அடங்காக் கோபம் பிறந்து எல்லோரும் ஏகோ பித்துச் சண்டையை ஆரம்பித்துவிட வேண்டுமென்று கூவினர்.

இதுசமயம் ரம்போல்டு துரையிடமிருந்து ஜமே தார்களுக்கு ஒரு நிருபம் அனுப்பிவிக்கப் பட்டது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. மதுரை

யில் தண்டிறங்கி இருக்கும் சிர்கான் ஆகிய ஜமேதார் களுக்கு லெப்டினன்டு உவில்லியம் ரம்

**ஜமேதார்கள் ரம்போல்டு துரையிடம் இகிலடைதல்**

போல்டு எழுதியதாவது: "கும்பினித் துரைத்தனத்தாரின் கீழ் அந்தஸ்து வாய்க்கப் பெற்ற பதவியிலிருக்கும் என்னை உங்களிடம் சமாதானத்தைக் கோரி மத்தியஸ்தராக அனுப்பி வைத்திருக்க, அதன் பெருமையைச் சிறிதளவேனும் உட்கொள்ளாமல், அலக்ஷியம் செய்து என்னைப் பெருத்த அவமரியாதையுடன் திரும்ப அனுப்பி வைத்ததற்குப் பலனாக, இங்கிலீஷ்காரர்களின் கோபத்துக்கு உங்களுள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் பாத்திரர்களாகாதிருக்கமாட்டீர்கள்" என்றுகூறிய விஷயங்களடங்கியிருந்தன. இதைப் படிக்கக்கேட்டுத் தெரிந்துகொண்ட ஜமேதார்கள் யாவர்களும் நடுநடுங்கிச் சமாதான வழியையே இனி நாடுவது நலமென்று உறுதி செய்துகொண்டு, நதியின் எதிரிலுள்ள கரையிலிறங்கியிருந்த ரம்போல்டு துரையிடம் வந்து, அவரை அங்கு மதுரைக்கு மறுபடியும் வந்து, வேண்டிய ஏற்பாடுகள் யாவையும் இது சம்பந்தமாக முடிவுசெய்து வைக்க வேண்டுமென்று, பிரார்த்தித்துக் கேட்க அதனை அவர் மறுத்துவிட்டனர். ஆனால் ஜமேதார்கள் செய்துள்ள காரியங்களுக்குப் பகிரங்கமான பரிகாரங்களால் தன்னைச் சாந்தப் படுத்திக்கொண்டால் ஒருவேளை சம்மதிக்கலாமென்று சொல்லிவிட்டார்.

இதையறிந்த ஜமேதார்கள்சிறைப்படுத்தப்பட்ட மாவஸ்கான் சகிதம் எதிர்கரையிலுள்ள சத்திரத்தில்



தண்டிறங்கி யிருந்த ரம்போல்டுதுரையிடம் மன்னிப் புக்கேட்டுச் சமாதானப் படுத்தி நகரத் திற்குள் அழைத்துக் கொண்டுபோக, நகரத்தின் கோட்டை வாசலை அடுத்

**ரம்போல்டு துரைக்கு ஜமேதார்கள் செய்த இராஜ மரியாதைகள்**

துப் பிரவேசிக்கவும், அவருடைய அந் தஸ்துக்குத் தக்க வண்ணம் அக்காலத் தில் அக்கோட்டையின்மீது வைக்கப் பட்டிருந்த பதின்மூன்று பீரங்கிகளிலிருந்து 13பீரங்கி களின் முழக்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத்தொனித்த பேரொலிகள் கேட்போர்களின் செவிகள் செவிடுபடு மாறு இருந்தன. பழய உடன்படிக்கையையும் புதுப் பித்துக் கொண்டார்கள். சென்னபட்டணத்திலுள்ள துரைத்தனத்தார்களிட மிருந்து மாவஸ்கானுக்கும் பெர்கட்டேலாவுக்கும் வேண்டிய முன்ஜாமீன்களுக்கு உத்தரவு பிறப்பிவிக்கப்படும் வரை ஜமேதார்கள் பொறுத்துக்கொள்வதாகச் சம்மதித்தனர்கள். கோயி

இதன் மத்தியில் ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கட்டாக் கானுக் பிரவேசிக்க எத்தனித்த நபிகான் ஜமேதார்களின் குதி மதுரைக்குவந்து வேண்டிய ரைப் பட்டாளத்துக்கு

**நபிகான் கட்டாகின் சூழ்ச்சி**

நாற்பதாயிர தற்காலச் செலவுக்கு கொடுப்பதாயும் ரூபாய்கள் உடனே செய்துகொண்ட அவர்கள் இங்கிலீஷ்காரர்களிடம் வேண்டுமென் ஒப்பந்தங்களை ரத்து செய்துகொள்ள வேண்டு றும் ரம்போல்டு துரையை அனுப்பிவிட மென்றுங் கூறினர்.

ரம்போல்டுதுரை மாவஸ்கானைப் பார்த்துவிட்டு வருவதற்காக அவரது ஜாகைக்குச் செல்ல, மாவஸ்கான்

மாவஸ்கான் பள்ளிக்கூடத் தச்சிறுவர் களைப் போல ஏங்கி அழுதல்

அவரைக் காணவும் கண்ணீர் தாரை தாரையாக வடித்துப் பள்ளிக்கூடத்துச் சிறு பையன்களைப்போல ஏங்கியும் விம்மியும்அழுது கொண்டு தன்னுடைய வாக்குறுதிகள் யாவும் விர்தாவாகின்றனவே என்று "அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக" சொல்லிக் கொண்டே தன்னுடைய முத்திரைகளடங்கிய உத்தரவுகளும் விளம்பரங்களும் நடைபெறுவதற்கு இடமில்லாது விர்தாவாகச் செய்து கொண்டிருக்கிற இந்த "முத்திரை"க்கு என்னபெருமை இருக்கிறதென்று சொல்லி நொந்தவராகி அதை இனி மேலாக இப்பேர்க்கொத்த இராஜாங்க விஷயங்களுக்கு உபயோகப்படுத்தித் தன்னை அவமானப் படுத்திக் கொள்ளப் போவதில்லை என்று சொல்லிக் கொண்டே அதனைத் தூள் தூள்களாகும்படி உடைத்து எறிந்து விட்டார்.

உடன் படிக்கை தஸ்தாவேஜுகளில் ஜமேதார் களிடம் கைஎழுத்து வாங்கல்

ரம்போல்டு துரை இத்துடன் நின்றுகொள்ளாமல் பெர்கட்டூலாவையும் போய்ப்பார்த்தார். அங்கு ஜமேதார்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய விதமாக அவர்களின் மனதில் தைக்கும்படியான ஹிதோபதேசத்தை எடுத்துத் தெளிவாயும் நயம்படவும் பேசினார். இவரை முன்னமே வாக்கில் வல்லவரென்றும் அநேக பாஷைகளைப் பேசும் பாஷா வல்லவரென்றும் சொல்லியிருப்பது ஞாபகமிருக்கலாம். அங்குள்ளோர் யாவரும் இவரது



பேச்சுக்கிணங்கி அவ்விதமே செய்வதென்று தீர்மா
னித்து, உடன்படிக்கை தஸ்தாவேஜுகளை ஆதி ஒப்பந்
தப்படிக்கும் அக்காலத்திய வழக்கத்தின்படிக்கும்
இரண்டு பாஷைகளில் எழுதி, எல்லாக் கக்ஷியினர்களு
டைய கைஎழுத்தும் அவைகளில் சாத்தப்படவேண்டு
மென்றும் ஏற்பட்டதால், அவைகளில் ஒருவருக்குப்
பின் ஒருவராக அவரவர் கைஎழுத்தைச்சாத்துவதற்கு
அப்போது இராக்காலமாக இருந்ததாலும், அதிகநேரம்
பிடித்துவிடு மென்றதாலும், அன்று எதுவும் நடக்காது
போயிற்று. இப்படிநேர்ந்த தாமதம் மறுபடியும் நபி
கான் கட்டாக்குக்கு அனுசரணையாக இருந்ததால்,
அவர் மறுபடியும் ஜமேதார்களுடைய குதிரைப்
படைக்கு, நாள் ஒன்றுக்கு மூவாயிர ரூபாய்கள்
கொடுத்துக் கொண்டு சௌகரியப்படுத்துவதாக வாக்
குக் கொடுக்க, அவர்களும் இசைந்து கொண்டார்கள்.
அந்த முயற்சியும் விர்தாவாகியதென்று தெரிந்த
ரம்போல்டுதுரை 15-12-1756-ல் திருச்சினாப்பள்ளி
போய்ச் சேர்ந்தார். இந்தக் காரியங்கள் நிலை கொள்
ளாதுபோனதற்கு ஜமேதார்களுடைய அக்கிரமச்செய்
கைகள் காரணமாக மாட்டா. ஆனால் பெர்கட்டூலா
செய்துவைத்த சூழ்ச்சியே காரணமென்று பின்பு
நம்புவதற்கிடனாயிற்று. நபிகான் கட்டாக்கிடம் ஜமே
தார்கள் கேட்டுக்கொள்ளும் வகைக்கெல்லாம் பொருள்
கொடுத்து உதவி செய்யப் போதுமான தொகை
அவரிடம் கிடையாதென்பதும்; ஆயிரக்கணக்குகளாக
அள்ளி அள்ளி வாரிவிடக்கூடிய மதிக்கத்தகாத பெரும்

நிதி பெர்கட்டோலா வசம் உண்டென்பதும், அவ்விருவர்களுக்கும் அந்தரங்கமான சிநேக முண்டென்பதும், மேலே காட்டிய நம்பிக்கைக்கு ஆதாரமான பற்றுக் கோடுகளாகின்றன.

மாவஸ்கானுக்கு பூமியை ஜாரி செய்ய நிகழ்ந்த சபை

மாவஸ்கானுக்கு மதுரை நகரம் ஒன்றை மட்டு மல்ல, கர்நாடக தேசத்தையே பூராவுங் கொடுத்துவிட வேண்டியதற்கான வழிகளையே அவர் நாடியிருப்பதாயும், ரம்போல்டு துரை அதைவிட்டுச் செல்லவும் பகிரங்கமாகச் சொல்லினர். இந்த நோக்கத்தை உறுதிப் படுத்துவதற்காக நிகழ்ந்த ஆலோசனைச் சபையின் கூட்டத்தில் அபிப்பிராயங்கள் பேதப்பட்டும், பெர்கட்டோலாவின் கக்ஷியை ஆதரித்தவர்கள் மெஜாரிட்டியிலு மிருந்தார்கள் என்ற காரணத்தை முன்னிட்டு ; உடனே இது சம்பந்தமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆமோதிப்புகளான சகல விஷயங்களையும் கண்டுள்ள, சமாசாரப் போக்குவரவுகள் சகல பாளையக்காரர்களுக்கும், மைசூர் தலைவரான ஹைதர் ஆலிக்கும், திருவாங்கூர் அரசருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்குச் சிறிது தினங்களுக்குப் பிற்பை, பெர்கட்டோலாவும் நபிகான் கட்டாக்கும் ஐந்நூறு குதிரைப் படையுடன் நெய்க்கட்டஞ் செவலுக்குச் சென்றனர்.

ரம்போல்டு துரையிடமிருந்து முகமது யூஸுப் கானை மதுரைக்கு வரும்படி சொல்லிய சங்கதி கிடைக்கவும், சுற்றுப் பிரயாணத்திலிருந்த அவர் உடனே



திருநெல்வேலிக்கு மீண்டார். அங்கு சென்று முன்னம் செய்து வைத்துள்ள ஏற்பாட்டைப் போல அதனைக் காத்துக் கொள்ள ஆயிரம் சிப்பாய்களை நியமுகம் செய்துவிட்டு, ஆயிரத்து எண்ணூறு சிப்பாய்களுடன் மதுரைக்குப் புறப்பட்டார். குத்தகைதாரரான முதலியாரும் திருநெல்வேலியில் தனிமையாக இருக்கப்பதறினவராகி, தக்கதளவாடங்களுடனும் புதிதாக அவரது பந்தோபஸ்துக்கென்று வைத்துக்கொண்ட நூறு குதிரைப் படையுடனும் முகமது யூஸுப்கானைப் பின் தொடர்ந்து, மதுரைக்குப் போகும் வழியில் 16-12-1756-ல் கெங்கைகொண்டானுக்குப் போய்ச் சேரவும், ரம்போல்டு துரை மதுரையைவிட்டுப் புறப்பட்டுவிட்டாரெனத் தெரியவும், எதிரிகளான நபிகான் கட்டாக்கும் பெர்கட்டோலாவும் எந்த நிலைமையில் எங்கு என்ன நோக்கத்துடன் செல்லுகிறார்கள் என்றவிவரங்களைத் தெரிந்துகொள்ள, அங்கேயே அவர் தாமதிக்க, அவ்விருவர்களும் பூலித்தேவரையே போய் அடைந்தனர்கள் என்று தெரியவும், ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போய்ச்சேர்ந்து, அப்பக்கங்களிலுள்ள பாளையக்காரர்களை எதிரிகள் பக்கம் சேரவொட்டாமல்செய்யும் வகைகளையும் நாடி, அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

மதுரை திருநெல்வேலிச் சீமைகளை முகமது யூஸுப்கான் பந்தோபஸ்துச் செய்தல்

முதலியாரோ தன்னுடைய பந்துக்களில் ஒருவரான அழகப்ப முதலியார் என்றவரைப் பூலித்தேவர்

**முதலியார் பூலித்தேவர் பக்கம் சேர்ந்து கொள்ளல்**

வசம் அனுப்பி வைத்து அவருக்குச்சில பூமிகளைக் கொடுப்பதாயும் அவருடைய பகைமை தனக்குக் கூடாதென்று சொல்லும்படிக்குங் கேட்டுக் கொண்டார். அவ்விதம் அங்குசென்றவரிடம் முதலியார் சொல்லி அனுப்பியபடி தனக்குச் சம்மதமென்றும் அந்தத் தூதுவருக்குச் சகாயமாக முன்னூறு கள்ளர்களையும் ஸ்ரீவில்லிபுத்தூரில்கொண்டு போய்விட சகாயத்துக்கு அனுப்பி வைத்தார். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அச்சைனியத்தில் தலைமை பூண்டவர்களில் ஐவர் இரவில் கும்பினிப் பட்டாளத்துக்குள் பிரவேசித்து, குதிரைகளைத் திருட அவ்வைவர்களையும் முகமதுயுஸுப்கான் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுப் பொசுக்கி விட்டார். எதிரி பக்கத்துள்ள முதலியாரிடம் பூலித்தேவர் ஒத்து நடந்ததற்குக் காரணங்களைப் பூலித்தேவர் கூறியவை மிகுந்த விந்தை யுடையன.

## ஆறும் அத்தியாயம்

## மத்திய காலத்தியது

**கொள்ளை நோய்**

முன்னம் நாம் பிரஸ்தாபித்துள்ள விஷயங்களுடன் 1756-ம் இ. பி. முடிவுற்றது. அதற்குப் பிந்திய காலமான 1757-ம் வருஷம் மார்ச்சுமாதம் வரைமதுரை ஜில்லாவில் நிகழ்ந்த கடுங்கொள்ளை நோயால் ஆயிரமாயிரமாக ஜனங்களுக்குள்ளும் கால் நடைகளுக்குள்ளும் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் ஜனங்களைத் திகிலடையுமாறு செய்து வைத்ததுடன் அவைகள் ஓர் அம்மனின் கோபத்தால் ஏற்பட்டுள்ள அட்டூழியம் என நாட்டில் எதையும் செய்து முடிக்க ஜனங்கள் அஞ்சியிருந்தமையால் மேலே சொல்லிய காலத்தின் இடையில் யாதும் நடந்திலது.

**பூர்வ நாயக்கர் அரசரிடம் சீமையை ஒப்புக் கொடுத்தலைப் பற்றியது**

குத்தகைதாரரான முதலியாருடன் கியாப்டன் கலியாட்டுத்துரை பண வசூல் விஷயமாகக் காரியங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்குஞ் சமயத்தில், தங்களது கக்ஷிக்கு விரோதமான கூட்டத்தார் மைசூராருடன் திண்டுக்கல்லிலிருந்து இங்கிலீஷ்காரருக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் விரோதமான நடவடிக்கைகளைச் செய்து கொண் டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. பூலித்தேவர் அதே க்ஷணத்தில் 5 லக்ஷ ரூபாய்கள் கொடுப்பதாகவும் கலகக்காரர்களான ஜமேதார்கள் மதுரைக்குந் திண்டுக்

கல்லுக்கு மிடையிலுள்ள கணவாயின் பக்கத்தைச் சார்ந்த சோழவந்தான் நாட்டைக் கொடுப்பதாகவுஞ் சொன்னார்கள். ஆனால் மதுரைச் சீமையை ஜெயித்துக் கொண்டால் மாவஸ்கானுக்காவது மைசூராருக்காவது கொடுப்பதாகத் தீர்மானித்துக்கொள்ளவில்லை. அதை அப்படி ஜெயிப்பதானால் பழைய நாயக்க அரசரின் சந்ததியாரான ஒருவர் சிவகங்கைச் சீமையிலிருப்பவரிடம் ஒப்படைத்து விடுவதாயும், மாவஸ்கானுக்குத் தக்கவாறு அந்தஸ்துள்ள ஓர் உத்தியோகத்தை மைசூரில் கொடுப்பதாயும் சொல்லிக் கொண்டார்கள். நாள் தோறும் வந்துகொண்டிருந்த சமாசாரங்கள் மதுரையைப் போய்த் தாக்கவேண்டுமென்று ஒரு புறம் கலியாட்டுத்துரையைத் தூண்ட, மற்றொருபுறம் திருநெல்வேலியில் நாணய விஷயமாக முதலியாரிடம் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த விஷயங்கள் முடிவுபெறாத நிலை அவரை வாட்டியதால் அவர் அங்கு தாமதிக்கும்படி நேரிடக் கடைசியாக 10-4-1757-ல் கலியாட்டுத் துரை 180 ஐரோப்பியச் சைனியங்களுடனும் 2500 சிப்பாய்களுடனும் 6 கைப் பீரங்கிகளுடனும் 500 குதிரைப் படை வீரர்களுடனும் மதுரையை நோக்கிப் புறப்பட்டார். சிப்பாய்களை நடாத்துவதில் முகமது யுஸுப்கான் தலைமை பூண்டார். முதலியார் தன்னுடைய பாதுகாப்புக்காக வைத்துக்கொண்டிருந்த குதிரைப் படையை நடத்தினார். இதன் தொகை மொத்தம் 100 என்று நாம் முன்னம் சொல்லி யிருப்பது ஞாபகமிருக்கலாம். திருநெல்வேலிக்கு ஆறு கும்பினிச் சைனியங்களையும் அதுபோலவே பாளையங் கோட்டைக்கு ஆறு கும்பினிச் சைனியங்களையும் காத்



துக்கொள்ளும்படிக்கு ஏற்படுத்தி விட்டு முகமது யுஸுப்கான் புறப்படவும், அதே தினத்தில் 500 குதிரைப் படையுடன் பெர்கட்லேவும் நபிகான் கட்டாக்கும் மாவஸ்கானைப் பூலித்தேவரிட மிருக்கும்படி சொல்லிவிட்டு நெய்க்கட்டஞ் செவலை விட்டுப் புறப்பட்டுவிட்டனர்.

இவ்விதம் புறப்பட்ட அவ்விருவர்களும் சிவகிரி போய்த் தங்கினார்கள். இதைக் கேள்வியுற்ற முகமது யுஸுப்கான் அங்கு செல்லவும், சிவகிரியார் அங்கு வந்திருந்த கள்ளர்களை விரட்டி விடவே, அவர்கள் போகும் வழியில் பட்டாளத்துக் குதிரைகளில் 40ஐ திருடிக்கொண்டு சென்றனர்.

**யுத்த காலத்திற் கென்று உணவுப் பொருளைத் தேடல்**

அதே மாதம் 17-ந் தேதியில் மதுரையை யடைந்து அங்கிருந்துகொண்டு நபிகான் கட்டாக் மதுரை நகரத்துக்குச் சண்டைக் காலங்களின் போது உணவுப் பொருள்களின் தேவையை யறிந்து இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளுக்குச் சென்றார். இங்கிலீஷ் சைனியங்கள் 20-4-1757-ல் ஸ்ரீகந்தர் மலைக்குச் சென்று அங்குள்ள கோவிலில் யுத்த தளவாடங்கள் சகிதம் தங்கி யிருந்தனர்.

**சோழவந்தான் பிடிபடல்**

அங்கிருந்தபடியே முகமது யுஸுப்கான் ஒரு துண்டம் சிப்பாய்களுடன் சோழவந்தானைப் பிடிக்கச் சென்றார். அது மதுரைக்குச் சுமார் 12 மைல் தூரத்தில் வடமேற்கிலுள்ளது. அது கணவாயாகத் திண்டுக்கல்லுக்கும் மதுரைக்கு மிடையிலிருந்தும் சரியான

அரணால் பாதுகாக்கப்படா விட்டாலும் அதனை இருநூறு பேர்கள் காத்துக் கொண்டிருந்தனர்கள். இவர்கள் முகமது யுஸுப்கானைக் காணவும் கோட்டையின் கதியை அக்கோட்டையே தீர்மானித்துக் கொள்ளும்படி அதனைத் தனிமையாக விட்டுவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டார்கள். சோழவந்தான் பிடிபடலாயிற்று. இது விஷயமான மேற்கொண்ட தொடர்ச்சி பெரும்பாலும் மதுரை ஜில்லாவின் சரித்திர சம்பந்தமாதலால் அதனை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு திருநெல்வேலியின் சம்பந்தம் எதுவோ அதனை மாத்திரம் இங்கு எடுத்துக் கொள்ளுவோம்.

பாஞ்சாலங் குறிச்சியார் 1000 கள்ளர்களைத் தயாரித்து வைத்துக் கொண்டிருந்தனர். மாவஸ்கான்

**கலியாட்டுத் துரை மதுரைக்குச் செல்லல்**

தன்னுடைய பழைய கக்ஷியில் சேர்வதில்லையென்று சொல்லி விட்டார். மையானாவின் பழைய சிநேகிதரான நபிகான் கட்டாக்கும் மாறுபட்டவராயினர். இவ்விதம் பிரஸ்தாபங்கள் ஆதார மற்ற நிலைமையிலிருக்க, ஜமேதார்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மேல்த்திசைப் பாளையக்காரர்கள் உதவிக்கு வருவதாகச் சொல்லியதுங் கடைசியாக ஏமாற்றமாகவே முடிந்ததென்று தெரிந்துகொண்டார்கள். திருநெல்வேலியிலிருந்து கும்பினிச் சைனியங்களுடன் கலியாட்டுத் துரை மதுரைக்குச் சென்று அதனைத் தாக்கும் சமயத்தில் பெர்கட்டோ நெய்க்கட்டஞ் செவலிலிருந்து மதுரைக்குப் புறப்படும் போது மாவஸ்கான் 500 குதிரைப் படைகளைத் தன்



கைவசம் வைத்துக்கொண்டு நெய்க்கட்டஞ் செவலிலேயே தங்கிக்கொண்டார்.

கலியாட்டுத் துரை திருநெல்வேலிச் சீமையை விட்டுச் சென்றனர் எனத் தெரிந்த மாவஸ்கானும் பூலித்

**ஆழ்வார் குறிச்சிச் சண்டை**

தேவரும் போரை ஆரம்பிக்க, பதினாயிரம் பேர்களைச் சரிப்படுத்திக் கொண்டு ஏப்பிரல் மாதக் கடைசியில் ஆழ்வார் குறிச்சியை நோக்கிப் புறப்பட, அங்கு அதனைக் காத்துக்கொண்டிருந்த சிப்பாய்களின் எச்சரிக்கை, எதிரிகளின் எண்ணத்தைக் கெடுத்துவிட்டதால், ஆழ்வார் குறிச்சியை அவர்கள் முற்றுகை போடக்கூடவில்லை. அங்கு மாசூல் காலமெனக் கருதி அதனைக் கொள்ளையிட நினைத்திருந்த மற்றோர் நோக்கமும் தவறியது. சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்துப் பாக்கிகளை எவர் எவர்கள் முதலியாரிடம் செலுத்துகிறார்களோ, அவர் அவர்கள் தங்களுக்கும் கிஸ்துப் பாக்கிகளுக்கும் ஜவாபுதாரிகளாக வேண்டுமென்றும், தாங்களே சர்க்காருக்கு, மாவஸ்கானுக்கு முன்னம் ஜாரியான உத்தாவின் பலத்தைக் கொண்டு பொறுப்புள்ள குத்தகைதாரர்களென்றும் விளம் முதலியார் குத்தகைதாரராகமாட்டாரென்றும் விளம்பரங்களைப் பகிரங்கப் படுத்தினார்கள்.

இதன் பின்பு மாவஸ்கான் திருவாங்கூராரிடம்

**மாவஸ்கானின் வஞ்சக எண்ணம்**

தனக்கு உதவி புரியவேண்டுமென்றும், அவ்விதம் செய்வதானால் அதற்குப் பிரதி பிரயோஜனமாக, களக்காட்டுச் சீமையைக் கொடுத்து விடுவதாயும்வாக் குக்கொடுத்தார். ஆனால், ஒருவேளை அவர் திருவாங்

கூராரிடம் நாடிக் கேட்டுக்கொள்ளும் வேண்டுகோள் மறுக்கப்படுமாயின், அதற்கு வேறு சரியான உபாயத்தையும் கைவசம் வைத்திருக்கவேண்டுமென்ற அவருக்குள்ள துவிசுபாவ எண்ணத்துடன் திருவாங்கூருக்கு எழுதியனுப்பிவிட்ட பின்பு, மற்றோர் லிகிதத்தை இங்கிலீஷ் அதிகாரியான ரம்போல்டு துரைக்கும் எழுதி ஒரு காரியஸ்தர் மூலம் அனுப்பிவைத்தார். அக்கடிதத்தில், திருவாங்கூரார் அடிக்கடிசொந்தம் பாராட்டிக் கொண்டும் படை யெடுத்துக் கொண்டும் தொந்தரவுக்குள்ளாக்குகிற களக்காட்டுச்சீமையை மாவஸ்கான் தனக்குக் குத்தகைக்கு வேண்டுமென்றும், பெருத்த செல்வம் படைத்தவர்களான சௌக்கார்களை ஷிராப்புகளாக ஜாமீன் பத்திரங்களைக் கட்டுப்பட்டு எழுதிக் கொடுக்கச் செய்ய தயாராக இருப்பதாயுமுள்ள விஷயங்களே அதனுள் காணப்பட்ட முக்கிய விஷயங்களாம். இக்கடிதம் ரம்போல்டு துரைக்குக் கிட்டவும், இதனை ஒருவாறு கவனிக்க வேண்டிய விஷயமாகின்றதென்ற நோக்கம் கொண்டு இவ்வித ஏற்பாட்டுக்கு மாவஸ்கான் இசைந்து கொண்டால் அவரும் அவர [illegible] சகாவான பூலித்தேவரும் திருவாங்கூரார் உதவி [illegible] நாட இடமிருக்க மாட்டாததால் அதனைச் சரியென்று இராமா நாயக்கரென்ற ஜமேதாரை ஒரு மூரியனுடன் அனுப்பி மாவஸ்கானை நேரில் கலந்து கொண்டுவரச் சொன்னார். இவ்விருவருள் ஒருவரான மூரியன் மகா புத்திசாலி. இவர்களுக்குச் சகாயமாக 50 சிப்பாய்களும் பின் சென்றனர். அவர்கள் மாவஸ்கானைப் போய்ச் சேர்வதற்குள் திருநெல்வேலியையும் பாளையங்கோட்



டையையும் காத்துக் கொள்ளும்படி நியமிக்கப்பட்டிருந்த பன்னிரண்டு கும்பினிச் சைனியங்களில் ஆறு கும்பினிச் சைனியங்களை மதுரைக்கு அனுப்பி வைக்கும்படி நேரிடலாயிற்று என்ற விவரமும் மாவஸ்கானுக்குக் கிடைத்தது. இவ்விதங் கிடைத்துள்ள சங்கதி மாவஸ்கானின் நோக்கத்தை மாற்றிவிட, அங்கு வந்திருந்த தூதர்கள் இருவர்களையுங் கலந்து கொள்ளுவதற்குப் பதிலாக அவர்களையும் அவர்களது குதிரைப் படையையும் சைனியத்தையும் சூழ்ந்துகொண்டு பாளையங் கோட்டையைக் காத்துக் கொண்டிருந்த சைனியத்திடமிருந்து அதனைப் பிடுங்கித் தன்னிடம் அக்கோட்டையை ஒப்படைக்கா விட்டால் வாளுக்கிரையாக்கி விடுவதாகப் பயமுறுத்தினார். "நீர் சொல்லுகிற பிரகாரம் இசைவதிலும் உம்முடன் சண்டையிட்டு இறப்பதே ஆண்மை" என்று அதனைக் காத்துக்கொண்டு இருந்த வீரர்கள் சொல்லி விட்டனர் கள்.

அவர்களிடம் போர் புரியப் பார்த்ததைச் சகிக்காத மாவஸ்கானின் ஜமேதாரான ஆலிசாஹிப் தன் எஜமானனை மாவஸ்கானைக் கோபித்துத் தூதர்களை ஹிம்சிப்பதும் கொலை செய்வதும் அதர்மம் என்று தன் கையின் கீழுள்ள குதிரைப் படைகளுடன் இராம நாயக்கருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உதவியாகப் போய்ச் சேர்ந்து கொண்டார். மாவஸ்கான் சைனியத்திலுள்ள சிலர் ஆலி சாஹிப் சொல்லுவது நியாயம் என்று அவர் பக்கமே சேர்ந்து கொண்டார்

ஆலிசாஹிபின் பெருந்தன்மை

கள். இவ்விதமாக மாவஸ்கானின் சைனியத்திலிருந்து பிளவுபட்ட கலிக்காரர்களின் உதவியைக்கொண்டு மேலே சொல்லிய தூதர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும்ஒருவாறு கஷ்டத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டனர்கள். அந்தப் பிராந்தியங்களில் அறுவடையாகிறது என்று தெரிந்து மாவஸ்கான் குடிகளிடம் கிஸ்துப் பாக்கிகளைத் தன்னிடம் கொடுக்க நிர்பந்தித்தார். நடுவு நிலைமையிலுள்ளவர்களும் இவ்வகையான சகிக்காத தொந்தரவுக்குள்ளானார்கள். பாளையங்கோட்டையைத் தாக்கிய மாவஸ்கானுந் துரத்தி யடிக்கப்பட்டார்.

வசவப்ப நாயக்கர்பாஞ்சாலங் குறிச்சி எட்டயபுரம் இவைகளின் சகாயத்தை வேண்டல்

நாலா பக்கங்களிலும் நாட்டில் மாசூல் கொள்ளை யடிக்கப்பட்டதால் ஆகாரக் குறைவாகிவிட்டது. கும்பினிச் சைனியத்துக்கு உணவுப் பொருள்கள் அவசியம் கைவசம் வேண்டும் என்று தெரிந்துகொண்ட கமாண்டர் வசவப்ப நாயக்கர் உணவுப் பொருள்களுக்குக்கிராக்கிஏற்பட்டு வருவதைப் பார்த்து இன்னுங் கொஞ்ச தினங்களுக்குள் உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதாகிவிடுமென்று தெரிந்து, கட்டபொம்மு நாயக்கருடைய சகாயத்தைக் கேட்க, அவர் தனக்குத் தன் சீமையின் பக்கத்திலுள்ள நாட்டில் 4, 5, கிராமங்களை இனாமாக விடுத்துத் தன்னுடன் சேர்ந்துள்ள எட்டய புரத்தாருக்கும் ஏதாவது உபகாரம் செய்வதானால் தாங்கள் இருவர்களும் உதவிக்கு வரக்கூடுமென்றார். அவ்வி



தமே வசவப்பநாயக்கருக்கு வேண்டிய உபகாரங்களை
அவர் கேட்டுக்கொண்டபடி எதிரிகள் நாட்டிற்குள்
சென்று அவ்விரு பாளையக்காரர்களும் முடித்துக்
கொடுத்தார்கள். இதற்காக சர்க்காரிடம் சொல்லிய
பாஞ்சாலங் குறிச்சியாருக்கு 4,5 கிராமங்களை அவ
ருடைய பாளையப்பட்டுடன் சேர்த்துக்கொள்ள உத்
தரவு கொடுத்தும் எட்டயபுரத்தாருக்கு சர்க்காரிடம்
சொல்லி, சில கிராமங்களை ஜாரி செய்ததுடன் இப்போ
துள்ள தங்க நாற்காலிப் பல்லக்கை வசவப்ப நாயக்
கர் மூலம் மதுரை துரைத்தனத்தாரால் சில கிராமங்
களுடன் கொடுக்கப்பட்டதென்பதற்கு தெலுங்கில்
ஒரு கந்தபத்தியம் (செய்யுள்) இந்த நாட்டில் வழக்கத்
தில் இருக்கின்றது. இதன்பின்னால் இரண்டு பாளையக்
காரர்களும் மதுரைபோய்ச் சேர்ந்தார்கள்.

கலகக்காரர்களின் கஷ்ட ஸ்திதி

மதுரைக் கலகக்காரர்களுக்கு மாவஸ்கான் சொல்
லிய பிரகாரம் பணத்தை அனுப்பாமல் இருப்பதை
அறிந்து பெர்க்கட்லோ பல முறை
இது விஷயமாகச் சொல்லி அனுப்பி
யும் திருநெல்வேலியிலிருந்து கொண்டு
அப்போதைக் கப்போது கிடைக்கும்
பணத்தை வீண்செலவுகளை, கைகூடாத எண்ணங்
களில் தலையிட்டுச் செய்துகொண்டிருந்தார். மதுரை
யிலோ கலகக்காரர்களின் சைனியத்திற்கு ஆகாரக்
குறைவாகிவிட்டது. பணமுடை யில்லாதிருந்தால்
உணவுப் பொருளை எவ்விதமும் எங்கிருந்தும்கொண்டு
வரக்கூடும். கலகக்காரர்களின் நிலைமை மதுரையில்
அளவிடக்கூடாத கஷ்டத்திற் குள்ளாகிவிட்டது.

இதோ வருகிறோம், அதோ வருகிறோம் என்றுசொல்லி காலைக் கடத்திக்கொண்டு வந்த மைசூரின் உதவியை நாடுவதில் பிரயோஜனமில்லை என்றும், அவர்களின் தலைவரான ஹைதர் ஆலி நாயக் திண்டுக்கல்லுக்குத் தங்களது உதவிக்கு வருவதான பிரஸ்தாபங்களும் உறுதியற்றன வென்றும் பெர்க்கட்லோ தெரிந்து கொண்டு மனதில் வியாகூலமடைந்தார். ஸ்ரீரங்கப் பட்டணத்திலேயே ஹைதர்நாயக் இருக்கிறார் என்றும் திண்டுக்கல்லிலுள்ள சைனியம் அதன் பாது காப்புக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் அங்கிருப்பதால் அதை நம்பி எதையும் செய்துவிட மார்க்கமில்லாதிருந்தது என்றதையுந் தெரிந்துகொண்டார்.

பெர்கட்லோ விற்கும் கலியாட்டுத் துரைக்கும் நிகழ்ந்த உடன் படிக்கை

இந்த நிலைமையில் கைவிடப்பட்ட பெர்க்கட்லோ கலியாட்டுத் துரையுடன் கலந்து நகரத்தை ஒப் படைத்து விடுவதென்று தீர்மானித் தார். ஆனால் அவர் அப்படி செய்வதற்கு மவாஸ்கானால் சைனியங்களுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிச் சம்பளத் தொகை ரூபா 16 லக்ஷத்தில் 4 லக்ஷ ரூபா வாங்கிக்கொள்ளச் சம்மதமென்றும், அந்த பாக்கி 4 லக்ஷத்தையும் இங்கிலீஷ்காரரே கொடுத்துவிட வேண்டுமென்றும், அவ்விதம் அவர் சம்மதித்துக் கொண்டதற் காதாரமாக அவரும் ஜமேதார்களில் முக்கியமான நால்வர்களும் கை ஒப்பத்தை ஒரு உடன் படிக்கையில் வைத்தார்கள். கலியாட்டுத்துரை அத



உடன் படிக்கையைப் பார்த்து வெறுப்படைந்தவராகி,
சைனியத்தின் பாக்கிக்கு லக்ஷ ரூபாய் கொடுப்பதா
யும் பெர்க்கட்லோவின் சொந்தத்துக்கு ரூபா 20
ஆயிரம் கொடுப்பதாகவும் ஜமேதார்கள் ஒவ்வொரு
வருக்கும் ரூபா 8 ஆயிரம் கொடுப்பதாயும் மூன்று பட்
டாளத் தலைவர்களில் தலைவர் ஒன்றுக்கு 2 ஆயிரம்
ரூபாய் கொடுப்பதாயும் சொல்லிவிட்டார்கள். நாட்டில்
விளைந்த அரிசியைத் தவிர உப்பிட்ட சிரட்டை முதல்
வெளியிடங்களிலிருந்து வருவதற்கு வேண்டிய சௌக
ரியங்களில்லாமல் போய்விட்டது. பட்டாளத்தில்
சேராமலிருந்த ஊர்க்குடிகள் யாவரும் நகரத்தைவிட்டு
வெளிக் கிளம்பிவிட்டனர். நாளுக்கு நாள் உணவுப்
பொருள்கள் இல்லாததினால் ஏற்பட்ட கஷ்டம் இவ்
வளவென்று சொல்லுவதற்கு முடியவில்லை. கோட்
டையின்மேல் பீரங்கிகள் யுத்தத்திற்காகத் தயாராக
வைத்தாய்விட்டன வென்றும் மறுநாட் காலையில் யுத்
தத்திற்கு ஆரம்பிக்கப் போவதால் மேற்கொண்ட சமா
தானங்களை அதற்கப்பால் கோரிக்கொண்டால் அவை
ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாவென்றும் பெர்க்கட்
லோவுக்குக் கலியாட்டுத்துரை 7-9-1757-ல் சொல்லி
யனுப்பிவிட்டார். இதனை எவர் மூலமாகச் சொல்லித்
தூதுவராகப் பெர்க்கட்லோவுக்கு அனுப்பி வைக்கப்
பட்டதோ, அவர் பெர்க்கட்லோவுக்கு நெருங்கிய சிநே
கிதராயும் பந்துவாயும் இருந்தார். அந்தத் தூதர் சொல்
லியதைப் பெர்க்கட்லோ அங்கீகரித்துக் கொண்டு ஓர்
உடன்படிக்கையில் முன்னுள்ள படிக்குள்ள ஒப்பந்தத்

திற்கு 20 ஆயிரம் ரூபாயை மாத்திரம் அதிகப்படுத்தி
அதில் தன் கையெழுத்தையும் வைத்து அனுப்பிவிட்
டார். அந்த உடன்படிக்கையைக் கலியாட்டுத்துரை
பெற்றுக்கொண்டார். அந்த உடன்படிக்கை யேற்பட்ட
தினத்தில் பிராஞ்சுக்காரர்களுடையபட்டாளங்கள் மார்
க்குவிஸ்டிசூப்பையரிஸ் (Morquis de Soupires)என்ப
வரின் தலைமையின்கீழ் புதுச்சேரியில் வந்து இறங்
கின. இந்தப் பட்டாளங்கள் வந்து இறங்கவும், தென்
னாடுகள் எல்லாம் திகிலடைந்துவிட்டன. இது வர்
துள்ள விவரம் சென்னபட்டணத்துக்குத் தெரிந்து
தென்னாடுகளுக்குத் தகவல் கொடுப்பதற்குள் சென்ன
பட்டணத்தை நோக்கிச் சென்ற கலியாட்டுத்துரை
தேவனாம்பட்டண(Fort St. David)த்தில் இதன் விவ
ரத்தைக் கேள்விப்பட்டுத் திருச்சினாப்பள்ளிக்கு
ஐரோப்பியப் பட்டாளத்துடன் திரும்பிவிட்டார்.
முகம்மது யுஸூப்கானை மதுரையைக் காத்துக்கொள்ள
வேண்டுமென்றும் அத்துடன் திருநெல்வேலியையும்
இருக்கிற சைனியங்களைக் கொண்டு சமாளித்துக்
கொள்ளவேண்டு மென்றும் உத்தரவு கொடுத்தார்.
முதலியார் யுத்த முனைக்கு நடுங்கும் சுபாவமுடையவ
ரென்றதையும் கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும்
எச்சரிக்கை செய்தார். பிராஞ்சுக்காரர்கள் புதுச்சேரி
யில் வந்திறங்கியசெய்தி பெர்க்கட்டுலாவுக்கும் மாவஸ்
கானுக்கும் குதூகலத்தைக் கொடுத்தது.

மைசூர் தலைவரான ஹைதர் ஆலி பெரும் சைனி
யங்கள் சகிதம் திண்டுக்கல்லுக்கு வந்ததாகவும் எட்



டியது. அப்படிக்கு அங்கு வந்திருந்த ஹைதர் ஆலி
சோழவந்தானைப் பிடித்துத் தட்டுக்
தடையுமின்றி மதுரைச் சீமைக்குள்
பிரவேசித்து விட்டார். இவ்விதம்
அவர் அடைந்த வெற்றியின் காரண
மாக மதுரையையும் எளிதில் கைவசப்

மதுரை முற்றுகையில் ஹைதர்தோல்வி யுற்றது

படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி முற்றுகையிட்
டனர். மதுரையிலுள்ள சைனியமும் அதிக வீரத்
தன்மையுடன் போர்புரிந்ததால் அவருடைய காரியம்
அவர் நினைத்திருந்தபடிக்குச் சித்திக்காதென்று தெரி
ந்துகொண்டு முற்றுகையை விட்டு, கண்ட இடங்கள்
தோறுங் கொள்ளையிட்டும் ஜனங்களை ஹிம்சை செய்
தும் கொள்ளையடித்த பொருள்களையும் கால்நடை
களையும் திண்டுக்கல்லுக்கு எடுத்துக்கொண்டு போய்
விட்டார். ஹைதர் ஆலி மதுரையின்மேல் படை
யெடுத்துவந்த செய்தி முகம்மது யுஸூப்கானுக்கு
எட்டவும், 400 குதிரைப் படையுடன் அங்குபோய்ச்
சேர்ந்தார். அங்கு முகம்மது யுஸூப்கான் போகவும்
ஹைதர் ஆலி வகைச் சைனியங்கள் திண்டுக்கல் முத
லிய படாகைகளை யடுத்துள்ள நாடுகளுக்குச் சென்று
விட்டார்கள் எனத் தெரிந்து அங்கு மதுரையிலிருந்த
வண்ணமே திருநெல்வேலியை நோக்கிப் புறப்பட்டு
விட்டார். இச் சண்டையின் சம்பவ நிகழ்ச்சியின்
போது எட்டயபுரத்தாரும் பாஞ்சாலங்குறிச்சியாரும்
வசவப்ப நாயக்கரிடம் செய்துகொண்ட உடன்படிக்
கைக் கிணங்க மதுரையில் ஹைதர் ஆலிக்கு விரோத
மாக முகம்மது யுஸூப்கானுடன் சேர்ந்து போர்புரிந்
திருக்கின்றனர்கள்.

திருநெல்வேலிக்குச் செல்லும் முகம்மது யுஸூப்கான் எட்டயபுரத்தாரால் கும்பினியாருக்குக் கப்பத்தின் பாக்கிக்காகக் கர்னல்ஹிரான் துரை நபர் ஜாமீன்களாக திருச்சிறுப்பள்ளிக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து புதுக்கோட்டையாரிடம் கலியாட்டுத்துரை உத்தரவுப்படிக்கு முகம்மது யுஸூப்கானல் ஒப்புவிக்கப்பட்டிருந்தவர்களை வரவழைத்து அவர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு எட்டயபுரத்து வழி மார்க்கமாக 1757-ம் வருஷம் நவம்பர் மாதம் எட்டயபுரத்திற்கு வந்து எட்டயபுரத்தாரிடம் நபர் ஜாமீன்களை ஒப்புக்கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து ரொக்கமாக 18,700 ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு திருநெல்வேலிக்குச் சென்றனர். இதிலொரு விஷயம் கவனிக்கவேண்டிய தவசியமாகிறது. அதென்னவெனில், நமது ஜில்லாவிலிருந்து கர்னல் ஹிரான் துரையால் கப்பத்துப் பாக்கிகளுக்காகக் கொண்டுபோகப்பட்டிருந்த நபர் ஜாமீன்களில் எவரையும் ரொக்கம் செலுத்துவதற்கு முன் வாபஸ் செய்யப்படாமலிருக்க, எட்டயபுரத்து நபர் ஜாமீன்களை மாத்திரம் இவ்விதம் கொண்டுவந்து சேர்ப்பிப்பதற்குக் காரணம், ஹைதர் சண்டையில் மதுரையில் உதவி செய்ததன்றி வேறு காரணமிருக்க வேண்டுமென்று சரித்திர நிகழ்ச்சியினை ஆராய்ந்துபார்ப்போருக்கு அக்காலத்தில் மகாவீரருள் வீரரான முகமது யுஸூப்கா

எட்டயபுரத்து நபர்ஜாமீன்களை முகமது யுஸூப்கான் நேரிற் சென்று வாபஸ் செய்தல்



னுக்கு எட்டயபுரத்தாரிடம் அப்போதேற்பட்டுள்ள
மதிப்பே காரணமெனலாம் என்றது யூகித்தற்கிடமு
வதுமன்றி, எட்டயபுரத்தின் சகாயமின்றிப் பிற்காலத்
திய தேச நிகழ்ச்சிகளில் எதையுமே திருப்திகரமாக
முடிவுக்குக் கொண்டுவர சாத்யமாகாதெனத் தெரிந்து
கொண்ட இவரது அபிப்பிராயமே புகழக்கூடிய
தென்று அக்காலத்திய இராஜதந்திர நிபுணர்களும்
கூறியதால் எட்டயபுரத்தாரின்மேல் இவர் கொண்
டிருந்த மதிப்பே சரி யென்போம்.*

* எட்டயபுரத்து நபர் ஜாமீன்கள் தொண்டை மானிட
மிருக்குங்காலையில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பது நம்மால் பிர
சுரிக்கப்படும் எட்டயபுரத்துச் சரித்திரத்தில் விவரமாகக் குறிக்
கப்படும்.

## ஏழாம் அத்தியாயம்

# மத்தியகாலத்தியது

அதே சமயத்தில் அங்கிருந்து நெய்க் கட்டஞ் செவலுக்கு மாவஸ்கானும் போய்ச் சேர்ந்தார். அவர் திருநெல்வேலியிலிருக்கும் பொழுது பாளையங்கோட்டையைக் கைப்பற்றிக்கொள்ள பலதடவைகளாக யத்தனித்ததில் முடியாமற் போயினும், களக்காட்டைப் பிடுங்கி திருவாங்கூர் வசம் ஒப்படைக்கவும், முகமதுயூஸுப்கான் அதனைத் திரும்பிப் பிடித்துக்கொள்ள அங்கு செல்லவும், திருவாங்கூர் சைனியம் இவரைக் கண்டு ஓட்டம் பிடித்து அங்குள்ள மலைப்பக்கங்களில் ஒளித்துக் கொண்டது. அதேசமயத்தில் முகமது யூஸுப்கானின் மற்ற சைனியங்கள் பாப்பாங்குளம், ஆழ்வார்குறிச்சி, பிரமதேசம் முதலிய இடங்களில் மாவஸ்கானுல் அவைகளின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த சைனியங்களைத் துரத்தியடித்துவிட்டு வடகரை என்ற சொக்கம்பட்டி பாளையக்காரரால் திருனகுறிச்சியில் வைக்கப்பட்டிருந்த சைனியத்தையும் துரத்தியடித்துவிட்டன.

சொக்கம் பட்டியார் தோல்வியும் களக்காட்டை மீட்டியதும்

திண்டுக்கல் பிராந்தியத்தில் சுற்றிவந்து கொண்டிருந்த ஹைதர் ஆலிக்குப் பிரஞ்சுக்காரர்களால் குறிப்பிட்ட சில பீரங்கிப்படைகள் கொடுக்கப்பட்டன



வென்றும் அவைகளைக் கொண்டு மதுரை நகரத்தை இன்னும் ஒருமுறை முற்றுகை போடுவதாகவும் கேள்விப்பட்ட முகமது யூஸுப்கான் திருநெல்வேலியை அவரல்லாத வேளைகளில் மாவஸ்கான் வந்து தாக்குவதாக இருந்தால் அவருக்குச் சரியானபடிக்குள்ள முட்டுப்பாச்சல்களைக் கொடுத்துக்கீழேகுத்தித் தள்ளும்படி ஏற்பட்டுள்ள சைனியத்தைத் திட்டப்படுத்திவிட்டு மதுரைக்குச் சென்றவர், 4-12-1757ல் ஸ்ரீ வில்லிபுத்தூரை யடைந்தார். அங்கு ஹைதர் ஆலியைப்பற்றிய முழு விவரங்களும் உத்தியோக இலாகா மூலம் கிடைப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது சோழவந்தான் கோட்டையைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யலாயிற்று.

ஹைதர் ஆலி மதுரையைப் பிடிப்பதான வதந்தி

முதலியாருடைய சீர்கேடான நடவடிக்கைகள் ரெவினியூ சம்பந்தமாக எந்த நிலைமையிலும் திருப்தியாக இருக்க மாட்டாவென்று தெரிந்து சென்னபட்டணத்துக்கு அவரை வரவழைத்து வரவு செலவு சம்பந்தமான சகல கணக்குகளையும் கோஷ்வாராசெய்துகொள்ள ஆரம்பித்ததில் சென்னபட்டணத்துக்குப் போகும் மார்க்கத்தில் முதலியார் ரோயால் பிடிக்கப்பட்டாராதலால் புதுக்கோட்டைத் தொண்டைமானிடம் சகல கணக்குகளையும் ஒப்புவிக்கும்படி உத்தரவு பிறந்துவிட்டது. இதே சம்பந்தமாக முன்னம் ரம்போல்டு துரைக்குக் கலியாட்டுத் துரையால் கொடுக்கப்பட்டிருந்த உத்தரவுப்படி முதலியார்

ரம்போல்டு துரையின் மரணம்

கணக்குகளைத் தீர்ப்பதற்குள் செப்டம்பர் மாதம் தேவ
ஞம் பட்டணத்தில் வைத்து ரம்போல்டு துரை இறந்து
விட்டார். அதன் காரணமாக அப்பொழுதும் கணக்கு
களை முடிக்கத் தடையாக இருந்தது.

மாவஸ்கானின் செல்வாக்கே கலக நிலைமைக் குக் காரணம் என்றது

சென்ன பட்டணத்துத் துரைத்தனத்தாருக்கு
மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களின் குழப்பங்கள்
அடங்க வேண்டுமேயானால் மாவஸ்
கானின் செல்வாக்கைக் குறைப்பது
தான் சுருக்கமான வழியாக இருக்க,
அதனைச் செய்யாமல் அவருடைய
செய்கைகளை வளரவிட்டுக் கொண்
டிருந்தால் மேலே சொல்லிய சீமை
களில் பணம் வசூலிக்கவாவது சைனியங்களை வைத்து
ஆதரிக்கவாவது கூடாமை யாகுமென்று கலியாட்டுத்
துரை தெரிவிக்க, அதனை அச்சமயம் அங்கு சென்ன
பட்டணத்திலிருந்த நவாபுவிடம் சென்னபட்டணத்
துத் துரைத்தனத்தார் தெரிவித்து அவருக்கு; அந்
தஸ்துக்குச் சரியானபடி வருஷம் ஒன்றுக்கு ஏதாவது
ஒரு பெருந் தொகையை சாஸ்வத "அலெவன்சாக"க்
கொடுத்து விடுவதாயும், அவர் அதைப் பெற்றுக்
கொண்டு இந்த நாட்டைக் காலிசெய்து விடவேண்டு
மென்றும் அவர் கைவசமுள்ள காலாட்படை, குதி
ரைப் படையாகியவைகளை எல்லாம் நீக்கிவிட வேண்டு
மென்றும் கேட்டுக் கொண்டார்கள். நவாபு துரையும்
இந்தப் பிரரேபணையை அங்கிகாரஞ் செய்து மாவஸ்
கானிடம் ஒரு காரியஸ்தனை இதைப் பேசி முடிவு செய்
வதற்கு அனுப்பி வைத்தார். இத்துடன் 1757-ம்



வருஷம் முடிவுபெற்று விட்டது. இதற்கு மறு வரு
ஷத்தின் ஆரம்பத்தில் நமது ஜில்லாவில் ஒவ்வோர்
இடத்திலும் ஹைதர்ஆலியின் படை எழுச்சியைக்
குறித்தும் பிரஞ்சுக்காரர்களின் வெற்றியைக் குறித்
தும் வெவ்வேறு அபிப்பிராய பேதங்களுடன் பாளை
யக்காரர்களும் மற்ற பிரமுகர்களும் பேச ஆரம்பித்
தார்கள் எனத் தெரிந்துகொண்ட முகமது யுஸுப்கான்
மிக்க சர்வ ஜாக்கிரதையுடனிருந்து கொண்டார். நவா
பால் மாவஸ்கானிடம் அனுப்பிவைக்கப்பட்ட காரியஸ்
தர் நெய்க்கட்டஞ் செவலிற்போய் அவரைக் கண்டு
கொண்டார். அங்கு அவருடைய நிலைமை மிகவும் பரி
தபிக்கக்கூடியதாக இருந்தது. அவரது பிறப்பின் அந்
தஸ்துக்கு ஜாகைவைத்துக் கொள்வதற்கு லாயக்கற்ற
ஜீரணமான கூடாரங்களில் வசித்துக்கொண்டு 50 குதி
ரைகளைமட்டும் வைத்துக்கொண்டிருந்ததிலிருந்தும்
அவர் மகா கஷ்டதசையிலிருந்தாரென்றும் அவரு
டைய சகாக்களைக் குறித்து வெறுத்துப் பேசிவிட்டு
அவர் நவாபிடம் விசுவாசம் வைத்திருப்பதாயும் காரி
யஸ்தரிடம் கூறியவைகளிலிருந்து அவர் பச்சாதாபப்
பட்டதாயும் தெரியவந்ததேயன்றி மற்றப்படி சமா
தான நிபந்தனைகளைக் குறித்துப் பேசியதில் அவருக்
குள்ள முன்னுள்ள பிடிவாதத்தை விடாமல் அவருக்
குக் கொடுக்கப்பட்டிருந்த் நாட்டின் பூராவரும்படியை
யும் ரொக்கமாக ஒருகாசாவது குறைவின்றிக் கொடுத்
தே தீரவேண்டுமென்று வற்புறுத்தியதிலிருந்தும் அவ
ருக்குள்ள இயற்கைக் குணம் சிறிதுகூட மாறவில்லை
என்று காரியஸ்தர் தெரிந்துகொண்டார். மாவஸ்கான்

எப்பொழுதாவது அவரது சொந்த அபிப்பிராயப்படி எதுவுமே செய்திருக்கின்றனரா? இல்லை. அதிலும் இப்போது எப்படி அன்னவரது மநோபீஷ்டத்தை அவரது சொந்த புத்தியைக்கொண்டு நிறைவேற்றிக் கொள்ளக்கூடும்?

மேல் படாகைப் பாளையக்காரர்கள் மாவஸ்கானைத்தலைமை பூணக்கோரல்

இவ்விதமான சமாதான நிகழ்ச்சியின் போது மேல்படாகைப் பாளையக்காரர்கள் கர்நாடக தேசத்தில் பிரஞ்சுக்காரர்களின் வெற்றியைக் கேள்வியுற்றுத் தங்களுக்குள் சந்தோஷ விழா வொன்றை நடத்தி அவர்களால் இனி நடத்தப்போகும் போருக்கு மாவஸ்கானைப் பெருக்குமட்டும் தலைமை பூணவேண்டுமென்றும், அதற்கு அவர் உடன்பட்டுக்கொண்டு போர்முனைக்குச் செல்வதானல் மற்றவைகளை அவர்கள் சமாளித்துக்கொள்ளக் கூடுமென்றும், அவரைக் கேட்டுக்கொண்ட அது சமயம் பிறர் கையை எதிர்பார்த்து ஜீவிக்கும் அவர் வேறு என்னதான் சொல்லக்கூடும்? ஐயோபாவம்! அதற்கும் இசைந்து கொண்டார். பூலித்தேவர் சைனியமும் வடகரை யென்ற சொக்கம்பட்டிச் சைனியமும், *கொத்தாளித் தேவர் சைனியமும், கடுவக்குறிச்சிச் சைனியமும், சுரண்டைச் சைனியமும் அடங்கி யுள்ளவைகளே மேல்படாகைச் சைனியங்களாம்.

* கொத்தாளித்தேவர் என்றது யாவர் எனத் தெரியவில்லை. ஆனல் ஒருகால் சிங்கம்பட்டியாராக இருப்பினு மிருக்கலாம். கொத்தாளி என்ற ஒரு சிற்றூர் கயத்தாற்றண்டை புளது. அங்கு அக்காலத்தில் எவரோனு மிருந்திருக்கலாம்.



கீழ்படாகைச் சைனியத்துள் எட்டயபுரமும் இவைகளுடன் சேர்ந்து கொண்டது. ஆனல் பாஞ்சாலங் குறிச்சி, மாவஸ்கான் பெருக்குமட்டுந் தலைமை பூண்டுள்ள சைனியத்தில் இதுசமயம் சேராமல் நடுநிலைமையில் நின்றுகொண்டது; என்றாலும் இங்கிலீஷ்காரர் பக்கம் உறுதியான விசுவாசத்துடன் நின்றுகொண்டதென்று சொல்வதற் கிடமன்று.

முகமது யுஸூப்கான் சேத்தூரைப் பிடித்தலும் கூட்டுறவுப் பாளையக் காரர்களின் அடாத செய்கைகளும்

இவ்வாறு மாவஸ்கானின் கக்ஷியைச் சேர்ந்து கொண்டு முகமதுயுஸூப்கானுக்கு விரோதமாகப்போர் புரியக் கிளம்பிய கூட்டுறவுப் பாளையக் காரர்கள் சேத்தூரையுந் தங்கள்பக்கம் சேரவேண்டு மென்று தூண்டியதில் சேத்தூருக்கு அவ்விதம் தங்களிடம் சேர்ந்து கொள்வதற்கு இஷ்டமில்லா திருந்தால் சேத்தூர்க் கோட்டையின் மார்க்கமாவது தங்களுடைய சைனியங்களைப் போகும்படிக்குச் சம்மதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இங்குள்ளநிலைமைகளிப்படி இருக்க, மைசூர் தலைவரான ஹைதர் அலியும் பிரஞ்சுக்காரரும் ஒன்று கூடிக்கொண்டு தனக்கு விரோதமாகப் போருக்கு வருவதாகக் கேள்விப்பட்டு மதுரையின் காப்பின்நிமித்தம் முகமது யுஸூப்கான் மதுரையில் தாமதிக்கும்படி நேர்ந்திருந்தும் உடனே அதனை விடுத்துச் சேத்தூர் செல்லவும், அதன் பாளையக்காரர் கீழ்ப்படிந்து அங்குள்ள கூட்டுறவுப் பாளையக்காரர்களின் சைனியத்தையும் விரட்டிவிட்டார்.

அவ்விதம் அவர் முதலில் இசைந்துகொண்ட குற்றத்திற்காக முகமது யுஸுப்கானால் விதிக்கப்பட்ட அபராதத்தையும் கொடுத்துவிட்டனர். அங்கிருந்துவிட்டு முகமது யுஸுப்கான் ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லவும், சேத்தூர் பழைய கதையைத் திருப்பிவிடவும் முகமது யுஸுப்கான் சேத்தூர்சென்று கோட்டையை முற்றுகையிடச் சேத்தூரார் சிறிது நேரம்வரை எதிர்த்துநின்று விட்டு ஓட்டம் பிடித்து விட்டனர். இந்தப் பாளையக்காரரின் ஸ்தானத்தில் அதற்குச் சம்பந்தப்பட்ட வேறு ஒருவரை நியமித்து விட்டார். இதன் மத்தியில் கூட்டுறவுப் பாளையக்காரர்களின் சைனியங்கள் நெய்க்கட்டாஞ் செவலுக்கும் திருநெல்வேலிக்கு மிடையிலுள்ள அநேக ஸ்தலங்களைப் பிடித்துக் கொண்டார்கள். அவைகளின் பாதுகாப்புக்கு வைக்கப்பட்டிருந்த சைனியங்களையும் வீணாக வாளால் வெட்டிக் கொன்றனர்கள். இவ்விதமான கொடுஞ் செயல்களில் திருக்குறிச்சியை ஒரு நள்ளிரவில் தாக்கி 27 குதிரைப் படைவீரர்களையும் சிப்பாய்களிற் சிலரையும் கொன்று களித்தனர்கள். இவ்விதமாகத் தங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றிகளால் தலைகொள்ளாமல் தங்களுடன் சேருவதற்கு மறுத்த பாளையக்காரர்களையும் தாக்குவதாக உறுதி செய்து கொண்டு, ஊத்து மலையைத் தாக்கிவிட்டு அதிக உத்சாகத்துடன் திருநெல்வேலியைத் தாக்குவதாகவும் அதன் பின்பு பாளையங் கோட்டையையுந் தாக்குவதாகவும் சொல்லிக் கொண்டு கம்பீர ஜன்னியில் மூழ்கியிருந்தனர்கள். முகமது யுஸுப்கான் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து திரும்பவும், இத்தகைய கூட்டக்காரர்களின் யோஜனை அடியோடு



தொலைந்து விட்டதுடன், முகமது யுஸுப்கானின் முன்புக்கு நின்று நேருக்கு நேராகப் போர் செய்ய அஞ்சிப் பின்னிட்டு விட்டார்கள். திருநெல்வேலிக்கும் நெய்க்கட்டாஞ் செவலுக்கு மிடையிலுள்ள அநேக ஸ்தலங்களை முன்னம் கூட்டுறவுப் பாளையக்காரர்களால் பிடிபட்டிருந்தனவென்றது ஞாபக மிருக்கலாம். அவை யாவும் முகமது யுஸுப்கானைக் காணவும் ஒன்றன்பின் ஒன்றாக அவரது கையிற் சிக்குண்டன. அதன் பின்பு வடகரை என்ற சொக்கம்பட்டிக்குத் தன் சைனியத்தை முகமதுயுஸுப்கான் அனுப்பிவைக்கவும், அது அக்கினி பகவான் வாய்ப்பட்டுப் பூராவும் முக்கண்ணன் மேனியிற் பூசும் பஸ்ம ரூபமாயது. இவ்விதச் சம்பவ நிகழ்ச்சிகள் முடியவும், சென்னபட்டணத்தைப் பிரஞ்சுக்காரர்கள் முற்றுகை யிட்டதால், முகமது யுஸுப்கானைச் சில சைனியங்களுடன் அங்கு தாமதமின்றிப் புறப்பட்டு வரவேண்டுமென்று சென்னபட்டணம் துரைத்தனத்தாரிடமிருந்தும் திருச்சினாப் பள்ளியில் அப்போதிருந்த கியாப்டன் கலியாட்டுத் துரையிடமிருந்தும் முகமது யுஸுப்கானுக்கு அவசர அஞ்சல்கள் தூதுவர்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

**கும்பினிச் சைனியத்தின் வீரம்**

சென்னபட்டணத்துக்குச் சென்றிருந்த முகமது யுஸுப்கான் திரும்பிவரும் கால இடையிலேற்பட்ட பத்துமாத காலங்களுக்குள் பூலித்தேவர் வகைப் பாளையக்காரர்கள் பாளையங் கோட்டையை முற்றுகை போட, அதனை முகமது யுஸுப்கானால் நியமிக்கப்பட்டிருந்த சிப்பாய்களின் தைரியத்தால்

தடுத்து விடுவிக்கப்பட்டது. அங்கு அப்போது மதுரையில் ஆறு கும்பினிச் சைனியமும், பாளையங் கோட்டையில் ஐந்து கும்பினிச் சைனியமும், திருநெல்வேலியில் மூன்று கும்பினிச் சைனியமுமாக மொத்தம் இந்த நாட்டில் அது சமயம் பதினான்கு கும்பினிச் சைனியங்கள் மாத்திரமே இருந்தன. அவ்வித மிருந்தும், இந்த சொற்பத் தொகையுள்ள சைனியங்கள் பாளையங் கோட்டையை முற்றுகையினின்று விடுவித்ததும், திருவாங்கூர் எல்லைவரை அரணின்றி இருக்க, அவைகளை எதிரிகள் கையிற்சிக்காது காத்துக்கொண்டதும், சைனியங்களின் எச்சரிக்கையும் சாமர்த்தியமுமே யாகுமென்று முகமது யுஸுப்கானுக்குத் தெரியவந்தது.

இங்கிலீஷ்
காரர்
களைப் பிரஞ்சுக்
காரர்கள்
வெற்றி
கொள்ளு
வார்கள்
என்று மாவஸ்
கான் மனப்பால்
குடித்தல்

தேவனும்பட்டணம் என்ற (Fort St. David)ஐ இழந்து விட்டதும் சென்னபட்டணத்தை 1759-ல் பிரஞ்சுக்காரர்கள் முற்றுகையிட்டது மாகிய விஷயங்களில், இங்கிலீஷ் ஆட்சிக்கு வலுக்குறைந்து வருகிறதென்ற நம்பிக்கை கொண்டும் பிரஞ்சுக்காரர்களின் தூதுவர்களாலும் சமாசாரப் போக்கு வரவுகளாலும் மாவஸ்கான் அறிய, பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியே கடைசியாக இந்நாட்டிலோங்கி நிலை நிற்குமென்ற நம்பிக்கை கொண்டும் கண்டவா றெல்லாம் மனப்பாலைக் குடித்து, ஏப்பமிட்டுக் கொண்டிருந்தது மின்றித் தன்னையே நவாபாகவும் பாவித்துக் கொண்டார். என்ன பேதமை! பூலித் தேவரால் காலக்ஷேபத்தைக் கழித்



துக் கொண்டிருக்கும் படிக்குள்ள ஸ்திதியில் வந்துள்ள இந்த மாவஸ்கானுக்கு இத்தகைய நினைவு ஏற்பட்ட தின் காரணம் பேராசையால் தூண்டப்பட்டதைத் தவிர வேறென்ன? முகமது யுஸுப்கானிடம், மாவஸ்கான் சமயம் போலெல்லாம் "காலத்துக்கேற்ற கோலங் கொள்ளும் சுபாவ முடையவரெனத்" தெரிந்து கொண்ட இராஜ தந்திர நிபுணத்துவத்தில் சிறந்துள்ள பூலித்தேவர், மற்றுமோர் பாளையக்காரர் களின் ஆலோசனை மன்றைக் கூட்டினர்.

இந்த யுத்த ஆலோசனை சபையில் சேர்ந்துள்ளோர் மேல்படாகையிலுள்ள பாளையக்காரர்களில் அறுவராவார்கள். கீழ்படாகைப் பாளை

எட்டயபுரத்
தாரும் பாஞ்சா
லங்குறிச்சியா
ரும் பிளவுபடல்

யக்காரருள் முன்னுள்ள பாஞ்சாலங் குறிச்சியார் இறக்க, அவருடைய வாரிஸ்தார் மற்றொரு கட்டபொம்மு நாயக்கர் பட்டமடைந்து பாளையக்காரராயினர். இவர் முன்னிருந்தாரைப் போல் "பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலுமாகப் படைத்துள்ள விலாங்கைப்போல" அல்லாமல் பிடிவாதசுபாவமும் இங்கிலீஷ் காரரிடம் முற்றும் வெறுப்படைந்த குணமும் வாய்க்கப்பெற்றவராயு மிருந்தார். அப்படிக் குணம் வாய்க்கப்பட்ட இவரும் எட்டயபுரத்தாரும் கீழ்படாகைப் பாளையக்காரராவார்கள். இந்தக் கட்டபொம்மு நாயக்கருக்கும் எட்டயபுரத்தாருக்கும் நேசப் பான்மையில் மாறுக்குறை வேற்படலாயிற்று.

முன்னம் மேல்படாகைப் பாளையக்காரர்களுடன் எட்டயபுரமும் சேர்ந்து மாவஸ்கானின் தலைமையின்

கீழ்ப்போரை நடாத்தியதென்பதைக் கேள்விப்பட்ட முகமது யுஸூப்கானுக்குக் கோபம் பிறந்து அதனை மனதில் அடக்கி வைத்துக் கொண்டிருந்து, கடைசியாக அவர் முன்னம் சென்னபட்டணமிருந்து காஞ்சிபுரத்து மார்க்கம் திரும்பும்போது ஆறு கும்பினிச் சைனியத்துடனும் 60 குதிரைப்பட்டாளத்துடனும் தொண்டைமானிடமும், இராமநாதபுரம், சிவகங்கையார்களிடமும் தன் உதவிக்குக் கேட்டு வாங்கிக் கொண்ட சைனியங்களுடனும், இங்கு நமது ஜில்லாவிலுள்ள சில கும்பினிச் சைனியங்களிற் குறிப்பிட்டவைகளுடனும் எட்டயபுரத்துச் சீமையை ஒரு கைபார்த்துவிடுகிறேன் என்ற உறுதி கொண்ட மனத்தினராய்ப் புறப்பட்டுவிட்டனர். இவ்விதங் கிடைத்துள்ள பெருஞ் சைனியங்களுடனும், முன்னூறு குதிரை வீரர்களுடனும், எழுநூறு குதிரைச் சைனியங்களுடனும், பாளையங்கோட்டையிலிருந்த சைனியத்தில் மூன்று கும்பினிச் சைனியத்துடனும் தானே போருக்குத் தலைமைபூண்டு எட்டயபுரங் கோட்டையைப் பிடிக்கப் புறப்பட்டுவிட்டனர். அவ்வாறே எட்டயபுரத்தைத் தாக்கவும், அங்கு இருதரத்தார்களுக்கும் நிகழ்ந்த கடும்போரில் கடைசியாக, எட்டயபுரம் உடைந்துவிட அதனைக் கைப்பற்றிக் கொண்டு, அது கும்பினியின் கீழ்ப்பட்டதென்ற விளம்பரத்தையும் பகிரங்கப் படுத்திவிட்டு, அதன் இராஜரீக நிர்வாக முறையில் தற்கால நிமித்தஞ் சில மாறுதல்களான ஏற்பாட்டையும் செய்து ஒழுங்கு படுத்தினர். இதற்குப்

எட்டயபுரம்
கும்பினியாரின்
கீழ்ப்படல்



சிறிது பின்னர், பழைய நிலைமையில் எட்டயபுரத்து
இராஜரீக முறையை ஏற்படுத்திவிட்டுச்சென்றனர்.இச்
சண்டையி லிருகக்ஷியினர்களுக்கும் பெருஞ் சேதங்கள்
ஏற்பட்டன. எட்டயபுரம் விட்டுப் புறப்பட்ட முகமது
யுஸூப்கான் முன்னம் 1756-ல் பிடிபட்டுக் கிடந்த
கொல்லன் கொண்டான் கோல்வார்பட்டி ஆகிய இரண்
டையும், மறுபடியுங் கீழ்ப்படிந்ததற்கு அவைகளிட
மிருந்து உறுதி வாங்கிக்கொண்டு திருநெல்வேலிக்கு
கங்கைகொண்டான் வழி சென்றனர்.

திருநெல்வேலி போய் முகமது யுஸூப்கான் சேர
வும், அவரிடம் மாவஸ்கான் சென்று தன்னுடைய
பிறப்பின் கௌரவத்துக்குத் தக்க
தாக ஜாகீர்களைத் தனக்குக் கொடுப்ப
தானல் ஆற்காட்டுக்கு அவர் புறப்
பட்டுவிடச் சித்தமாகஇருப்பதாகவும்,
தன்னைச் சேர்ந்துள்ள பாளையக்காரர்
களின் கக்ஷியை விட்டு விலகிக்கொள்
ளத் தயாராக இருப்பதாயும் கூறினர். இதைக் கேள்
விப்பட்ட முகமது யுஸூப்கான் மேலான அதிகாரி
களின் தகவலை எதிர் பாராமலே அவ்விதம் செய்வ
தற்கு இணங்கிக்கொண்டு,இதன் விவரங்களைச்சென்ன
பட்டணத்துத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்து,
நவாபுவின் தகவலுக்கும் பைசலுக்கும் அனுப்புவித்து
உத்தாரவையும் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லினர்.
இதற்கப்பால் அவர் ஊத்துமலை சென்றனர்.
ஊத்துமலைப் பாளையக்காரர் கொள்ளைகளையிட்டு
காலாபக்கங்களிலிருந்தும் பெரும்பொருளைச் சேமித்து

மாவஸ்கான்
முகமது
யுஸூப்கானை
வேண்டிக்
கொள்ளல்

வைத்திருக்கின்றனரென்றும் கள்ளர்களில் அநேகர்களைத் தன்னுடைய சைனியங்களிற் சேர்த்துக்கொண்டு பல அட்டூழியங்களைச் செய்வதாகக் கேள்விப்பட்டும் முகமது யுஸுப்கான் அங்கு சென்று அதனை அடக்கிவிட்டு அதன் பந்தோபஸ்துக்குச் சுரண்டையில் சில சைனியங்களையும் குதிரைப் படையையும் வைத்துவிட்டுத் திரும்பினர்.

**முகமதுயுஸுப்கான் ஊத்துமலையைப் பிடித்தல்**

அங்கிருந்து முகமது யுஸுப்கான் திரும்பிவிட்டனரென்பதைக் கேள்விப்பட்ட பூலித் தேவரும் சொக்கம்பட்டியாரும் ஒன்று சேர்ந்து கொண்டு ஊத்துமலையின் பாதுகாப்புக்கென்று சுரண்டையில் வைக்கப்பட்டிருந்த குப்பினிச் சைனிய வகைகளைக் கொன்றும் காயப்படுத்தியும் குதிரைகளைப் பிடித்து ஹிம்சித்துக் கொன்றும் சைனியங்களை விரட்டியடித்து விட்டார்கள் என்றது முகமது யுஸுப்கானுக்குத் தெரியவும், அங்கு சென்று அதனை மீட்டுக்கொண்டு சுரண்டைக்கு அது சமயம் எவ்வளவு காப்புத் தேவையோ அதற்குள்ள வாறு சைனியங்களையும் நியமித்தனர்.

**பூலித்தேவரும் சொக்கம்பட்டியாரும் சுரண்டையை மீட்டுதல்**

---

## எட்டாம் அத்தியாயம்

## மத்தியகாலத்தியது

கன்னியாகுமரிக்கும் களக்காட்டிற்கு மிடையிலுள்ள பல ஸ்தலங்களில் மாசூல்களைக் கொள்ளையிடுவதும், ஜனங்களை ஹிம்சிப்பதும் காலாபக்கங்களில் பலர்கள் பல விதமான போர்களைக் கிளப்பி விடுவதுமாகிய தகாத செய்கைகளை அடக்க வேண்டு மேயானல் சைனியங்களை இன்னு மதிகரிக்க வேண்டுமென்று முகமது யுஸுப்கானுக்குப் புலப்பட்டது. ஆனல் ஜில்லாவின் வருமானமோ அதற்கும் போதியதாக இல்லை என்று பலவாருகக் கவற்சி யுற்றிருக்கும்போது, சொக்கம்பட்டியார் செங்கோட்டை முதலிய இடங்களின் வழியிலுள்ள மலை நாடுகளிற் கொள்ளையிடுவதும் அழிமானங்களைச்செய்வது மானவைகளைப் பொறுக்க மாட்டாத திருவாங்கூரார் இயற்கையில் இங்கிலீஷ்காரர்களிடம் துவேஷ புத்தியை யுடையவரல்லரெனத் தெரிந்த முகமதுயுஸுப்கான் திருவாங்கூராரிடம் சில விஷயங்களைக் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்க, அவ்விருவர்களும் திருவாங்கூருக்கும் திருநெல்வேலிக்கும் மத்தியஸ்தலமான ஒரு ஸ்தலத்தை கன்னியாகுமரியண்டை தெரிந்துகொண்டார்கள். அங்கு அவ்விருவர் களும் மரியாதையாகவும் விநயமாகவும் சந்தித்துக் கலந்துகொண்டதில் தனக்கு எதுவுமே தேவையில்லை என்றும், ஆனல் பூலித்தேவரையும் சொக்கம்பட்டி

**திருவாங்கூரார் உதவியை முகமது யுஸுப்கான் நாடல்**

யாரையும் அடக்குவதற்கு எவ்வளவு சைனியம் தேவையோ அவ்வளவை முகமது யுஸுப்கானுக்குக் கொடுப்பதாயும் திருவாங்கூரார் வாக்களித்தனர். முகமது யுஸுப்கான் திருநெல்வேலி செல்லவும், திருவாங்கூரிலிருந்து ஆயிரம் நாயர் சைனியமும் ஏராளமான யுத்த தளவாடங்களும் அனுப்பி வைக்கப்பட்டன. இவை சகிதம் முகமது யுஸுப்கான் சொக்கம்பட்டியை எதிர்த்துச் செல்லவும், அதுசமயம் மற்றோர் சைனியம் திருவாங்கூரிலிருந்து செங்கோட்டை மார்க்கம் முகமது யுஸுப்கானுக்குச் சகாயமாக அனுப்பிவைக்கப்பட்டது. அதனையும் சேர்த்துக்கொண்டு சொக்கம்பட்டியைத் தாக்கினர்.

சொக்கம்பட்டியார் பூலித்தேவரிடம் அடைக்கலம் புகுதல்

சொக்கம்பட்டியார் ஒருநாள்மட்டும் எதிர்த்துச் சண்டை செய்துவிட்டு நெய்க்கட்டஞ் செவலுக்குச் சென்று பூலித்தேவரிடம் அடைக்கலம் புகுந்துகொண்டார். இப்படிக்குத் தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்துள்ள சொக்கம்பட்டியாரைக் காணவும் பூலித்தேவர் சொக்கம்பட்டிக்கு அடித்த காற்று, தனக்குச் சண்டமாருதமாகி விடுமோ என்றச்சங் கொண்டவராகி ஒரு சூழ்ச்சி செய்யலாயினர்.

இங்கிலீஷ்காரர்கள் வந்தவாசியில் பிரஞ்சுக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டதும் *பஸால்ட்டு ஜங்கும்

*இதற்குச் சிறிதுகால அளவிற்குப்பிற்பால் சர் ஐர்கூட்டு என்ற ஆங்கில வீரர் வந்தவாசியைப் பிரஞ்சுக்காரரிடமிருந்து பிடுங்கிக் கொண்டனர்.



பூலித்தேவர் திருவாங்கூரானை ஏமாற்றிவிட எடுத்துக்கொண்ட சூழ்ச்சிகள்

புதுச்சேரி கவர்ன்மெண்டாரும் மாவஸ்கானுக்கு அடிக்கடி கொடுத்துக்கொண்டிருந்த சமாசாரங்களால் இங்கிலீஷ்காரர்களுடைய ஆதிக்கம் கர்நாடகதேசத்தில் சீக்கிரம் நீங்கிவிடுமென்ற எண்ணமும் பிரஞ்சுக்காரரின் ஆதிக்கமே அங்கு வளர்ச்சியுறுமென்ற நம்பிக்கையும் கர்நாடக தேசத்திய நவாபான முகமது அலியின் ஸ்தானத்தில் மாவஸ்கானையே வைக்கப் போவதாயும் கண்டுள்ள நிருபங்கள் பலவற்றையும் சேர்த்து ஒரே கட்டாகக்கட்டித் திருவாங்கூர் மகாராஜாவிற்குப் பூலித்தேவர் அனுப்பி வைத்து, கர்நாடக தேசத்துக்கு நவாபாகப் போவது இனி மாவஸ்கானே என்றும், பிரஞ்சுக்காரர்களே இவயாக நிற்கும் துரைத்தனத்தார்கள் என்றும், திருவாங்கூர் மாவஸ்கானுக்கு உதவியாக இருந்து முகமது யுஸுப்கானை விரட்டியடிப்பதாக இருந்தால் திருநெல்வேலிச் சீமையில் திருவாங்கூருக்கு வேண்டியது எதுவோ அதை எடுத்துக் கொள்ளலாமென்றும் எழுதியதுடன் அடிக்கடி களக்காட்டு விஷயமாக நேரிடும் சச்சரவுகளை ஒழித்துக் களக்காட்டுச் சீமையையே வைத்துக் கொள்வதென்றும், யுத்தம் போலச் செய்வதென்றும் தெரிவித்தனர்.

இந்த சங்கதிகளடங்கிய தஸ்தாவேஜுகளையும் மற்றுமுள்ள ரிக்கார்டுகளையும் திருவாங்கூரார் முகமது யூஸுப் கானுக்கு அனுப்பிவைத்துவிட்டுத் திருவாங்கூரின் சகாயம் இப்பொழுதுள்ள நிலைமையில் முகமது யூஸுப்கானுக்குத் தேவையோ என்பதை

திருவாங்கூரார் மாவல்கானின் சூழ்ச்சிகளை முகமதுயுஸுப் கானுக்கு வெளிப் படுத்தல்

அறிய, களக்காட்டுச் சீமையைத் தங்களுக்கு விட்டு விட வேண்டுமென்றுங் கேட்டுக் கொண்டார். இதனை வாசித்துவிட்டு முகமது யுஸுப்கான் கீழ் வருமாறு யோசிக்கலாயினர்:—"ஆம், திருவாங்கூரார் உதவியைக் கொண்டு, இப்போது அவர்களாற் கேட்டுக் கொள்ளப்படும் களக்காட்டுச் சீமையிலும், அதிகமான நாட்டை நாமடைந்திருக்கிறோம். நாம் அது முடியாதென்று சொல்லிவிடுவோமேயானால் மாவல்கான் கக்ஷியினர்கள் அதனைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படி திருவாங்கூர் அதனைப் பெற்றுக் கொண்டு பாளையக்காரர்களுடன் சேர்ந்து நமக்கு விரோதமாகி விட்டால் திருநெல்வேலி ஜில்லாவில் நவாபுவின் ஆட்சிக்கு அழிவு ஏற்பட்டுவிடுவதில் சிறிதுகூட சந்தேகமாக மாட்டாது" இதற்கு என்ன விதமான உபாயத்தை நாடுவதென்று விசனமாக ஆலோசிக்கலாயினர்.

முகமதுயுஸுப் கான் களக் காட்டுச் சீமை யைத் திருவாங் கூராருக்கு ஜாரி செய்தல்

சென்னபட்டணத்திலிருந்து முகமது யுஸுப்கானுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 500 கைத்துப்பாக்கிகளும், இரண்டு பீரங்கிகளும் மத்திய வழியில் கடலில் மூழ்கிவிட்டன என்ற சங்கதியும், தூத்துக்குடியில் வந்திறங்கிய இரண்டு கைப் பீரங்கிகளை டச்சுக்காரர்கள் தடைசெய்து நிறுத்திக் கொண்டனர்கள் என்ற சங்கதியும் அவருடைய விசனத்தை முன்னிலும் அதிகரிக்கச் செய்து விட்டன. இவ்விதக் குழப்பத்



துக்குள்ளிருக்கும் முகமது யுஸுப்கான் இது சமயம் வேறு என்ன செய்வார்? மிகக் கலக்கங் கொண்டவராகிப் பூலித்தேவரையும் அவரது சகாக்களையும் வலுக்கவொட்டாமற் செய்யும் வழியே பிரதானமென்று மனதிற் கொண்டு திருவாங்கூராரின் கருத்துக் கிசைந்து களக்காட்டுச் சீமையை அவர் கேட்டுக் கொண்டவண்ணமே திருவாங்கூராருக்குக் கொடுத்து விட்டார்.

முகமது யுஸுப்கான் மேல் நவாபு துரைக்குச் சந்தேகம் ஏற்படல்

சென்னபட்டணத் துரைத்தனத்தாரும் மேலே சொல்லிய முகமது யுஸுப்கானின் செய்கைகளை அங்கீகரித்தனர் என்றாலும், முதல் பேட்டியில் முகமது யுஸுப்கானுக்கும் திருவாங்கூராருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை காரணமாக இப்படிக்குள்ள முடிவைச் செய்ததிலிருந்து நவாபுக்கு முகமது யுஸுப்கானிடம் சந்தேகந் தோன்றி ஏதோ சுயநலங் கருதி இப்படிச் செய்திருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை அடையலாயினர். முகமது யுஸுப்கானுக்குந் திருவாங்கூராருக்கும் நிகழ்ந்த உடன்படிக்கைக்குப் பின்பு பூலித்தேவருக்குச் சகாவான ஈசல் தேவர் * என்றவரை அடக்கிவிடவும் கள்ளர்கள் யாவர்களும் நெய்க்கட்டஞ் செவலுக்குப்போய்ப் பூலித்தேவரை அடைந்தனர்கள். இதன் மத்தியில் முகமது யுஸுப்கானுக்கு, சைனியத்துக்கு வேண்டிய வெடி மருந்து முதலியன கைவசமிருந்தவை யாவும் அற்றுவிட்ட

* ஈசல்தேவர் யாவரெனப் புலப்பட்டிலது. ஒருகால் ஈசல்தேவர் என்றது ஈஸ்வரத் தேவராக இருத்தல் கூடும்.

தால், மதுரை, பாளையங்கோட்டை, அஞ்சுதெங்கு முதலிய இடங்களிலிருந்து சப்ளைகள் வரும்வரை சும்மா இருந்து கொண்டு எதிரிகளின் போக்குகளை மட்டும் கவனிக்கலாயினர்.

முகமது யுஸுப்கான் வாசுதேவ நல்லூர்க் கோட்டையைப் பிடிக்கக்கூடாது போனது

அவைகள் யாவும் கைக்கு கிட்டவும், வாசுதேவ நல்லூரை நோக்கிப் புறப்பட்டார். இதிலுள்ள கோட்டையையும் பூலித்தேவர் தன்னுடைய சொந்த அரணாக உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார். இந்தக் கோட்டை அகலத்திலும் நீளத்திலுமாக 300 கஜமும் 650 கஜமும் கொண்ட ஒரு சிறந்த மண் கோட்டை. நான்குமதில்களும் மண்ணினாலேயே செங்கல்களைக் காட்டிலும் பலமாகவும் உயரமாகவும் எழுப்பப்பட்ட சுவர்களால் அமைக்கப்பட்டு, அதனின் ஒவ்வொரு முக்கிலும் மூலையொன்றுக்கு ஒவ்வொரு கோபுரம் போன்ற ஒவ்வோர் கொத்தளமும்; அவைகளின் ஒன்றுக்கொன்றின் இடையே சமதூரங்களுக்குள்ளாகச் சிறிய வேட்டை ஒழிகள் போன்ற மறைவுள்ள நிலை மாடங்களால் அமைக்கப்பட்டும், வெளியிடங்களை அவைகளில் இருந்து தெரியாமல் பார்ப்பதற்கு விருத்தமான சின்னஞ் சிறிய துவாரங்களால் அமைக்கப்பட்டும், ஒவ்வொரு கொத்தளமும் தனித் தனியான பாதுகாப்புச் சுவரால் அமைக்கப் பட்டும், உட்பிரகாரங்கள் கோட்டைச் சுவரையொத்த பாதுகாப்புச் சுவர்களால் கட்டுவிக்கப்பட்டுமிருந்தன. இந்தக் கோட்டையின் அமைப்புக்கும்



மதுரை, பாளையங்கோட்டை முதலிய நகரங்களின்
கோட்டைகளின் அமைப்புக்கும் மிகுந்த வித்தியாச
முண்டு. இந்தக் கோட்டை மண்சுவரினால் கட்டுவிக்
கப்பட்ட தென்றாலும், இதன் அமைப்பு ஒருவாறு
நூதனம் போல் தோன்றினும், பலத்தில் அவை
களைக் காட்டிலும் சிறந்ததென்பது சிலர்களின் அபிப்
பிராயமாகும். இக்கோட்டையை 1767-ல் முற்றுகை
யில் பிடித்த கர்னல் டோனல்டு காம்பல் துரையின்
அபிப்பிராயத்தில் குறிப்பிட்டுக் காட்டி இருப்பதை
நாம் பின்பு கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.
முகமது யுஸுப்கானின் சைனியங்கள் பலவாறாக
இதனைத் தாக்கியும் அவர்களால் எதுவும் செய்யமார்க்க
மில்லாதபடி எதிரிகள் செய்து விட்டார்கள். இந்தக்
கோட்டையின் வலுவோ முகமது யுஸுப்கான் சைனி
யங்களால் பிரயோகிக்கப்பட்ட 6 பவுண்டர் பீரங்கி
களை எல்லாம் சிறிதுகூட லக்ஷியம் செய்யவில்லை என
விளக்கிற்று. கோட்டையின் உறுதியைக் கருதியும்
எதிரியின் பிடிவாதத்தைக் கருதியும் யுத்தசாமான்
களையும் வெடி மருந்துகளையும் செட்டாகவே செலவு
செய்யவேண்டியதாகி விட்டதென்றாலும், ஆத்திரத்
தின் நிமித்தம் காரியங்களைக் கொண்டு போவதற்கு
18 பவுண்டர் பீரங்கிகளை உபயோகித்தாலன்றி எது
வும் சாத்தியப்பட மாட்டாதென்று, அவைகளைப் பிர
யோகிக்கவும், கோட்டைச் சுவர்களிற் சில இடங்கள்
மூச்சுவிட்டன. இதையறிந்த பூலித்தேவர் தன்னு
டைய கக்ஷியில் அதுசமயம் புதிதாக வந்துள்ள மூவா
யிரங் கள்ளர்களைக் கொண்டு முகமது யுஸுப்கான்

முன்பு தங்கியிருந்த ஜாகையைப் போய்த் தாக்கி, அங்குள்ள சைனியங்களை விரட்டிவிட்டு, அதனைத் தங்கள் வசமே வைத்துக் கொண்டார்கள். முகமது யுஸூப் கான் இதைத் தெரிந்து அதிகச் சைனியங்களை அங்கு அனுப்பி வைத்தும், யாதொன்றும் பலிக்கவில்லை என்றது கோட்டையினுள்ளிருந்த பாளையக்காரர்களின் சைனியத்துக்குத் தெரியவும், முன்னிலும் அதிக ரோஷத்துடன் எதிரிகளை அடித்து விரட்டவே, எதிரிகளும் ரோஷங் கொண்டவர்களாகிக் கோட்டையைத் தாக்குவதும் விரட்டியடிக்கப்படுவதுமாகப் பலதடவைகளில் நிகழ்ந்தும், கடைசியில், முகமது யுஸூப்கானால் அனுப்பி வைக்கப்பட்ட சைனியத்தால் கோட்டையைப் பிடித்துக்கொள்ளக் கூடாததாயிற்று. இந்த நிலைமையில் கையிலுள்ள ஆயுதங்களும் மருந்து வகைகளும் சிறுத்துவிட்டன எனத் தெரிந்துகொண்ட முகமது யுஸூப்கான் அங்கு நேரிற் சென்று பார்த்து அங்கு இனி இருப்பதானால் வீணை மோசத்துக்குள்ளாகிவிடுமென்று தெரிந்து, தன் கைவசமுள்ள பீரங்கிகள் சகிதம் கொஞ்ச தூரம் எட்டிப் போய்க்கொண்டு திருவாங்கூர்ச் சேனையைத் திருவாங்கூருக்கு அனுப்[பி]விட்டு, முகமது யுஸூப்கான் தன்னுடைய சைனிய[ங்]கள் சகிதமும் தொண்டைமான், இராமநாதபுரம், சிவகங்கையாகிய சைன்னியங்களுடனும் திருநெல்வேலிக்குத் திரும்பிவிட்டார். வாசுதேவ நல்லூர்க் கோட்டையின் முற்றுகையிற் றேற்றுவிட்டதிலிருந்து முகமது யுஸூப்கானுக்கு மற்றொரு நோக்கம் மனதில் உதயமாயது.



பாட்டரிங் குராம் பீரங்கிகளாற்பாளையக் காரர்களின் கோட்டைகளைத் தாக்க வேண்டுமென்றது

பாளையக்காரர்களின் கோட்டைகளை இனித் தாக்
குவதானால் 'பாட்டரிங்குராம்' என்ற வற்ற வணிமுட்
டுப் பீரங்கிகளின்றித் தாக்குவது
சாத்யமில்லை எனத் தெரிந்துகொண்டு
அவைகளுக்குத் தகுந்த வற்பாடுகளைச்
செய்தனர். இதன் மத்தியில் பூலித்
தேவரையும், அவரைச் சார்ந்துள்ளவர்
களான மேல் படாகைப் பாளையக்
காரர்களின் போக்கு வரத்துகளையும்
தடுப்பதற் காங்காங்கு "கட்டாப்பு"
களை வைத்தும், காவல்களை அமைத்தும் திருநெல்
வேலியிலேயே யிருந்தவாறு கீழ் படாகைப் பாளையக்
காரர்களான கட்டபொம்மு நாயக்கரையும் எட்டய
புரத்தாரையும் குறித்துள்ள செயல்களை சர்வ ஜாக்கி
ரதையுடன் கவனித்துக்கொண்டு வந்தார். ஆனால்
பூலித்தேவரும் அவரது சைனியங்களும் வாசுதேவ
நல்லூர்க் கோட்டைச் சண்டை முடிவுற்ற பின்னர்
அவர்கள் முன்னம் பரிந்து பேசியபடிக்கு முகமது
ஆலியின் அரசாட்சியைமறுத்தும், மாவஸ்கானின் கக்ஷி
குச் சார்பாகவும் செய்யவேண்டியவைகளைச் செய்யா
மல் கள்ளர்களைக்கொண்டு இராக்காலங்களில் கட்டுப்
பாடற்றுக் கொள்ளையிடுவதே அவர்களுக்குப் பிர
[illegible]மான தொழில்களாக இருந்தன. இதை யறிந்த
முகமது யுஸூப்கான் கும்பினியாருக்குக் கட்டுப்பட்டு
விட்ட நாடுகளைப் பாழாக்கும் இந்தக் கள்ளர்களின்
சைனியங்களைத் தன் வசப்படுத்திக்கொண்டு எதிரி
களான பூலித்தேவருக்கும் அவரது சகாக்களான
பாளையக்காரர்களுக்கும் சொந்தமான நாடுகளைக்
கொள்ளை யிடுவதுதான் முறை எனக்கொண்டு, அவ

ருள் இரண்டாயிரம் பேர்களைச்சேர்த்துக்கொள்ளவும், அவர்களும் தங்களது வேலையான கொள்ளையைச் சரியாகச் செய்து முடிவுக்குக் கொண்டுவரும் சிறிது காலம்வரை எதுவுமே சரியானமுறைப்படி போர்நிகழ மார்க்கமில்லாது போயிற்று.

கீழ்படாகைப் பாளையக்காரர்களின் செயல்களை சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டிருந்த

எட்டயபுரத்துச் சண்டை

முகமது யுஸுப்கான், கட்டபொம்மு நாயக்கரின் சைனியத்துள்ள மூவாயிரம் பேர்கள் எட்டயபுரத்துக்குச் சென்று அங்குள்ள சைனியங்களுடன்சேர்ந்துகொண்டனஎனக் கேள்விப்பட்ட முகமது யுஸுப்கான், அவர்களிருவர்களையும் ஒன்றுசேர்ந்து வளரவிட்டால் அபாயத்திற்கிடமெனத் தெரிந்து தன் கைவசமுள்ள சைனியங்களையும் நெய்க்கட்டஞ் செவலிலிருந்த கும்பினிச் சைனியத்தில் ஏழு கும்பினிச்சைனியத்தையும் சேர்த்துக்கொண்டு எட்டயபுரத்தைப் போய்த் தாக்கி அவர்களது கூட்டுறவின் முடிவைத் தலை எடுக்க விடாமற் செய்து விட்டனர்.

இது சமயத்திற்குச் சிறிது அப்பால் திண்டுக்கல்லில் மைசூர் ஹைதர் ஆலியின் உத்தரவுப்படிக்கு

ஹைதர் ஆலி

மறுபடியுங் கும்பினியாருக்கு விரோதமாக நடத்தப்படும்போரில் முகமது யுஸுப்கான் 1500 சிப்பாய்களுடனும், 300 குதிரைகளுடனும், 2000 பியூன்களையும் கொண்டு சண்டை நடத்த வேண்டுமென்று சென்ன பட்டணத்துத் துரைத்தனத்தாரிடமிருந்து உத்தரவு வந்து விட்டது. இப்படிக்கிருக்க, எதிர்பாராத மற்றொருகவலையும் பீதியும் திருநெல்வேலிச் சீமையில் பிரவேசித்து விட்டன.

## ஒன்பதாம் அத்தியாயம்

## மத்திய காலத்தியது

பட்டேவியாவிலிருந்து டச்சுச் சைனியம் திருநெல்வேலிச் சீமைக்கு அனுப்பப்பட்டது. சிலோன்

டச்சுச் சேனை திருநெல் வேலிக்குப் போதல்

தீவுக் கவர்ன்மெண்டார், ஜாவா தீவிலுள்ள பட்டேவியாவிலிருந்து ஐரோப்பிய டச்சுப்படைகளைக் கொழும்பிற் கொண்டு வந்திறக்கி அங்கிருந்து அவைகளில் பெரும்பாகத்தைத் தூத்துக்குடித் துறை முகத்திற்குப் போய்ச் சேரும்படிக்கு அந்த இராஜாங்கத்தார் பிறப்பி வித்திருந்த ஆக்ஞையின்படி இறங்கிவிட்டன. அவ்விதம் ஏராளமான யுத்த தளவாடங்களுடனும் கைப் பீரங்கிகளுடனும் வந்து இறங்கிய சைனியங்களைத் தவிர வேறு 400 ஐரோப்பிய டச்சுச் சைனியங்கள் போதுமானபடிக்கு யுத்தத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளுடன் பட்டேவியாவிலிருந்து கொச்சிக்குச் செல்லும் விவரத்தையும் தெரிவித்ததிலிருந்து, முன்னிலும் அதிகமான கலக்கமும் பயமும் திருநெல்வேலிச் சீமையில் ஏற்பட்டன. இத்துடன் நின்றுவிடாமல் கொச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கும் டச்சுச் சைனியம் திருவாங்கூரின் உதவிக்கென்றும், தூத்துக்குடியில் வந்திருக்கும் சைனியம் பாளையக்காரர்களின் சகாயத்திற்கென்றும் கேள்விப்பட்ட முகமது யுஸுப்கானின் மனநிலை எவ்வாறிருக்குமென்பதை இதனை வாசிக்கும் நீங்களே அறிந்துகொள்ளுங்கள்! மதுரைச் சீமையை ஹைதர் ஆலியின்

மைசூர்ப் படைதாக்கவும், திருநெல்வேலிச் சீமையை டச்சுக்காரர்கள் தாக்கவுமாகிய சப்பவம் ஏக காலத்திய தென்று ஏற்படுமாயின், திருநெல்வேலியிலும் மதுரையிலுமுள்ள கும்பினிச் சைனியங்கள் போதுமானதாக மாட்டாதல்லவா? என்பதை ஆழ்ந்து அறிந்து கொண்டவரான முகம்மது யுஸுப்கான், தூத்துக்குடியிலிருக்கும் டச்சுப்பிரதானியாரை இவ்விதம் டச்சுக்காரர்கள் செய்கிற நடவடிக்கைகள், ஒழுங்குக்கும் சட்டத்திற்கும் மாறுபட்டனவாதலால் அதற்கு முகாந்திரம் தெரிவிக்கவேண்டும் என்றுகேட்டதற்கு, அந்தப் பிரதானியார் எதுவுமே பதிற் சொல்லாமல் டச்சுச் சைனியத்தில் ஒரு துண்டத்தை ஆழ்வார்திருநகரிக்கு அனுப்பி வைத்தார்.

இதன் மத்தியில் கொழும்பில் வந்திறங்கிய இருநூறு டச்சுச் சைனியங்கள் ஆழ்வார்திருநகரிக்குத் தென்கிழக்கில் இருபதுமைல் தூரத்திலுள்ள மணப்பாட்டில் வந்திறங்கியிருக்கிறதென்ற சங்கதியைக் கேள்விப்பட்ட முகமது யுஸுப்கான், கீழ்படாகைப் பாளையக்காரர்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென்று வைக்கப்பட்டிருந்த சைனியங்களை ஆழ்வார் திருநகரிக்கு டச்சுச் சைனியங்களைத் தடுப்பதற் கனுப்பிவைக்கவும், அதைக்கண்ட அன்றிரவே டச்சுச்சைனியம் தூத்துக்குடிக்குத் திரும்பிச் சென்றுவிட்டது. இதன் விவரம் பின்னர் எதுவுமே கிடைத்திலது.

*டச்சுச் சேனை மணப் பாட்டிற் குச் செல்லல்*



கீழ்படாகைப் பாளையக்காரர்களையும், மேல் படா
கைப் பாளையக்காரர்களையும் காத்துக்கொண்டு வருவ
தற்கு என்று வைக்கப்பட்டிருந்த கும்
பினிச் சைனியங்களைப் பிரித்து, டச்
சுக்காரர்களுக்கு விரோத மாகவும்
மைசூருக்கு விரோதமாகவும் அனுப்பி
வைக்கப்பட்டது, பாளையக்காரர்களுக்
குச் சுவாதீனத்தைக் கொடுத்தது போலாகியதால்,
அவர்கள் சுயேச்சையாய் நாடெங்கும் கொள்ளையிட
லாயினர் எனத் தெரிந்து, மறுபடியும் நெய்க்கட்டஞ்
செவலின் காப்புக்கு வேண்டிய கும்பினிச்சைனியத்தை
வைத்துவிட்டு, 18 பவுண்டர் பீரங்கிகளுடனும் மற்று
முள்ள சிறியதரமான பீரங்கிகளுடனும் திருநெல்
வேலி போய்ச்சேரவும், அங்கு பாளையக்காரர்களின்
சைனியங்கள் சென்று அவரைத் தாக்கின. இத்
தச் சண்டையில் முகமது யுஸுப்கான் சைனியத்தில்
பத்துப்பேர்கள் மரண மடைந்தும் எழுபதுபேர்கள்
காயமடைந்து மிருந்தார்கள். எதிரிகளின் பக்கம் நூறு
பேர்கள் இறந்தனர்கள்.

*முகமது யுஸுப் கானைப் பாளையக் காரர்கள் தாக்கல்*

முகமது யுஸுப்கான் இந்த நிலைமையில் திருநெல்
வேலி மதுரை ஜில்லாக்களின் காரியங்களை நிர்வகித்
துக்கொண்டு வரும் சாமர்த்தியத்தால்
அவரது காலமான 1757 முதல்
1763 வருஷங்களி னிடையில் திரு
நல்வேலியை விட்டு அவர் வெளியிடங்களுக்குச்
சென்றிருக்குங் காலங்களில், திருநெல்வேலிச் சீமை
யிலுள்ள பாளையக்காரர்களின் கட்டுப்பாடற்ற செய்

*ஜமாபந்தி விவரம்*

கைகளும், திருவாங்கூரார் செய்த திருப்தியற்ற நடவடிக்கைகளும், அவர் (முகமது யுஸூப்கான்) திரும்ப இந்த ஜில்லாவிற்கு வரவும், அவர்களை நடாத்திக்கொண்ட நிதான வழிகளான முன்னம் ஆங்காங்கு சொல்லியிருக்கும் விவரங்களால் முகமது யுஸூப்கானுக்குள்ள ஆட்சித்திறமையையும் வீரத்தன்மையையும் காட்டுகின்றனவென்பதை எவரே மறுத்துக் கூறுவர்? இவரது காலத்தில் இவரால் நடாத்திய 1760 முதல் 1763 வரையுமுள்ள ஜமாபந்திகளால் பாளையக்காரர்களிடமிருந்து கப்பங்களும் ஒருவாறு ஒழுங்காக வசூலிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதும் தெரியவருவதிலிருந்து இவர் சமயோஜிதமாக நடக்கும் சுபாவமுடையவராயினும் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தன ரென்பது எவருக்கும் ஒப்பமுடிந்ததாம்.

முகமது யுஸூப்கானிடம் நவாபு கொண்ட சந்தேகம் உறுதியாதல்

ஆட்சித்திறமை வாய்ந்துள்ள முகமது யுஸூப்கான் 1761ல் கவர்ன்மெண்டாருக்கு மதுரை, திருநெல்வேலிகளில் சர்க்கார் (நவாபுதுரையின்) கொடிகளை நாட்டிவிடலாயிற்றென்றும், திருநெல்வேலி மதுரை ஜில்லாக்களை அவரே நாலு வருஷங்களுக்குச் சேர்ந்து வருஷம் ஒன்றுக்கு 7 லக்ஷம் ரூபாய்க்குக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள சம்மதிப்பதாயும் தெரிவித்தார். ஆனால் முதலியார் முகமது யுஸூப்கான் கேட்டுக்கொண்ட தொகைக்கு அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்லவும் அவ்வாறு கேட்டுக்கொண்ட தீத்தாரப்ப முதலியாருக்கே குத்தகையை விட்டுவிட நவாபுதுரை சம்மதித்தார். ஆனால் கவர்ன்மெண்டார் யுஸூப்கானின் முன் நடத்தைகளையும் வீரத்தனத்தையும் சாகஸத்தையும் குறித்து அவருக்கே ஜாரியாவதில் திருப்தி கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் நவாப் துரைக்கு முகம்மது யுஸூப்கான் எழுதிக்கொண்ட அறிக்கையின் வக்கணைகள் சிறிது மரியாதைக் குறைவாக இருந்தனவென்று தெரிந்த கவர்ன்மெண்டார் அவைகளைச் சிறிது மாற்றி எழுதிக்கொடுக்கும்படிக்கு அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அத்துடன் முத்துச்சிலாபத்தில்கிடைத்தலாபங்களுக்கும், ஆடை துணிமணிகளில் கிடைத்த லாபங்களுக்கும் அவரை ஒரு விவரமான கணக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி நிகழும் காலங்களின் இடையில் கவர்ன்மெண்டாருக்கு அவர் மேல் யாதொரு சந்தேகமும் கிடையாது என்றாலும், சர்க்காருக்கு (நவாபுக்கு) முகமது யுஸூப்கான் மேல் திருவாங்கூராரிடம் களக்காட்டுச் சீமை விஷயமாகச் செய்து கொண்ட உடன்படிக்கையின் காலத்திலேயே சந்தேக முண்டாகி விட்டதென்று சொல்லியிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

கவர்ன்மெண்டாருக்கு முகமது யுஸூப்கானிடம் 1762ல் இராஜநல்லமதிப்பும் எண்ணமுமிருந்ததில் விஸ்வாசத்தைக் குறித்துள்ள விஷயங்களில் சந்தேகம் ஜனித்து விட்டது. அவரைக் கவர்ன்மெண்டார்

> சென்ன பட்டணம் தரைமார்க்கமும் முகமது யுஸுப்கான் மேல் சந்தேகங் கொள்ளல்

சென்னபட்டணம் வரும்படிக்கு உத்தரவுகளை யனுப்பி
யும், அவைகளைப் பொருட் கொள்ளா
மல் வீணை சாக்குப்போக்குகளைச்
சொல்லிச் சமாளித்துக் கொண்டும்,
காலந் தாழ்த்திக் கொண்டும், கடைசி
யாக அங்கு போகாமலே சமாளிக்கவும்
எத்தனித்து விட்டார். இத்துடன்
நின்று கொள்ளாமல், கவர்ன்மெண்டா
ரின் ஆக்ஞை எதுவுமின்றியும் அங்கு தகவல்களைக்
கொடுக்காமலுமே தன்னுடைய யுக்தம் போலவே திரு
வாங்கூராரிடம் சண்டையை ஆரம்பிக்கவும், சமாதான
உடன்படிக்கையைச் செய்யவும் ஆரம்பித்து விட்டார்.
திருநெல்வேலி ஜில்லாவையும் மதுரை ஜில்லாவையும்
சேர்த்துத் தன் சொந்தத்திற்கு நாலு வருஷம்
தவணைக்கு வருஷம் ஒன்றுக்கு 7 லக்ஷ ரூபாய்க்கு
குத்தகையை ஜாரி செய்து கொண்டு, இக் குத்தகைத்
தொகைக்கு அதிகமாகக் கேட்ட தீத்தாரப்ப முதலி
யாருக்கு ஜாரி செய்து உத்தரவைக் கொடுப்பதிலும்
பிடிவாதமாக மறுத்து விட்டார். திருநெல்வேலிச்
சீமையில் தூத்துக்குடி மணப்பாடு முதலியவைகளில்
டச்சு சைனியங்கள் வந்திறங்கி, ஆழ்வார் திருநகரியை
நோக்கிச் செல்ல, அதனைத் தடுப்பதற்கும் மதுரையை
மைசூர்த் தலைவரான ஹைதர் ஆலி, நாயக்கின் சைனிய
ங்கள் திண்டுக்கல்லிலிருந்து தாக்க வருவதை எதிர்த்து
விரட்டி யடிப்பதற்கும் போதுமான சைனியங்களை
அனுப்பி வைத்ததும் போக, அவர் (முகமது யுஸுப்
கானின்) கைவசம் எதிர்பாராதபடிக்குக் கணக்கிற்



கண்ட தொகைக்கு அதிக சைனியங்கள் இருந்தன
வென்றதும் வெளிக்கு பஹிரங்கமாகி விட்டதிலிருந்து
முன்பு இவர்மேல் நவாபுக்கு ஏற்பட்ட சந்தேகம்
ஒருகால் நியாயமாக இருக்கலாமோ வென்றதை,
1762-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் கிடைத்
துள்ள வேறு சில வதந்திகளும் உறுதிப்படுத்தி
விட்டன. இதன் காரணமாக அஞ்சுதெங்கிலிருந்து
சென்னபட்டணத்துக்குத் தரைமார்க்கமாகச் செல்
வதற்குத் தயாராக இருந்த கும்பினிச் சைனியத்தை
இது சமயம் அங்கு அவர்கள் உத்தேசித்திருந்தபடிக்
குத் தரை மார்க்கம் சென்னபட்டணத்துக்குச் சைனி
யங்கள் செல்வதாக இருந்தால் பாளையங் கோட்டை
மார்க்கமே வரவேண்டி இருப்பதால் அங்கு முகம்மது
யுஸுப்கானைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அப்பட்டாளங்
களுக்கு ஏற்படல் அவசியமாவதால் அஞ்சு தெங்கி
லேயே அச்சைனியத்தை இருந்து விடும்படிக்கு உத்
தரவு பிறந்து விட்டது. அதே வருஷம் டிஸம்பர்
மாதத்தில் தொண்டைமான் சீமையிலிருந்தும் தஞ்சா
வூர் சீமையிலிருந்தும் சைனியங்களை முகம்மது யுஸுப்
கான் சேர்க்கத் தலைப்பட்டதிலிருந்து துரைத்தனத்
தாருக்கு முன்வந்துள்ள வதந்திகளும், நவாப்துரை
கொண்ட சந்தேகமும் நிச்சயமென்பதையுறுதி என்று
காட்டிவிட்டன. உடனே துரைத்தனத்தாரும் சர்வ
ஜாக்கிரதையுட னிருந்தவர்களாகி முகம்மது யுஸுப்
கானுக்கு எவ்வித உதவிகளையும் எவ்வித நிலைமை
களிலும் செய்யக்கூடாதென்ற ஒரு பொதுவான
உத்தரவை இராஜாங்க அறிக்கைகள் மூலமாக பஹிரங்
கம் செய்து விட்டார்கள்.

கவர்ன் மெண்டாருக்கு லாரன்ஸ் துரை எழுதிக் கொள்ளல்

சென்னபட்டணத்திலுள்ள பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கும்பினி துரைத்தனத்தார் அவர்கள் சமூகத்துக்குச்சர்வ கிழக்கு இந்தியநாட்டிலுள்ள பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்திய கும்பினிச் சைனியங்களுக்குத் தலைமை பூண்டுள்ள ஜெனரெல் லாரன்ஸ் துரை அதிக விநயத்துடன் சலாம் செய்து எழுதிக் கொள்வது:-"முகமது யுஸுப்கானுக்கு விரோதமாக ஒரு பலமுள்ள சைனியத்தை அனுப்பி வைக்க வேண்டியதென்று பிரார்த்திப்பதில் அவர் எவர்க்கும் கட்டுப்படாத சுயேச்சையானவராகி விட்டார். மதுரையையும் பாளையங் கோட்டையையும் சரியானபடி யுத்ததள வாடங்களுடனும் காப்புகளுடனும் அமைத்துக்கொண்டது மல்லாமல் மற்றுமுள்ள சில முக்கியமான சிறு கோட்டைகளையும் பந்தோபஸ்தாக அமைத்துக்கொண்டு விட்டார். அவருடைய கையின் கீழுள்ள சைனியங்கள் 27,500ல் கள்ளர்கள் 15000 மாகும். பிரஞ்சு சோல்ஜர்கள் 200. பிரஞ்சுத் துருப்புகள் 30ம் இருக்கின்றன. அவைகளுக்குத்தலைவர் மார்சந்து என்ற ஒரு பிரஞ்சுக்காரர். இவையன்றி முகம்மது யுஸுப்கானிடம் கும்பினிக்குச் சொந்தமான 18 பெரிய பீரங்கிகளும் 2கைப் பீரங்கிகளும் இருக்கின்றன. அவர்மதுரையிலேயே இப்போது இருந்துகொண்டிருக்கிறார்.நாள்தோறும் ஹைதர் அலியிடமிருந்து அவருக்குச் சைனியங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. இந்த நிலைமையிலுள்ள அவரை யொத்தவரை வளரவிடுவதானல் அவரும் மற்றோர் சண்டா சாஹிபு



ஆகி நமக்கு இடைவிடாதபடிக்கு இன்னும் 10 வருஷகாலம்வரை சண்டையின் தொந்தரவைக்கொடுக்கநேரிடும். ஆதலால் அவருடைய விஷயமாக ஜாக்கிரதையுடனிருந்து அவ்வுருடைய எத்தனத்தைத் தடுப்பதற்கு இவ்விதமாகத் தெரிவித்துள்ளேன்."

திருச்சிறைப்பள்ளி, 14—4—1763.

விதேயன்,
(ஒப்பம்) ஜேனரல் லாரேன்ஸ்.

முகமது யுஸுப்கான் மேற் படை எடுத்தல்

பராக்கிரம சாலியான முகம்மது யுஸுப்கானை அவர் இருக்குமிடம் போய் சண்டை செய்வதாக இருக்குமேயானல் போதுமான சைனியங்கள் சகிதம் போக வேண்டியதென்று நிச்சயித்துக் கீழ்க் கண்டபடி சைனியங்களுக்கு விவர ஜாபிதா ஒன்றைக் கொடுத்தார். ஐரோப்பிய குதிரைப்பட்டாளம் 163, பீரங்கிகள் 10, அதற்குள்ள பீரங்கிப் பட்டாள ஆட்கள், கைப்பீரங்கிகள் 100, ஐரோப்பிய மில்டேரி ராங்கு அண்டு பைல் 600, காப்பிரிகள் 100, ஆபிசர்களுள் பட 5000 சிப்பாய்கள், நவாபு சைனியம் 2000 என இவ்விதமாகக் கேட்டுக்கொண்டதில் சிறிது குறைய மற்றவை அனுப்பிவைக்கப்பட்டன. துருப்புக்குத் தலைமை பூண்டுள்ள கர்னல் மான்ஸன் துரை மழையின் நிமித்தம் ஒதுங்கி இருக்க நேர்ந்தது. சீராம்பூர் பாதிரி யென்ற கீர்த்தி பெற்ற ஸ்வார்ட்ஸ் துரையும் இக்கூட்டத்தில் 2 மாதகாலமிருந்தார். மேலே காட்டியுள்ள சைனியங்கள் சகிதம்

முகமது யூஸுப்கானைத் தாக்க நிச்சயித்து விட்டார்கள் என்று அவருக்குத் தெரியவும், அவர் (முகம்மது யூஸுப்கான்)பிரஞ்சுக்காரர்களின் சகாயத்தைக்கேட்க, அது சமயம், இங்கிலாந்தும் பிரான்ஸும் சமாதானமாகி விட்டதால் மனித சகாயமும் வெடிகளும் அவைகளுக்கு மருந்துகளும் கொடுப்பது சரியானதாக மாட்டாதென்று புதுச்சேரிக் கவர்ன்மெண்டார் முகம்மது யூஸுப்கானுக்குத் தெரிவித்து விட்டு, இங்கிலீஷ்காரரை முகம்மது யூஸுப்கானுக்கு விரோதமாகச் சண்டை செய்வதானல் அவர் பிரஞ்சுக்காரருடைய சகாவானதால், அப்படி அவருக்கு விரோதமாகப் புரியும்போர் பிரஞ்சுக்காரர்களுக்கு விரோதமானதென்று ஏற்படலால், அதனை நிறுத்திவிடக் கேட்டுக் கொண்டார்கள். இப்படி வேண்டிக் கொண்ட புதுச்சேரிக் கவர்ன்மெண்டாருக்கு இங்கிலீஷ்காரர் யாதொரு பதிலும் சொல்லாமல் போரை ஆரம்பித்துக் கடுமையாக சண்டை செய்தும் ஜயம் யார் பக்கமென்பது சந்தேக ஸ்திதியிலிருக்கும் சமயத்தில், பிரஞ்சு தளகர்த்தனை மார்சந்து என்ற துரை முகம்மது யூஸுப்கானை, திவான் ஸ்ரீநிவாசராயரிடம் முன்னமே கலந்து வைத்திருந்த சதியின் பயனைத் தொழுகையின்போது பிடித்துக் கும்பினிக் கக்ஷியில் தலைமை பூண்டுள்ள மேஜர் டோனல்டு காம்பெல் துரையிடம் ஒப்படைத்து விட்டார்.

1764-ம் வருஷத்தில் எதிரிகளின் கையில் சிக்குண்ட முகம்மது யூஸுப்கானை மதுரைக்கு மேல்புறம்



டோல்கேட்டுக் கடுத்த சம்மட்டிபுரத்தில் தூக்கிலிட்டார்கள்.

முகம்மது யூஸுப்கானை மதுரையில் தூக்கிலிடல்

அங்கு இன்னும் அந்த மகா சூரரை அடக்கம் செய்துவைத்த இடமிருக்கின்றது. அதில் 'கான்சா பள்ளி வாசல்' என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவரைப் பிடித்துக் கொண்ட சங்கதியைக் கேள்விப்பட்டதும், எந்த மரம் முதலாகக் காணப்படுகிறதோ அந்த மரத்திலேயே தூக்கிலிட வேண்டுமென்று கமாண்டர் உத்தரவு செய்திருந்ததாயும் அதன்படியே செய்துவிட்டதாயும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. கும்பினிச் சைனியத்திலுள்ள கமாண்டரின் உத்தரவானாலும் சரியே; நவாபுவின் உத்தரவு ஆனாலும் சரியே; இத்தகைய மகா வீரரை இவ்விதம் செய்தது சரியோ, சரித்தப்போ என்பதைக் குறித்துள்ள ஆராய்ச்சியை இச் சமயத்தில் நிறுத்திக்கொண்டோம். ஆனால் இவர் இறந்ததின் பின்பு பூமி வருமானங் குறைந்துவிட்டதென்பதும் தெரிய வந்தது. இவரைத் தான் நமது ஜில்லாக்களில் கான்சா என்றும், இவர் நடாத்திய போர்களைக் கான்சா சண்டை என்றும் சொல்வது.

முகமது யூஸுப்கானை நந்தென்னாட்டினர் குமாந்தர் கான்சாஹிப் என்றும், கான்சா என்றும் சொல்வர்.

முகமது யூஸுப்கானைப் பற்றிய வேறு விஷயங்கள்

இவர் ஜாதியில் சோழிய வேளாளர். இவரது பிறப்பிடம் இராமநாதபுரச் சீமையைச் சேர்ந்த பனையூர் என்பர். இவரது இளம்பிராயத்தில் அடங்காத சுபாவமுடையவராக இருந்து பெற்றோர்களின் சொற்களுக்குக் கீழ்ப்படியாது;

மனம் போன போக்கெல்லாம் போய்திரிந்து விட்டுப் புதுச்சேரிக்குச் செல்ல, அங்கு காலக்ஷேபத்திற்கு மார்க்கமின்றிக் கடைசியாக, ஓர் ஐரோப்பிய துரையை யடுத்து 3½ வருஷங்களாகக் குற்றேவல்களைப் புரிந்து, தகாத செயல்களைச் செய்ய அவரால் நீக்கப்பட்டு,பின்பு பர்டன் துரையைப்போய்அடைய, அவரால் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், பிரஞ்சு, ஹிந்துஸ்தானி, மலையாளம் முதலிய பாஷைகளைச் சிறுகச் சிறுகப் பேசவும் எழுதவுங் கற்றுக்கொண்டு, நவாபுவின் சர்வீசில் சேர்ந்து, தண்டல்காரராயும், சுங்க வசூல் கலெக்டராகவும், பின்பு பட்டாளத்தில் சிப்பாயாகவும், நாயக்காகவும், ஹவுல்தாராகவும், சுபேதாராகவு மிருந்துவிட்டு படே சாஹிப்புக்கு விரோதமாகப் பரங்கிமலையில் செய்த சண்டையின் திறமையில் இவருக்கு ஒரு கவர்னர் வேலையைக் கொடுப்பதென்று தீர்மானமாக, இவரது இராணுவச் சக்தியைக் கண்டு வியந்த அக்காலத்திய சர்வ கிழக்கு பிரிட்டிஷ் கும்பினியாரின் கும்மாந்தர்களுக்குள் தலைமை பூண்டிருந்தவரும், முன் சொல்லப்பட்ட வருமான ஜெனரல் லாரன்ஸ் துரையால் கும்மாந்தராக நவாபு சைனியத்தில் ஆங்கிலப் பார்வையில் அமர்ந்தனர். இவருக்கோர் பரங்கிப் பெண்ணை ஆற்காட்டில் வைத்து விவாகமாகியது. ஆங்காங்கு நாம் முன்னம் சொல்லியுள்ள விஷயங்களின்படி நவாபுக்குத் துரோகமாக நினைத்தாரென்று தூக்கி லிடப்பட்டார். அவரது வலது கையைக்கிழித்து அதனுள் ஒரு தங்கச் சிமிழை அடக்கஞ்செய்து வைத்திருந்தனரென்றும், அதன்



சக்தியால் அவரை எந்த விதமான கொடுந் துன்பங்களாலும் ஹிம்சித்துக் கொல்ல முடியாதென்றும், அவரைத் தூக்கிவிடவும் அவர் சாகாமலிருக்கத் தூக்குக் கயிறே இத்து விழுந்ததென்றும், இரண்டாவது தடவையிலும் அவ்விதமே தூக்கிலிட மறுபடியும் கயிறு அறுந்தது என்றும், மூன்றும் தடவையில் தங்கச்சிமிழை நீக்கிவிட்டுத் தூக்கவும், தூக்குக் கயிறு அதனுடைய வேலையைச் சரியாகச் செய்து மரணத்துக்குக்காரணமாகவும் நின்றதென்று மதுரைச் சீமைச் சரித்திரத்தில் கண்டிருக்கிறது. 1867-ம் வருஷத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் "இந்தியாவில் ஆங்கிலேயர்களின் இச்சையின் நோக்கம்" என்ற புஸ்தகத்தில் முகமதுயுஸுப்கானையும் அவருக்குப் பின்வந்துள்ளோரையும் ஒப்பிட்டுக் காட்டியதில் முகம்மது யுஸுப்கானை மிகச் சிலாக்கியமாகக்கூறி இருப்பவைகள் படிக்கத் தகுந்தவைகள்; அவர் எந்த நிலைமையிலும் நியாயத்தைக் கைவிடமாட்டார், குற்றவாளி தண்டனை யடையாதுபோகான். அப்படிக்குள்ளார் யாவராயினும் சரியே. கூலியாட்களையும் கைத்தொழிலாளரையும்சர்க்காருக்கு வேண்டிய முக்கிய அம்சங்கள் என்பார். அநேக இராஜதந்திர இரகசிய வாக்கியங்கள் அவரால் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆழ்ந்து யோசிக்கில் அவர் பெரும் ராஜதந்திரநிபுணர் என்பதை எவருமே ஆக்ஷேபிக்காரென்று நம்புகிறோம். மதுரைச் சீமைச் சரித்திரத்தில் 1763-ம் வருஷக்கடைசியில் கான்சாஹிப் தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அஃது பொருத்தமுடையதல்ல வென்றது மேலே காட்டிய

விவரங்களால் தெரியவருகின்றது. வைபர்ட்டு துரையால் பதிப்பிக்கப்பட்டுள்ள மதராஸ் இஞ்சினீர்சரித்திரத்தில் முகம்மது யுஸூப்கானைப் பிடித்துக்கொடுத்த பிரஞ்சு உத்தியோகஸ்தர் மார்சாத் என்றும், ஒப்படைக்கப்பட்ட முகம்மது யுஸூப்கானை ஏற்றுக்கொண்டவர் மேலே சொல்லியுள்ள மேஜர் டோனல்டு காம்பல்துரையல்லவென்றும், ஆனால் அப்படி ஏற்றுக்கொண்டவரின் பெயர் மேஜர் சார்லஸ் காம்பல்துரை யென்றுங் கண்டிருக்கிறது. இவரைத் தூக்கிய வருஷமான 1764 கி. பி.க்கு அடுத்து நிகழ்ந்த பிரபவ வருஷம் தைமாதம் 23-ந் தேதியில் மதுரையை அடுத்துள்ள சம்மட்டி புரத்திலுள்ள அந்த சமாதியை ஷேக்தாவுத்தின் குமாரர் ஷேக் இமாமு என்பவர் கட்டிவைத்ததாக அதன் சுவரிலுள்ள ஒரு கல்லில் தமிழிலும் இந்துஸ்தானிலும் எழுதப்பட்டிருப்பதை இன்றுங் காணலாம். இந்த மகாசூரர் வீரர் வணக்கத்துக்குரியவராதலால் (Hero Worship) அச்சமாதியைப் பிரபலப்படுத்த வேண்டியது நமது நாட்டினர்களின் கடமையாதலால் அதற்கு வேண்டிய பொருள் உதவியை கவர்ன்மெண்டார் மூலம் அறிக்கைசெய்து அதனைப்பெற்று அந்த சூரரின் பெயரை அழியாப்புகழுடன் நிற்குமாறு செய்வதே முக்கியமாம். எமக்குக் கிடைத்துள்ள சாவகாச வேளைகளிற் கிளைவ் பிரபுவிற்கும் இவருக்குமுள்ள தாரதம்மிய ஆராய்ச்சி (A Comparative study of Lord Clive and Mohmad Yussuf Khan) யினை எழுதி வெளியிடக் கருதியுள்ளோம்.



1765-ம் வருஷத்தில் பாளையங்கோட்டையிலுள்ள சைனியங்களுக்குச் சரியானபடி வசதிகள் அமைத்து வைக்கப்பட்டன. திருவாங்கூரார் களக்காட்டை அடைய மறுபடியும் எத்தனித்து 2500 சைனியங்களைக் கொண்டுவந்து அதனை அடைய, கியாப்டன் ஹார்ப்பர் (Captain Harper) அங்குசென்று அதனை நிவர்த்தி செய்ய, அவர்கள் மறுபடியும் திருக்குறுங்குடியிலிருந்து எதிர்த்துவிட்டு, பனைகுடி, திருக்குறுங்குடி யாகியவைகளைப் பிடித்துக்கொண்டதுமாகிய விவரங்களே குறிப்பிடத் தக்கவைகளாம்.

## பத்தாம் அத்தியாயம்

# மத்தியகாலத்தியது

இதன் பின்பு பாளையங்கோட்டைச் சைனியத்தை நடாத்திய கியாப்டன் பிரிஷ்மான் துரை (Captain Frischman) என்றவர் 4-10-1766ல் கவர்ன்மெண்டாருக்கு எழுதிய நிருபமொன்றில் பாளையங் கோட்டையைச் சுற்றி 15 மைல் அளவிற்குள் 20,000 கள்ளர்களுக்குக் குறைவின்றிப் பாளையக்காரர்களின் சைனியங்கள் ஆயுத பாணிகளாகக் கொள்ளையை நாடி அங்கு மிங்கும் அலைந்து திரிகிறார்கள் என்று தெரிவித்துவிட்டு, நவாபுவின் சைனியத்துக்குத் தலைமை வகித்தவரும், இங்கிலீஷ் சைனியத்தின் தலைவருக்குக் கீழ்ப்பட்டவருமான பக்ஸீ சாஹிபை (Buxy Saheb) பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை அழிக்க அனுப்பி வைத்திருப்பதாயுந் தெரிவித்தார். நவாபுவின் சைனியத்திற் சேர்ந்திருந்த என்ஸைன் பௌல்ஸம் (Captain Ensign Foulsum) என்ற துரையை வாசுதேவ நல்லூர்க் கோட்டையை அழிப்பதற்கு அனுப்பிவிக்கப்பட் டிருந்தது. இவரே சொக்கம்பட்டிக்கு விரோதமாகச் சைனியத்தை நடாத்திய வருமாவர். வாசுதேவ நல்லூர்க்குச் சென்றிருந்த இவர் 12,000 பாளையக்காரர்களின் சைனியங்களுடன் போரிட்டுவிட்டுத் திரும்பிவிட்டனர். மேஜர் பிளிண்டு துரை (Major Flint) சில பாளையக்காரர்களை அடக்கி

சைனியங்களின் உத்தியோக முறைகள் மாறுபடலும் பாளையக்காரர்களும்



விட எத்தனித்ததில் அவரால் ஒன்றும்செய்துகொள்ள முடியாமற் போய்விட்டதுடன், கொல்லன் கொண்டான் பாளையத்தையும் 29-12-1766-ல் அடக்குவதற்குப் பிரயாசை எடுத்தும் அதுவும் முடியாமற் போய்விட்டது. இதில் கியாப்டன் பெயிண்டர் (Captain Painter) துரையுடன் ஐந்து ஆங்கில வீரர்கள் கொல்லப்பட்டும் அநேகர் காயப்பட்டும் கிடந்தார்கள். இந்தப் பாளையக்காரருக்கு இருநூறு சைனியங்களிருந்திருப்பதாகத் தெரிகிறது. இத்துடன் 1766ம் வருஷமும் முடிவுற்றது. கொல்லன் கொண்டானுக்குச் சென்றிருந்த மேஜர் பிளிண்டுதுரை இராஜபாளையம் வழி பிரம்பூர்போய் பக்ஸி சாஹிபைச் சேர்ந்து பாளையங்கோட்டையிலிருந்து கியாப்டன் பிரிஷ்மான் என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட பீரங்கிகளையும், வெடிமருந்துகளையும் ஏராளமாகப் பெற்றுக்கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக்குப் போக நினைத்து, அதனையும் விடுத்து, அப்பால் எட்டயபுரத்துச் சீமையிலுள்ள இரண்டு கோட்டைகளைத் தாக்குவதாகச் சென்றவர், தம்முடைய நோக்கம் சிறிதுகூட கைகூடாதெனத் தெரிந்து, மறுபடியும் பாஞ்சாலங் குறிச்சிக்குப்போய் சேர்ந்து 15-2-1767ல் அதைத் தாக்கக், கொல்லன் கொண்டானில் கிடைத்த லாபமே அங்கும் இவர்களுக்குக் கிடைத்தது. உடனே கோட்டையின் முற்றுகையைத் தற்கால நிமித்தம் நிறுத்திக்கொண்டார். மறுதினம் கோட்டையைப் 'பிளாக்கேட்டு' என்ற அடைப்பைப் போடவும், பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரும் அவரது சைனியங்களும் சௌகரியக்

குறைவினிமித்தம், அதனைவிட்டுவிட்டு ஓட்டம் பிடித்துத் தூத்துக்குடி, வைப்பாறு முதலிய இடங்களுக்குச் சென்று ஒளிந்துகொண்டார்கள். இதற்கப்பாலும் எட்டயபுரத்தைப் போய் முற்றுகையிட நினைத்த மேலே கண்ட கும்பினிச் சைனியங்கள் அதையும் நிறைவேற்றிக்கொள்ளாமல் நிறுத்திக் கொண்டார்கள். இதற்குக் காரணம் அப்போது எட்டயபுரம் கும்பினியாரின் சகாவானது பற்றியென்க.

கொல்லன் கொண்டான் சேத்தூர் சிவகிரி முதலிய கோட்டைகளைப் பிடித்தல்

கொல்லன் கொண்டான் கோட்டையை முற்றுகையில் பிடிக்கத் தவறிய பிளிண்டு துரைக்குப் பாளையக்காரர்கள் சீமைகளில் அனுபோகம் போதாது என்று நம்பிக்கை கொண்டு காம்பல் துரையை அனுப்பி வைத்தார்கள். அவர் 1-5-1767ல் அங்கு சென்று அதனையும் அதன் பின்பு சேத்தூரில் போட்டிருந்த கோட்டையை 3-5-1767லும் சிவகிரிக் கோட்டையை 10-5-1767லும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்துக் கொண்டார். ஆங்கிலேயர் பக்கம் ஆபிசர்களும் மூன்று சிப்பாய்களும் கொல்லப்பட்டார்கள். 46 சிப்பாய்கள் காயப்பட்டனர். எதிரிகள் பக்கம் 80 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயப்பட்டனர்.

இவர் சிவகிரிச் சீமையைப் பார்த்துவிட்டுக் கீழே கண்டவாறு எழுதியிருப்பது முக்கியமாதலால் அதனையிங்கு எழுதுவோம்: “ கண்ணுக்கும் மனதுக்கும் ரமணியமான இந்நாட்டிற்கு இயற்கையில் அமைந்



துள்ள வளப்பத்தைக் கெடுக்கும் சைனியத்தின் செய்கைகளால், சிருஷ்டியில் அமைந்துள்ள இயற்கையின் வளப்பங்கெட்டு நாசமென்ற அழிமானம் காணப்படுவது எனக்கு அருவருப்பைக் கொடுக்கக் கூடியதாகயிருக்கின்றது. இப்படிக்கு இயற்கையின் நலத்திற்குக் கேட்டை ஊட்டியதைமாற்றி, அதனைப் பழைய ஸ்திதிக்குக் கொண்டுவரும் உபாயத்தை நவாப்துரை செய்யாது சும்மாயிருந்துவிட்டால்; நான் பார்த்துள்ள நாடுகளின் வளப்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் இச்சீமை இன்னுமொரு வருஷத்துக்குள் பாழ்நிலமாக மாறிவிடும் ” என்றதே அதன் சுருக்கமாகும்.

சிவகிரியின் வளப்பம்

சங்கர நயினார் கோவிலில் கண்டோன்மெண்டு ஒன்றை ஸ்தாபித்தல்

கர்னல் டோனல்ட் காம்பெல்துரை உடனே அங்கிருந்து 13-5-1767ல் வாசுதேவ நல்லூரை நோக்கிச் செல்லும்போது சிவகிரியில்மீதமுள்ள வேலையைப் பிளிண்டு துரையைக் கொண்டு செய்ய ஏற்பாடு செய்தனர். அப்படிக்கு சிவகிரியிலுள்ள வேலையை முடித்துக்கொண்டு பிளிண்டு துரை வாசுதேவ நல்லூருக்குப்போய் காம்பெல் துரையைச் சேரவும் அங்கு ஹார்பர் துரையும் (Captain Harper) வந்து சேர்ந்து கொண்டார். வாசுதேவ நல்லூர் பார்வைக்கு நல்ல தோற்றமுடையது என்றும், நெல்விளைவில் ஏராளமுள்ளதென்றும், அங்குள்ள கோட்டை வெகுநாள்ப் பட்டதென்றும், அதிக பலம் வாய்க்கப் பெற்ற

தென்றும், அதனை அழிக்கத் தமக்குச் சம்மதியில்லையென்றும், நவாபுவின் அங்குள்ள சைனியத்தில் தலைமை பூண்டுள்ளவரும் மகாஊக்கம் உடையவருமான கியாப்டன் பீட்டர் டேவிட்சன் துரை (Captain Peter Davidson) யின் பாதுகாப்பில் அதைப் பந்தோபஸ்தாக இருக்க ஏற்பாடுகளைச் செய்து கொள்வது நலமென்றும், காம்பெல்துரை கும்பினியாருக்கு எழுதி யனுப்பினர். இப்படி எழுதி யனுப்பியதில் கும்பினியார் அதனை நவாபுவின் சைனியம் காத்துக் கொள்வதிலும் கும்பினிச் சைனியமே காத்துக்கொள்வது உசிதமாமென்று பதில் அனுப்பிவிட்டார். அதன் பின்பு சங்கரநயினார் கோவிலில் தற்காலத்தின் நிமித்தம் ஒரு தண்டை—கண்டோன்மெண்டு—ஹார்ப்பர் துரையின் பரிசீலனையின்கீழ் நியமிக்கலாயிற்று.

பாளையக்காரர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதிகளைக் குறித்தது

இதன் மத்தியில் நவாபுதுரையிடமிருந்து பாளையக்காரர்களின் கப்பம் முதலியவைகளையும், அவர்கள் சர்க்காரிடம் நடந்து கொள்ளவேண்டிய நிபந்தனைகளின் விவரங்களைக் குறித்தும், அவர்கள் ஒருவருக்கொருவர் சமாதானமாகக் கலந்து கொள்ளலே உசிதமென்றும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வந்து சேர்ந்தது. அப்படிக்கு வந்துள்ள உத்தரவை நிறைவேற்றுவதில் காம்பெல்துரைக்கு எது உசிதம் என்று தோன்றுமோ அதனை அவருடைய மனோபீஷ்டப்படிக்கு நடத்துவதில், நவாபு தலையிடக்கூடாது என்று கவர்ன்மெண்டார் கேட்டுக் கொண்டார்கள். இப்படி



யிருக்கக் காம்பெல்துரை அவசர நிமித்தம் திருநெல்வேலிச் சீமையை விட்டுப் புறப்பட்டுவிடவும், பிரிஷ்மான்துரை அந்த ஸ்தானத்தில் நியமனஞ் செய்யப்பட்டனர்.

சிவகிரியாரையும் பாஞ்சாலங் குறிச்சியாரையும் நாட்டை விட்டு அப்புறப் படுத்தல்

பிரிஷ்மான்துரையின் சார்ஜிலிருக்கிறதை அறிந்த பாளையக்காரர்கள் உடனே எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொண்டு நவாபுதுரையின் ஆக்ஞைப் படிக்கு, கிஸ்து முதலியவைகளைப் பற்றிக் கலந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டோமென்று சொல்லி விட்டார்கள். கடைசியாக நவாபுவின் பண இலாகா மந்திரியாக நமது ஜில்லாவிலிருந்த ஹூக்மத் இராமராஜாவால் நவாபுவின் தயவுக்குப் பாத்திரமாகித் தஞ் சீமையில் 9 கிராமங்களை மட்டும் பெற்றுக் கொண்ட வடகரை (சொக்கம்பட்டி)ப் பாளையக்காரரைக் கொண்டு ஒருவாறு மற்றப் பாளையக்காரர்களைச் சம்மதிக்கும்படி செய்தார்கள். அப்படிக்குப் பாளையக்காரர்கள் சம்மதித்து ஒரு முடிவான உடன்படிக்கைக்கு வருமுன் சிவகிரியாரும் பாஞ்சாலங் குறிச்சியாரும் ஜில்லாவிலிருந்து ஹூக்மத்ராம் ராஜாவால் நாடு கடத்தப்பட, அவர்களுக்குப் பதில் ஆங்காங்கு வெவ்வேறு பாளையக்காரர்களை நியமித்து விட்டார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவின் நிலைமை யிவ்வாறு இருக்க, 2-9-1767ல் மைசூர் தலைவரான ஹைதர் ஆலி என்பவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சகல பாளையக்காரர்களையும் தம்முடைய கட்சியில் சேரும்படிக்

ஹைதர் ஆலி திருநெல்வேலிச் சீமையிலுள்ள பாளையக்காரர்களின் உதவியை நாடல்

கும், அப்படிக்கு அவர்கள் தம்முடன் சேர்ந்து கொண்டு நவாபுக்கும் இங்கிலீஷ்காரருக்கும் விரோதமாகச் சண்டையிடுவார்களானால், இப்போது சீமையை இழந்திருக்கும் பாளையக்காரர்களுக்கு அவர்கள் சீமையைத் திரும்பக் கொடுப்பதாகவும், மற்றப் பாளையக்காரர்களுக்கு மேல்க்கொண்டு வேறு அதிகமான சீமையைக் கொடுப்பதாயும் ஆங்காங்குள்ளவர்களுக்கு எழுதி விடுத்தார். இதைத் தெரிந்து கொண்ட கும்பினியார் அஞ்சுதெங்கிலிருந்து வருகிற ரிக்ரூட்டுச் சைனியத்தைப் பாளையங் கோட்டையிலிருக்கும்படிக்கு உத்தரவு செய்தனர். இத்துடன் 1767-ம் வருஷமும் நிறைவேறியது. ஹைதர் ஆலியின் கலகம் நாளுக்கு நாள் அதிகரிக்கவும் திருநெல்வேலி ஜில்லாவின் இராணுவ இலாகாவின் சார்ஜை வகித்திருந்த லெப்டினண்டு கர்னல் பிரிஷ்மானை கியாப்டன் ப்ரவுன் (Captain Browne) என்றவரிடம் ஒப்படைத்து விட்டு, அவருக்கு அந்த ஜில்லாவின் நடவடிக்கைகளின் விவரங்களை யெல்லாம் விவரமாக விளக்கிக் கொடுத்துவிட்டு, நவாபுவின் ஏஜெண்டிடம் ப்ரவுன்துரை நடந்துகொள்ளவேண்டிய விவரங்கள் இன்னவைதான் என்பவைகளை எடுத்துக் காட்டிவிட்டுப் புறப்பட்டு வரும்படிக்கு உத்தரவு பிறக்கலாயிற்று. அதன்படியே சென்றனர். கியாப்டன் ப்ரவுன் 10-6-1768ல் எழுதிய நிருபத்தில் எவரோ ஒரு பாளையக்காரர் ஒரு கோட்டையைப் பலப்படுத்தியதாகவும்,



அதனை அழிப்பதற்கு மூன்று கும்பினிச் சைனியங்களை ஒரு சார்ஜண்டு சகிதம் அனுப்பிவைத்ததில், அது அழிக்கப் பட்டதென்றும், அந்தப் பாளையக்காரரை (Cambo Naig) காம்போ நாய்க் என்றும் சொல்வதை கால்டுவெல்துரை காமநாயக்கர் எனச்சொல்லுகிறார். இதற்கப்பால் ஆகஸ்டு மாதத்தில் இவர் திருச்சிராப்பள்ளியிலிருந்த கர்னல் உவுட் (Colonel Wood) துரைக்குச் சகாயமாகச் சைனியமும் வெடிகளும் அனுப்பியதாகவும் கூறியுள்ளார்.

சிவகிரியாரும் பாஞ்சாலங் குறிச்சியாரும் இராமநாத புரத்தில் அடைக்கலம் புகுதல்

இதன் மத்தியில் நாடு கடத்தப்பட்ட பாஞ்சாலங் குறிச்சியாரும் சிவகிரியாரும் அந்நிய நாடுகளில் அழிமானங்களைச் செய்தார்கள் என்ற புகார்கள் அவர்கள்மீது ஏற்படலும், அவர்கள் இராமநாதபுரத்துச் சீமையிற் போய் அடைக்கலம் புகுந்துகொண்டார்கள் என்ற சமாசாரம் கும்பினியாருக்குத் தெரிந்து, இராமநாதபுரத்தார் இவ்விருவர்களையும் வைத்துக் காத்துக் கொண்டிருக்குஞ் செய்கை தங்களுக்கு வெறுப்பையுண்டுபண்ணுமென்றும், அவ்விதம் செய்யாமல் இனி இருந்துகொள்ள வேண்டுமென்றும் கண்டித்து, அன்னரை எச்சரிக்கையுடனிருந்துகொள்ளும்படி செய்து விட்டனர்.

கியாப்டன் ப்ரவுன் . பாளையக்காரர்கள் யாவரையுங் கூட்டுவித்துக் கும்பினியாருடன் சேர்ந்து ஹைதர் ஆலிக்கு விரோதமாகப் போர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு, அவர்கள் யாவரும்

பாளையக்காரர்கள் ஹைதர்ஆலிக்கு உதவி புரிதல்

இவர் முன்பாகச் சரியென்று சொல்லிவிட்டு ஹைதர் ஆலிக்கு உதவி செய்தனர். இத்துடன் 1768, 1769, 1770 ஆகிய வருஷங்கள் முடிவு பெற்றன. கியாப்டன் கூக் (Captain Cooke) துரை என்றுரை ப்ரவுன் துரைக்குப் பதிலாக நியமித்து ப்ரவுன் துரையை சென்னபட்டணத்துக்கு வரும்படி உத்தரவாகி விடவே, பேமாஸ்டராகவும் ஸ்டோர் கீப்பராகவும் கம்மிங்கு துரை நியமிக்கப்பட்டார். இதே வருஷமான 1771-ல் திருநெல்வேலிக் கச்சேரியில் நிகழ்ந்த அக்கினி விபத்தால் சகல ரிக்கார்டுகளும் நாசமாயின.

தபால்களின் போக்குவரவு

உள்நாட்டில் நடக்கும் ஹைதர் ஆலியின் கலகத்தின் நிமித்தம், எச்சரிக்கையுடனிருந்து கொள்வதற்கென்று சென்னபட்டணமிருந்து பம்பாய்க்கு அனுப்பிவைக்க வேண்டிய தபால்கள் யாவையையும் பாளையங்கோட்டைக்கு அனுப்பிவைக்க, அவைகளை அங்கிருந்து மேல்கரையிலுள்ள அஞ்சுதெங்குக்கும், அங்கிருந்து பம்பாய்க்கும் அனுப்புவது வழ்க்கமாக இருந்ததென்று தெரிய வருகின்றது. முக்கியமான சில அவசரமான இராயல் மெயில் கடிதங்களின் நகல்களை "கோர்ட்டு-ஆவ்-டிரெக்டர்ஸ்" களுக்குச் சென்னபட்டணமிருந்து இதே மார்க்கம் அனுப்பிவைத்து அதன் பின்பு, பாரஸீகக் குடாக் கடலிலுள்ள பஸ்ஸோராவிலிருந்து சீமைக்கு அனுப்பி வைக்கப்படுவதும், அங்கிருந்து சென்னபட்டணத்துக்கு அனுப்பி



வைக்கப்படுங் கடிதங்களும் இதே மார்க்கங்களாக வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருந்தன.

நாடு கடத்தப்பட்ட பாஞ்சாலங்குறிச்சியார் சுவாதீனமடைதல்

ஹுக்மத் ராம ராஜவால் 1767-ல் நாடு கடத்தப்பட்ட பாஞ்சாலங்குறிச்சியார் 1771-ல் தன்னுட்டிற் பிரவேசித்து, தன்னுடைய ஸ்தானத்திலிருந்த பாளையக்காரரைக் கொன்றுவிட்டு, மறுபடியும் பாளையக்காரராகத் தன்னையாக்கிக் கொண்டார். 1772-ல் சிவகங்கை சீமைக்கு விரோதமாகவொரு சைனியம் அனுப்பிவைக்கப்பட்டது. 1773-ல் திருநெல்வேலி ஜில்லாவில் யாதொரு விஷயமுங் குறிப்பிடத்தக்கதாக நிகழவில்லை. 1774-ல் திருநெல்வேலி ஜில்லாவில் பெரும் பஞ்சமும் கொள்ளை நோய்களும் உண்டாயின. 1775-ல் கியாப்டன் கூக் துரையின் ஸ்தானத்தில் வேலூரிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கியாப்டன் ஹாப்கின்ஸ் (Captain Hopkins) துரை உத்தியோகம் வஹித்தார். கொல்லப்பட்ட பாஞ்சாலங்குறிச்சியாரை, சைநு முகமதுகானுல் நாடு கடத்தப்பட்டவரின் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டிருந்ததால் அவர் கொலையுண்டாரெனக் கேட்கவும் நவாபுவின் ஆட்கள் குதிரைப்படையையும் காலாட்படையையும் ஒன்று சேர்த்துத் திரட்டிக்கொண்டு பாஞ்சாலங்குறிச்சியை எதிர்த்துச் சென்ற விவரங்களடங்கிய பேப்பர்களுக்குப் பைசலானவையே முக்கியமானதாகும் என்று 7-1-1776-ல் கியாப்டன் ஹாப்கின்ஸ் துரை குறித்திருப்பவையே முக்கியமாம். நவாபுவின் பட்டாளத்தில் இரண்டு துண்டம் சைனியங்களுடனும் பீரங்கிகளுடனும் நவாபுவின் சர்வீஸிலமர்ந்திருந்த

கியாப்டன் பிக்கார்ட்டு(Captain Pickard)த் துரையின் கீழ்த் திருநெல்வேலியிலிருந்து பாளையக்காரர்களுக்கு விரோதமாக அனுப்பி வைக்கப்பட்டன என்றும், அப்படி அனுப்பிவைக்கப்பட்ட சைனியங்களைக் கொண்டு பாளையக்காரர்களின் கிஸ்து பாக்கிகளை வசூலிக்க எத்தனித்தும், அவர்கள் அவைகளைக் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள் என்றும், அவைகளில் சிவகிரியே பிரதானமானதெனத் தெரிந்துகொண்டதுடன் அதன் பாளையக்காரர் அநேக கள்ளர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தன ரென்றதும் தெரியலாயின. இச்சம்பவ நிகழ்ச்சியின்போது பாஞ்சாலங்குறிச்சியாரும் அதுசமயம் நவாபுவின் காரியஸ்தருக்கு வேண்டியவராக இருந்ததால் 4000 சைனியங்கள் சகிதம் பிக்கார்ட்டுத் துரையுடன் சேர்ந்துவந்தா ரென்றும் கியாப்டன் ஹாப்கின்ஸ் துரை 16-2-1777-ல் எழுதியுள்ள விவரங்களால் வெளியாகின்றன.

கிஸ்துப் பாக்கிகளைக் கொடுக்க மறுதளிக்கும் பாளையக்காரர்களிடம் முரண்படல் வேண்டியதில்லை எனல்

தன்னுடைய ஸ்தானத்தில் கியாப்டன் எயிடிங்டன் (Captain Eidington) துரையை நியமித்தாய் விட்டதெனத் தெரிந்த கியாப்டன் ப்ரவுன் உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டனர். கியாப்டன் எயிடிங்டன் ஸ்தானத்தில் பாளையங்கோட்டையிலுள்ள பட்டாளத்துக்கு கும்மாந்தாராகக் கியாப்டன் பாரிங்டன் (Captain Barrington) துரை நியமிக்கப்பட்டார். அப்படி நியமுகம் பெற்றவர் உடனே நவாபுவின் ஏஜெண்டுக்கு உதவியாகப் பாளையக்காரர்களின் கிஸ்து பாக்கிகளை வசூலிக்க 5 கும்பினிச் சைனியத்தை அனுப்பி



வைக்கும்படிக்குக் கேட்டுக் கொண்டார். அவ்விதம் பாக்கிதார்களான பாளையக்காரர்கள் கிஸ்துக்களைக் கொடுக்க மறுதளிப்பதானால் அவர்களைப் பலாத்காரம் செய்யவேண்டியதில்லை யென்றும் அவர்களுக்குச் சொல்லி அனுப்பிவிக்கப்பட்டது. இதுவே 1778ல் நிகழ்ந்த சம்பவமாகும்.

முகரம் பண்டிகையில் கலகம்

திருநெல்வேலிச் சீமையின் வழியாகக் கர்னல் பிராத்வெயிட் (Colonel Braithwite) துரை பிரயாணம் செய்யும்போது ஒரு முகரம் பண்டிகையின் காலத்தில், நவாபுவின் ஆட்கள் ஹிந்துக்களிடம் கலகம்செய்து அநேகரைக் கொன்றுவிட்டதிலிருந்து நாட்டில் சாகுபடி முதலியன இன்றிப் பாழாய்க்கிடந்ததென்றும், அநேக விக்கிரகங்கள் யுடைத்துத் தள்ளப்பட்டிருந்தன என்றும், இச்செய்கை பாளையக்காரர்களுக்குக் கோபத்தை யுண்டாக்கி நாட்டில் அதிகக் குழப்பத்தை உண்டுபண்ண ஏதுவாகலாமென்றும், கர்னல் பிராத் வெயிட்டுத் துரையின் சைனியத்துக்கு அஞ்சுதெங்கு * போய்ச் சேர ஆகாராதிகள் சப்ளை துர்லபமாகியதென்றும், தேச நிலைமையைக் கவனித்து மறுபடியும் பாளையங்கோட்டைச் சைனியத்திற்கு கும்மாந்தாராக எயிடிங்டன் துரையே நியமிக்கப்பட்டாரென்பனவுமே 1779-ல் நிகழ்ந்த சம்பவங்களாகும்.

1780-ல் சிவகிரியாருக்கும் நவாபுவின் சைனியத்துக்கும் சச்சரவு உண்டாகியது. பாளையக்காரர்கள் எல்

* கீர்த்திபெற்ற சரித்திர ஆசிரியரான ஆர்ம்துரை என்பார் அஞ்சுதெங்கில் (Anjengo) ஜனனமானார்.

*பாளையக்காரர்கள் நவாபுவின் ஆட்சியை மறுத்தல்*

லோருமாக ஒன்று சேர்ந்துகொண்டு நவாபுவின் ஆட்சியை மறுத்துவிட்டனர். அது காரணமாகச் சீமையில் வரும்படியுங் குறையலாயிற்று. மைசூர் தலைவரான ஹைதர் ஆலியுடன் பாளையக்காரர்கள் இரகசியமான உளவுகளை நவாபுக்கு விரோதமாக நடத்திய செய்திகள் கண்டுபிடிக்கப்பட்டன.

*திருநெல்வேலியில் ஸ்பைஸஸ் மரங்களை வளர்த்தல்*

இதுசமயம் பாளையங் கோட்டையில் பேமாஸ்டராக இருந்தவர் உவில்லியம் லைட்டு (William Light) என்றவர். இவர்தான் திருநெல்வேலி நாட்டிற்குள் கொழும்பிலிருந்து வாசனை திரவிய மரங்களான இலவங்கம், ஜாதிக்காய் முதலியவைகளின் கன்றுகளைக்கொண்டு நடுவை செய்து விருத்திக்குக் கொண்டுவந்தவரில் முதலானவர். இந்த ஜில்லாவின் விஷயங்கள் சீர்கெட்டு வருவதைத் தெரிந்துகொண்ட சென்னபட்டணத்துத் துரைத்தனக் கவுன்சில் பிரஸிடெண்டார் நவாபு துரையவர்களிடம் சில முக்கிய விஷயங்களைக் கலந்துகொள்ள வேண்டிக்கொண்டனர்.

*சுதேசக் கிறித்தவர்களுக்கு எண்ணிக்கை ரிஜிஸ்டர் தாக்கல்*

பாளையங்கோட்டை முதலிய இடங்களிலிருக்கும் சுதேசக் கிறித்தவர்களின் எண்ணிக்கைக் கணக்கு விவர முதலிய யாவையும் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று விதிக்கலாயிற்று. இத்தியாதி சம்பவங்களைக் கொண்டே 1780-ம் வருஷம் நமது ஜில்லாவில் முடிந்தது.



*ஹுக்மத் ராமராஜுவினுடைய துவேஷ எண்ணங்கள் வெளிப்படல்*

1781-ம் வருஷம் மைசூர்த் தலைவரான ஹைதர் ஆலியை ஒரு சேனையை அனுப்பிவிக்க வேண்டுமென்று சிவகிரி கேட்டுக் கொண்ட விவகாரப் போக்குகளில் ஹைதர் ஆலிக்கும் ஹுக்மத் ராமராஜுவுக்கும் அந்தரங்க சிநேகமுண்டென்றது சரியான காரணங்களைக்கொண்டு வெளிக்குத் தெரியலாயது என்பதும், திருவாங்கூராரின் உதவியை இனி நாடுவது பிரயோஜனமாக மாட்டாதென்பதும், கொழும்பிலுள்ள டச்சுக் கவர்ன்மெண்டார் இங்கிலீஷ்காரர்களுக்கும் தங்களுக்கும் பொதுவான விரோதியான ஹைதர் ஆலிக்கு விரோதமாகவும் இங்கிலீஷ்காரர்களுக்குச் சகாயமாகவும் சைனியங்களை அழைப்பித்துக் கொடுப்பதாகத் தூத்துக்குடியிலிருந்த டச்சுக் கவர்ன்மெண்டாருக்குத் தகவல் அனுப்பியதுமாம். இப்படிச்சகாயம் செய்வதாக வாக்களித்த டச்சுக்காரக் கவர்ன்மெண்டாருடைய செயல்கள் திடீரென்று இங்கிலீஷ்காரருக்கு விரோதமாக மாறிவிட்டன. 1781-ம் வருஷம் பிப்ரவரி மாதம் கியாப்டன் எயிடிங்டன் என்றவர் ஸ்ரீ வில்லிபுத்தூர்க் கோட்டையைக் கைவசத்தில் வைத்துக் கொள்வதற்கு லெப்டினெண்டு ஹால்காட் (Lieutenant Halcott) துரையின் கீழ் சைனியத்தை அனுப்பி வைத்தார். அப்படி அனுப்பி வைக்கப்பட்டிருந்த சைனியம் சிவகிரியை ஜாக்கிரதையுடன் பாதுகாத்துக் கொள்ளப் பிரயோஜனமாவதுடன் அந்தப் பிராந்தியங்களில் ஹைதர் ஆலி முதலிய

வர்களின் உளவுகளைத்தெரிந்து கொள்வதற்குத்தகுந்த சாதனமாகுமென்றுந் திருநெல்வேலி ஜில்லாவின் மலைப் பிராந்திய நாட்டுப் பக்கங்களுக்கு ஸ்ரீ வில்லிபுத்தூரே உயிர் நிலையாகுமென்றுங் கொண்டிருந்த அபிப்பிராயங்களே காரணமாகலாம். சிவகிரிக்குச் சரியானவூரும் உண்மையில் அதன் பாளையக்காரருமான ஒருவர் பாளையங்கோட்டை ஜெயிலில் அடைபட்டிருந்தாரென்றும், அது சமயம் சிவகிரிப் பாளையக்காரராக இருந்தவர் வேறொருவர் என்றும் எயிடிங்டன் துரை கூறுகிறார்.

ஹால்காட்டுத் துரையின் வெற்றி

லெப்டினெண்டு ஹால்காட்டு துரையை 3000 கள்ளர் சைனியங்களும் 400 குதிரைப் படை வீரர்களும் கூடிக்கொண்டு மதுரையில் வைத்துத் தாக்கியதில் எதிரிகள் பக்கம் பெரும் சேதத்தை யுண்டாக்கியும் தம் பக்கத்தில் சிறுத்த நஷ்டங்களுடனும் ஹால்காட்டு துரை வெற்றி கொண்டனர். பாளையக்காரர்களுக்கும் ஹைதர் ஆலிக்கும் அந்தரங்க சமாச்சாரப் போக்கு வரத்துக்கள் நடந்து கொண்டிருந்தன வென்ற விஷயங்களும், அவைகளின் பயனாகப் பாளையக்காரர்களை நவாபுவின் ஆட்சியை நிராகரித்துவிட வேண்டுமென்றும், ஹைதர் கேட்டுக் கொண்ட விஷயமும் திட்டமாகத் தெரிந்து விட்டதென்ற விவரமாகியவைகள் எயிடிங்டன் துரை தெரிவித்ததுடன், இங்கிலீஷ்காரர்களுக்கு விரோதமாகக் கிளம்புவதற்கு டச்சுக்காரர்கள் தூத்துக்குடியில் அரணை வலுப்படுத்திக் கொண்டிருக்கும் விஷயத்



தையும் டச்சுக் கவர்ன்மெண்டாரின் கொடிகளைத் தன்னுடைய நாட்டில் கட்டியிருந்த பாஞ்சாலங் குறிச்சியாருக்கு டச்சுக் கவர்ன்மெண்டார் உதவி செய்ததையும், அதன் பயனாகப் பாஞ்சாலங் குறிச்சியார் விரட்டப்பட்டவராகி, இராமநாதபுரத்துச் சீமையிலுள்ள கமுதியில் ஒளிந்துகொள்ள அங்கு அவர் இங்கிலீஷ் சைனியங்களால் தோற்கடிக்கப்பட்டுக் கீழ்ப்பணிந்துவிட்டார் என்ற விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார். இதே வருஷம் அக்டோபர் மாதத்தில் எயிடிங்டன் துரை மீது சில புகார்கள் கிளம்பவும், அவருடைய ஸ்தானத்தில் கியாப்டன் பில்கிளிப் (Captain Bilcliff) துரை நியமுகமாயினர். இத்துடன் 1781-ம் வருஷத்தில் நிகழ்ந்துள்ள வேறு விஷயங்களுமுள. அவை வருமாறு:—

திருநெல்வேலி ஜில்லாவை டச்சுக்காரருக்குக் கொடுத்துவிட நிச்சயித்தல்

இந்தியா தேசத்து கவர்னர் ஜெனரல் அவர்களான உவாரன் ஹேஸ்டிங்க்ஸ் பிரபுவானவர், கர்நாடக தேசத்தில் ஹைதர் ஆலியின் இடைவிடாத யுத்தங்கள் தென்கோடியிலிருக்கும் இந்த ஜில்லாவிற்குள்ளும் பிரவேசித்துவிட்டன என்பதையும், பிடிவாத சுபாவமும் போரிலேயே மிகுத்து ஆசை படைக்கப்பட்ட குணம் வாய்ந்துள்ளவர்களுமான பாளையக்காரர்களின் கட்டுப்பாடற்ற செய்கைகளையும் அவர்களால் வீணாக ஏற்படும் போர்களையும் கருதி, திருநெல்வேலி ஜில்லாவை டச்சுக்காரர்களுக்கு விட்டுவிடுவதென்றும், அவ்விதம் அதனை அடையும் டச்சுக்காரர்கள், தாங்க

ளையும் லாபத்திற் கீடாக ஆயிரம் காலாட் படைகளையும், இருநூறு பீரங்கிப் படைகளையும், ஆயிரம் மலேயாச் சைனியங்களையும் கும்பினியார்களுக்குக் கொடுப்பதுடன் அவைகளின் பாதுகாப்புக்கு நேரிடுகிற செலவு முதலியவைகளைத் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்தே ஈடுசெய்து கொண்டு மீதத்தை டச்சுக் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ள வேண்டியதென்றும், முத்துச் சிலாபத்தில் கிடைக்கும் லாபத்தை டச்சுக்காரர்களே சர்வ சுதந்தர பாத்தியதையுடன் அனுபவித்துக் கொள்கிறதென்றும், பேருக்குமட்டும் நவாபுவின் ஆக்ஷி அங்கிருக்க வேண்டுமென்றுதிய நிபந்தனைகளடங்கிய வோர் உடன்படிக்கை தஸ்தாவேஜை எழுதி யனுப்பி, அதனை, வங்காளத்துச் சீமையிலிருக்கும் டச்சுக் கவர்ன்மெண்டாரிடம் பிரரேபித்தார். இவ்விதம் அனுப்பி வைக்கப்பட்ட தஸ்தாவேஜை அங்குள்ள டச்சுக் கவர்ன்மெண்டாரின் ஏஜண்டும் அங்கீகரித்துக் கொண்டு, அந்த உடன்படிக்கைத் தஸ்தாவேஜில் நவாபுவின் கையெழுத்து மட்டுமின்றி, டச்சுக்காரர்களுக்குப் பிரதான ஸ்தலமான ஜாவாதீவிலுள்ள பட்டேவியாவிற்குள் இந்தியாவிலுள்ள டச்சுகவர்ன்மெண்டும் கீழ்ப்பட்டிருந்ததால் அங்கு தெரிவிக்கப்பட்டு, அதற்குப் பதில் இங்கு கிடைப்பதற்குப் பல நாட்கள் சென்றதால் இது முற்றுப் பெறாது போனதுடன் மேலே சொல்லிய முக்கியமான விஷயங்களிற் சிலவுந் தடையாக இருந்துவிட்டன.

---

## பதிறோராம் அத்தியாயம்

## மத்தியகாலத்தியது

கமிட்டி ஆப் அஸெண்டு மெண்டு ரெவினியு ஏற்படல்

கர்நாடக தேசத்திலுள்ள மற்ற ஜில்லாக்களைப் போலத் திருநெல்வேலி ஜில்லாவும் பிரிட்டிஷ் ஈஸ்டு இந்தியக்கும்பினியாருக்கும் நவாபுவிற்கும் நிகழ்ந்த 1781ம் வருஷத்திய உடன்படிக்கையின்படி சிவில் விஷயமான ஆட்சியில் கும்பினியாரின் கீழாகச் சிறிது காலம் வரை இருக்கும்படி நிகழ்ந்தது. நாம் பிரஸ்தாபிக்கும் காலத்தில் போர்டுஆப்-ரெவினியு என்பது கிடையாது. அது 1786-ல் உண்டாயது. ஆனால் நாம் இப்போது சொல்லிக் கொள்ளும் ரெவினியூ போர்டு என்ற ஸ்தானத்தில் ஆறுபேர்களடங்கிய ஒரு சபை இருந்தது. அதைத்தான் கமிட்டி ஆப் அஸெண்டுமெண்டு ரெவினியு என்று சொல்வது வழக்கம். அதிலிருந்த ஆறு பேர்களிலொருவர் தான் ஜார்ஜ் புராக்டர் (George Proctor) துரையாவர். இவர் தான் நமது ஜில்லாவிற்கு முதலாவது கலெக்டராவர். இவருக்குப் பின்னர் வந்தவர் எயில்ஸ் இர்வின் (Eyles Irwin) துரையாவர். நவாபிடம் செய்துகொண்ட உடன்படிக்கையில் " இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஹைதர் ஆலியின் சண்டையைக் குறித்துள்ள செலவுக்காகக் கர்நாடக தேசத்து வருமானம் (ரெவினியு) முழுவதையும் மாஜிமை தங்கியு ஹிஸ் ஹைனஸ் தி நவாபு துரையவர்கள் கும்பினியாரின்

ஆட்சியின் கீழ்விட்டுவிட்டார்கள். ஆனால் அந்த தேசத்தின் மொத்த வரும்படியில் ஆறிலொரு பங்கை ஹிஸ் ஹைனஸ் தி நவாபு துரையவர்களுக்கும் அவர்களது குடும்பத்துக்கும் செலவின் நிமித்தம் கொடுத்து விட வேண்டுமென்றுமிதியவைக ளடங்கியிருந்தன. '' இது சமயம் சென்ன பட்டணத்தில் கவர்னராக இருந்த மக்கார்ட்னி பிரபு (Lord Macartney) இந்த உடன்படிக்கையின் வலுவைக்கொண்டு ஒவ்வோர் ஜில்லாவிலும் உத்தியோகஸ்தரை ரெவினியு விஷயமாக நியமிக்க, அவர்களுக்கு அஸைண்டு ரெவினியு ரிஸீவர்கள் என்றும், அஸைண்டு ரெவினியு சூப்பிரண்டெண்டுகள் என்றும் பேர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இத்துடன் 1781-ம் ஆண்டு நிறைவுற்றது. இதனிடையிலுள்ள காலத்திற்றான் சிவராமத் தலைவரென்ற ஒருவர் திருக்குறுங்குடியில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்கவும் அதனை அழித்து விட்டார்கள்.

இங்கிலீஷ்காரர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் ஏதோ சில வியாபார நிமித்தமோ, வேறு எக்காரணத்தாலோ சச்சரவுகள் கிளம்பிவிடவே, நமது ஜில்லாவை பந்தோபஸ்துச் செய்யவேண்டி, முன் எச்சரிக்கையாகப் பாளையங்கோட்டையிலிருந்த கும்மாந்தந்துக் கம்மாண்டர் கியாப்டன் பில்கிளிப் துரை, லெப்டினெண்டு உவீலர் (Lieutenant Wheeler) துரையைச் சில சைனியங்களுடன் அனுப்பிவைக்க, அவர் தூத்துக்குடியைப் பிடித்துக் கொண்டார். பிடிபட்டுள்ள தூத்துக்குடியி

இங்கிலீஷ் காரருக்கும் டச்சுக்காருக்கும் சச்சரவு நிகழ்தல்



லிருந்த டச்சு சைனியங்களைச் சிறைப்படுத்திக்கொண்டும், அங்கு கிடைத்த பீரங்கிகளையும் கைவசப்படுத்தி எடுத்துக்கொண்டும், அங்கு அது சமயம் டச்சுக்காரர்களுக்கு உதவியாக அனுப்பி வைக்கப்பட்டிருந்த பாஞ்சாலங் குறிச்சிச் சைனியம் இருநூறையும் பிடித்துக் கொண்டார்கள்.

புன்னைக் காயலிலும் மணப்பாட்டிலுமுள்ள வியாபார மனிகைகள் அழிக்கப்பட்டதுடன் தூத்துக்குடிக் கோட்டைக்குள், எவ்விதமான வரத்துப் போக்குகளையும் தடை செய்து வைத்ததுடன் கோட்டையைச் சுற்றி வெளிப் பக்கங்களிலிருந்த மனிகைகளும் வியாபார வசதிகளும் அழிக்கப்பட்டன. தூத்துக்குடியில் இனி ஏதாவது டச்சு சைனியங்கள் வந்திறங்குவதானால் தூத்துக்குடிக் கோட்டையையே அழித்து விடும்படிக்கும், இராணுவ இலாகா மூலம் உத்தரவும் பிறப்பிக்கலாயிற்று. இதன் மத்தியில் தூத்துக்குடியிலிருந்த பரவர்களின் பொருள்களையும், டச்சுக்காரர்களின் பொருள்களை எடுத்துச் செல்லும்போது கொண்டு போகப்பட்டனவென்றும், அவைகளை அவரவர்களிடம் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அவர்களை மறுபடியும் தூத்துக்குடிக்குப்போய் குடியேறும்படிக்கு உத்தரவாக வேண்டுமென்றும், கலெக்டர் புராக்டர் துரையிடம் முறையிட்டு வேண்டிக்கொள்ள, அவரும் உடனே இராணுவ இலாகா உத்தியோகஸ்தரை, இவ்விதச் செயல்கள் ஒழுங்கீனமானவைகளென்றும், இவைகள் கிரிமினல்

தூத்துக்குடி ஜனங்கள் கலெக்டரிடம் புகார் செய்தல்

பாவத்தில் வந்து முடிந்துவிடுமென்றும், இனி மேலும் இது போன்றவைகளைச் செய்வதாக இருந்தால் விபரீதமாகி விடுமென்றும் கண்டித்துப் பரவர்களின் வேண்டுகோள்களையும் பூர்த்திசெய்துவைத்தார். இவர்களது ஜாதித் தலைவருக்கு அந்தஸ்தின் அடையாளமாக ஆடையொன்றும் சன்மானஞ் செய்யப்பட்டது.

கலெக்டருக்கும் குத்தகை தாருக்கும் ஏற்பட்ட தாவாக்கள்

குத்தகை தாரரான திருமலையப்ப முதலியாருக்கும் கலெக்டருக்கும் மாசூல்களின் ஏற்றமுந் தாழ்வுமான விலை வாசிகளையிட்ட தாவாக்கள் ஏற்படலும், குத்தகையை வேறு எவருக்காவது விட்டுவிட வேண்டுமென்றும், அப்படிக்கு விட்டு விடுவதானல் தீத்தாரப்ப முதலியாருக்கே விட்டுவிடுவதென்றும், அதன் பின்பு மதுரையிலிருந்த அமுல் ரெங்காராயருக்கு விட்டுவிடுவதென்றும் சிபார்சு செய்தார்கள். இப்படி இருக்கும் சமயத்தில் குத்தகைதாருக்கும் கலெக்டருக்குமுள்ள தாவாக்கள் நாளுக்குநாள் முற்றிக் கொண்டே போய்க் கடைசியாக கமிட்டிவரை புகார்கள் பலவாறாக எட்டிவிட்டன. இத்துடன் நிற்காமல் இராணுவ இலாகாத் தலைவருக்கும் கலெக்டருக்கும் கக்ஷிப்பிரதி கக்ஷிகள் ஏற்பட்டுவிட்டன. இதன்பயனாக அக்கவுண்டுகளை வரவு செலவு கணக்குகள் சகிதம் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும், ஜில்லாக்களின் ரெவினியு மானேஜ்மெண்டு காரியங்களைத் தெரிந்துகொள்ள சில மெம்பர்களடங்கிய கமிட்டி ஒன்றை அடிக்கடி விசாரணைக்கு ஆங்காங்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் நிச்



சயம்செய்யலாயிற்று. இவ்விதச் சம்பவங்களினிகழ்ச்சியின்போதே 7-12-1782-ல் ஹைதர் அலி இறந்துவிட்டார். 1782-ம் வருஷமும் முடிந்தது.

பாளையக் காரர்களுக்கு கிஸ்துகளை ஏற்படுத்த நிச்சயித்தல்

சென்னபட்டணம் கவர்னரான மக்கார்ட்டினி பிரபு திருநெல்வேலிச் சீமையின் நிதானத்தை அறிந்து தெரிவிக்கும்படிக்கு, இர்வின் துரையின்கீழமைந்துள்ள கமிஷன் ஒன்றை அனுப்பி, அந்தக் கமிஷன் விசாரணை சம்பந்தமாகப் பாளையக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷமொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அவர் அவர் வரும்படிக்குத் தக்கவாறு கப்பமாக ஏற்படுத்த வேண்டியதென்றும், குத்தகைதாருக்கும் குடியானவர்களுக்கும் ஏற்பட்டுள்ள தாவாக்களைக் குத்தகைதாரரான முதலியாரிடமும், குடியானவர்களின் தாவாக்களைக் குடியானவர்களிடமும் தனித் தனியே வெவ்வேறாகக் கேட்டு அவைகளைச் செய்துவைக்க வேண்டியதில் சிறிதுகூட நியாயத்துக்கு விலகாமல் செய்துவைக்கவேண்டியதென்றதுமாகிய நிபந்தனைகளடங்கிய அதிகார சுதந்திரத்தை இர்வின் துரை பெற்றுக்கொண்டு வந்தார்.

அதிகாரம் பெற்றுள்ள இர்வின் துரையின்கீழ் கமிஷன் வரவு செலவுக் கணக்குகளைக் கலெக்டர் புராக்டர் துரையிடமிருந்து வரவழைத்து விசாரணை செய்யவும், அவைகள் சீர்கேடாக இருந்தனவென்பதையும், அநேக அயிட்டவாரியாகக் கண்டுள்ள செலவுகளில்

கலெக்டர் புராக்டர்துரை மீது சிவில் வியாஜ்யம்

பெரும்பாகம் அவருடைய சொந்தச் செலவுகளைக் காட்டிக் கணக்கு எழுதப்பட்டிருப்பதையும், வரவு வந்த பணத்துக்குச் செலவு காட்டிய ரசீதுகளை நீக்கிச் செலவுசெய்த பாக்கித்தொகைகளுக்கு இரசீதுகளே யில்லாதிருந்தன என்பதையும் கண்டு, அப்படிக்குள்ள செலவுகளைச் செய்து கொள்வதற்கு கவர்ன்மெண்டாரிட மிருந்து ஏதேனும் சாங்கிஷன் பெற்றிருப்பதுண்டாவென்று கலெக்டர் புராக்டர் துரையைக் கமிஷன் விசாரணைத்தலைவர் கேட்டுக் கொண்டதற்கு, அது எதுவுமே கிடையாதென்று அவர் பதிலளிக்க, உடனே இந்த விவரங்களை யெல்லாம் ஆதியோடு அந்தமாக எழுதிச் சென்னபட்டணங் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க, அவரை (கலெக்டர் புராக்டரை) உடனே சென்னபட்டணத்துக்கு உத்தியோகத்தினின்றும் நீக்குவித்து அனுப்பிவைக்கும்படிக்கு இர்வின் துரைக்கு உத்தரவு சாதராக, அதன்படியே அவரை அனுப்பிவைத்தார். அங்கு செல்லவும் அவருடைய சீர் கேடான செலவு அழிவுகளின் கணக்குகளுக்கு அவரே நேர் ஜவாப்தாரியென்றும், அவர்மேல் பாக்கி கட்டிவைக்கப்பட்டிருக்கும் கணக்கில் கண்ட தொகைகளுக்குள்ள ரொக்கம் வகையராக்களை அவரே கொடுத்துத் தீர்த்து வைக்க வேண்டுமென்றும், அவரை நிர்ப்பந்தம் செய்யவும், அவ்விதம் கொடுத்துக்கொள்ள தன்னால் முடியாதென்று ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டார். ஆதலால் அவர் மீது ஒரு சிவில் வியாஜ்யத்தைச் சென்ன



பட்டணத்து மேயர் கோர்ட்டில் தொடர்ந்தார்கள். கேஸின் முடிவின் விவரம் இன்னதென்பது காணப் படவில்லை.

புல்லர்டன் துரையைச் சைனியங்கள் சகிதம் திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தல்

இரண்டாவதாக இந்தக் கமிஷன், பாளையக்காரர்களின் விஷயங்களை யெடுத்துக்கொண்டு விசாரணையை ஆரம்பித்து விட்டது. அவ்விசாரணையில் சென்ற 5 வருஷகாலங்களாகப் பாளையக்காரர்களின் தகாத செய்கைகளை, எந்த நிலைமையில் எப்போது அடைக்கியிருக்க வேண்டுமோ அந்நிலமையில் அப்போது முன்னமே அடக்கி விடாமல், அவர்களின் மனப்பாங்கின் படிக்கு வளர்த்து விட்டதில் அவர்கள் தங்களுடைய வரம்புக்குள் நடந்து கொள்ளவேண்டிய முறையின்னதென்று தெரியாமல், துரைத்தனத்தாரை அலக்ஷிய புத்தியினால் புறக்கணிக்கும் சுபாவமும் அவர்களின் தேகத்தை யொட்டியே ஒரு புறமாக வளர்ந்து கொண்டே வந்து விட்டதால், அவர்களுக்குச் சரியான படியாயுள்ள புத்திமதிகளைப் புகட்டி, அவர்களால் அலக்ஷியமாக நினைக்கப்படுகிற கும்பினியார்கள் இன்னாரென்று அவர்களுக்குத் தெரியும்படிக்குச் செய்வதானால் அவர்களை ஒருவாறு கீழ்ப்படியும்படி செய்யக் கூடும். அப்படி அவர்களைச் செய்வதற்குத் தகுந்த மருந்து கும்பினிப் பட்டாளத்து ஆயுதப் பிரயோகங்களின் மருந்தே யன்றி, வேறல்லவென்று தெரிவிக்கவும், கர்னல் புல்லர்டன் துரையை இராணுவ சகிதம் திருநெல்வேலி ஜில்லாவின்மேற் படை எடுத்துச்

செல்லும்படி, கும்பினியார் உத்தரவு கொடுத்து விட்டார்கள். இப்படிக்கு உத்தரவு பெற்றுக்கொண்டுவந்த சைனியம் மதுரை, மேலூர், சிவகங்கை முதலிய சீமைகளில் செய்துள்ள விஷயங்கள் நமது ஜில்லாவின் சம்பந்தமில்லாதவைகளாக இருப்பதால் அவைகளை யிங்குநீக்கி, நமது ஜில்லாவில் நிகழ்ந்தவைகளை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுவோம்.

புல்லர்டன் துரை பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கல்

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அப்போதைய பாளையக்காரருள் சிவகிரியாரும் பாஞ்சாலங் குறிச்சியாரும் எவ்விதக் கட்டுப் பாட்டையும் தங்களுக்குத் தோன்றிய போதெல்லாம் மீறியும், வரம்புகடந்த செய்கைகளைச் செய்தும், கும்பினியாருக்கும் மற்றப் பாளையக்காரர்களுக்கும் குடித்தனக் காரர்களுக்கும் வெறுப்பை உண்டுபண்ணிக்கொண்டு வந்ததிலிருந்தும், அவையிரண்டையுமே தாக்குவது முதல் வேலையென்று சிவகங்கைச் சீமையைவிட்டுத் திருப்பாச்சி மார்க்கமாகப் பள்ளிமடம், பந்தல்குடி, நாகலாபுரமாகிய வழியில் எட்டயபுரம் பாதையினின்றும் ஒதுங்கிப் பாஞ்சாலங் குறிச்சியைப்போய்ச் சேர்ந்து 13-வதும், 24-வதுமான கர்நாடக தேசத்திய 2 ஐரோப்பியப் பட்டாளங்களுடனும் 1-வது குதிரைப் படையுடனும் அதன் கோட்டையைத் தாக்க இருதரத்தாருக்கும் நஷ்டம் அதிகமாக இருந்தும், கடைசியாக, கட்டபொம்மு நாயக்கர் ஊக்கங்கெட்டு ஓடிவிடவும் ஜயமடைந்த கும்பினிச் சைனியம் அந்தக் கோட்டையினுள் பிரவேசிக்க,



அங்கு ஏராளமான வெடிகளும் ஆயுதங்களும் வெடி மருந்துகளும் குண்டுரவைகளும் இருக்க, அவைகளைக் கைப்பற்றிக் கொண்டதுடன் அரண்மனைக் கஜானுவில் காணப்பட்ட 40 ஆயிரம் பூவராகன்களையும் சிப்பாய்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

சிவகிரியார் டச்சுக்காரர்களின் சகாவென்றது

இதன்பின்பு சிவகிரிக்குப் பட்டாளம் செல்லவும், அங்கு ஏராளமாகச் சேர்த்துவைக்கப்பட்டிருந்த மருந்துப் பட்டரைகளையும் தளவாடங்களையும் கண்டார்கள். அங்ஙனம் வைக்கப்பட்டிருந்த தண்டு தளவாடங்கள் டச்சுக்காரர்களின்உபயோகத்தின் நிமித்தமென்றுந் தெரியவந்ததாம். சிவகிரியார் இதற்குமுன் செய்துள்ள கொடுமைகளும் வரம்பின்றி நடந்து கொண்டவைகளும் கும்பினியாருக்கு ஒருபக்கமிருக்க, அவர் பாஞ்சாலங் குறிச்சியாரைப் போல டச்சுக்காரர்களின் நலம் கருதுவதும் இங்கிலீஷ்காரரை வெறுப்பதும் சமீபத்தில் கியாப்டன் கிரஹாம் காம்பெல் (Captain Graham Campbell) துரையைக் கொன்றுவிட்டு அவரது சைனியங்களை வீணுகஹிம்சை செய்ததும் கும்பினியாருக்கு வருத்தத்தையுண்டாக்கியது. கும்பினிச் சைனியம் அங்கு சென்றிருக்கும் விவரத்தைக் கேள்வியுற்ற பாஞ்சாலங்குறிச்சியாரும் வேறு சில பாளையக்காரர்களும் அவரவர் சைனியங்களுடன் சிவகிரியாருக்கு உதவியாகச் சென்றிருந்தனர். அப்படிக்கு உதவிக்கு வந்திருந்த சைனியத்தின் மொத்த எண் சிவகிரிச் சைனியமுள்பட ஒன்பதாயிரமாகும். இவ்வித முற்றுக்கையிலுள்ள சிவகிரிப்

பாளையக்காரர் கும்பினிச் சைனியத்தைக் காணவும், பாளையக் காரர்களுக்குள்ள வழக்கம்போல சமயத்துக்குத் தக்கபடி இணங்கிப் போவதாக வாய்ச்சொல்லில் மட்டுங் கீழ்ப்படிந்து கொண்டால் அதன்படி “நாமும் சரியென்று சொல்லிவிடுவோமே யானால் நாம் ஏதோ தாக்ஷணியத்தின் நிமித்தமும் தயாவிஷயமாகவும் மன்னித்ததாக அவர்கள் நினைக்க மாட்டார்கள். நம்மையோ அவர்கள், அப்படிச் செய்துவிட்டால் துரும்பிலுங் கேவலமாக நினைத்து நம்மால் ஒன்றுமே ஏலாது என்று நம்மை ஏளனம் செய்துவிடுவார்கள். அதுவுமின்றிக் கர்னல் ஸ்டூவர்ட்டு (Colonel Stuart) துரையும் கர்னல் எல்ப்ன்ஸ்டன் (Colonel Elephinstone) துரையும் திண்டுக்கல்லுக்கு வந்திருக்கிறார்கள். அங்கு திப்பு சுல்தான் நமது துரைத்தனத்தார் சொல்லியவைகளைக் கேளாமல் சண்டைக்குத் தயாராக இருப்பதால் பாளையக்காரர்களுடன் நாம் சண்டையை ஜரூராக முடித்துவிடவோ அல்லது நாம் சொல்லுகிறதைச் சிவகிரியார் கேட்டுக்கொண்டு மற்றப் பாளையக்காரர்களுடன் கலந்து இந்த ஜில்லாவிலுள்ள முப்பத்திரண்டு பாளையக்காரர்களும் நன்றாக ஆழ்ந்து யோசித்து அவர்கள் துரைத்தனத்தாருக்குச் செலுத்தவேண்டிய பாக்கி ரூபாய் 12 லக்ஷத்தையும் ஒரு காசுகூட பாக்கியின்றிக் கொடுத்துத் தீர்த்துவிட வேண்டுமென்றும் அப்படிச் செய்துகொள்ளத் தவறுவதாக இருந்தால் தவறுகிற பாளையப் பட்டுகளைத் தாக்குவது நிச்சயம்”



கிருந்த பாஞ்சாலங் குறிச்சி முதலிய பாளையக்காரர்களும் அவரை நேரில்கண்டு கலந்துகொள்வதாகச் சொல்லிவிட்டு அதன்பின்னால் தங்களால் புல்லர்டன் துரை ஜாகை வைத்திருக்கும் கூடாரத்திற்குச்சென்று பார்க்கச் சரிப்படாதென்று சொல்லிவிட்டார்கள்.

புல்லர்டன் துரைமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தல்

தூதுவர் மூலம் இதனைக் கேள்விப்பட்ட புல்லர்டன் துரை நிராயுதபாணியாகத் தனிமையில் அவர்களிடம் நேரிற் சென்று சகல விஷயங்களையும் எடுத்துச் சொல்லிவிட்டுத் திரும்பும் சமயம் மாலைப்பொழுதாகி இருள் நாலாபக்கங்களிலும் பரவவும், அவருக்கு முன்பாகப் போய்க் கொண்டிருந்த சிலர்க்குப் பின்னால் துரை செல்லும்போது, ஒரு துப்பாக்கி சுடப்பட்ட தொனியைக் கேட்டு அவர் திடீரென்று திரும்பிப் பார்க்கவும், அக்கூட்டத்துள் கடைசியாக வந்துகொண்டிருந்த தன்னையே லக்ஷியம் வைத்துச் சுடப்பட்டதென்று தெரிய வந்தது. இவ்விதம் சுடப்பட்ட துப்பாக்கியின் குண்டு எவர்மேலேனுந் தைக்காமல் தெய்வச் செயலால் விலகிவிட்டது. மறுதினம் சண்டை ஆரம்பமாகிவிட்டது. சிவகிரியில் அப்போது சொக்கம்பட்டியாருமிருந்தார். பாளையக்காரர்கள் வீராவேசத்துடன் கும்பினிச் சைனியங்களை எதிர்த்தனர். ஆனால் கும்பினிச் சைனியங்கள் அதனைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாது பெருத்த உத்சாகத்துடன் எதிரிகளின்மேற் பாய்ந்தன. மலையின் உச்சியிலுஞ் சென்று அங்குள்ள பாளையக்காரர்களின் சைனியங்களையும் விரட்டியடித்

தன. நஷ்டமும் உயிர்ச்சேதமும் இருதாரத்தாருக்கும் சமமாகவே தானிருந்திருக்கலாம். கோட்டையும் ம[illegible] பிரதேசத்துள்ள அரண்களும் பிடிபட்டுவிட்ட[illegible] அங்கு 3-வதும் 9-வதுமான பட்டாளங்களைக் கா[illegible] வைத்துவிட்டு ஸ்ரீ வில்லிபுத்தூருக்குப் போய் வட பாகத்திலுள்ள பாளையப் பட்டுகளிலுள்ள சிக்கல்களை நீக்குவதற்குப் புறப்பட்டுவிட்டனர்.

புல்லர்டன் துரை பாளையக்காரர்களுக்குப் புகட்டிய புத்திமதிகள்

திப்பு சுல்த்தானின் யுத்தத்தைக் குறித்து புல்லர்டன் துரை செல்லவேண்டிய தவசியமாதலால், செப்டம்பர் மாதம் 21-ந் தேதியில் அவர் புறப்பட்டு விடுவதாகவும், அப்படி அவர் போவதற்குள் பாளையக்காரர்கள் ஏதேனுமொரு முடிவுக்கு வந்து சேரவேண்டு மென்றும் தெரிவித்து விட்டு, அங்கு கூடியிருந்த பாளையக்காரர்களைப் பார்த்து "உங்களுக்குள் சம்ஹாரமூர்த்தி யென்று நீங்கள் கருதுகின்ற சிவன் சாக்ஷியாக நான் சொல்வது என்னவெனில், உங்களில் எவர் வீணாகக் கலகத்துக்கு எத்தனித்துக்கொண்டு இராஜாங்கத்தாருக்குச் செலுத்தவேண்டிய பாக்கிக் கிஸ்துத் தொகையை செலுத்தாமலிருக்கிறார்களோ அவர்களுக்கு நானே முக்கண்ணனாகி அவர்களுடைய சீமைகளையும் திரிபுரசம்ஹார காலத்தில் செய்ததை யொப்ப சாம்பராக்கிவிடுவேன். இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!" என்று ருத்ரா வேசத்துடன் அண்டம் வெடிக்கும்படி சொல்லியதைக் கேட்கவும், பாளையக்காரர்கள் திடுக்குற்று முடிவுக்கு வந்துவிடுவதாகச்



சம்மதித்துக் கோட்டைகளையும் மருந்துப் பட்டறைகளையும் எடுத்துவிடுவதாகவும் உறுதிமொழி கூறினர்கள். சிவகிரியாரும் பாஞ்சாலங் குறிச்சியாரும் கீழ்ப்படிந்து விட்டதாக இர்வின் துரை தெரிவித்தார். பாஞ்சாலங் குறிச்சியின் முற்றுகையில் கைதிசெய்யப்பட்டவர்கள் நூற்றுக் கணக்கிலடங்குவர். அவர்களில்பெண்பாலரும் சிலர். அதில் கட்டபொம்மு நாயக்கரின் புத்திரியும் ஒரு நபராகுமென்றது தெரியவந்தது.

ஓர் உடன்படிக்கை

டச்சுக்காரர்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்கும் நேயப் பான்மை ஏற்பட்டுவிட்டதால் தூத்துக்குடியிலிருக்கும் டச்சுக்காரர்களைப் பாளையக்காரர்களுடன் நேசம் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் ஏற்பாடு செய்யலாயிற்று. இத்துடன் 1783-ம் வருஷமும் நிறைவுற்றுவிட்டது.

கோல்வார் பட்டியில் ஒரு கலியுக பாதன்

கும்பினியாருக்கும் பாளையக் காரர்களுக்கும் சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த உடன்படிக்கைக் கொவ்வ, அநேக பாளையக்காரர்கள் கீழ்ப்படிந்து விட்டதால் கப்பத்துப் பாக்கிக்காகப் பாளையங்கோட்டையில் சிறைப் படுத்தி வைக்கப்பட்டிருந்த பாளையக்காரர்களில் அநேகர் மன்னிப்படைந்தனர். இவர்களுள் கும்பினியாரை எதிர்த்துச் சண்டை செய்த குற்றத்தினிமித்தம் இருபது வருஷங்களுக்கு முன்னம் காவலில் வைக்கப்பட்டிருந்த கோல்வார்பட்டிப் பாளையக்காரரான கலங்காத கண்ட நாயக்கருக்கு அப்போது

சிறிய பையனாகவும், நாம் பிரஸ்தாபிக்கும் இப்போதைய காலத்தில் அதன் பாளையக்காரராகவுமிருந்தவர், மற்றப் பாளையக்காரர்களுக்கு மன்னிப்புக் கிடைத்த தென்றதைத் தெரிந்து, இர்வின் துரையிடம் சென்று மிகப் பரிதாப நிலைமையில் தன்னுடைய தகப்பனை தயா விஷயமாகவாவது மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவும், அப்பிரார்த்தனைக்கு அவர் மனங்கசிந்தவராகி உடனே கேட்டுக் கொண்டவாங்கே, அன்னாது தந்தையாரைச்சிறையினின்றும் விடுதலை செய்யவும், தன்னுடைய பிதாவின் வரவை ஆவலுடனும் ஏக்கத்துடனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இவ் வாலிபப் பருவமுள்ள பாளையக்காரர், இராமனைக் கண்டு பட்டாபிஷேகத்தைச் செய்து வைத்து இராஜ்ய பாரத்தினின்றும் விலகிக் கொண்ட பரதனைப் போலத் தன் தகப்பனுருக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்து வைத்துக் கண்குளிரப் பார்த்து ஆனந்தமடைந்தாரென்று தெரியவருகிறது. தன்னலமறுத்த இச்சிறுவரது குணம் ஒரு கால் பிதிர்வாஞ்சையினுண்டாயதெனினும், இவர் ஒருவருக்கே அது சிறந்ததாகும் என்றது, இவரை யொத்த ஏனையோருக்கு இத்தகைய உத்தம குணம் வாய்த்தல் கூடுமோவென்று சந்தேகம் நிகழ்தல் பற்றி என்க. இத்துடன் 1784-ம் வருஷம் முடிந்தது.

---

## பன்னிரண்டாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

அலைன்றுமெண்டு ஆப்ரெவினியு ரத்தாகி விடல்

முன்னம் பாராக்கிராபுகளிற் சொல்லிய ஒப்பந்தப்படிக்குள்ள அலைன்றுமெண்டு ரத்தாகிவிட, மறுபடியும் ரெவினியு விஷயமான சகல நடவடிக்கைகளையும் நவாபுதுரையவர்களிடமே கும்பினியார் ஒப்புடைத்து விட்டுத் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கமிஷனின் விகிதம் கிடைக்கும் தொகையை மட்டும் அலெவென்ஸாகப்பெற்றுக் கொள்ளச் சம்மதித்துக் கொண்டனர். இது விஷயமாக இர்வின் துரை கவர்ன்மெண்டாருக்கு இவ்வித நடவடிக்கைகள், அதிலும் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களைப் பொருத்தமட்டிலும் ஏகதேசமாக நல்ல ஸ்திதிக்கு வந்து கொண்டிருப்பதையுங் கெடுத்து விடுமென்றும், இன்னுஞ் சிறிது காலம்வரை அவைகளை முன்போல வைத்திருந்து அக்டோபர் மாதங் கழிந்த பின்னராவது இதனை அமுலுக்குக் கொண்டு வருவதானால் ஏகதேச நியாயத்தில் நலமாக இருக்கலாமென்றும் எழுதியது அங்கு போய்ச் சேர்வதற்குள் ரத்து உத்தரவு அமுலுக்கு வந்துவிட்டது. இர்வின் துரை தன் கீழுள்ள சார்ஜையும் பாக்கிகள் உள்பட சகல கணக்குகளையும் 28-6-1785ல் உத்தரவுக்குக் கீழ்ப் பணிந்து கொடுத்து விட்டதாய் ரிப்போர்ட்டு செய்து விட்டார்.

இவர் இந்த ஜில்லாவை ஒப்புக் கொடுக்கும் போது இனி [illegible] எடுத்துச் சொல்லி

விட்டு சென்னபட்டணம் போகும் மார்க்கத்தில் மதுரையைச் சேர்ந்த மேலூரிலிருந்து டோரின் துரையின்கீழ் அஸைன்டு ரெவினியு ஸிஸ்டத்தில் மதுரை ஜில்லா விருத்தியடைந்திருப்பதையுங் கவர்ன் மெண்டாருக்கு எழுதியதில் இனிமேலாக இந்த இரண்டு ஜில்லாக்களிலும் ஏற்படப் போகும் சீர் கேடுகளை விளக்கியும் எழுதியுள்ளதில் பாளையக் காரர்களின் செய்கைகள் மறுபடியுங் கிளைத்து விடு மென்றும், நவாபுவின் ஏஜெண்டுகளின் காரியங்களும் உத்தியோக முறைகளில் சீர்கேடாகி விடுமென்றும் தெரிவித்தார். இந்த டோரின் துரைதான் 1790-ம் வருஷத்திய அஸம்ஷன் என்ற ஒப்புக் கொள்ளற்படிக் கும் 1792-ம் வருஷத்திய உடன்படிக்கையின் படிக் கும் திருநெல்வேலி ஜில்லாவில் கலெக்டர் உத்தி யோகத்தை முதலில் வகித்தவராவர். முன்னம் நாம் சொல்லியுள்ள மருதூர் அணைக்கட்டைப் புதிப்பித்தா ரும் இவரே யாவர். முன்னொரு சமயத்தில் திருநெல் வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்களின் சைனியங் களின் மொத்த எண் 35,000 என்று சொல்லியுள்ளது ஞாபகமிருக்கலாம். அவை இக்காலத்தின் போது 45,000ங்களாயின. நவாபுவின் சைனியங்கள் பாளையக் காரர்களின் சைனியங்களை எதுவுமே செய்துகொள்வ தற்குக் கூடாதவைகள் என்றதையுங் குறிப்பிட்டுவிட்டு நவாபுவிற்குப் போதுமான பின்பலமிருக்கிறதென்று தெரிந்தாலன்றிப் பாளையக்காரர்களிடமிருந்து கப்பம்

இர்வின் துரையின் முன்னுரைகள்



வசூலிக்க மார்க்கமிராதென்றும், அப்படிக்கில்லாவிடில் பாளையக்காரர்கள் தயாவிஷயமாகக் கொடுக்குங் கிஸ் தியைமாத்திரம் பெற்றுக்கொள்ள நேரிடும் என்ற விவ ரத்தையும் இர்வின் துரை எடுத்துக் காட்டினார்; அத் துடனில்லாமல் சென்ற 18 வருஷங்களாகத் திருநெல் வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்கள் வருஷ மொன்றுக்கு இலக்ஷம் சக்கரம் கிஸ்து கொடுக்கவேண் டியிருக்க, வருஷமொன்றுக்கு 40 ஆயிரம் சக்கரங்களே வசூலாகி இருக்கின்றன என்றும், இனிமேலோ இதி லுங் கேவலமாகிவிடப் போவதால் யுத்த முதலிய செலவுகளுக்கும் சைனியச் செலவுகளுக்கும் சம்பள முதலியவைகளுக்கும் ஏற்பட்டுள்ள மாறுபடாத நியதி யான செலவுகளுக்கும் என்ன செய்வதென்பதின் கஷ்டங்கள் பின்னால் தெரியவருமென்றுங் குறிப்பிட் டுக் காட்டினர்.

முன்னம் ஹைதர் ஆலியின் படை எழுச்சிச் சம் பந்தமாக 1780-ல் இதுதான் தக்க சமயமென்று பாளை யக்காரர்கள் நவாபுவிற்குக் கப்பங் கொடுத்தலை ஒரே அடியாக மறுத்து விடத் தலைப்பட்டது ஞாபகமிருக்க லாம். நவாபு கையில் ஒப்படைக்கவும் குத்தகைதாரர்களிடம் அட்வான்சுத் தொகையை வாங்குவதற்கு உத்தரவு செய்துவிட்டார். இப்படிச் செய்த ஏற்பாடுகள் குத்தகைதாரர்களுக்கு நல்ல தருணமாயது. அவர்களையும் முன்போல ஒழுங் கினமாக நடக்கும்படி தூண்டியதுபோலாயிற்று. இக் காலத்தில் நவாபுவின் மானேஜராக இக்டிபார்கான் என்

இக்டிபார்கான் திருநெல்வேலியில் நவாபுவின் பிரதிநிதியாதல்

றவர் திருநெல்வேலியில் நியமிக்கப்பட்டார். 1785-ம் வருஷமுந் தீர்ந்துவிட்டது.

போர்ட்-ஆப்-ரெவினியு ஏற்படல்

போர்டு-ஆப்-ரெவினியு என்றது 1-5-1786-ல் சென்னபட்டணத்தில் அமைக்கப்பட்டது. பாளையங்கோட்டையிலிருந்த கியாப்டன் பிளாக்கர் (Captain Blacker) துரையின் பட்டாளத்தில் ஐந்து குப்பினிச்சைனியம் நவாபுவின் மானேஜரான இக்டிபர்கான் வேண்டுகோளின்படி சங்கரநயினார் கோவிலில் வைக்கப்பட்டது. 1786-ல் நடந்துள்ள விசேஷங்களிவையே.

சொக்கம்பட்டியில் ஒரு கோட்டை ஏற்படல்

பாளையங்கோட்டை பேமாஸ்டர் ஜனரலாக வந்த ஒக்ஸ் துரைக்கும், பட்டாளத்தில் அதிகாரம் பெற்ற மாக்ளியாட் துரைக்கும் சைனிய எக்ஸ்சேஞ்சினால் அடைந்த நஷ்டத்தைக் குறித்துத் தாவாக்கள் ஏற்பட்டுவிட்டன. சொக்கம்பட்டியார் ஒரு கோட்டையை அவரது சீமையில் கட்டுவதாயும் அங்கு அதைத் தக்க தளவாடங்கள் சகிதம் பலப்படுத்துவதாயும் கேள்விப்பட்ட நவாபுவின் பவுஸ்தார் தென்காசியில் பெருங்கூட்ட மொன்றைக் கூட்டுவித்து அக்கோட்டையைப் பிடித்துக் கொள்வதென்ற தீர்மானத்தைப் பாளையங்கோட்டை கும்மாந்தர் பிரிட்ஜஸ் (Commander Bridges) துரைக்குத் தெரிவிக்க, அதற்கவர் சென்னபட்டணங் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து அவர்களது அநுமதியின்றி அவரை நாம் சத்துருபாவங்கொண்டு எதையும் செய்யலாகாதென்று தடுத்துவிட்டார். இவைகளே 1787-ல் நிகழ்ந்தன.



டச்சுப்படை கொச்சிக்குப் போகுதல்

ஒரு துண்டம் டச்சுச் சைனியம் தூத்துக்குடியிலிருந்து கொச்சிக்குப் புறப்பட்டுப் போயது. அப்படிச் செல்லும் சைனியம் திருவாங்கூர் வடக்கு எல்லையில் யுத்த சன்னத்தமாக இருக்கும் திப்பு சுல்தானைச் சந்திக்கக்கூடாதென்று சென்னபட்டணம் துரைத்தனத்தார் தெரிவித்தனர். இது ஒன்றே 1788-ல் நமது ஜில்லாவில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

ஒக்ஸ் துரையின் ஸ்தானத்தில் டோரின் துரை நியமன மடைதல்

பேமாஸ்டர் ஒக்ஸ் துரை ராஜிநாமா செய்துவிட்டார். அவருடைய ஸ்தானத்தில் டோரின் துரை நியமிக்கப்பட்டார். இவர் இப்போது திருநெல்வேலியிலுள்ள ஜட்ஜி துரை பங்களாவிற்குச் சமீபமான ஒரு நிலத்தில் சன்னலவங்க மரம் வைத்து உண்டாக்கினர். முன்னம் பாளையங்கோட்டையில் இரண்டு சிறிய கன்றுகளைச் சிலோனிலிருந்து லேபிட் துரை 1780-ல் நாட்டிய விவரங்கள் ஞாபகமிருக்கலாம். டோரின் துரையின் முயற்சியால் குற்றாலத்திலுள்ள "ஸ்பைஸஸ் கார்டனில்" சன்னலவங்க மரங்கள் வைக்கப்பட்டன. டோரின் துரையின் வேண்டுகோளால் பேமாஸ்டரின் ஜாகையை புதிப்பித்துக் கட்டுவதற்கு கவர்ன்மெண்டார் 1000 வராகன் சாங்க்ஷன் செய்தனர். 1789-ம் வருஷத்தில் இவ்விதமான விசேஷங்கள் நமது ஜில்லாவில் நிகழ்ந்தன.

## பதின் மூன்றும் அத்தியாயம்

## சற்காலத்தியது

கொள்ளிடத்துக்குத் தெற்கேயுள்ள பேமாஸ்டர் யாவரும், பாளையங்கோட்டை யுள்பட கும்மாந்தந்து இன்-சீப் முஸ்குரோப் துரை (Colonel Musgrove) வேண்டிக் கொள்கிறபடிக்கு, அவர் திப்பு சுல்தானுக்கு விரோதமான நடவடிக்கைகளைச் செய்துகொண்டு வருகிறதால் அவருக்குச் சகல விதமான உதவிகளையும் இந்த ஜில்லாவில் செய்துவைக்க வேண்டுமென்ற ஓர் உத்தரவு 1790-ம் வருஷம் பிறந்தது. இதுவே 1790-ல் குறிப்பிடக்கூடிய விஷயமாகும். சென்ன பட்டணம் கவர்ன்மெண்டார் கர்நாடக தேசத்து நவாபிடம் எவ்வளவோ பிரயத்தனங்களைச் செய்தும் மறுபடியும் அஸைன்றுமெண்டு ஆப் ரெவினியுவை ஸ்தாபிக்க முடியாதென்று தெரிந்து கொண்டவர்களாகி 7-8-1790-ல் பகிரங்க விளம்பரங்கள் மூலமாகக் கர்நாடக தேசத்துக் காரியங்களை, யாதொருவிதமான உடன்படிக்கைகளையும் நவாபிடம் செய்து கொள்ளாமல், அவர்களே பாவனையில் எடுத்துக் கொண்டார்கள். இதைத்தான் அஸம்ஷன் என்பது. அதாவது நவாபு துரைக்காக நவாபுவின் தேசத்திலுள்ள காரியங்களைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு மேல்பார்த்து வருவதென்பதாம். 1790 முதல் 1792 வரை இவ்வாறு மேல்பார்த்து வந்திருக்கிறார்கள். 1781 முதல் 1790 வரை கவர்ன்மெண்

போர்டு ஆப் ரெவினியுவின் கீழ் போர்டு ஆப் அசியூம்டு ரெவினியுவை ஸ்தாபித்தல்



டார் கர்நாடக தேசத்தை அஸைன்றுமெண்டு ஆப் ரெவினியு என்ற நிபந்தனையின்படி மேல்பார்த்து வந்தார்கள். கர்நாடக தேசத்துக் காரியங்களையெல்லாம் நவாபுக்காகவும், தஞ்சாவூர் சீமையின் காரியங்களை அதன் ராஜாவுக்காகவும் கவர்ன்மெண்டார்களால் சுதாவில் ஏற்றுக்கொண்டெடுத்துக் கொள்ளப்பட்டதால், போர்டு ஆப் அஸைன்று ரெவினியு என்பதை மாற்றி அதனை போர்டு ஆப் அஸ்யூம்டு ரெவினியு என்று அழைப்பதே பொருத்தமாகுமென்று, அப்பெயரையே அதற்குச் சூட்டப்பட்டது. ஆனால் இந்த போர்டு ஆப் அஸ்யூம்டு ரெவினியு என்றது போர்டு ஆப் ரெவினியுவின் கீழ்ப்பட்டதாகும்.

அஸ்யூம்டு ரெவினியுவின் உற்பத்தியைக்குறித்து பஹிரங்கப்படுத்தப்பட்ட விளம்பரங்களில் கண்டபடி ஒவ்வொரு ஜில்லாவிலும் கலெக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படி நியமிக்கப் பட்டவர்களில் திருநெல்வேலி ஜில்லாவில் முதலாவதாக நியமிக்கப் பட்டவர் டோரின் துரையே யாவர். கலெக்டர் கேட்டுக்கொண்ட பிரகாரம் அவருக்கு எவ்வெப்போது பட்டாளங்களின் உதவி வேண்டியிருக்குமோ அவ்வப்போது அனுப்பி வைக்கவேண்டுமென்று பாளையங் கோட்டையிலிருக்கும் பட்டாளத்துக் கும்மாந்தந்துக்குக் கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். கலெக்டராக நியமிக்கப் பட்ட பேமாஸ்டர் டோரின் துரைக்குப் பதிலாக மார்ட்டின் துரை நியமிக்கப்பட்டார். அக்காலங்களில்

அஸ்யூம்டு ஆப்ரெவினியும் அதன் முதல் கலெக்டரும்

பேமாஸ்டர்களாக சிவிலியன் உத்தியோகஸ்தர்களை நியமிப்பது வழக்கமாக இருந்திருக்கிறதென்றது இதனால் தெரியவருகிறது. திருநெல்வேலியிலுள்ள நவாபு துரையின் சைனியத்துக்குச் சம்பளப் பாக்கியும் அத்துடன் சைனியங்கள் சீர்கேடாயுமிருந்ததை யறிந்து நவாபுதுரை யவர்களின்கீழ் நியமனம் பெற்றிருந்த இராணுவ உத்தியோகஸ்தர்களான டைட்டன், எவரெட்டு (Colonels Dighton and Everett) என்ற இரண்டு துரைகளையும் கவர்ன்மெண்டாரின் நேரான பரிசீலனையின் கீழ் நியமித்துக் கொண்டார்கள். தூத்துக்குடியிலுள்ள டச்சுக் கவர்னரான மைக்கெர்ன் (Mickern) துரை கேட்டுக்கொண்டபடி கொச்சியிலிருந்து ஐரோப்பியர்களும் மலேயர்களுமடங்கிய 400 சைனியங்களைத் தூத்துக்குடி மார்க்கமாகக் கொழும்புக்குப்போக அனுமதி கொடுத்தார்கள். பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதற்கு முசுக்கட்டை மரங்களையும் டோரின்துரை வைத்து விருத்தி செய்தார்.

மறுபடியும் பாளையக்காரர்களை அடக்குவதற்கு உபாயத்தை நாடல்

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்களின் விஷயமாகக் கடைசியாக கர்னல் புல்லர்டன் துரை தயவுகாட்டியது, மறுபடியும் அவர்களது கொடுஞ்செயல்களை விருத்திக்குக் கொண்டுவருவதற்குச் சாதனமாக இருந்துவிட்டதால், அவர்களை யடக்கவேண்டியதில் கட்டபொம்மு நாயக்கர், சிவகிரி வன்னியனார், நெற்கட்டஞ் செவல்ப் பூலித்தேவர் ஆகியவர்களைக் குறிப்பிட்டு இந்திய கவர்னர் ஜனரல் பிரபு



அவர்களான லார்டு காரன்வாலிஸ் (Lord Cornwallis) அவர்களுக்குத் தெரிவித்தார். கர்னல் புல்லர்டன் துரையும் டோரின் துரையும் அபிப்பிராயங்களில் பேத முடையவர்களாக இருந்தனராயினும், ஒரு நாட்டிற்கு இரண்டு ஆளுகைகளாக அதிகாரம் செலுத்துவதானால் அந்நாடு எப்பொழுதும் சீராகமாட்டாதென்றும், அந்த இரட்டையாட்சியின் பலஹீனத்தைக் கொண்டு சமயம் போலெல்லாம் பாளையக்காரர்கள் நடந்துகொள்ளக் கூடுமென்றும், அப்படி நடந்துகொள்ளும் பாளையக்காரர்களைச் சாஸ்வதமாக அடக்க முடியாது போகுமென்றும், டோரின்துரை அனுப்பிய உத்தியோக நடவடிக்கை நிருபங்களிற் கண்டிருப்பவைகளை வியந்துகொண்ட இந்தியா கவர்ன்மெண்டார், டோரின் துரையின் அபிப்பிராயத்தினின்றும் சிறிதுகூட மாறுபடவில்லை. இத்யாதி சம்பவங்களைக் கொண்டு 1790-91 வருஷங்கள் சம்பூரணமாயின.

கும்பினியாருக்கும் நவாபுக்கும் 1792ம்வருஷம் நிகழ்ந்த உடன்படிக்கை

இதற்கப்பால் கும்பினியார் நவாபுடன் 1792ல் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு அதிற் கண்ட நிபந்தனைகளுக்கிணங்கிக் கும்பினியாரே பாளையக்காரர்களின் கிஸ்துகளையும் முன்னுள்ள கிஸ்துப் பாக்கிகளையும் தங்களுடைய சொந்தச் செலவிலும் பொறுப்பின் பேரிலும் வசூலித்துக் கொடுப்பதென்றும், யுத்த காலங்களில் திருநெல்வேலி மதுரை ஜில்லாக்களின் காரியங்களைக் கும்பினியார்களே தங்கள் கையில் எடுத்துக்கொண்டு ஆட்சி செய்வதென்

றும், இருதாரத்தாரும் சம்மதித்துக்கொள்ளக் காரியங்கள் நடைபெறலாயின. இப்படி நடைபெறும்போது ஒரு கமிஷன் நியமனமாயிற்று.

டோரின் துரையை பேஷ்கிஷ் கலெக்டராக நியமித்தல்

அதன் நிபந்தனைகளுக் குட்பட்ட வண்ணம் டோரின் துரையைத் திருநெல்வேலி, மதுரை, சிவகங்கை இராமநாதபுரம் ஜில்லாக்களின் பேஷ்கிஷ் கலெக்டரென்று நியமித்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவுக்கு டோரின் துரை கேட்டுக்கொண்ட பிரகாரம் மாக்ஸ் வெல் என்பவரைச் சைனியங்களுடன் கவர்ன்மெண்டார் அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட இச்சைனியத்தைக் கொண்டு சேத்தூராரையும் அவரது குடும்பத்தையும் அநியாயமாகச் சிறிதளவேனும்இரக்கமில்லாமலும் அனுதாபமின்றியும் வண்கொலையாகக் கொன்ற சிவகிரியாரைமட்டும் தண்டிக்கும்படிக்கும், ஏனைய பாளையக்காரர்கள் சிவகிரியாருடன் சேர்ந்து தகாத செய்கைகளைச் செய்திருப்பதாகவாவது அல்லது செய்வதாகவாவது தெரிந்தாலன்றி அவர்களைத் தண்டிக்கக் கூடாதென்ற கண்டிப்பான உத்தரவு ஒன்று கிளம்ப, அதன்படி விசாரணைகளும் அமுல்களும் நடைபெற்றன. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வேறு பாளையக்காரர்களுடன் செய்துகொள்ள வேண்டிய செட்டில்மெண்டு விஷயமாக டோரின் துரைக்கும் மாக்ஸ்வெல் துரைக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. சிவகிரியாருக்குக் கிஸ்தியில் எந்த விதமான வஜா-ரிமிஷன்-வும் செய்யக் கூடாதென்று போர்டு ஆபிஸிலுள்ள துரைமாரே தீர்மானித்து உத்



தரவை அனுப்பிவிட்டார்கள். சொக்கம்பட்டியார் கர் ...ல் மாக்ஸ்வெல்லின் நோக்கத்துக்கு இசையமாட் ...ன் என்று சொல்லவும், அவரைப் பாளையக்கார ...ன பதவியிலிருந்தும் நீக்கிவிட்டார்கள். சென்னல்குடிப்பாளையத்தைத் தற்காலத்துக்குமட்டும் ஜீரணோத்தாரணம் செய்து வைத்தார்கள். சிவகிரிப் பாளையக்காரரின் குமாரரை வீணாக அவரது தகப்பனாருக்கு விரோதமாக இடைவிடாது சண்டையைக் கிளப்பத் தூண்டிக்கொண்டும், சிவகிரியை நாம் பிரஸ்தாபிக்கிற காலத்துள்ள கெட்ட ஸ்திதிக்குக் கொண்டுவந்து விட்ட சங்கரலிங்கம் பிள்ளை யென்பவருக்கு எந்தப் பாளையக்காரரும் எவ்விதமான காரணத்தைக் கொண்டும் யாதொரு அலுவலையுங் கொடுக்கக் கூடாதென்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன.

மாக்ஸ் வெல் துரைக்கும் டோரின் துரைக்கும் நிகழ்ந்த அபிப்பிராய பேதங்களும் டோரின் துரையின் ராஜிநாமாவும்

இது சம்பந்தமாக டோரின் துரைக்கும் மாக்ஸ்வெல் துரைக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு மாக்ஸ்வெல் துரை சங்கரலிங்கம் பிள்ளை விஷயத்தில் செய்யும் கட்டளை நீதியற்றதென்று டோரின் துரை அபிப்பிராயப் பட்டதிலிருந்து பாளையக்காரர்களுக்கும் சங்கரலிங்கம் பிள்ளைக்கும் அந்தரங்கமான சிநேகிதரான தன்னுடைய (டோரின் துரையின்) துவிபாஷியான முனிஷியின் சொல்லை நம்பி இவ்வித அபிப்பிராய பேதத்தை டோரின் துரை அடைந்தாரென்று மாக்ஸ்வெல் துரை செய்துள்ள ரிப்போர்ட்டுகளிற்

கண்ட விஷயங்களை யெல்லாம் கருத்துடன் படித்துவிட்டு ஆழ்ந்து யோசித்த கவர்ன்மெண்டார் டோரின் துரையின் துவிபாஷியை வேலையினின்றும் நீக்குவதும், துவிபாஷியையும் சென்னபட்டணத்துக்குப் பந்தோபஸ்துடன் அனுப்பிவைக்கும்படிக்கும் உத்தரவு செய்தார்கள். மாக்ஸ்வெல் துரைக்குப் பாளையக்காரர்களைப் பொறுத்துள்ள சகல அதிகாரங்களின் பொறுப்பையும் கொடுத்துவிட டோரின் துரை ராஜிநாமா செய்துவிட்டார்.

லண்டன் துரை நியமுகமும் மாக்ஸ்வெல் துரைக்கு செகரட்டரியாக பானர்மான் துரை நியமுகமும்

அந்த ராஜிநாமாவை அங்கீகரித்துக் கொண்டு அவருக்குப் பதில் லண்டன் துரையை நியமித்து விட்டனர். இவருக்கு மாதம் ஒன்றுக்கு 250 வராகன்கள் சம்பளத்திலும் கடைசி வருஷத்தில் ரூபாய் 100 வசூலுக்குக் கமிஷன் ரூபாய் 1-8-0 வீதம் இவர் கால ஆட்சியின் மொத்தங்கூடிய வருஷங்களுக்கு எவ்வளவு தொகை வசூலிக்கப் படுகிறதோ அத்தொகைக்கு மேலே கண்ட விகிதம் கமிஷனில் சேருகிற மொத்தத்தொகையும் இவரையே சேர வேண்டியதென்ற நிபந்தனையும் அடங்கிய உத்தரவைப் பெற்றுள்ளார். மாக்ஸ்வெல் துரையின் செகரட்டரியாக நியமிக்கப்பட்டவர் பாளையக்காரர்களின் சண்டைகளின் சம்பந்தமாகப் பிற்காலத்தில் கீர்த்தி பெற்று விளங்கியவரான பானர்மான் துரையாவர். இத்துடன் 1792-ம் வருஷம் நிறைந்துவிட்டது.



லண்டன் துரைக்கு ஏற்பட்டுள்ள சம்பளத்துடன் 50 வராகன் கூட்டி வைக்கப்பட்டது.

ஊர்க்காட்டார் ஒரு தாசில்தாரைக் கொன்றது

நவாபுவால் நியமுகம் அடைந்த ஒரு தாசில்தாரை ஊர்க்காட்டார் கொன்று விட்டனர் என்ற சங்கதி லண்டன் துரைக்கு எட்டியது.

சேத்தூர் மானேஜ்மெண்டை வேறொருவர் கைக்கொள்ளல்

சேத்தூரின் காரியங்களை மைனருக்குப் பதிலாக நடாத்திக் கொண்டு வந்த மானேஜரை நீக்கி விட்டு மற்றொருவர் அதை வகித்து அந்தப் பாளையப்பட்டின் காரியங்களை நிர்வகிப்பதாகக் கேள்விப்பட்டு காப்டன் டைட்டன் துரையை அங்கு அனுப்பிவைக்க அக்கிரமமாக மானேஜர் ஸ்தானத்தை யடைந்தவரை அவரால் அடக்குவதற்குக் கூடாது போயிற்று.

லண்டன் துரையின் அதிகாரத்துக்கு வரம்பு ஏற்படுத்தல்

ஊத்து மலை (வீரகேரளம் புதூர்) நெய்க்கட்டுஞ் செவல் (ஆவுடையாபுரம்) பாளையக்காரர்களுக்குப் பயந்து எதையுமே செய்யாமல் திரும்பி விட்டதை யறிந்து அவருக்கு உதவியாக ஸ்டிவன்ஸன் துரையை அனுப்பிக் கலகக்காரர்களான பாளையக்காரர்களை எதுவுமே செய்யாமல் எச்சரிக்கையை மட்டுஞ் செய்துவிட்டு வர வேண்டியதென்று உத்தரவு கொடுத்தார்கள். பாளையக்காரர்களின் உள் நாட்டுக் காரியங்களிலும் போலீஸ் விஷயங்களிலும் லண்டன் துரை பிரவேசிக்கக் கூடாதென்றும் கிஸ்துத்தொகை ஒன்றைமட்டுமே வசூலிக்கலாமென்ற உத்தரவும் பிறந்துவிட்டது.

பாளையக்காரர்களுக்குவாய்த்த மற்றொரு நல்ல காலமும் செட்டில்மெண்டு விஷயமும்

ஒரு தரம் கண்டிப்பான உத்தரவும் மற்றோர் தரம் தாக்ஷிண்யமான உத்தரவும் கவர்ன்மெண்டார் பிறப்பித்துக்கொண்டு வந்ததிலிருந்து பாளையக்காரர்களுக்கு உற்சாகம் பிறக்க அவர்களது பழைய நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டார்கள். பாஞ்சாலங் குறிச்சியார் கீழ்ப்படாமைகளில் கொள்ளையிடவும், அநேகரை வீணாக வதை செய்யவும் ஆரம்பித்து விட்டார். சேத்தூர் மானேஜருக்கு விரோதமாகச் சென்ற லெப்டினெண்டு செண்டு லீஜர் துரை (St. Leger) யை வழியில் மடக்கி அடித்துத் துரத்துவதற்குப் பூலித்தேவர் ஆரம்பித்து விட்டார். பாளையப்பட்டுகளின் எல்லைப்புரங்களை நிச்சயம் செய்வதற்கு முன்னதாக செய்துகொண்ட செட்டில்மெண்ட்படிக்கும், கியாப்டன் மாக்ஸ்வெல் துரை தீர்மானித்த படிக்கும், பாஞ்சாலங் குறிச்சியிலிருக்கும் சில கிராமங்களை எட்டயபுரம் பாளையப்பட்டுடன் சேர்க்கப் பாஞ்சாலங் குறிச்சியார் சம்மதிக்கவில்லை. கலெக்டரும் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் அவர் இணங்காததைத் தெரிந்து கொண்டார். ஸ்ரீவில்லிபுத்தூரில் பட்டாளத்துக்குத் தலைமைபூண்டிருந்த டை[illegible]டன் துரையும் பாளையக்காரர்கள் ஆயுதபாணிகளா[illegible] கொள்ளையை நாடி நாலாபக்கங்களிலும் அலைந்து கொண்டு திரிவதில் ஜனங்கள் திகில் அடைவதுடன் கவர்ன்மெண்டாருக்கும் சைனியக் குறைவாக இருப்பதாலிது சமயம் அவைகளைக் குறித்துள்ள விவர



[illegible]ளைத் துரைத்தனத்தாருக்கு விளக்கிக் காட்டினர். கவர்ன்மெண்டாரின் சுறுசுறுப்பின்மை காரணம் என்பதைத் தெரியாமல் அவர்களைப் பல மற்றவர்கள் என்று மனதிற்கொண்டு பாளையக்காரர்கள் எதையும் தைரியத்துடன் செய்ய எத்தனித்து விட்டார்கள். கட்டபொம்மு நாயக்கர் ஆழ்வார் திருநகரியையும் ஸ்ரீ வைகுண்டத்தையும் கொள்ளையிட்டு அங்குள்ள ஜனங்களிற் குறிப்பிட்டவர்களையும் பிடித்துக்கொண்டு போய்விட்டனர்.

லண்டன் துரையும் ஸ்டிவன்ஸன் துரையும்பாளையக்காரர்களின் வலுவைக் குறைக்கும் உபாயத்தை நாடல்

கவர்ன்மெண்டார் அடிக்கடி பாளையக்காரர்களிடம் காட்டிக்கொண்ட தாக்ஷிண்யமோ அல்லது கவர்ன்மெண்டாரின் அலக்ஷிய புத்தியின் காரணந்தானோ பாளையக்காரர்களை இதுவரை துரைத்தனத்தார்களுக்குக் கீழ்ப்படியச் செய்யாமலும் உத்தரவுகளை மீறி நடக்கவும் செய்துவிட்டதெனத் தெரிந்துகொண்டு இனியாவது இப்பேர்ப்பட்ட பெருங் கஷ்டங்களையும் ஆபத்துகளையும் பாளையக்காரர்களிடமிருந்து புறப்பட வொட்டாமல் செய்யும் உபாயத்தை எப்படிச் செய்வது [illegible]யமாகும் என்பதை லண்டன் துரையும் ஸ்டிவன்ஸன் துரையும் கலந்து யோசித்துச் சொல்வதில் பாளையக்காரர்களின் கைவசம்வைத்துக்கொண்டிருக்கும் ஆயுதங்களைச் சமாதான வழியிற் பிடுங்கிக்கொள்வது நலமாகுமா அல்லது தண்டோபாயத்தால் பாரிகாரம் தேடுவது உசிதமாகுமா என்பதைக்கவனித்து முடிவுக்குவர

வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக்கேட்டுக் கொண்டார்கள். ஆனால், பிஷோப் கால்டுவெல்துரை இந்த விஷயமாகப் பாளையக்காரர்களின் ஆயுதங்களைப் பறி முதல் செய்யும் உபாய வழிகளை இங்கு வந்து விட்டுச் சென்ற ஒவ்வொரு கும்பினி யதிகாரியும் ஆராய்ந்து செய்த விஷயங்களைப்பற்றிச் சொல்லுவோமேயானும் அவர்களுடைய செய்கைகளெல்லாம் வாய்ப் பேச்சின் மட்டும் இருந்தனவென்பதைக் குறித்துப் பக்கம் பக்கமாக எழுதிக்கொள்ள இடம் கொடுக்கும் என்பதைத் தவிர வேறு சரியான உபாயத்தைச் செய்து வைத்து அவைகளை முற்றுப்பெறச் செய்விக்கவில்லை என்று சொல்வது மிகச் சரியானதே!

பாளையக்காரர்களின் திசைக்காவல் சுதந்தரப் பாக்கியின் கணக்கு

பாளையக்காரர்களுக்குத் திசைக்காவல் சுதந்தரத்தில் செல்ல வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும் தெரிந்து ரிப்போர்ட்டு செய்யும்படிக்குக் கவர்ன்மெண்டார் கேட்டுக் கொண்டார்கள். காலம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்ததோ அவ்வளவுக் கவ்வளவு தொகையும் அதிகரித்துவிட்டது. இது விஷயமாகக் கடைசியாக ஒன்றுமே முடிவுக்கு வராமல் 1801-ம் வருஷம் கலெக்டர் லஷிங்டன் துரையின் கீழ் இந்த ஜில்லா ஆளுகைக்கு வந்த சமயம் முடிவு பெறலாயிற்று. பாளையக்காரர்களின் ஆயுதங்களின் பறி முதல் விஷயமாயும் 1799-ம் வருஷம் பானர்மான் துரையவர்களின் யுத்தம் வரை எதுவும் நடவாமற் போயிற்று. 1793-ம் வருஷத்திய சமாச்சாரங்கள் இவைகளே.



பாளையக்காரர்களின் கலகங்கள் அதிகரித்துக் கொண்டு வருவதைக்கண்டு போர்டு வெறுப்படைந்து,

உத்தியோக விஷயமாகச்சில மாறுதல்கள்

திருநெல்வேலி ஜில்லாவில் ஒவ்வொரு முக்கிய ஸ்தலத்திலும் பட்டாளங்களை நியமித்துப் பாளையக்காரர்களை யடக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்தும் விருதாவாகியது. இது சமயம் பாளையங்கோட்டையில் சைனியங்களுக்குக் கும்மாந்தாராக இருந்தவர் கர்னல்காம்பெல்துரையே. லண்டன் துரை 22-6-1794ல் இறந்துவிட, அவர் ஸ்தானத்தில் உதவியாக இருந்த பாலாமியன் (Mr. Balamian) சார்ஜு எடுத்துக்கொண்டார். திருவாங்கூரில் 1788-ம் வருஷமுதல் ரிஸிடெண்டாக இருந்த ஜார்ஜ் பௌனீ (George Powney) துரையே லண்டன் துரையின் ஸ்தானத்தில் காயமாக நியமிக்கப்பட்டவராகி, பேஷிஷ் கலெக்டராகவும் லண்டன்துரை அரைகுறையாக விட்டு விட்ட திசைக்காவல் விசாரணையை ஆரம்பிக்கவும் உத்தரவுபெற்றார். ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள கும்மாந்தந்து சிவகிரி பாளையக்காரர்களின் தகாத செய்கைகளைக் குறித்து எடுத்துக்காட்டினார். இதனோடு 1794-ம் வருஷம் முடிவடைந்தது.

பாளையக்காரர்கள் நவாபுக்குக் கீழ்ப் பட வேண்டியதில்லை எனல்

மாக்ஸ்வெல் துரையின் பிளான் படிக்கும் கலெக்டர் சிபார்சு செய்தபடிக்கும் பட்டாளங்களை முக்கியமான ஸ்தலங்களில் வைக்கத் தவறிய விஷயத்துக்கு மிகவும் பௌனிதுரை விசனப்பட்டவராகி, அதனால் ஏற்பட்டுள்ள அஜாக்கிரதையே பாளையக்காரர்களுக்கு வலுவைக் கொடுத்ததென்றும் அபிப்பிராயப்பட்டார். அவ

ருக்குக் கவர்ன்மெண்டார் பிறப்பித்துள்ள ஓர் உத்தர வைக்கொண்டு எல்லாவிதப் பாளையக்காரர்களும் இனி மேலாகக் கும்பினித் துரைத்தனத்தாரின் மூலமாகப் பிறப்பிக்கப்படாமல் நவாபுதுரை மூலமாகவே அவர்களுக்கு (பாளையக்காரர்களுக்கு)ப் பிறப்பிக்கப்படும் ஆர்டர்களுக்குக் கீழ்ப்படியக் கூடாதென்பதைக் கண்டிப்பாக அறிய வேண்டுமென்ற ஒரு பஹிரங்க விளம்பரத்தைப் பிரசுரஞ் செய்தார். டச்சுக்காரர்களிடமிருந்து தூத்துக்குடியையும் கும்பினியார் பிடித்துக்கொண்டார்கள். கோர்ட் ஆப் டிரெக்டர்ஸ் கீழே கண்டவாறு ஓர் உத்தரவைப் பிறப்பிக்கலாயினர். இவைகளைக் கொண்டு 1795-ம் வருஷம் நிறைவுற்றது. சொக்கம்பட்டியாரைத் தானகவே தன்னுடைய கோட்டையை ஒப்படைக்கும்படிக்குள்ள ஏற்பாட்டைச் செய்து முடித்ததே 1796-ல் நிகழ்ந்ததாகும்.

**பாளையக்காரர்களுக் குள்ள கிரிமினல் சுதந்தரத்தை எடுத்துவிடல்**

பாளையக்காரர்களின் செய்கைகள் அவமானத்தையும் கேவலத்தையும் கொடுக்குந் தன்மை வாய்ந்துள்ளவைகளாக இருப்பதால், அவர்களைத் தண்டிக்காமல் தாக்ஷணியமாக இருப்பதைக் குறித்து, நவாபு துரை குறைகூற, அவ்விதம்செய்யக் கும்பினி துரைத்தனத்தார் ஏற்பாடு செய்து வைக்கலாயினர். ஊர்க்காட்டார் ஏதோ வேட்டையாடும்போது போதையிலிருந்த சிங்கம்பட்டியாரால் சுடப்பட்டு இறந்துவிட்டனரென்றும், அக்காலத்தில் பாளையப்பட்டுகளில் கிரிமினல் விசாரணைகளைச் சரியாகச்செய்து கொள்ளக் கூடாதனவாக இருந்ததால் இது விஷயமாக எந்தவிதமான நடவடிக்கைகளையும், தங்களாற் செய்யக் கூடாமற்போய்விட்டனவென்று கலெக்டர் பௌனிதுரை மிகுந்த விசனத்துடன் தெரிவித்தார். மற்றொரு தடவையில் சிவகிரியாரின் குமாரர், மாப்பிள்ளை வன்னியனாலும் சங்காலிங்கம் பிள்ளையாலும் தூண்டப்பட்டு, தன்னுடைய தகப்பனாரின் ஆட்சியிலிருக்கும் சீமையைக் கையைத் திருகிப் பிடுங்கிக்கொள்ளச் சதியாலோசனை நடந்ததென்றும், அவருக்கும் பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் அன்யோன்யமென்றும், கலெக்டர் இந்த ஜில்லாவை விட்டுப் புறப்படுவதற்கு முன்னம், அவரை (சிவகிரியாரின் குமாரரை) அடக்கிவிட்டதாகவும், ஆனால் அப்படி அடக்கப்பட்டவர் பிடிபடாமல் ஓடிப் போய்விட்டனரென்றும், சங்காலிங்கம் பிள்ளையைக் கைதியாக்கிச்சென்னபட்டணத்துக்கு அனுப்பிவைக்க அவரைத் துரைத்தனத்தார் அங்கிருந்து சுமத்ரா தீவிலுள்ள பென்கூல (Bencoolen)னுக்கு தீவாந்தர சிக்ஷை விதித்து அனுப்பியாய் விட்டதென்றதையுங் கூறியுள்ளார்.



**சங்காலிங்கம் பிள்ளைக்கு ஊத்துமலையார் உதவி செய்தல்**

சங்காலிங்கம் பிள்ளை ஊத்துமலையிற் போய் ஒளிந்து கொண்டதாயும் அதைத் தெரிந்து அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்கு,அனுப்பி வைக்கப்பட்டிருந்த கும்பினிச் சைனியங்கள், அவரைப் பிடித்துக் கொண்டு வரும்வழியில் ஊத்துமலையாரின் கையாட்கள் சுமார் 300 பேர்கள்வரை ஒன்றுகூடி, அவரை மீட்டுக்கொண்டுபோன

...ராகவும் தெரிய, இதன் மேலாக வுத்துமலையாரை விசாரணை செய்து அதன் மூல காரணத்தையுந் தெரிந்து கலெக்டர் துரையின் அபிப்பிராய சகிதம் அனுப்பும்படி ரெவினியு போர்டார் கலெக்டருக்கு உத்தரவனுப்பினார்கள். இதே வருஷம் பௌனிதுரையின் ஸ்தானத்தில் ஜாக்ஸன்துரை கலெக்டராக நியமனம் பெற்றார். 1797-ம் ஆண்டுந் தீர்ந்துவிட்டது. 1798-ல் கயத்தாறு இராணுவ ஸ்தலங்களிலொன்றாக இருந்ததை ரத்துச் செய்து விட்டார்கள். ஜாக்ஸன் துரையால் எழுதித் தயாரிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்களின் வம்ச வழிக்கிளையின் ஜாபிதா வொன்று நம் புஸ்தகத்தின் 56-ம் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு மறுவருஷ ஆரம்பத்தில் மேஜர் பானர்மான் (Major Bannerman) துரை திப்புசுல்தானுக்கு விரோதமாக சண்டைக்குப் போவதற்குள், திருவாங்கூருக்குத் தற்கால ரெஸிடெண்டாக மாத மொன்றுக்கு 250 வராகன் சம்பளத்தில் அமர்ந்தனர். ஸ்ரீரங்கம் பட்டணச் சண்டையில் திப்புசுல்தான் இறக்கவும், இவர் பாளயக்காரர்களின் சண்டையை ஆரம்பித்தனர். ஜாக்ஸன் துரையின் ஸ்தானத்தில் 7-1-1799ல் கீர்த்தி பெற்றுள்ள லஷிங்டன் துரை நமது ஜில்லாவிற்குக் கலெக்டராயினர்.

இங்கிலீஷ்காரர்கள் நமது ஜில்லாவில் 1781-ம் வருஷத்திலேயே ஆட்சி புரியலாயின ரெனினும், 1801ம் வருஷம்வரை நமது ஜில்லாவில் ஏற்பட்டுள்ள



கலகங்களையும் ஒழுங்கீனங்களையும் நீக்கிவிடவாவது அல்லது அவைகளை ஏகதேச நிலைமையிலும் சாந்தம் செய்து வைக்கவாவது கூடாது போயிற்று, என்றது முன்னுள்ள விவரங்களால்தெரிந்துகொள்ளலாம். அப்படிச் செய்யக்கூடாது போயது, இரட்டை ஆட்சியின் பலன் ஒன்று மட்டுமல்ல. அத்துடன் திருச்சிறாப்பள்ளிக்கு வடபாகத்தில் சைனியங்களைச் சேகரித்து பதிலும் மைசூரின் அரசர்களான ஹைதர் ஆலியும் அவர் குமாரர் திப்புசுல்தானும் செய்த கடும்போர்களில் கும்பினியார்களின் ஆட்சிக்கே நிலைக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும் அவைகாரணமாக நேரிட்ட பொருள் நஷ்டங்களுமாம். திப்புசுல்தான் ஸ்ரீரங்க பட்டணத்தில் நடாத்திய கடைசிப் போரில் கொல்லுண்டிறக்கவும் ஸ்ரீரங்க பட்டணம் பிடிபடலாயிற்று. அவ்விதம் பிடிபட்ட ஸ்ரீரங்கபட்டணத்தைச் சோதித்துப் பார்க்கையில் திப்புசுல்தானுக்கும் நவாபு மூமது ஆலிக்கும் அவர் குமாரருக்கும் அநேக விதமான அந்தரங்கக் கடித சமாசாரங்கள் நடந்த விவரங்களடங்கிய ரிகார்டுகள் கும்பினியார்கள் கைவசம் சிக்குண்டன. அவைகளைப் பார்க்கவும் நவாபிடம் கும்பினியாருக்கு அவநம்பிக்கை ஏற்படலாயிற்று.

நவாபு துரையிடம் கும்பினி யாருக்கு அவநம்பிக்கை ஏற்படல்

இப்படி இருக்குந் தருணத்தில் திருநெல்வேலி ஜில்லாவின் காரியங்களைக் குறித்து மறுபடியுங் கவனித்து அதன் விஷயங்களைச் சங்கிரமமாகச் சொல்வ

தில் நவாபு துரையின் ஆட்சி இந்தஜில்லாவில் ஆரம்ப

*நமது ஜில்லாவின் கும்பினியாரின் ஆரம்பகாலத்திய ஸ்திதியின் விவரம்*

மாயபோது 18-ம் நூற்றாண்டின் மூற்
பாதியின் கடைசியான கால அளவில்
எவ்வாறு பலவகையான வழிகளாலும்
இடையூறுகளைச் செய்து வைத்து
ஜனங்களும் இராஜாங்கத்தாரும் வெறு
க்கும்படியாகப் பூலித்தேவர் நடந்து
கொண்டனரோ அதே மாதிரியாக
நவாபுவின் ஆட்சி நமது ஜில்லாவில் முடிவுபெற்றுக்
கும்பினியார் ஆட்சியின் ஆரம்பகாலமான 18-ம் நூற்
றாண்டின் பிற்பாதியின் முடிவு காலத்தில் பாஞ்சாலங்
குறிச்சியார் நடந்துகொண்டனர். இராமநாதபுரத்துச்
சீமையில் கலகமொன்று 1797-ல் நிகழ அக்கலகத்தில்
திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்களில்
அநேகர் பாஞ்சாலங் குறிச்சியாரின்சொல்லுக்கிணங்கி
கலகத்துக்குக் காரணமாக நின்ற இராமநாதபுரத்தாரு
டன் சேர்ந்துகொண்டு கவர்ன்மெண்டாருக்குச் செலு
த்தவேண்டிய கிஸ்துவைச் செலுத்த மறுத்துவிட்டார்
கள் என்பது சென்னபட்டணத்துக்குத்தெரிய, கலெக்
டரை இது சம்பந்தமான யாவற்றையும் விசாரணை
செய்து அனுப்பிவைக்கும்படிக்கு ஓர் உத்தரவை
அனுப்பிவைத்தார்கள். அப்போது கலெக்டராக இருந்
தவர் ஜாக்ஸன் துரையாவர். அவருடைய ஹெட்
குவார்ட்டர்ஸ் - அதாவது உத்தியோகப் பிரதான
இருப்பிடம் - இராமநாதபுரமாக இருந்தது. இந்த
ஜாக்ஸன் துரை கட்டபொம்பு நாயக்கரின் செய்கை



களுக்கு, அவரே தன்னிடம் நேரில் ஆஜராகி சரி
யான முகாந்தரங்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்
டியதென்று அவருக்கு 1798ல் ஓர் ஆர்டரை அனுப்
பினார். அந்த உத்தரவிற்கு அநேக நாளாக இதோ
வருகிறேன் அதோ வருகிறேன் என்று வீணான சாக்
குப் போக்குகளைச் சொல்லி விட்டு, கடைசியாக
9-9-1798ல் இராமநாதபுரம் போய் அன்று மாலைப்
பொழுதில் கலெக்டரிடம் ஆஜராகிக்கலெக்டரால் அவ
ரைக் குறித்துள்ள சில விஷயங்களை ரிக்கார்டுகள் மூல
மாக வாசிக்கப்பட்டும் அவைகளை விவரமாக எடுத்துச்
சொல்லப்பட்டும் வருவதைக் கேட்டுக் கொண்டிருக்
கும் போதே ஏதோ தனக்கு (கட்டபொம்மு நாயக்
கருக்கு) பயமாக இருப்பதாகச் சொல்லிவிட்டு ஆயுத
பாணிகளான அவருடைய சைனியங்களுடன் ஓட
ஆரம்பித்துக் கோட்டைக்கு வெளியிற் போய்ச்
சேர்ந்துவிட்டார். அப்படியோடிப் போகும் சமயத்
தில் காவலாளிகளுக்குத் தலைவராக வாசலில் நின்று
கொண்டிருந்த அட்ஜூடண்டும் லெப்டினெண்டுமான
கிளார்க்கு துரையைக் குத்தி மல்லாத்திக் கீழேதள்ளி
விட்டு ஒரே ஓட்டமாகப் பாஞ்சாலங் குறிச்சியே
போய்ச் சேர்ந்தார். இவ் விஷயமாகக் கும்பினியார்
ஜாக்ஸன் துரையின்மீது கோபங்கொண்டு அவரை
நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக மேஜர் ஜெனரல்
பிளியட்டு (Major General Flyod) துரையை நிய
மித்துவிட்டு ஒரு விளம்பர மூலமாகப் பாஞ்சாலங்
குறிச்சியார் தானாகவே அவரிடம் (கலெக்டரிடம்)
ஆஜராகவேண்டுமென்று தெரிவித்திருந்ததைச் சிறிது

கூட லட்சியம் செய்யாமல் சுற்றுக் கிராமங்களைக்
கொள்ளையடித்தும் எட்டயபுரத்துக்குச் சொந்த
மான சோழபுரம், வண்டானம், அச்சங்குளமாகிய
கிராமங்களையும் கொள்ளை யிட்டாரென்ற புகார்கள்
கிளம்பிவிட்டன. திப்பு சுல்தான் சம்பந்தமாக முன்
னிகழ்ந்த சத்தியமங்கலம், கோயமுத்தூர் முதலிய
யுத்தங்களில் கும்பினிப் படைகளுக்குத் தலைமை
வகித்திருந்தவர்தான் நாம் பிரஸ்தாபிக்கும் பிளியட்டு
துரை. இவரது கீழடங்கியுள்ள "கிராண்டு ஆர்மி"
சைனியத்தில் பான்னர்மான் துரை சேவை செய்துவந்த
னார்.

பேஷ்கிஷ் கலெக்டராக 12-1-1799ல் லஷிங்
டன் துரை சார்ஜு எடுத்துக்கொண்டார். இவர் வர

**பாஞ்சாலங் குறிச்சியாரை மன்னிப்பதாக வாக்களித்தல்**

வும் கட்டபொம்மு நாயக்கருக்கு
மிகுந்த ஆறுதலுடனும் விநயத்துட
னும் ஒரு கடிதத்தை எழுதியனுப்பிய
தில் கிளார்க் துரையைக் குத்திக்கொ
ன்றுவிட்ட குற்றத்திலிருந்தும் அவர்
மன்னிக்கப்பட் டிருக்கிறாரென்றும் அவர் அவருக்
குச் சொந்தமான பாளையப்பட்டை முன்போலவே
அடைந்து கொள்ளலாமென்றும் தன்னை (லஷிங்டன்
துரையை) இராமநாதபுரத்தில் வந்து நிராயுத
பாணியாகப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டுமென்
றும், அப்படி வரும்போது பாக்கியுள்ள கிஸ்துத்
தொகையுடன் வரவேண்டுமென்றுங் கண்டிருந்தது.
இந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு, கட்டபொம்மு
நாயக்கர் கலெக்டர் துரையவர்களுக்கு மிக்க மரி



யாதையுடனும் பயபக்தியுடனும் இருப்பதாயும்
வயிற்றிலிருக்கும் பிள்ளை நழுவித்தானே விழும்படிக்
கான அவ்வளவு குளிர்ந்த வசனங்களைக்காட்டி எழுதி
யிருந்ததில் கும்பினியாரிட மிருந்து எவ்வளவு
தொகை கிஸ்துப் பாக்கிக்காக அவர் கொடுக்க
வேண்டியதென்ற விவரங்குறித்து எழுதியிருந்ததைத்
தெரிந்துகொண்டதாயும் சிறிது காலங்கழித்த பின்
னரே கிஸ்துத்தொகை சகிதம் இராமநாதபுரத்துக்கு
வரக்கூடுமென்றும் கண்டிருந்தது. இவ்வாறு எழு
தப்பட்டிருந்த பதிலில் கண்டுள்ள வாக்கியங்களில்
மட்டுங் கீழ்ப் படிந்துள்ளவைகளாக ஆங்காங்கு காட்
டிக் கொண்டனரேயன்றி அவரது முடிவுரையில்
சிறிதுகூட அவரது பூர்வ சுபாவத்திலிருந்து மாறு
பட்டதாகத் தெரிந்திலது என்றது வெட்ட வெளிச்ச
மென்று லஷிங்டன் துரை கடைசியாகத் தெரிந்து
கொண்டார். இதற்கு மேலாக அவராலும் எவ்வாறு
சகிமித்தல் கூடும்? இதில் அவர் அசட்டையாக இருந்
தால் அவருக்கே அது கேடாக முடிந்து விடுமென்று
பயந்தவராகிக் கட்டபொம்மு நாயக்கரைக் குறித்
துள்ள சகல விவரங்களை எல்லாம் கவர்ன்மெண்டா
ருக்கு ரிப்போர்ட்டுச் செய்தனர். அவ்விதம் அனுப்பிய
ரிப்போர்ட்டைப் பார்த்த கவர்ன்மெண்டார், "என்ன!
எந்தக் கலெக்டர் சொன்னாலுங் கேட்கிறதில்லையாம்!
கீழ்ப்படிவது மில்லையாம்! ஓர் ஐரோப்பிய லெப்டி
னென்டு ஸ்தானத்திலுள்ள கிளார்க்கு துரையைக் குத்
திக்கொன்று விடுகிறதாம்! அதற்கும் மன்னிப்பாம்!

இவைகளை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தும் லஷிங்கடன் துரை தயாவிஷயமாகச் சொல்லுவதை யுங் கேட்கிறதில்லையாம்! அப்படிக்கொரு பிடிவாதமா? இருக்கட்டும்! இப்படி நாம் தாக்ஷணியத்துடனிருந்தால் இவரைப் போலவே மற்றப் பாளையக்காரர்களும் துஷ்கிருத்தியங்களுக்கு ஆரம்பித்து விடுவார்கள் ஒருவரைப் பார்த்து மற்றொருவர். எதைச் செய்தாலும் இதைத் தடுத்துவிடக் கூடுமென்பதை நான் செவ்வனே தெரிந்தவுடன் அதற்குள்ள உபாயத்தை நாடி அடக்கி விடுகிறேன் பார்.'' என்று சொல்லிக் கொண்டு அவர் யுத்தசன்னத்தராகி விட்டதாகப் பாஞ்சாலங் குறிச்சியாருக்கு 1799-ம்வருஷம் அல்டி மாட்டமொன்றை அனுப்பி வைத்தார். இருகக்ஷிக்காரர்களும் யுத்தத்திற்குத் தயாராகி விட்டனர். பாஞ்சாலங் குறிச்சியாருடன் நாகலாபுரம், கொல்வார் பட்டி, ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர், ஆவுடையார் புரமாதியவைகளும் சேர்ந்திருந்தன. ஆனால் இவைகளிற் காணப்படாத கொல்லப்பட்டியைச் சேர்த்துச் சொல்லுவது பிஷோப்பு கால்டுவெல் துரை ஒருவரே யாவர். ஆனால் கோல்வார்பட்டியை அவர் கொல்லபட்டி என்று ஐயுற்றனரோ என்னவோ தெரியவில்லை? கும்பினியார் பக்கம் எட்டயபுர மொன்றே பிரதானமாயினும், ஊத்துமலை, சொக்கம்பட்டி, தலைவன் கோட்டை, மணியாச்சி, மேல் மாந்தை முதலியவைகளும் ஆங்காங்குச் சிறுகச் சிறுக உதவிபுரிந்திருக்கின்றன. மேஜர் பானர்மான் துரைக்கு வேண்டிய சைனியங்கள் சகிதம் பாஞ்சாலங்குறிச்சியாருக்கு விரோதமாகப் படை எடுத்துச் செல்லும்படிக்கு உத்தரவு பிறப்பிக்கலாயிற்று. இப்படிக்குப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அனுசரித்து 5-9-1799-ல் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சைனியங்கள் சென்றன. அங்கு சென்றிருந்த மேஜர் பானர்மான் துரை சர்வ ஜாக்கிரதையுடன் பாஞ்சாலங் குறிச்சியார் தப்பித்தோடி விடாதபடி கோட்டையைச் சுற்றிக் காவலமைத்து விட்டனர்.

## பதினான்காம் அத்தியாயம்

## தற்காலத்தியது

பாஞ்சாலங் குறிச்சி முதலாவது யுத்தம்

பாஞ்சாலங் குறிச்சிக்கு மேஜர் பானர்மான் துரை விஜயம் செய்யும்போது கயத்தாற்று வழி மூலமாயும் கோவிற்பட்டி வழி மூலமாயும் வந்து சேர வேண்டிய சைனியங்கள் அவரை வந்து கிட்டவும், அவைகளுடன் 12 பவுண்டர் குண்டுகளும் கைவசமாயின. இவையின்றி வேறு எதுவும் அவரது சகாயத்துக்கு அச் சமயங் கிட்டாதென்பதையுமறிந்து கொண்டார். லெப்டினென்டு டாலாஸ் துரை (Lieutenant Dallas) நிதானமாக யோசனை செய்து காலந்தாழ்த்தாமல் கோட்டையைக் குதிரைப் பட்டாளங்களைக் கொண்டு சூழ்ந்துகொண்டார். இந்த குதிரைப் பட்டாளங்களுக்கு உதவியாகக் காலாட் படைகளுந் தயாராக இருந்தன. பாளையக்காரர்களின் படைகள் இவைகளைக் காணவும், கும்பினிச் சைனியங்களை யுடைத்துக்கொண்டு மத்தியிற் புகுந்து செல்லப் பிரயத்தனப்பட்டன. அப்படி எத்தனித்தவர்களிற் பலர் டாலஸ்துரையின் உடைவாளுக்கு விருந்தாயினர். இதையறிந்த மேஜர் பானர்மான் துரை, "சரி, இனி மேலாகிலும் சிறிது நிதானத்துடன் பாளையக்காரர் ஆழ்ந்து யோசித்துக்கொண்டு, கீழ்ப்பணிந்து விடட்டும்" என்று ஓர் உத்தரவை அனுப்புவித்தார். அந்த உத்தரவைக்கேட்டுக்கொண்டு, தனக்கு எழுத்து மூலமாக ஏதேனுமோர் உத்தரவு வந்தாலன்றி துரை



யைப் பார்க்கச் சரிப்படாதென்று பாளையக்காரர் ல்லிவிட்டார். கோணல் வழியிற்சென்று கொண் க்கும் அவரது புத்தியை, நல்வழியிற் செலுத்துவித்து அவருக்கேதாவது நன்மையைச் செய்துவைக்க வேண்டுமென்று பிரயாசை எடுத்தும், அது நடவாது போலிருக்கிறதென்பதைத் தெரிந்தவராகி, மறுபடியும் அரை மணி நேரம் பாளையக்காரர் சாவதானமாக யோசித்து அவரது வழியை நல்லதாக்கிக் கொள்ளட்டுமென்றுஞ் சொல்லி யனுப்பினார். இந்த இரண்டாவது வேண்டுகோளும் வீணாயிற்று. "விநாசகாலே விபரீத புத்தி" என்ற பழவுரைக்கொப்ப, கெட்ட வழியில் மன நிலையை நாட்டிக் கொண்டிருந்த கட்டபொம்மு நாயக்கர் தனது பிடிவாத சுபாவத்திலிருந்துங் குணமடையவில்லை. மேஜர் பானர்மான் துரையும் (Major Bannerman) அவரது காரியத்தைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். கோட்டையின் முற்றுகையின் மத்தியில் பாளையக்காரர் திட்டமாக ஓட்டம் பிடித்துவிடுவாரென்று மேஜர் துரையின் மனதிற்படவும், அவரை அவ்விதம் தப்பியோடாமலிருக்கும்படியுள்ள தன்மைகளை அமைத்துக் கொண்டு மேஜர் துரையும் ஜாக்கிரதையுடனிருந்து கொள்ளத் க்குதவியாகக் கியாப்டன் ஓரெயிலி (Captain Railly) துரையையும் கியாப்டன் புரூஸ் (Captain Bruce) துரையையும் வைத்துக்கொண்டார். இவ்விதமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கையில் பத்து மணிப்பொழுதின் சமயம் பாளையக்காரர்

மேஜர் * துரையைப் பார்ப்பதற்குத் தனக்கு ஓர் உத்தரவை எழுத்து மூலமேனும் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொண்டார். இதைத் தெரியவும், துருப்புகளும் சைனியங்களும் தங்களுக்குள்ள வேலைகளைச் சுறு சுறுப்புடன் செய்ய ஆரம்பித்து விட்டன. மூன்றாவது ரிஜிமெண்டின் முதலாவது சைனியத்துள்ளார்களும், சுதேசியக் காலாட்படைச் சைனியத்துப் பதின்மூன்றும் ரிஜிமெண்டைச் சேர்ந்த நான்கு துண்டம் சைனியங்களும் "வியூகம்" வகுக்கப்பட்டவர்களாகித் தெற்குக் கோட்டை வாசலை ஆறு பவுண்டர் குண்டுகளைக் கொண்டு தாக்கினார்கள். இதே சமயத்தில் வடக்குக் கோட்டை வாசலைக் கியாப்டன் டாலாஸ் துரையின் உத்தரவின்படி இரண்டு கும்பினிச் சைனியங்கள் தாக்கின. இவ்விதமான சைனியங்களும் அவைகளின் தளகர்த்தர்களும் முதல் தூசியில் மிகுந்த நிதானத்துடனும் ஒழுங்கில் நின்றும் சிறிதளவேனும் விலகாமலும் கோட்டை வாசல்களைத் தாக்கினார்கள். இவைகளில் இடியுண்ட வாசல் வழிகள் மூலமாக உள்ளே பிரவேசித்து சுவர்களின்மீது ஏறுவதற்குள்ளாக வீணை வதந்திகளைப் பாளையக்காரரின் சைனியங்கள் கிளப்பிக் கும்பினிச் சைனியங்களுக்குள்ளாக எவ்வாறோ திகிலைப் புகுத்திவிட்டார்கள். இவ்விதமான திகில்கள் எற்படும்வரை கும்பினிச்சைனியங்களுக்குள் வெற்றி இருக்கலாமென்ற நம்பிக்கையைச்

* மேஜர் என்றது மேஜர் பானர்மான் என்றதின் சுருக்கமாகும்.



இழந்து உட்கொண்டும் பிடிவாதத்துடன் சண்டை செய்தும் மேஜர்துரையின் பக்கம் பெருஞ் சேதங்கள் ஏற்பட்டுவிட்டன. இவ்விதம் நிகழ்ந்த நஷ்டத்துக்கு மேஜர்துரை எந்த விதமும் ஜவாப்தாரியாக நியாயமில்லை என்பதைக் கவர்னர் அவர்களின் சபைக்குத் தெரிவித்துக் கொண்டார். அப்படி அவர் தெரியப்படுத்திக் கொண்டதில் தன்மேல் இதில் யாதொரு குற்றமும் ஏற்பட நியாயமில்லை என்று எடுத்துக் காட்டிவிட்டு மறுவுத்தரவை அங்கிருந்து அவர் பெறும் வரை அவரது மனநிலை அலையிற் கிடக்குந் துரும்பு போல் தத்தளித்துக் கொண்டிருக்குமென்றுந் தெரிவித்தனர்.

**மேல்க்கொண்ட கும்பினிச் சைனியங்களின் வரவு**

பத்தொன்பதாம் ரிஜிமெண்டைச்சேர்ந்த காலாட்படையும் இரண்டு பன்னிரண்டு பவுண்டர் குண்டுகளும் மேஜர் துரைக்கு வந்து சேரும்படிக்கு ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் தனக்கு ஓர் இருபத்து நான்கு பவுண்டர் குண்டையும் பாளையங்கோட்டையிலிருந்து அனுப்புவிக்கும்படி கேட்டுக்கொண்டார். இந்த யுத்தத்தில் ஐரோப்பியர்களே நேட்டிவ் சைனியங்களிலும் அதிகமாகக் கொல்லப்பட்டவராவார்கள். காயப்பட்டோர்களிலும் ஐரோப்பியர்களே அதிகமாக இருந்ததால் நேட்டிவ் சைனியங்கள் சரியானபடி போர் செய்யவில்லையெனத் தெரிய் வந்ததென்றதையும் எடுத்துக் காட்டினர்.

மேஜர் துரை கவர்னர் ஜனரல் அவர்களின் சபைக்கு எழுதிய கடிதத்தின் சாரம்

மாஷிமை தங்கிய ஹிஸ்மேஜஸ்டி அவர்களின் 19-ம் ரிஜிமெண்டும் இரண்டு பன்னிரண்டு பவுண்டர் குண்டுகளும் நேற்று மாலை ஆறு மணிக்கு வந்ததாலும், வந்த இளைப்பால் சைனியங்கள் உடனே எதையும் செய்வதற்குக் கூடாதிருந்ததாலும், கோட்டையை மறுபடியுந் தாக்குவதற்கு நான் உத்தரவு செய்யவில்லை. அன்றைய இரவிலேயே பாளையக்காரரும் அவரைச் சேர்ந்துள்ள சிலருமாக எவருக்குந் தெரியாமல் கோட்டையை விட்டு ஓடி விட்டனர். அவர்கள் ஓடிய சிறிது க்ஷணப் பொழுதுக்குள் கோட்டையும் நம்முடையதாகியது. அதிகப் பிரயாசையில்லாத போதெல்லாம் நேட்டிவ் சைனியங்கள் அதிகமான தீவிரத்துடனும் சுறுசுறுப்புடனும் போரில்காட்டும் சுபாவத்தை நான் பலதடவைகளில் பார்த்திருக்கிறேன். அதுபோலவே இதிலுங் கண்டு கொண்டேன். பாஞ்சாலங் குறிச்சியார் சிலருடன் தப்பி ஓடி விட்ட செய்தியைக் குறித்து அவருக்கு விரோதமான பாளையக்காரர்களுக்கு எழுதி, அவரைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியதென்று திட்டஞ் செய்து விட்டு, அவரைப் பின்பற்றி என்னுடைய சைனியங்கள் சகிதம் வடக்கு முகமாகப் புறப்பட்டு விட்டேன். நான் புறப்படும்போது காயமடைந்து கிடந்த நமது சைனியங்களின் சிகிச்சைக்கும் வசதிக்கும் போதுமான ஏற்பாடுகளைச் செய்து வைத்து



அவர்களைத் தகுந்த ஜாகைகளை வசதியாகக் கொள்ளும்படியானவைகளையும் செய்துவிட்டேன். இவ்வகையான ஏற்பாடுகளைச்செய்து முடித்துவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சியை விட்டுப் புறப்படும்போது, லெப்டினென்டு டாலாஸ்துரையின் கீழுள்ள இரண்டு துண்டம் குதிரைப் பட்டாளத்துத் துருப்புகளையும், கியாப்டன் ஓரெயிலி துரையின் கீழ்ப்பட்ட கிரினேடியர் பட்டாளத்திலிருந்து நான்கு துண்டம் சைனியங்களையும் எனக்கு இடது பக்கம் (அதாவது, மேஜர் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்ததால், மேற்கு) போகும்படி செய்துவைத்து நமக்கு உதவிக்கு வருகிற பாளையக்காரர்களிடம் சேர்ந்து கொள்ளும்படிக்கு உத்தரவு செய்து விட்டேன். மேலே கண்ட விவரப்படிக்குப் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து ஏற்பாடுகளைச் செய்து விட்டுச் சிறிதுதூரம் செல்லவும், எட்டயபுரத்தாரிடமிருந்து கவர்ன்மெண்டார் எழுதியிருந்ததற்குப் பதிலுங் கிடைத்து விட்டது. அந்த ஜவாபில் எந்தவித நிலைமையில் தங்களுக்குத் தீங்கைக் கலகக்காரர்களான பாளையக்காரர்கள் எல்லோரும் ஒன்று கூடிச் செய்வதாக இருந்தாலும் தாங்கள் கும்பினியார்களிடம் வைத்துள்ள இராஜ விசுவாசத்தை மறக்கப் போவதில்லை என்றும் தங்களுக்குக் கும்பினி துரைத்தனத்தார்களிடமிருந்து அவ்வக்காலங்களிற் கிடைத்துள்ள நன்மைகளுக்கு நன்றி மறவாதவர்களாக இருப்பதாயும் பாஞ்சாலங் குறிச்சிக் கட்டபொம்மு நாய்க்கரையாளுலுஞ் சரி, வேறு எவரையாயிலுஞ் சரி, கும்பினித் துரைத்தனத்துக்கு விரோதிகளாக இருப்பார்களே

யானுல் அப்பேர்க் கொத்தவர்களையும் தங்களுடைய ஜென்ம விரோதிகளாகவே கருதுவதாகவும் கும்பினித் துரைத்தனத்தார் அவர்களது விரோதிகளின் பொருட்டுக் குருவியர்வையைச் சிந்தும்படி நேரிடின் தாங்கள் (எட்டயபுரத்தார்) தங்களது குருதியை இறைக்கத் தயாராக இருப்பதாயும், தங்களது சைனியங்களை அனுப்பிவைத்துப் பாஞ்சாலங் குறிச்சியாரையும் அன்னவரது சகாக்களையும் பிடிக்கும்படிவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாயும் கண்டிருந்தன. இதை வாசித்துத் தெரிந்து கொண்ட மேஜர்துரை சந்தோஷங் கொண்டவராகி, கும்பினிச்சைனியத்தையும் எட்டயபுர மிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த சைனியத்துக்கு ஒத்தாசையாக அனுப்பி வைக்கிறேன் என்றதையும் எழுதி, அதுசமயம் அங்குசென்றிருந்த ஒரு தூதுவன் மூலமாக அனுப்பி விடுத்தார். எட்டயபுரத்தாருக்குச்சொல்லி அனுப்பி வைத்தவண்ணம் லெப்டினெண்டு டாலாஸ்துரையின் குதிரைப் பட்டாளத்தை அனுப்ப ஏற்பாடு செய்ய, அப்படி அனுப்பிவைக்கப்பட்ட குதிரைப் பட்டாளத்தைப் போய்ச்சேர்ந்து கொள்ளும்படிக்கு ஓரெயிலி துரையின் கிரினேடியர் சைனியத்துக்கோர் உத்தரவைப் பிறப்பிவிக்க, அவ்விருவகைச் சைனியங்களும் எட்டயபுரத்துச் சைனியங்களைச் சேர்ந்துகொள்வதற்குள்ளாக எட்டயபுரத்துச் சைனியத்துக்கு கட்டபொம்மு நாயக்கர் கோல்வார்பட்டியிலிருப்பதாகத்தெரிந்து அங்கு அச்சைனியம் செல்லவும், எட்டயபுரத்தாருக்கும் பாஞ்சாலங்குறிச்சியாருக்கும் கோல்வார் பட்டியில் வைத்து யுத்தம் நிகழலா



யிற்று. அந்த யுத்தத்தில் இருகக்ஷியினர்களுக்கும் நஷ்டங்கள் சமமாகவே இருப்பினும், அவ்விருதரத்தார்களுக்கும் நேர்ந்த சேதம் எதிர்பாராத படிக்குள்ள பெருந் தொகைகளாம். கடைசியில் பாஞ்சாலங் குறிச்சிச் சைனியமும் அவருக்கு உதவி புரிந்த கோல்வார் பட்டி ஆதிய மற்றப் பாளையக்காரர்களின் சைனியங்களும் தோற்கடிக்கப்பட, கட்டபொம்மு நாயக்கர் குதிரை மீதேறிக்கொண்டு அறுவர் சகிதம் உயிர் தப்பியோடவே, அவரைச் சேர்ந்தோர்களில் 34 பேர் எட்டயபுரத்தார் கையிற்சிக்குண்டனர். அவ்வறுவர் களாவார் :— பாளையக்காரரின் சகோதரர் குமாரசாமி நாயக்கர், மாப்பிள்ளை முத்தய நாயக்கர், மாப்பிள்ளை குமாரசாமி நாயக்கர், மாப்பிள்ளை முத்துக் குமாரசாமி நாயக்கர், அடைப்பம் வீரண மணியம், அடைப்பம் காளியண்ணன் மணியம். இவ்விதம் பிடிபட்ட முப்பத்திநால்வர்களில் சுப்பிரமணிய பிள்ளையும் அவரது சகோதரருமாவர். பாஞ்சாலங்குறிச்சியாரை இவ்வளவு கேவலஸ்திதிக்குக் கொண்டுவந்து விட்டது அவரது துர்மந்திரி சுப்பிரமணிய பிள்ளையே யாவர். கட்டபொம்மு நாயக்கர் பிடிபடுவதிலும் அவரது துர்மந்திரியான சுப்பிரமணிய பிள்ளை பிடிபட்டதே வெற்றிக்குக் காரணமாகுமென்று இதைக் கேள்விப்பட்ட மேஜர்துரை குதூகலத்துடன் கூறியுள்ளார். ஏனெனில் கட்டபொம்மு நாயக்கர் பிடிபடாமலிருந்த போதிலும் அவருக்குக் கெட்ட புத்திகளை இனிமேலாகப் போதித்து நாட்டை அல்லற்படுத்துவதற்கு ஆளாக இருந்தவர் ஒழியப் போவதான லாபங் கருதியென்க.

சுப்பிரமணிய பிள்ளையையும் அவர் சகோதரரையும் மற்றுமுள்ள மொத்தங்கூடிய 34 பேரையும் கைதிகளாக்கி என்னிடம் எட்டயபுரத்தார் கொண்டுவந்து ஒப்படைத்தனர். அப்படிச் செய்துள்ள எட்டயபுரத்தாருக்கு இந்தியா கவர்ன்மெண்டார் வேண்டிய சன்மானங்களைச் செய்து கௌரவப்படுத்த வேண்டுமென்று கவர்னர் ஜனரல் அவர்களின் சபையை மேஜர் பானர்மான் துரை கேட்டுக் கொண்டார்.

எட்டயபுரத்தாரைக் குறித்துச் சிபார்சு செய்தல்

“இவ்விதம் கைதிகளை என்னிடம் எட்டயபுரத்தார் ஒப்படைத்தபோது நான் நாகலாதபுரத்திலிருந்தேன். ஆனதால் அங்கேயே ஒரு பஹிரங்கமான இடத்தில் யாவரும் பார்க்கும்படி தூக்கிலிட்டுக் கொன்று விடும்படி ஏற்பாடு செய்து விட்டேன். * அவருடைய தலையை உடலிலிருந்தும் வெட்டித் துண்டாடி ஒரு பாலாக்கழையில் குத்திப் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு போகும்படி ஏற்பாடு செய்து வைத்தேன். அந்த உத்தரவும் நிறை

சுப்பிரமணிய பிள்ளையைத் தூக்கிலிட்டதற்கு மேஜர் பானர்மான் துரை கூறிய சமாதான மொழிகள்

* நாகலாதபுரம் கடை வீதிக்குத் தெற்கிலுள்ள கணேசர் கோயிலின் பக்கத்திற் காணப்பட்ட ஒரு வேப்ப மரத்தில் தூக்கப்பட்டார். அம்மரம் பட்டுப்போக, அதன் ஸ்தானத்தில் 1871-ம் வருஷத்தில் வேறோர் வேப்பமரம் வைக்கப்பட்டது. அங்கு இப்போது காணப்படுகின்ற வேம்புகள் இரண்டனுள் தென்சிறகிலிருப்பது எதுவோ அதுவே பிரதி வேம்பாகும்.



வேறியது. அவருடைய சகோதரரையும் மற்றுமுள்ள கைதிகளையும் சமயம்போலச் செய்து கொள்வதென்று கருதி, கைதிகள் அடைபட்டிருந்தவாறே இருக்கும்படி செய்துவிட்டேன். இப்படிச் செய்ததற்குக் காரணம் நாலாபக்கங்களிலும் கலகங்கள் இன்னுங் குறையாமலிருக்கும் நிலைமையில் பாளையக்காரர்களின் சீமைகளில் சமயம் போலச் சுப்பிரமணிய பிள்ளையைப் போலவும் கட்டபொம்மு நாயக்கரைப் போலவும் எத்தனையோ பேர்கள் கிளம்புவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பது என் மனதில் பட்டிருக்கிறது. அத்தன்மையை மனத்துட் கொண்டிருக்கிறவர்கள் இனியாவது இத்தகைய கொடுந் தண்டனையை சுப்பிரமணிய பிள்ளைக்கு விதித்தது போலத் தங்களுக்கும் விதித்தல் கூடுமோ என்ற அச்சத்தால் பிடிக்கப்பட்டு நாட்டிற்கும் இராஜாங்கத்தாருக்கும் கேட்டை யுண்டாக்காதிருக்க வேண்டுமென்றதே என் கொள்கையாகும்.” “இப்படிச் செய்துள்ள என்னுடைய செயல்களைக் குறித்து ரைட் ஹானரபில் கவர்னர் ஜனரல் அவர்களின் சபைக்குத் தெரிவித்துக் கொள்வதென்னவெனில், நான் என்னுடைய அதிகாரத்துக்கும் தேசத்தின் கட்டுப்பாடான சட்டத்துக்கும் மீறி தகாதவைகளைச் செய்து விட்டேன் என்று தங்களது சித்தத்திற்குத் தோற்றப்பட மாட்டாதென்றும், இராணுவ முறையில் எனக்குள்ள அதிகாரவரம்பிற்குட்பட்டதே என்றும், காலதேச வர்த்தமானங்களை யொத்ததன்மையில் என்னாற் செய்யப்பட்டவை நியாயமானவைகள் என்றும், எனக்குத் தோற்றுவதால் அவைகளைச்

செய்துளேன் என்று தெரிவித்துக் கொண்டேன்"

"நாகலாதபுரம் பாளையக்காரரான இம்முடி பட்டம் எரபாபு நாயக்கர் அக்டோபர் மாதம் 9-ந் தேதியில் நானங்கிருக்கும்போது என்னிடம் சரணாகதியடைந்து விட்டார். இராமநாதபுரத்துச் சீமையில் நிகழ்ந்த கொலைகளுக்கும் இவரே ஜவாப்தாரி. கேட்டமாத்திரத்திலேயே மயிர்க்கூச்சலுண்டாகும்படியான கொடுங் கொலைகளையும் கொடுந்துன்பங்களையும் இவரது நாட்டுப்பக்கத்துள்ள இராமநாதபுரத்துச் சீமையில் இவரது பலத்தைக் கொண்டு செய்தவர் இவரது தம்பியார் சௌந்தர பாண்டிய நாயக்கராவதால், அவர் பிடிபடும் வரை இவரை மெய்காவலில் வைக்கும்படி உத்தரவு செய்துளேன். எட்டயபுரத்தாரின் சைனியங்களும் கட்டபொம்மு நாயக்கரைப் பின்தொடர்ந்து சென்றிருக்கின்றன எனத் தெரிந்து அச்சைனியங்களுக்கு என்னால் உதவியாக அனுப்பிவைக்கப்பட்டிருந்த கும்பினிச் சைனியங்களின் தலைவர்களான டாலாஸ்துரையையும், ஓரெயிலிதுரையையும் அவர் அவர் சைனியங்கள் சகிதம் திரும்பி வரும்படி உத்தரவு செய்து விட்டேன். அவ்விருவரும் தங்கள் தங்கள் சைனியங்கள் சகிதம் என்னிடம் வந்து சேர்ந்து விட்டார்கள்."

"நாகலாதபுரத்தாரின் சகோதரரான சௌந்தர பாண்டிய நாயக்கரை 12-ந் தேதி மாலையிற் பிடித்து நேற்றுக்காலை வரையிலும் அவரைக் கைது செய்து அடைத்துவைக்க ஏற்பாடு செய்தேன். அங்கு பாளையக்காரர்களும் நேரில் ஆஜராவதற்கு அசக்தர்களாக இருந்த பாளையக்காரர்களின் பிரதிநிதிகளும் முன்னங்



கொடுக்கப்பட்டிருந்த தகவலின்படியே வந்து சேரவும், அவர்களுக்கு ரெவினியு போர்டார் கலெக்டர் மூலமாக அனுப்பிவைத்திருந்த இராஜாங்க விளம்பரத்தைப் படித்துக்காட்டி, எல்லா விவரங்களையும் ஆதியோடந்தமாகச் சொல்லி எனக்கு கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கும் அதிகார தோரணையின் வலுவைக்கொண்டு இந்நாட்டில் நிகழும் அக்கிரமங்களையும் கொலைகளையும் கொள்ளைகளையும் விசாரித்து அக்கிரமஞ் செய்கிறவர்களுக்குச் சரியான தண்டனையை விதிக்க வேண்டியதென்றும், குற்றத்துக்குப் பாத்தியப்பட்டவர்கள் இன்னாரென்று முடிவான ருஜுவின் பேரில் தீர்மானமாகிவிட்டால் அப்பேர்ப்பட்டவர்களைத் தண்டனை செய்வதில் துஷ்டத்தனமுள்ள ஏனைய பாளையக்காரர்களுக்குப் படிப்பினையாக இருக்கவேண்டுமென்றும் ஆக்ஞாபித்திருப்பதால் தகாத செய்கைகளை நாட்டிற் செய்து அல்லற்படுத்தி கவர்ன்மெண்டாரின் கோபத்துக்குப் பாத்திரராகிறவர்களை அவ்விதமான கொடுந்தண்டனையை எனக்குச் செய்ய மனம் நடுங்குவதாக இருந்தாலும், சந்தர்ப்பமும் அவசரமுங் கருதி அத்தகையவைகளால் அன்னார்களைச் சிட்சியாமலிருக்க முடியாதென்பதையும், அதனைக்கண்கொண்டு காணும் இங்குள்ள ஒவ்வொருவரும் துஷ்ட புத்தியை நீக்கிவிட்டு ஸுபுத்திகொண்டு கும்பினி துரைத்தனத்தாருக்குக் கீழ்ப்படியுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

"என்னுடைய விசாரணையில் கட்டபொம்மு நாயக்கரின் சம்பிரதி சுப்பிரமணிய பிள்ளையும், நாக

லாத புரத்தாரின் சகோதரர் சௌந்தர பாண்டிய நாயக்கரும் தகாத செயல்களைச் செய்வதற்குக் காரண பூதர்களாக நின்றதுமல்லாமல், அச்செய்கைகளை அவர்களே செய்துமிருக்கிறார்கள் என்று வெளிப்படையாகி விட்டதால் அவ்விருவருக்கும் மரண தண்டனையை விதிக்கிறேன். முதலாவது சொல்லப்பட்ட சுப்பிரமணிய பிள்ளை என்பவரை நாகலாதபுரத்தில் பஹிரங்கமாக எல்லோரும் பார்க்கும்படி தூக்கிவிட்டுக் கொல்லும்படிசெய்து, அவரது தலையை உடலிலிருந்து துண்டித்துப் பாலாக்கழை ஒன்றில் குத்திப் பாஞ்சாலங் குறிச்சிக்குக் காட்சியாக எடுத்துச் சென்று காட்டுவதற்கு உத்தரவு செய்துவிட்டேன் என்றதும், சௌந்தரபாண்டிய நாயக்கரை பள்ளிமடந் தாலூகாவிலுள்ள கோபாலபுரத்தில் தூக்கிவிட்டுக் கொல்லும்படி உத்தரவு செய்து விட்டேன் என்றதும் உங்களுக்குந் தெரிந்தனவே. கோபாலபுரத்தில் அவர்செய்த கொடுங் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் பயந்து திகிலில் மூழ்கிக் கிடந்த ஜனங்களுக்கு அவரை அங்கேயே தூக்கிவிட்டுக் கொன்றுவிடில் சந்தோஷமடைய இடமுண்டு என்று கருதியே அங்ஙனம் அவ்விடத்தில் தூக்கிவிடலாயிற்றென்று தெரிக. இவ்விதமாகப் பேசி முடித்தவைகளை யெல்லாம் கூட்டவுங் குறைக்கவுமில்லாமல் அங்கு வந்திருந்தவர்களை எழுதிக்கொண்டு போய் ஆங்காங்கு அவரவரது கிராமங்களில் பஹிரங்கப்படுத்திவைக்க வேண்டுமென்றும், பாளையக்காரர்களின் துஷ்கிருத்தியங்கள் காரணமாக கவர்ன்மெண்டார் குற்றவாளிகளிடம் இரும்பு படைத்த மனத்தினர்களாகி நடுங்கும்படியான தண்டனையை விதிக்க நேர்ந்ததென்றும் கவர்ன்மெண்டார் எவ்வளவோ தடவைகளில் அந்தந்தப் பாளையக்காரர்களிடம் தயவு காட்டி மன்னித்ததும் சீமைகளை வாபஸ் செய்ததுமாகிய விஷயங்களை எல்லாஞ் சிறிதுகூட ஆராயாமல் நன்றி குன்றியவர்களாகி, கவர்ன்மெண்டாரால் எதையுமே செய்துகொள்ள இயலாதென்றும், வீண் பூச்சி காட்டி பயமுறுத்திக்கொண் டிருக்கிறார்களென்றும் நினைத்து, மென்மேலும் தங்களுக்குள்ள அக்கிரமச் செய்கைகளைக் கணக்கில் அடங்காத வண்ணம் செய்து கொண்டுவந்தமையால் கும்பினித் துரைத்தனத்தார் இவ்விதம் செய்ய நேரிட்டதென்றும், நிரபராதிகளான ஜனங்கள் மேலே சொல்லப்பட்டவர்களின் கொடுஞ் செயலுக்கு வீணாக அஞ்சி மனதிலே தடுமாறிக் கவலை அடைய இனித் தேவையில்லை என்றும், ஜனங்களை வம்பர்களிடமிருந்து காப்பாற்றி வைக்கவேண்டியது கும்பினித்துரைத்தனத்தாரின் கடமை என்பதையும் நீங்கள் ஆங்காங்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்றும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.''



புதுக்கோட்டையார் பாஞ்சாலங் குறிச்சியாரைப் பிடித்தல்

"தொண்டைமான் இராஜாவிடமிருந்து கலெக்டருக்குக் கட்டபொம்மு நாயக்கரைப் பிடித்து அவர் வைத்திருக்கும் செய்தியைத் தெரிவித்ததுடன், மேஜர் பானர்மான் துரைக்குந் தெரிவித்தார். உடனே மேஜர்துரை தொண்டைமானால் பிடிபட்டுக் கிடக்கும் கட்டபொம்மு நாயக்கரை மதுரைக்கு அனுப்பிவிக்க வேண்டுமென்றும் கலெக்டரி

டம் தெரிவித்திருக்கிறேன். நான் அவ்வாறு கேட்டுக் கொண்டதற்கு மாருக கவர்ன்மெண்டாரிடமிருந்து வேறு ஏதேனும் இது சம்பந்தமாக உத்தரவாகுமே யானல் அதன்படியே செய்துகொள்வதும் எனக்குச் சம்மதமென்று சொல்லிவிட்டேன். ஆனல், என்னுடைய வேண்டுகோளின்படியே அவரை மதுரைக்கு அனுப்பிவைத்தும் அங்கிருந்து என்னிடம் அவரை அனுப்பி இராணுவச் சட்டப்படி அவரை எப்படிச் செய்வது உசிதமாகுமோ அப்படியே செய்யவும் எனக்குச் சர்வாதிகாரமும் அது விஷயத்தில் கொடுத்து விட்டார்கள்."

கட்டபொம்மு நாயக்கரின் வாக்குமூலங்களடங்கிய தஸ்தாவேஜுகள்

"அப்படி அனுப்பிவைக்கப்பட்ட கட்டபொம்மு நாயக்கருடன் வந்தோர் ஆறு பேர்களாவார்கள். அவர்களில் பாளையக்காரரின் சகோதரரான ஊமைக் குமாரசாமி நாயக்கரும் ஒருவராவர். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையக்காரர்கள் யாவரையும் நேற்றுப் பகல் பத்துமணிக்கு ஆஜராகி கவர்ன்மெண்டாரின் கோபத்துக்குத் தன்னுடைய அடாத செய்கைகளால் பாத்திரராக்கிக் குடிகளையும் அவரை யொத்த பாளையக்காரர்களையும் வரம்புகடந்த நடத்தைகளால் வீண் தொந்தரவுகளுக்குள்ளாக்கி மூர்க்கமும் பிடிவாதமுமே வெற்றியின் லக்ஷணங்கள் என்று மனதிற் கொண்டு செய்துவந்த காரியங்களின் பலனை அன்னருக்கு இராஜாங்கத்தாரால் கிடைக்கப் போகும் சன்மானத்தை நான் உங்கள் முன்பு எடுத்துச் சொல்லி உங்களுக்



கும் அது நீதியான பாடமாகட்டுமென்றும், அதனை மீறி இங்குவந்திருக்கும் எவராவது உங்களுக்குள் நடப்பதாக இருந்தால் அவர்களுக்கும் அதே சன்மானங் கிடைக்காது போகாதென்றும் எடுத்துச்சொல்லி விட்டு கட்டபொம்மு நாயக்கரைப் பாளையக்காரர்கள் கூடிய சபையின் முன்பு வரும்படி கட்டளையிட்டேன். அவருடைய வாக்குமூலங்களை ஆதியோடந்தமாக எழுதிப் பதிவு செய்துகொண்டேன். அந்த வாக்குமூலங்கள் என் கையெழுத்துள்ள தஸ்தாவேஜுகள். அவைகளில் A என்று அடையாள மிடப்பட்டிருக்கின்றது. அவைகளுடன் மேஜர் ராபர்ட் டூரிங் (Major Robert Turing) துரையும் ஜ்யார்ஜ் ஹூஜஸ் (George Hughes) துரையும் வாங்கியுள்ள வாக்குமூலங்களுமிருக்கின்றன. A என்று அடையாளமிட்ட தஸ்தாவேஜுகளுக்குச் சரியான நகல்"

மேஜர்பானர்மான் துரை கட்டபொம்மு நாயக்கரைப் பார்த்துச் சொல்லல்:—

"என் முன்பு கூடியிருக்கும் பாளையக்காரர்களடங்கியுள்ள இந்தச் சபையின் முன்புக்கு உம்மைக் கைதுசெய்து என்னிடம் ஆஜர்ப்படுத்தும் படிக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டு உத்தரவின் பிரகாரம் பாளையக்காரர்களனைவரும் ஏகோபித்து அடங்கியுள்ள இந்த மன்றத்துக்கு முன்பாக உம்மைக் கைதுசெய்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. நீர்குற்றவாளி என்றதை உணரும். நீர் செய்துள்ள தகாதனவாயுள்ள செயல்களுக்கும் கலகங்களுக்கும் கட்டுப்பாடற்ற அக்கிரமச் செயல்களுக்கும் ஏதேனும் நீர்

சொல்லிக்கொள்ள வேண்டிய சமாதானங்களிருக்குமேயானால் அவைகளை விளக்கிக் காட்டி உம்முடைய செய்கைகள் குற்றமற்றனவென மெய்ப்பித்துக் கொள்ளலாம். நீர் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்துப் பாக்கிகளைச் செலுத்தாமல் அதிர்ப்தியாக நடந்துகொண்டீர். கலெக்டர் லஷிங்டன் துரை அனுப்பிய சமன்ஸுக்கு நீர் ஆஜராகாமலிருந்துகொண்டும், அப்படி அவ்வரைப் பேட்டிகாணச் செல்வதானால் ஆயுதபாணிகளான சைனியங்கள் சகிதமே ஆஜராகக் கூடுமென்றும் சொல்லிவிட்டீர். சென்ற ஜுலை ஆகஸ்டு மாதங்களில் ஆயுதபாணிகளான சைனியங்களைச் சிவகிரியாருக்கு விரோதமாக அன்னாரது புத்திரரின் சகாயத்துக்கு அனுப்பியுள்ளீர். இச்செய்கையும் கவர்ன்மெண்டாருக்கு வெறுப்புக்கிடனாகியதென்ற விஷயங்களைப் பீடிகையாக எடுத்துச் சொல்லிவிட்டு அவருக்கு (ஒன்று) என்று அடையாளமிட்ட லெட்டரை வாசித்துக்காட்டினார். பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முநாயக்கருக்கு எழுதுவது, லெட்டர் நெ. 1. கவர்ன்மெண்டாரின் உத்தரவை அனுசரித்து நான் உமக்கு இதனால் கட்டளை யிடுவதாவது: நீர் என் முன்பு 4-9-1799ல் பாளையங்கோட்டையில் ஆஜராகி கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைப் பெற்றுக்கொள்ள வேண்டியது. நீர் இங்கு வந்து என் முன்பு ஆஜராகும் போது சுப்பிரமணிய பிள்ளையையும் உம்முடன் கூட்டிக்கொண்டு வரவேண்டும்."

(ஒப்பம்) ஜான் பானர்மான்.
1—9—1799.



"அவரை இதை வாசிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டதன்பின், உமக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த லெட்டருக்கு ஒரிஜினல் இதுதானே என்று அவரை மேஜர் பானர்மான் துரை கேட்க, அதற்குக் கட்டபொம்மு நாயக்கர் 'ஆம்' என்று ஒத்துக்கொண்டார்."

"நெ. 2. மேலுள்ள லெட்டர் நெ. 1க்குப் பதில்:— துரையவர்களின் லெட்டரிற் கண்டவாறுள்ள உத்தரவின்படி பாளையங்கோட்டைக்கு வந்து சுப்பிரமணிய பிள்ளை சகிதம் பேட்டி கண்டு கொள்ள நல்லதினம் வாய்க்காததால் நல்ல முகூர்த்த நாள் ஒன்றில் வந்து பேட்டி செய்து கொள்கிறேன். கும்பினியாரின் சம்ரக்ஷணைக்கும் தயவிற்கும்மதிப்பிற்கும் சதா ஆசிர்தனாக இருப்பதால் கும்பினிதுரையவர்கள் அவைகளுக்கு என்னை அருகனாக மாட்டாரென்றும் மதித்துவிடல் கூடாதென்றும் பிரார்த்திக்கிறேன். சதா ஆசிர்தன் கட்டபொம்மு நாயக்கர் என்று ஒப்பமிட்டிருந்த தமிழ் லெட்டரை ஜார்ஜ் ஹுஜஸ்துரை இங்கிலீஷில் மொழி பெயர்த்தனர். தமிழில் எழுதப்பட்டிருந்த ஜவாபு ஓலையைக் கட்டபொம்மு நாயக்கரிடம் காட்டி இதுதானா துரையவர்கள் 1-9-1799ல் உமக்கு எழுதியிருந்த லெட்டருக்கு நீர் எழுதிய ஜவாப் என்று கேட்க, அதற்கவர் 'ஆம்' என்று ஒத்துக்கொண்டார்."

நெ. 3 மேஜர்ஜான் பானர்மான் துரையின் இன்டர் பிரட்டர் (இ)ராமலிங்க முதலியாரின் வாக்குமூலம்: சாக்ஷிப் பெட்டியின்மீது ஏறி நின்றுகொண்டு ஜாதி மதாசாரப்படி பிரமாணங் கூறிவிட்டுச் சொல்லி

யது. 5-9-1799ன் காலையில் நான் பாஞ்சாலங் குறிச்சிக்குப் போயிருந்தேன். அங்குள்ள கோட்டை வாசலில் பாளையக்காரரைப் பார்த்தேன். அவர் என்னைச் சிறியதொரு பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு சென்றார். அங்கு நாங்களிருவரும் கெட்டிபுட்டி நாயக்கருமாகக் கீழே உட்கார்ந்தோம். கும்பினிதுரைத்தனத்தாரின் உத்தரவின்படி மேஜர் பானர்மான் துரை பாஞ்சாலங் குறிச்சிக்குப் பட்டாளங்கள் சகிதம் தண்டெடுத்து வந்திருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்தேன். கட்டபொம்மு நாயக்கர் கும்பினி துரைமாரை நம்பிச் சரணாகதி யடைந்துவிட்டால் அவருக்கு மன்னிப்புமூலம் நியாயம் கிடைக்கலாமென்றேன். அப்படி அவர் செய்யாவிட்டால் மேஜர் பானர்மான் துரை பாஞ்சாலங் குறிச்சியைப் பிடித்துக் கைவசமாக்கிக் கொள்வாரென்றேன். இதைக்கேட்ட கட்டபொம்மு நாயக்கர், "ஐயோ! இதென்ன? துரையவர்களைப் பேட்டி செய்வதற்கென்று எடுபிடி இடைக்கியம், பேரிகை, மல்லாரி, வாங்காய், எக்காளமாதியவைகளைத் தயாரித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் கும்பினிப் பட்டாளம் தண்டெடுத்து வந்திருக்கிறதென்று அவர் சொல்லக் கேட்ட" நான் (முதலியார்) நீங்கள் துரையவர்களுக்கு எழுதிய பதிலில் இன்னகிழமையில் என்றாவது, இன்னதேதியிலென்றாவது துரையவர்களைப் பேட்டிசெய்ய வருவதாகக் கண்டிருந்ததா வென்று கேட்க, அதற்கு அவரிடமிருந்து இல்லை என்ற பதில் கிடைக்கப்பெற்றேன். நீங்கள் காலங் குறிப்பிடாமல் எழுதியிருந்த 'காரணத்தினால்தான் துரை



யவர்கள் பட்டாள சகிதம் இங்குவர நேர்ந்துவிட்டதென்று சொன்னேன். இதற்கப்பால் பாளையக்காரரும் கெட்டிபுட்டி நாயக்கர் வகையறாக்களும் கேப்டன் டேவிசன் (Captain Davison) துரை எங்கு இருக்கிறார்கள் என்று என்னைக் கேட்டார்கள். அது எனக்குத் தெரியாதென்று சொல்லி விட்டேன். அதன் பின்பு நீங்கள் என்ன ஐயா சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். எழுத்து மூலமான உத்தரவைப் பெற்றுக் கொண்டாலன்றிக் கும்பினித் துரைகளைப் பார்க்கச் சரிப்படாதென்று சொல்லிவிட்டார். அதுவே வழக்கமும் என்றனர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கெட்டிபுட்டி நாயக்கரும் எழுத்து மூலமான உத்தரவைப் பெற்றுக்கொண்டுதான் கர்னல் மாக்ஸ்வெல் (Colonel Maxwell) துரையைப் பார்த்திருப்பதாகச் சொற்றனர். மாக்ஸ்வெல் துரையும் மேஜர்பானர்மான் துரையும் நானும் இடைவிடாது பிரியாமலிருக்கிறோமே. அப்படிக்கிருக்க நீங்கள் எனக்குத் தெரியாமல் அவரை எப்படிப் பார்த்து விட்டீர்களென்றேன். எழுத்து மூலமான உத்தரவை எவ்விதத்திலும் கொடுக்க முடியாதென்று கட்டோடு சொல்லிவிட்டேன். நியாயத்துக்கு எந்த நிலைமையிலும் சிறிதளவேனும் விலகாத கும்பினித் துரைத்தனத்தாரை நம்பியே சரணாகதி யடையவேண்டுமென்றேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த கெட்டி புட்டி நாயக்கர் எழுத்து மூலமான உத்தரவைக் கொடுக்கச் சம்மதமில்லாவிட்டாலும் அவர்களது சொல்லை நம்பி நாங்

கள் இறங்குவதற்கு உறுதி மொழியாக ஒரு பட்டாக் கத்தியையேனும் அடையாளமாகக் கொடுக்கத் தயவு செய்யவேண்டுமென்றார். இதற்கும் இசையாவிட்டால் தங்களுடைய வாக்குறுதி ஒன்றுமட்டும் போதுமென்றார். கும்பினித் துரைத்தனத்தாருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்துப் பாக்கிகளையும் நாங்கள் செலுத்தவில்லை. உள் நாட்டில் கலகங்களைச்செய்து விட்டதாயும் எங்கள்மீது புகார்கள் கிளம்பிவிட்டன. இந்நிலைமையிலுள்ள நாங்கள் உங்களிடமிருந்து வாக்குறுதியைப் பெறாது எவ்விதம் ஆஜராதல் கூடும்? என்றார். அவ்விதம் எதையுமேசெய்ய முடியாதென்று சொல்லிவிட்டேன். கும்பினியாரின் அதிகாரத்தை மறுக்கவாவது, அல்லது எதிர்த்துப் போர் செய்யவாவது, அல்லது தலைமறைவாக எங்கேயாவது ஒளித்துக் கொள்ளவாவதீ எவ்வாறு தங்களாற் கூடுமென்றார்கள். நாடெல்லாம் கும்பினியாரின் கீழ்ப்பட்டுவிட்டதால் அவர்களை நம்பிச் சும்மா சரணாகதியடையலாமென்றேன். அதற்கப்பால் கட்டபொம்மு நாயக்கர், கெட்டிபுட்டி நாயக்கர் பாளையக்காரருக்கு வேண்டிய வேறு உறவினர்களுமாக அங்கிருந்த ஒரு சத்திரத்தினுட்போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் யாவரும் அங்கு ஒரு மணி நேரம்வரை ஆலோசனைசெய்துவிட்டுக் கெட்டி புட்டி நாயக்கரை மேஜர்பானர்மான் துரையிடம் கலந்து பேசுவதற்கு அனுப்பி வைத்தார்கள். இவ்விதமாக நான் சொல்லியுள்ள மேலேகண்ட விஷங்கள் நிகழும்போது ஆர்டர்லி ஹவுல்தார் இபு



ராம் கானும் ஹரிக்கார்சாமி அய்யரும் என்னுடன் கூட இருந்தார்கள். இங்கிலீஷில் மொழிபெயர்த்தது ஜார்ஜ் ஹூஜஸ். இதற்குச் சரியான மலையாள மொழி பெயர்ப்புமுண்டு"

(ஒப்பம்)

இ ரா ம லி ங் க ம்.

"1-வது சாட்சி:—இராமலிங்க முதலியார் சாட்சிப் பெட்டியின்மீது ஏறி நின்றுகொண்டு ஜாதிமதாசாரப்படிப் பிரமாணம் செய்துவிட்டுச் சொல்லியது:

மேஜர் பானர்மான் துரையின் வினா:-5-9-1799-ன் காலைப்பொழுது பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய் என்னுடைய உத்தரவுப்படி கட்டபொம்மு நாயக்கரிடம் நான் உம்மிடங் கொடுத்தனுப்பிய தபாலை அவரிடம் சேர்ப்பித்துவிட்டீரா? அன்று நீர் கட்டபொம்மு நாயக்கரைப் பார்த்தீரா?

இராமலிங்க முதலியாரின் விடை:—5-9-1799-ன் காலையில் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய் உத்தரவின் பிரகாரமே அவரை நேரிற்பார்த்துத் தபாலை அவரிடமே ஒப்படைத்துவிட்டேன்."

"மே. பா. துரையின் வினா:—நான் உமக்கிட்டிருந்த கட்டளை இன்னதென்பதை நீர் இப்போது திருப்பிச் சொல்லும். அதுபோலவே கட்டபொம்மு நாயக்கர் உம்மிடம் சொல்லிவிடுத்த ஜவாபையும் ஞாபகப்படுத்திச் சொல்லும். அதற்கப்பால் அங்கு அப்போது நிகழ்ந்த ஒவ்வொரு விஷயத்தையுந் தெளிவாகச் சொல்லும்."

"இராமலிங்க முதலியாரின் விடை :—இதற்குள்ள பதிலை மேலே சொல்லப்பட்டுள்ள நெ. 3-லிருக்கும் பிரகாரமே சொற்றனர் (அதனைப் பார்த்துக் கொள்க). அவைகளைக் கேட்ட அம்மூவர்களும் தங்களுடைய தஸ்தாவேஜுக் கட்டிலிருந்த நெ. 3 என்று அடையாளமிட்ட ஸ்டேட்மெண்டை எடுத்து அவரிடங் காட்டி இதுதானே நீர் முன்னம் கொடுத்துக் கொண்ட வாக்குமூலமென்று கேட்டு அதனை அவரைக் கொண்டே வாசிக்கும்படி செய்தனர். முதலியார் இதனை ஒத்துக்கொண்டார். அதனை உடனே கட்டபொம்மு நாயக்கரும் வாசிக்க, சபையிலுள்ளார் யாவரும் அறியுமாறு அவரிடங் கேட்க, 'ஆம் சரியே' என்று கட்டபொம்மு நாயக்கரும் ஒத்துக்கொண்டு விட்டனர்."

1. மேஜர்பானர் மான் துரை
2. ராபர்ட் டூரிங் துரை
3. ஜ்யார்ஜ் ஹூஜஸ் துரை
ஆகிய மூவர்களின் முன்னிலையில் வாங்கிய வாக்குமூலம்

"2-வது சாட்சி :—மே. பா. துரையின் ஆர்டர்லி ஹவுல்தாரான இபுராம்கான், சாக்ஷிப் பெட்டியின்மீது ஏறி நின்றுகொண்டு ஜாதிமதாசாரப்படி பிரமாணஞ் செய்துவிட்டுச் சொல்லிய வாக்குமூலம்."

வினா :—"இராமலிங்க முதலியார் சகிதம் நீ பாஞ்சாலங்குறிச்சிக்கு 5-9-1799-ல் காலையிற் போயிருந்ததுண்டா? போயிருந்தால் அங்கு அதுசமயம் நிகழ்ந்ததென்ன?"

விடை :—"மேலே கண்ட தேதியில் நான் இராமலிங்க முதலியார் அவர்களுடன் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போயிருந்ததுண்டு. அங்கு நடந்தவை யெவைகளோ அவைகளை முதலியார் அவர்களின் ஸ்டேட்மெண்டில் வாசிக்கப்பட்டதைத் தவிர வேறு எதுவுமில்லை என்று பிரமாணமாகச் சொல்வேன்."



3-வது சாட்சி ஹரிதார்சாமி அய்யர் சாக்ஷிப் பெட்டியின்மீது ஏறி நின்றுகொண்டு ஜாதிமதாசாரப்படி பிரமாணஞ் செய்துவிட்டுச் சொல்லிய சாட்சியம் :

"மே. பா. துரையின் வினா :—1799-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 5-ந்தேதி காலையில் இராமலிங்க முதலியாருடன் நீ பாஞ்சாலங்குறிச்சிக்குப் போயிருந்தாயா? அங்கு அன்று நீ போயிருந்தால் அப்போது அங்கு நிகழ்ந்த விஷயம் என்ன?"

விடை :-"மேலேசொல்லியுள்ள தேதியில் இராமலிங்க முதலியார் அவர்களுடன் நான் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போயிருந்தேன். இராமலிங்க முதலியாரின் ஸ்டேட்டுமெண்டில் கண்டுள்ள விஷயங்கள் தான் அங்கு நடந்தனவென்று உறுதியாகச் சொல்லுவேன். வேறு எதுவுமே எனக்குத் தெரியாது."

"4வது சாக்ஷி கெட்டிபுட்டி நாயக்கர் சாக்ஷிப்பெட்டியின்மீது ஏறி நின்றுகொண்டு ஜாதி மதாசாரப்படி பிரமாணம் செய்துவிட்டுச் சொல்லிய சாக்ஷி வாக்குமூலம்: இவர் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரருக்கு மாமனார் (அத்தையின் மகனார்)"

"மே.பா.துரையின் குறுக்குவினா:—சென்ற மாதம் 5-ந்தேதிக் காலையில் என்னுடைய துவிபாஷி இராமலிங்க முதலியார் பாஞ்சாலங் குறிச்சிக்குவந்து என்

னுடைய அறிக்கையைத் தெரிவித்த சமயம் நீர் பாளையக்காரருடன் கூட இருந்ததுண்டா?"

விடை:—ஆம். நான் அதுசமயம் பாளையக்காரருடன் கூடவே இருந்தேன்.

வினா:—அறிக்கையை இராமலிங்க முதலியார் பாளையக்காரர் கையில் ஒப்படைத்தபின்பு நான் அவருக்குச் சொல்லிவிடுத்த விஷயங்களைச் சொல்லும் வேளையில் நீர் பாளையக்காரருடன்கூட இருந்தீரா?

விடை:—ஆம். நான் அதுசமயம் பாளையக்காரருடன் கூடவே தானிருந்தேன். அறிக்கையைப் பாளையக்காரரிடம் கொடுத்ததும் தெரியும். அதற்கப்பால் நிகழ்ந்துள்ள விஷயங்களுந் தெரியும்.

வினா:—அன்று பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரிடம் ஆலோசனையை முடித்துக்கொண்டு நீர் என்னிடம் வந்தபோது அவர் விருதாவாகக் கெட்டுவிட வேண்டாம். யாதொரு நிபந்தனையுமின்றிக் கும்பினியாரிடம் வந்து அடைக்கலம் புகுந்துகொள்ளட்டும். அப்படியாயின் அன்னாருக்கு விமோசனம் ஏதேனும் ஏற்படக் கூடுமென்று நான் சொல்லியனுப்பியதாக அவரிடம் நீர் மன்றாடி, அவரைக் கெட்டுப்போக வேண்டாமென்று புத்திமதிகளை எடுத்துச் சொல்லி அவரை நல்லவழிக்குத் திருப்பும்படி பிரயாசை எடுத்துப் பாருமென்று உம்மிடம் நான் சொல்லி அனுப்பியதுண்டல்லவா? இவை யனைத்தும் அவரது நலங்கருதிச் சொல்லிவிட்டிருப்பதாகச் சொல்லும் என்றும், இவைகளுக்கெல்லாம் அவர் இசையாவிட்டால் நான் என்செய்வது என்றும், எனக்கு இராஜாங்கத்தா



ரால் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகார தோரணையை வைத்து நான் யுத்தசன்னத்தனாகக் கிளம்பிவிட்டால் அவர் என்னிடம் நேருக்கு நேராக நின்று போர்செய்வதில் சிறிதளவேனும் எனக்கு ஆத்தமாட்டார் என்றும், அவர் வீணே கெட்டுவிடுவார் என்றும் இவைகளே முடிவான வார்த்தைகளாகுமென்றும் சொல்லி அவரை நல்ல வழியிலிருக்கும்படிக்குச் சொல்லுமென்றுதிய வசனங்களை நான் உமக்குச் சொல்லி அவரிடம் உம்மை அனுப்பிவைத்தேனல்லவா?

விடை:—இவைகளனைத்தும் வாஸ்தவமே. தாங்களும் அவரது விஷயத்தில் அளவுகடந்த தயவுடனும் தாக்ஷிணியத்துடனு மிருந்தீர்கள். தாங்கள் என்னிடம் அவருக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச் சொல்லி யனுப்பியவாறே அவருக்குச் சொன்னேன். அவை யனைத்தும் பாழ்நிலத்துக்கு இறைத்த நீராகிவிட்டன. என்னசெய்வேன்?

மே. பா. துரையின் வினா:—நான் கோட்டையைத் தாக்கும்போது கட்டபொம்மு நாயக்கர் கோட்டைக்குள் தானிருந்தாரா? வேறு எங்கேனுமிருந்தனரா? அன்று பூராவும் அவர் எங்கிருந்தனர்?

விடை:—கோட்டையைத் தாங்கள் தாக்கிய சமயம் அவர் அங்குதானிருந்தார். அன்றுமுழுதும் அங்குதானிருந்தனர். வேறு எங்குமே அவர் அன்று போகவில்லை.

வினா:—நீர் பாளையக்காரர் கட்டபொம்மு நாயக்கருக்கு உறவினராயும் சதா அவருடனிருந்தவராயுமிருப்பதால், சிவகிரியாரின் குமாரருக்கு உதவியாகச்

சைனியத்தை நடாத்திக்கொண்டு சென்றவர் யாவர் என்றது தெரியுமா? பாளையக்காரரின் தகப்பனர் வழியைச் சேர்ந்த தாயாதியான தளவாய் குமாரசாமி நாயக்கர் என்றவர் சுமார் 700 முதல் 1000 பேர்கள்வரை அடங்கிய சைனியத்தை நடாத்திச் சென்றனர் என்று சொல்லி முடித்தார். இதன் பின்பு கைதுசெய்து கொண்டுவந்து விசாரணையின் முன்புக்கு நின்று கொண்டிருந்த குற்றவாளியான கட்டபொம்மு நாயக்கருக்கு அவைகளை வாசித்துக்காட்டி அவரது சமாதானத்தைக் கேட்க, அதற்கு அவர் அவைகளில் எதையேனு மறுக்கத்தனக்குத் தோன்றவில்லை என்று சொல்லிவிட்டுக் கும்பினித் துரைமார்களைப் பார்ப்பதாக இருந்தால் " கவுல் " இன்றிப் பார்ப்பது வழக்கமில்லை என்றவொன்றை மட்டுஞ் சொல்லிவிட்டுச் சிவகிரிக்குச் சைனியங்களை அனுப்பி வைக்கப்பட்டது. ஒற்றுமையில் பிளவுபட்டுக் கிடந்த தந்தையாரையும் மகனுரையும் ஒற்றுமைப்படுத்துவதற்கேயன்றி வேறு நோக்கமன்றென்றனர். இவையன்றி வேறு எதுவும் சொல்லிக் கொள்ள வேண்டியதாக இருந்தால் சொல்லிக்கொள்ளலாமென்று கேட்க, அதற்கு கட்டபொம்மு நாயக்கர் 'என்ன ஐயா சொல்லக் கிடக்கிறது. சும்மா இருங்கள்' என்று பதில் சொல்லிவிட்டார் "

| | | |
|---|---|---|
| முகாம்கயத்தாறு, | } | (ஒப்பம்) ஜான்பானர்மான். |
| 16-10-1799. | | (ஒபபம்) ராபர்ட்ரேங். |
| | | (ஒப்பம்) ஜ்யார்ஜ்ஹூஜஸ். |



குறிப்பு :—இராமலிங்க முதலியாரை யாவரெனத் தெரிந்துகொள்ளச் சிலருக்கிச்சை இருக்கலாமென்றதால் அவரைப் பற்றிச் சிறிது சொல்லி முடிப்போம். இவர் தொண்டை நாட்டில் திருமணம் என்ற ஊரில் ஜனித்த ஒரு பரம்பரைத் தனிகர். மேஜர் பானர்மான் துரைக்கு இன்டர் பிரட்டராக (துவிபாஷி) பாளையக்காரர்களின் யுத்தகாலங்களிலிருந்து விட்டு அதற்குப் பின்னர் திருவாங்கூர் கொச்சி ஆகிய இரண்டு சமஸ்தானங்களுக்கும் மக்காலி (Colonel Macaulay) துரை 1800-ம் வருஷம் பிரிட்டிஷ் ரிஸிடெண்டாக நியமனம் பெறவும், அங்கு பிரிட்டிஷ் ரிஸிடென்ஸி ஏஜண்டாகவும் திருவனந்தபுரத்தில் உத்தியோகம் வகித்திருந்தனர். இவர் பெருநிதி படைத்தவர். இவரிடம் கும்பினியாருக்கு அந்தரங்க நம்பிக்கையுண்டு. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்துஸ்தான், பிராஞ்சு, இங்கிலீஷ் முதலிய பல பாஷைகளைப் பேசும் வாக்கி. இவரது மனைவியாரும் பெருநிதியுள்ள ஒரு குடும்பத்திற்றோன்றியவர். இவரது புத்திரர் போருக்கு காத்து நின்ற திருமணம் சுலோசன முதலியார் என்பார். இவரே திருநெல்வேலியில் தாம்பிர வருணி நதியின்மீது வாராவதியை அமைத்தவர். இவரது மனைவியார் ஒப்பிலா உத்தம குணங்களுடன் சிறந்து விளங்கிய வடிவாம்பாளம்மாள் என்பார். இவ்விருவர்களின் தபோ பலத்தாற்றோன்றிய வேதாத்ரீச தாச முதலியார். இவர் திருவனந்தபுரத்து சடர்கோர்ட்டு—இப்போதைய ஹைகோர்ட்டு—மூன்றாவது ஜட்ஜியாக இருந்தவர். ஆதலால் இவர் இராமலிங்க முதலியாரின் பேரனும். இவரைச் சாதாரணமாகப் பம்பாய் முதலியாரெனச் சொல்வது வழக்கம். இவர் திருவனந்த புரத்தில் வெள்ளியம்பலத்துப் பங்களாவில் வசித்து 93-ம் வயதில் 1903-ம் வருஷத்தில் காலஞ்சென்றார். இம்மூவர்களைப்பற்றிய செய்யுள்கள் பல காணப்படுவனவுள் கீழே கண்டுள்ளவைகளை மட்டும் குறிக்கின்றோம்.

"ஆலங்கட்டிக் களத்தன்னிற் சிவனருங் கீர்த்திபெற்றான்
கூலங்கட்டிக் கடற்றன்னி லனுமனுங் கொண்டனன்சீர்

தாலங் கட்டிப் புகழ்பெற்ற ராஜர்கள் தாம்ப்ரபன்னிப்
பாலங் கட்டிப் புகழ்பெற்றான் சுலோசன பாண்டியனே."

" மன்னவ னெங்களி ராமலிங் கேந்திரன் மாதவத்தின்
தன்னரும் பேறென வந்த சுலோசனன் றாணியிற்
பின்னரு முன்னருக் தற்கிணை தானெனப் பேசவளம்
பன்னருந் தாம்பிர பன்னியிற் பாலம் படைத்தனனே."

"படைத்தான் புனற்சிந்து பூந்துறை மாநதிப் பாலந்தன்னைக்
கிடைத்தா னளவற்ற செல்வத்தைக் கீர்த்தியைக் கேதமெல்
அடைத்தா னுலகுக் கிராமலிங் கேந்த்ர சுகுணன்பெற்ற[வாக்
கடைத்தாம வேளென் றுரைக்குஞ் சுலோசன நாயகனே."

" பொருளை யெனச்சொலு மாது தனக்கொரு பூண்விரும்பிக்
கருணை பொழியுஞ் சுலோசன தீரனைக் காணவவன்
திருநெல்லை யம்பதி யிற்சிந்து பூந்துறை சீர்மருவ
அருமை தரும்பணி யாம்பாலந் தன்னை யருளினனே."

" பாரார் புகழும் புனற்சிந்து பூந்துறைப் பாலஞ்செய்தே
சீருஞ் செல்வம் பெருகுஞ் சுலோசன தீரனுக்கு
கோரு மில்லை யென்றே புகழ்த்தம்பம் நிறுத்திவைத்தார்
கூரார் மதியிங் கிலாந்துரை மன்னர் குறிப்புவைத்தே."

" தொண்டை மண்டலமெனும் பார்மகட்குக் கஞ்சத்
தாயமுகத் திருமணமாந் தொல்பதிக்கட்
பண்டைவருஞ் ஜெனனமதி லிராமலிங்கப் பார்த்திபன்றன்
றவப்பேறே வடிவ மாகி
விண்டைவருங் கொடிதவழும் வீதிநெல்லை வியன்சிந்து
பூந்துறையில் விதித்தான் பாலம்
தண்டையலர் புகழ்வேதா த்ரீசதாசன் றனைமகவாய்ப்
பெற்றசுலோ சனபூ மானே."

" வைத்தான் புவியிற் புகழ்சிந்து பூந்துறை மாநதியில்
வித்தார மானநற் பாலத்தைக் கட்டி மிளிர்குவளைத்



தொத்தார் புயத்தன் சுலோசன தீர சுகுணனெழின்
முத்தா ரகல வடிவாண் மணாள முசுகுந்தனே."

" ரைட்டு ஆனரபில் கவர்னர் ஜனரல் இன்
கௌன்ஸிலிலுள்ளதுரையவர்கள்,வாக்குமூலங்களடங்
கிய சகல தஸ்தாவேஜுகளையும் ஆதியோடந்தமாகப்
படித்துப் பார்வையிட்டால், கட்டபொம்மு நாயக்கர்
கும்பினியாருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்துக்களைச்
செலுத்த மறுத்துவிட்டதும், கலெக்டர் லஷிங்டன்
(Collector Lushington) துரையின் சமன்ஸுக்கு
ஆஜராகமாட்டேன் என்றதும், அப்படிக்கு ஆஜராவ
தாக இருந்தால் ஆயுதபாணிகளான சைனியங்கள்
சகிதமே வந்து பேட்டி செய்யக்கூடு மென்றதும்,
என்னை வந்து பாளையங்கோட்டையில் பார்த்துவிட்டுப்
போகும்படிக்கு கவர்ன்மெண்டார் அவருக்கு அனுப்
பிய உத்தரவிற்கு, என்னை வந்து பார்த்துவிட்டுச்
செல்ல நல்ல தினம் வாய்க்கவில்லை யென்று அவர்
சொல்லிய சாக்குப் போக்குகளும், அவரது கீழ்ப்
படித லின்மையையும் கவர்ன்மெண்டாரிடம் அவருக்
குள்ள வெறுப்பையும் அலக்ஷிய புத்தியையும் காட்டு
கின்றன வென்பதுடன், கவர்ன்மெண்டாரின் எச்சரி
ரிக்கைகளை நிராகரித்ததும், அலக்ஷியம் செய்ததும்,
அவருக்குள்ள சிவகிரிப் பாளையக்காரரின் குமார
ரிடமும், மாப்பிள்ளை வன்னியனாரிடமும், சிநேக
பாவத்தை நீக்கிவிட வேண்டுமென்று கண்டித்திருக்க,
ஆயிரம் சைனியங்கள்வரை சிவகிரியாரின் குமாரருக்கு
உதவியாகச் சென்ற ஜூலை ஆகஸ்டுமாதங்களில் அனுப்
பியுள்ளா ரென்பதையும், பாஞ்சாலங் குறிச்சியிலேயே

இருந்துகொண்டு 5-9-1799ல் அவரை என்னிடமா
வது ஆஜராகி இருவரும் கலந்துகொள்ளுவோமென்று
நான் சொல்லிவிடுக்க, அதற்கும் கேட்டிசைந்து
கொள்ளாமல், அக் கோட்டையினுள்ளேயே இருந்து
கொண்டு எதையுங் கேளாமல், நமது பட்டாளங்களின்
மீது குண்டுகளையும் சமாதானப் பேச்சுகள் நடக்
கும்போதே திடீரென்று பிரயோகம் செய்துவிட்
டார். இவ்வளவு செய்கைகளையும் செய்தவர் இவர்
தான் என்று A என்று அடையாளமிட்ட தஸ்தா
வேஜுக் கட்டில் காட்டியுள்ளபடி ருஜுவாகி விட்ட
தால், கும்பினியாரின் அதிகாரத்தைச் சீர்கெடச்
செய்ய எத்தனித்து, அடாத காரியங்களைச் செய்தவ
ரான கட்டபொம்மு நாயக்கரைப் படாத பாடுபடுத்து
வதே நியாயமானதால் கவர்ன்மெண்டாரின் அதிகா
ரம் பெற்றுள்ள யான் அவருக்கு மரண தண்டனையை
விதித்துளேன். அந்தத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்
குக் கட்டபொம்மு நாயக்கரைக் கயத்தாற்றில் பழைய
கோட்டையிலிருக்கும் ஒரு புளியமரத்தில் பஹிரங்க
மாக வெளியிற் கொண்டுவந்து தூக்கிலிட உத்தரவு
செய்தேன். அதன்படியே அவரைத் தூக்கிலிட்டுக்
கொன்றுய்விட்டது. அங்கு கூடியுள்ள பாளையக்
காரர்களுக்குக் கட்டபொம்மு நாயக்கரை இவ்விதம்
செய்யும்படி நேர்ந்தது அவரது செய்கைகளே மூல
காரணங்களாக நின்றனவேயன்றி வேறல்ல என்ற
தனையும் கவர்ன்மெண்டார் அவரிடம் பலதடவை
களில் பச்சாதாபங்கொண்டு மன்னித்தும், அவர் தன்
னைச் சரிப்படுத்திக்கொள்ளத் தவறியது அவருடைய



கேட்டுக்கு அஸ்திவாரமாக நின்றதென்றும் இவை
களை எல்லாந் தெரிந்துகொண்ட மற்றவர்களும் சரி
யாக நடந்துகொண்டாலன்றி வேறுகதி அவர்களுக்
குக் கிடைக்காதென்றும் சொல்லி அவர்கள் யாவரை
யும் போகும்படி விடைகொடுத்தேன்.''

''இவ்வகையான வசனங்களை அங்கிருந்த
பாளையக்காரர்களுக்கு நான் எடுத்து விளக்கிக்காட்டிக்

தூக்கிலிடக்
கொண்டு
போகப்பட்ட
கட்டபொம்மு
நாயக்கரின்
கெம்பீரத்
தோற்றமும்
அன்னாரது
சகோதர
வாஞ்சையும்

கொண்டிருக்கும்போது கட்டபொம்மு
நாயக்கர், தனக்குக [illegible] சத்துரு
வாக இருந்து தன் காரியத்தை நிறை
வேறவொட்டாமற்றடுத்த எட்டயபுத்
தாரை ''கவிழ்'' கண் பார்வையில்
அடிக்கடி நோக்கிக்கொண்டும், சிவகிரி
யாரை (தகப்பனைச்) சிறிய பார்வை
யுடனே பார்த்துக் கொண்டுமிருந்தார்.
தூக்குமேடைக்குச் செல்லும்போது
அவருக்கு வலமாகவும் இடமாகவு
மிருந்த பாளையக் காரர்களை ''பூ''
கிடக்கிறார்கள் என்ற அலக்ஷியத்துடன் பார்த்துக்
கொண்டு உறுதியாக நடந்து வீரனது தோற்றத்தை
முகத்திற் காட்டியவாறே எவரையும் சிறிதளவேனும்
பொருட்படுத்தாது கம்பீரமான நடையுடன் தூக்கு
மரத்தண்டை சென்றுறெனினும், ''தானடாவிட்டா
லும் தன் சதையாடும்'' என்றவாக்குக்கிணங்க, தூக்கு
மரத்துக்குச் சென்று. [illegible]மையரான அவரது தம்பி
யார் மாட்டுச் சிறிது அநுதாபங் காட்டிவிட்டு ''எனக்
குச் சாவதிலும் மற்றெதிலுமே பயம் கிடையாது.

ஆனால் நான் என்னுடைய கோட்டையின் முற்றுகையிலிருந்து என்னுடைய வீரத்தையும் சாகஸத்தையுங் காட்டி இறந்திருக்க வேண்டியதுண்டு; அப்படிக்கின்றி என் காலகதியால் நான் ஓடவும், பிறர் என்னை விரட்டவும், மற்றொருவர் என்னைப் பிடிக்கவும் ஆகியதே என்றவொன்றுமட்டும் என்னை வாட்டுகிறதென்று” அவர் சொல்லியுள்ளாரென்றதில் அந்நிலையிலுங்கூட அவருக்குள்ள வீராவேசம் கூ[illegible]துகின்றதெனக் காட்[illegible] அவருக்கு மாற்றார் மாட்டுப் பூண்டுள்ள வைரம் எத்துணைத் தென்பதையுஞ் சான்று பகர்கின்றது.

மேஜர் பானர்மான் துரையின் இராஜ விளம்பரம்

“பாஞ்சாலங் குறிச்சியாருக்குதவியாக நின்றும் கும்பினியாருக்கு வேண்டிய சிவகிரியா (தகப்பனார்) ருக்கு விரோதமாகக் கலகங்களைச் செய்தும் கும்பினியாரின் கிஸ்துப் பாக்கிகளைக் கொடுக்க மறுத்துவிட்டு நாலா பக்கங்களிலும் பாஞ்சாலங் குறிச்சியாருடன் சேர்ந்து கொள்ளை, கொலை, அழிமானங்களாகிய பல துஷ்கிருத்தியங்களைச் செய்துகொண்டு வந்திருந்த ஏழாயிரம் பண்ணை, நாகலாதபுரம், கோல்வார்பட்டி, காடல்குடி, குளத்தூராகிய பாளையக்காரர்களின் நடவடிக்கைகள் கவர்ன்மெண்டாருக்கு வெறுப்பை உண்டாக்கி விட்டதால் எனக்கு இராஜாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகார வலுவைக்கொண்டு அவர்களுடைய பாளையங்களையும் (சீமைகளையும்) பிடுங்கிக்கொண்டு விட்டேன் என்ற விளம்பரத்தையும் பகிரங்கப்படுத்திப் விட்டேன். ஆங்காங்குள்ள குடியானவர்கள் முதலிய சகலர்களும் அவ்வப் பாளையப்பட்டுகள் கும்பினியாரைச் சேர்ந்து விட்டனவென்பதை இதன் மூலமாக அறியக் கடவார்களாக.”



“மேலே சொல்லியுள்ள பாளையங்களுக்கு இனிமேலாகக் கோட்டைகள் தேவையில்லை என்று கும்பினித் துரைத்தனத்தார் அபிப்பிராயப்படுவதால் அவைகளை எல்லாம் இடித்துவிட வேண்டுமென்ற உத்தரவு பிறந்துவிட்டது. அங்குள்ள காவற்காரர்களும் சேர்வைகாரர்களும் பியூன்களும் குடித்தனக்காரர்களும் ஆயுதபாணிகளாக இருந்துகொண்டு முன்னம் பெருங் கேடுகளை நாட்டில் விளைத்து விட்டதால் நாடுபட்ட துயரம் இத்தன்மைத்தென்று எவரே சொல்லவல்லார்? ஆகையால் அவர்கள் கைவசமுள்ள எந்த விதமான வெடிகளானாலும் சரி, ஜமுதாடு, பாலாக் கழை, வல்லயம், வாள் முதலியவைகளானாலுஞ் சரி, அவைகளை எல்லாம் கவர்ன்மெண்டாரால் அதற்கென்று நியமனம் பெற்றிருக்கிற உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைப்புக் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்யத் தவறுகிறவர்களுக்கும், இரகசியமாக அவைகளைக் கைப்படுத்தி வைத்திருப்பவர்களுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்ற விளம்[illegible]தைப் பகிரங்கப்படுத்தி விட்டேன். இதற்கு மாறு[illegible] ஆயுதங்களை கவர்ன்மெண்டாரால் நியமனம் பெற்றுள்ள உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைப்புக் கொடுக்க ஆக்ஷேபிப்பவர்களையும், ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்பவர்களையும், அந்தந்த கிராமாதிகாரிகள்

தெரிவியாமல் சும்மா இருந்துவிட்டால் அத்தகைய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுமென்றதனையும் பகிரங்கப்படுத்தி விட்டேன். அவர்கள் கைவசமிருக்கும் ஆயுதங்களை எல்லாம் எறிந்துவிட்டு மேழிகளைக் கைக்கொண்டு நிலங்களைச் சாகுபடிசெய்து சமாதான வழியிலிருந்து ஜீவிப்பதுதான் உத்தமமென்று காவற்காரர்கள், சேர்வைகாரர்கள், பியூன்கள், குடித்தனக்காரர்கள் ஆகிய இவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளேன். இதற்கு முன்னமே இது சம்பந்தமாகப் பொது விளம்பரத்தையும் கயத்தாற்றுக்குச் சகல பாளையக்காரர்களையும் வரவழைத்து 27-9-1799ல் வாசித்துப் பகிரங்கமும் செய்துளேன். பாளையக்காரர்களின் கோட்டைகளையும் இடித்துவிடும் விஷயமாயும், அவர்களிடமிருக்கும் ஆயுதங்களை நீக்கிவிடும் விஷயமாயும், மேஜர் பானர்மான் துரையின் "புரோக்ளமேஷன்" என்ற இராஜ விளம்பரத்தைச் சென்னபட்டணம் கவர்ன்மெண்டாரும் அங்கீகரித்துக்கொண்டதுடன் தங்கள் தங்கள் கைவசமிருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்புக் கொடுக்கிறவர்களுக்கு ஆயுதங்களின் தன்மைக்கேற்றபடி கவர்ன்மெண்டார் வெகுமதி கொடுப்பார்கள் என்ற சாத்தும் சென்னபட்டணம் துரைத்தனத்தாரிடமிருந்து வந்த அதிகாரப் பத்திரத்தில் சேர்த்து எழுதப்பட்டிருந்தது. கோட்டைகளை இடிக்கும் விஷயங்கள் சரியாகவும் ஒழுங்காயும் நடைபெறுகின்றனவா என்பதையும், ஆயுதங்கள் கிரமமாக ஒப்படைப்புக் கொடுக்கப்படுகின்



றனவா வென்பதையும் "அயிமாஷ்" செய்து அப்போதைக்கப்போது ரிப்போர்ட்டு அனுப்பி வைக்கும்படிக்கு நியமனமான கியாப்டன் புரூஸ் துரையிடமிருந்து வந்த ரிப்போர்ட்டினால் மேல்படாகையிலுள்ள பாளையக்காரர்களின் கோட்டைகள் திருப்திகரமாக அழிக்கப்பட்டு வருகின்றன வென்றும், ஆயுதங்களும் கிரமமாக ஒப்படைக்கப்பட்டு வருகின்றனவென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தன."

"பிடிபட்ட பாஞ்சாலங் குறிச்சி, ஏழாயிரம் பண்ணை, நாகலாபுரம், காடல்குடி, கோல்வார்பட்டி, குளத்தூர் ஆகிய ஆறு பாளையங்களிலும் கோட்டைகள் சரியானபடி திருப்திகரமாக அழிக்கப்படுகின்றனவாவென்றும், ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுகின்றனவாவென்றும், "அயிமாஷ்" செய்து ரிப்போர்ட்டு அனுப்பும்படிக்கு நியமனம் பெற்றிருந்த லெப்டினென்று பக்ஷா (Lieutenant Bagshaw) துரையிடமிருந்து அவைகளின் சம்பந்தமாக ரிப்போர்ட்டு ஒன்றும் அதுசமயம்வர, அவை இரண்டையும் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்."

பாளையக்காரர்களின் சீமையிலுள்ள கோட்டைகள் அழிக்கப்பட்டதும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப் பட்டதற்குங் காரணங்களிவை யென்பதைத் தெரிந்துகொள்க.

ஸிவெல்துரை (Mr. Sewell) எழுதியுள்ள சிலாசனம் என்ற நூலில் கவர்ன்மெண்டாருக்கு சேயப்பான்மையிலுள்ள பாளையக்காரர்களுக்குள்ள கோட்

டைகளை இடிக்கும் விஷயத்தில் எவ்விதமான நிர்ப்பந்தமு மிருந்திருப்பதாகத் தெரியவில்லை என்றும், ஆனால் எட்டயபுரத்தார் தங்களது நாட்டிலுள்ள மூன்று கோட்டைகளையும் அவர்களாகவே இடித்துவிடுவார்களேயானால் மற்றவர்களும் இதனைப் பின்பற்றியே அவரவர்கள் கோட்டைகளை இடித்துவிடச் சாத்யப்படுமென்று குறிப்பிற்கொண்ட கவர்ன்மெண்டாரின் நோக்கத்துக்கிசைந்து அவர்களும் தங்களது நாட்டிலிருந்த மூன்று கோட்டைகளையும் இடித்துவிட்டனர்கள் என்றும், இதனைப்பின்பற்றியே ஏனைய நேயப்பான்மையிலுள்ள பாளையக்காரர்களும் அவர்கள் அவர்களின் சீமைகளிலுள்ள கோட்டைகளை இடித்துவிட்டனர்கள் என்றும் காணப்படுகின்றது.

மேஜர்பானர்மான் துரையின் "புரோகிளமேஷன்" என்ற இராஜ விளம்பரங்களைச் செப்புத் தகட்டிற் செதுக்கி எழுதிப் பாளையப்பட்டுகள்தோறுங் கல்த்தூண்களிற் பொதிந்து நட்டப்பட்டன. அவைகளில் ஒன்று எட்டயபுரம் சிவன்கோயிலின் தென் வடலோடிய கீழ்புறத்துத் திருமதிலின் தென்பாகத்தில் கிழக்குமுகமாக கல்த்தூணிற் பொதிந்து நட்டப்பட்டிருப்பதை அங்கு செல்லும் வேற்றூரார்கள் உற்று நோக்கி வாசிக்க ஆசைகொள்வதை நாம் காண்கின்றோம்.

நாகலாதபுரம், ஏழாயிரம் பண்ணை ஆகிய பாளையக்காரர்களை லெப்டெனென்று டர்னர் (Lieutenant Turner) துரையின் பந்தோபஸ்தில்வைக்கப்பட்டது.



கைதிகளிற் சிலருக்கு மன்னிப்பும் வேறு சிலருக்கு தண்டனையும்

வாலிபராக இருந்தும் கோல்வார் பட்டியார் * கண்ணிழந்தவராயும் தேகநலங் குன்றியவராயு மிருந்தாரென்றதாலும், குளத்தூரார் 70 வயதான அசக்தரான கிழவராக இருந்ததாலும் அவர்கள் விஷயத்தில் டர்னர் துரை இன்னசெய்வதெனத் தெரியாதவராகிக் கலெக்டர் லஷிங்டன் துரையிடம் ஒப்படைத்துவிட்டார். அவர்களை கவர்ன்மெண்டார் எவ்வாறு செய்யக் கட்டளையிடுகின்றார்களோ அவ்வாறே செய்துகொள்வதென்றும் சொல்லிவிட்டார். நாகலாதபுரம் மானேஜர் சடகோப பிள்ளையை அவருடைய பாளையக்காரருடன் த்வீபாந்தரசிக்ஷை செய்து தண்ணீர்க்கப்பால் அனுப்பிவிடுவது என்று தீர்மானமாகி விட்டது. கோல்வார்பட்டியாருக்குச் சுந்தரலிங்க நாயக்கரே சகல காரியங்களையும் நடத்தி வந்திருப்பதாகத் தெரியவந்தது. குளத்தூர் பாளையக்காரரின் குமாரரான சின்னவீட்டு நாயக்கரும் ஆறுமுகப்பிள்ளை என்பவருமே மானேஜர்களாக இருந்தனரென்றும் தெரியவந்தது. ஏழாயிரம் பண்ணைக்குக் காரியஸ்தராக இருந்தவர் பாரதம் பெருமாள்பிள்ளை என்று தெரியவந்தது. டர்னர் துரையால் ஒப்படைக்கப்பட்ட நாகலாதபுரம், ஏழாயிரம் பண்ணை ஆகிய இருவரையும் சென்னபட்டணத்துக் கனுப்பிவைக்க, அங்கவ்விருவரும் இறந்துவிட்டனர். சுந்தரலிங்கநாயக்கர் என்பவர் கோல்வார்பட்டியாரின் அத்தான் ஆதலால்

* 191ம் பக்கத்தில் கண்டுள்ள கலியுக பாதனிவரேயாவர்.

கோல்வார்பட்டி மாப்பிள்ளை நாயக்கரெனத் தெரியவருகிறது. கைதியாக்கப்பட்டவர்களில் இருவர் தூக்கிலிடப்பட்டிறந்த கட்டபொம்மு நாயக்கருக்குச் சகோதரராவர்.

மேஜர் பானர்மான் துரை தமக்கு ஏற்பட்டிருந்த வேலையை இராஜாங்கத்தாருக்கும், நிரபராதிகளான பிரஜைகளுக்கும் இராஜவிசுவாசமுள்ள பாளையக்காரர்களுக்கும் திருப்திகரமாகச்செய்துவிட்டதுடன் பாளையக்காரர்களின் கோட்டைகளையும் அவர்கள் வசமிருந்த யுத்த தளவாடங்களையும் அவரவர்களைக் கொண்டு முறையே இடித்துவிடவும் ஒப்படைக்கும்படி செய்துவிட்டும் நாட்டிற்குள் கலகங்களை யொழித்தும் சமாதான நிலைமையை ஏற்படுத்திவிட்டும் சர்வத்ர ஜனங்களின் புகழுக்குத் தன்னைப் பாத்திரராக்கிக் கொண்டு அவரது ஜனனபூமியான இங்கிலாந்துக்குப் பர்லோ ரஜாவின் மேல் விடைபெற்று ஏகினர். நமது ஜில்லாவில் பாளையக்காரர்களின் முதல் யுத்தம் இத்துடன் முடிவு பெற்றது.

மேஜர் பானர்மான் துரையின் உத்தியோகமுறையின் சரித்திரக் குறிப்புகளாவன :—

சோழமண்டலக் கரையிலுள்ள கும்பினிச் சைனியங்களுக்குத் தலைமை பூண்டிருந்த லெப்டினென்டு ஜெனரல் ஹாரிஸ் துரையின் உத்தரவின் பிரகாரம் சென்னபட்டணத்துச் சைனியத்தைச் சேர்ந்தவரான மேஜர்ஜான் பானர்மான் துரையின் ஊக்கமும் சாகசமு



மாக 23 வருஷகாலங்களாகச்செய்துள்ள திறமைவாய்ந்துள்ள சர்விஸின் விவரக் குறிப்புகளாவன :—

1. மேஜர் ஜனரல் பிரத்வெயிட்டு துரையின்கீழ் ஒரு துண்டம் சைனியத்திற்கு விசாகபட்டணம் ஜில்லாவில் 1777ல் தலைமை பூண்டிருந்தார்.

2. சீப் இஞ்சினீரின் அட்ஜூடண்டாகப் புதுச்சேரி முற்றுகையில் 1778ல் அமர்ந்துள்ளார்.

3. சீப்இஞ்சினீரின் அட்ஜூடண்டாக மலையாளக் கரையிலுள்ள மாஹியின்மீது படை எடுத்துச் சென்றபோது 1779ல் நியமன மடைந்திருந்தார்.

4. ஜெனரல் காட்டார்டு துரையின் சைனியத்தின்கீழ் 1780லிருந்து 1781ன் மத்திய காலம்வரை சேவித்தபோது பயோனிர் சைனியத்துக்கும் வங்காளத்து ஆறு கும்பினி கிரினேடியர் பட்டாளத்துக்கும் தலைமை பூண்டிருந்த கர்னல் மாக்ளியாட் துரைக்கு அட்ஜூடண்டாக இருந்தார்.

5. கர்நாடக தேசத்திய கிராண்ட் சைனியத்தில் சர் ஐர்கூட்டுத் துரையின்கீழ் 1781-1782ல் அமர்ந்திருந்தார்.

6. இதனையடுத்த 1783ம் வருஷத்தில்இருதடவைகளில் பலமான காயங்களை அடைந்து சௌக்யமடைந்தனர். கர்னல் புல்லர்டன் துரையின் கீழ் மேஜர் ஆப் பிரிகேடாகத் தென்னாட்டுச் சைனியத்தில் வேலைபார்த்தார்.

7. 1788-89-ம் வருஷங்களில் சென்னைக் கவர்னராகவும் கம்மாண்டர் இன்சீபாகவும்இருந்த சர் ஆர்ச்பால்டு காம்பல்துரையால் திருவாங்கூர் இராஜாங்க

விஷயமான சில முக்கிய அலுவல்களை முன்னிட்டு அங்கு அனுப்பப்பட்டிருந்தார்.

8. மேஜர் ஜனரல் பிளியாட்டுத் துரையிடமுள்ள சைனியத்தில் ஒரு துண்டத்தை 1790ல் சத்திய மங்கலத்தில் நடாத்தினர்.

9. மேஜர் கப்பேஜ் துரையுடன் சேர்ந்து ஒருயுத்தத்தை 1791ல் கோயமுத்தூரில் செய்துளார்.

10. தென்சீமைப் பாளையக்காரர்களுக்கு விரோதமாகக் கர்னல் மாக்ஸ்வெல் துரையின் சைனியத்தில் ஸ்டாவ் ஆபீஸராக, 1792ல் திருநெல்வேலிச் சீமையில் அமர்ந்திருந்தார்.

11. ஜெனரல் பிரத்வெயிட்டு துரையின் சைனியம் புதுச்சேரியை 1793ல் முற்றுகையிட்டபோது சுறுசுறுப்புடன் வேலை செய்துள்ளார்.

12. ஒன்பதாம் சுதேசியப் பட்டாளத்திற்குத் தலைமை பூண்டு இராமநாதபுரத்து அலைவாய்க் கரையிலிருந்து தோணி ஏறிக் கொழும்புக்குச்சென்று அதனை வெகு துரிதமாகக் கீழ்ப்படியுமாறு செய்துவிட்டார். அத்துடனின்று கொள்ளாமல் ஆங்குள்ள அநேகஸ்தலங்களையும் அடக்கிவிட்டார்.

13. யுத்தத்தின் நிமித்தம் மைசூர் சீமைக்குச் செல்லவேண்டிய தவசியமாக இருந்தும், திருநெல்வேலிச் சீமைப் பாளையக்காரர்களின் கலக நிலைமையில் பாளையங்கோட்டையை விட்டு அவர் போதல் கூடாதென்று உத்தரவு வந்ததில் சைனியத்தின் ஒருபகுதியினைமட்டும் மைசூர் திப்பு ஸுல்த்தானுக்கு விரோதமாக அனுப்பிவைக்கப்பட்டதென்றாலும் அவர் திரு



நெல்வேலிச் சீமையைக் காத்துக்கொள்ளும் அலுவலுடன் திருவாங்கூர் மஹாராஜாவிடம் பம்பாய் சைனியத்துக்கு வேண்டிய கால்நடைகளுள்பட இதரசப்ளைகளையும் சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பையும் பார்த்துவந்தார்.

14. பாளையக்காரர் யுத்தம் நின்றுவிடவும், கவர்னர் ஜனரல்துரை யவர்களின் சபையிலுள்ளோர் அவருக்குப் பாளையக்காரர்களின் கோட்டைகளை இடித்துவிடும்படியான அதிகாரத்தையும் குற்றவாளிகள் என்று ருஜுவுக்கு வந்துள பாளையக்காரர்களைக் குற்றத்துக்குத் தக்கவாறு சிக்ஷிக்கும் பொறுப்பையும் கொடுத்துவிட்டார்கள். இத்தகைய பெரும் பொறுப்புள்ள அதிகாரத்தை அவரை நம்பி இந்தியா கவர்ன்மெண்டாரும் சென்னபட்டண கவர்ன்மெண்டாருங் கொடுத்ததிலிருந்து மேஜர் பானர்மான் துரையின் பெருமையும் செல்வாக்கும் எவ்வளவோ உயர்ந்திருக்க வேண்டுமென்றவை தெளிவு.

அட்ஜுடண்டு ஆபீஸ்,
செயிண்டு ஜயார்ஜ் கோட்டை
24—1—1800.

(ஒப்பம்) பி. ஏ. அக்ணியு,
அட்ஜுடண்டு ஜெனரல்

---

குறிப்பு:—[இதற்கப்பால் 1818-ம் வருஷம் பிரின்ஸ்ஆப் உவேல்ஸ்த்வீபங்களுக்கு கவர்னராகவும், அதற்கப்பால் இங்கிலாந்துசெல்ல ஆங்கு பிரிடிஷ் ஈஸ்ட் இந்தியா கும்பினியின் டிரக்டராகவு மிருந்தாரென்று உவெல்ஷ்துரை எழுதியுள்ள இராணுவப் பழக்கங்களின் முன்னுள்ள ஞாபகங்கள் என்ற குறிப்புப் புஸ்தகத்திற் கூறப்பட்டுளெ.]

## பதினைந்தாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

கயத்தாற்றில் 16-10-1799ல் தூக்கிலிட்டுக்கொல்லப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கட்டபொம்மு நாயக்கருக்கு அப்போது வயது 30. இவருக்குச் சகோதரர்களிருவர். இவ்விருவரும் பாளையங்கோட்டை ஜயிலில் அடைக்கப்பட்டிருந்தனர். பாஞ்சாலங் குறிச்சியை நியாயப்படி ஆட்சி புரிய வேண்டியது ஜயிலில் அடைபட்டிருப்பவர்களில் ஒருவராகவேண்டும். இவரே வாரீஸ்தார். நோயாற் பீடிக்கப்பட்ட சரீரியாயும், மெலிந்து கச்சலான அமைப்புள்ளவராயு மிருந்ததால் இவருடைய ஸ்தானத்தில் அடுத்தவர் வீற்றிருக்க நேர்ந்தது. இவ்விருவரில் முன்னவர் பெயர் செவத்தையா; பின்னவர் பெயர் ஊமைக் குமாரசாமி நாயக்கர். இவர் பிறவி ஊமை எனினும், மகா காரியவாதி; எதையும் நிர்வாகித்துக் கொள்ளும் சக்திபெற்றவர். மிகுந்த ஆழ்ந்த யோஜனையையுடையவர். இவரைத் தெய்வம்போல ஜனங்கள் பாவித்துக் கொண்டாடினர். இவரை இங்கிலீஷ்காரர்கள் "டம்பி" அல்லது "டம்ப்ரதர்ஸ்" என்பார்கள்; நவாபு கூட்டத்தைச் சேர்ந்த முஸல்மான்கள் "மூகா" என்பார்கள்; தமிழர்கள் "ஊமை" என்றழைப்பார்கள். இவர் பெரும் ஜனத்திரள்களடர்ந்த கூட்டத்தின் மத்தியினின்றுகொண்டு கண் ஜாடை ஒன்றை மட்டுங்

ஊமைக் குமாரசாமி நாயக்கரின் புத்திக் கூர்மையும் செல்வாக்கும்



காட்டுவாராகில், அதனை தெய்வீகஆக்ஞை என்றுகருதி அதன் வழி நின்று அதனைச் செய்து முடிக்க எவ்வளவோ பேர் சித்தமாகக் காத்துக் கொண்டிருப்பர். எத்தகைய கூட்டங்களிலும் ஆலோசனைச் சபைகளிலும் இவர் தலைமை கொள்ளாதிருப்பது அருமை. இவரைத் தலைமையாகக் கொண்டு நடத்தப்படாத சாகசமான செய்கைகளும் துஷ்கிருத்தியங்களும் நாட்டிலிருப்பன அபூர்வமாம்.

அவருடைய இடது உள்ளங்கையிற் சில தூசிகளை எடுத்து வைத்துக்கொண்டு இவரது சிரசைச் சுற்றி வலதுகையின் ஆட்காட்டி விரலால் ஒரு சுற்றிச் சுற்றிவிட்டு அதே கையை உயர்த்தித் தலையின்மீது குவித்துக் காட்டித் (தொப்பிக்கடையாளம்) வலது கையைக்கொண்டு இடது கையிலுள்ள தூசியை வாயினால் "ஸ்ஸ்ஸ்" என்ற தொனியுடன் ஊதித்தட்டிவிட்டுக்காட்டுவாராம். அதாவது தொப்பியைத் தரித்துள்ள இங்கிலீஷ்காரரை, அவர் தோற்கடித்து விடுவாரென்றதற்கு அடையாளமாம். இவரைச் சிறிய பையனாக இருந்ததாக மேஜர் உவெல்ஷ்துரையும் ஹூஜஸ்துரையுங் கூறியுள்ளார்கள். அடைபட்டிருந்தவர்களில் பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த உறவினர்களிலொருவர் செவத்தையாவென்றவர்.

ஊமைத்துரை இங்கிலீஷ் காரரைக் குறிப்பிடும் சமிக்ஞை

இங்கிலீஷ் சைனியம் சங்கர நயினார் கோயிலில் தங்கியிருக்கும்போது 2-2-1801ல் இருபது துரைசானிமார்களுள்பட துரைமார்கள் சகிதம் பாளையங்கோட்

டையில் மேஜர் மக்காளி துரையின் ஜாகையில் ஓர் உல்லாசக் கச்சேரிவைத்துத் தீனி நடக்கும் சமயத்தில் எதிரிகளான கைதிகள் காவற்காரர்களை மீறிக்கொண்டு ஜயிலிலிருந்து தப்பி ஓடி விட்டார்கள் என்ற சங்கதி வெளிக்கு வந்தது.

**பாளையங் கோட்டை ஜயிலிலிருந்து கைதிகள் தப்பித்தோடல்**

அங்கு அதுசமயம்; வைசூரி பரவியிருந்ததால் கைதிகளுக்குப் பூட்டப்பட்டிருந்த விலங்குகளை நோயாளியானவர்களுக்கு அதிகமான சிரமத்துக்குக் காரணமாகும் என்று ஜயில் அதிகாரிகள் பிறப்பித்திருந்த உத்தரவுப்படி எடுத்தெறிந்து விட்டார்கள். கைதிகளை விடுவிக்கவேண்டுமென்ற முன் யோசனையை மனதிற் கொண்டு பாளையக்காரர்களின் ஜனங்களில் எண்ணிறந்தவர்கள் விறகு விற்பவர்களைப்போல விறகு கட்டு ஒவ்வொன்றிலும் ஆயுதங்களைத் தெரியாத வண்ணமாக மத்தியிற் சொருகிக்கொண்டு தலையிற் சுமந்துகொண்டு விறகு வெட்டிகளைப் போலப் பாளையங் கோட்டையிற்போய் விற்கச் சென்றார்கள். இவ்விதமாக வந்துள்ள விறகு விற்பவர்களே ஜயிலிலுள்ள கைதிகளை விடுவித்தவர்களாவார்கள். தப்பித் தோடிய கைதிகள் மறுநாட்காலையில்பாஞ்சாலங்குறிச்சிபோய்ச் சேர்ந்தனர். ஓடிய கைதிகளை வழி மறித்து நிறுத்தப் பிரயாசை எடுத்திருந்தாலும் அதனைத் தடுத்துக்கொள்ளல் அப்போது கூடாததாகவே இருக்கும். ஏனெனில் அப்போது பாளையங்கோட்டையில் இதைத் தடுக்கப் போதிய சைனியமிருந்திலது என்றது நிச்சயம். நல்ல காலத்தின் பயனாக விருந்துக் கச்சேரி நடந்து கொண்



டிருக்கும் பக்கத்துக்கு அவர்கள் செல்லாது போயினர். அவ்விதம் அக்கைதிகளும் அவர்களது சகாக்களும் அங்குபோயிருப்பார்களேயானால் அச்சமயம் பாளையங் கோட்டையின் ஸ்திதிகெட்டு விடுவதுமன்றி ஆங்கிருந் துள்ள அப்போதைய ஆங்கிலச் சைனியங்கள் அவர் களை எதுவுமே செய்யப்போதியபடி இல்லாததால் காரியங்கள் விவரீதமாகவே முடிந்திருக்கும் என்று உவெல்ஸ்துரை எழுதியதின் சாராம்சம் என்றது கவனிக்கத்தக்கது.

கைதிகளைத் தேடிப் பிடிப்பதே முக்கியவேலை என்று திருநெல்வேலி ஜில்லா கும்மாந்தர் ஆபீஸர் மக்காளிதுரை அபிப்பிராயப்பட்டு, கயத்தாற்றுக்குப் போயிருந்து கொண்டு ஷெப்பர்டு துரையின் கீழிருந்த சங்கர நயினார் கோயிற் சைனியத்தையும் பாளையங் கோட்டையிலிருந்த சைனிய உத்தியோகஸ்தர்களையும் தன்னிடம் கயத்தாற்றுக்கு வரச்சொல்ல, அப்படியே 6-2-1801ல் கயத்தாற்றில் வந்து சேர்ந்து கொண்டார்கள். இங்கிலீஷ் சைனியத்துக்குச் சொந்தமான குதிரைகளில் நவாபுதுரையின் துருப்புக்காரர்களை ஏற்றிக்கொண்டு வரும்படிக்கு உத்தரவு கொடுத்தனர். தென்னாட்டின் கலகங்களை அடக்குவதற்கு என்று வைத்திருந்த ஐரோப்பிய குதிரைப்பட்டாளங்களையும் காலாட் படையையும், கட்டபொம்மு நாயக்கரைத் தூக்கிலிடவும், அதிலிருந்து சுமார் இரண்டு வருஷங்களாக அமைதி இருப்பதுபோல் தோன்ற, இந்தச் சீமைக்கு அவைகள் இனித் தேவையிருக்க மாட்டாவென்று கருதி நீக்கிவிடப்பட்டதால், அவைகள் இங்கு அப்

**பாஞ்சாலங் குறிச்சி இரண்டாவது யுத்தம்**

போதில்லாது போய்விட்டன. அப்போது அவர்கள் கைவசம் இருந்தவையெல்லாம் 900 பயர் லாக்ஸ்களும் ஒரு வங்காள பீரங்கிப்படை நீங்கலாக மற்றெல்லாம் சுதேசியப் பீரங்கிப் பட்டாளமும், இரண்டு 2 பவுண்டர் குண்டுகளும், இரண்டு 4 பவுண்டர் குண்டுகளுமாம். எட்டாம்தேதி காலையில் குலையநேரிபோய்ச் சேர்ந்து அங்கு சச்சவுக்கமான ஒரு சிறிய கூடாரத்தில் இங்கிலீஷ் சைனியம்தங்கியது.எல்லோரும்அன்று மனக்களிப்புடன் ஆகாராதிகளை யுண்டு சந்தோஷித்திருந்தார்கள். அப்படிக்கிருக்கும்சமயம் பாளையக்காரர்களின் கையாட்கள் வெடி, வாள், பாலா, ஈட்டிமுதலிய ஆயுதங்கள் சகிதம் சைனியம் தங்கியிருந்த கூடாரத்திற்கு எதிரான ஒரு மேட்டிலும், அம்மேட்டின் வலது பக்கமாயும் இடதுபக்கமாயும் உள்ள தாழ்விலுமாக மூன்றுபக்கங்களிலு மிருந்துகொண்டு எதிர்க்க ஆரம்பித்தனர். அந்தக் கிராமத்தை இங்கிலீஷ் சைனியம் கைப்பற்றிக் கொள்ளவும், முதலணியை எதிரிகள் தாக்கக்கூடுமென்று எதிரிகளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், நாம் முன்னம் சொல்லியுள்ள பள்ளத்துக்கும் மேட்டுக்கும் இடையிலுள்ள மறைவின் கடவின் வழியாகவா, கும்பினிச் சைனியத்தில்அங்கு அப்போதிருந்தவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களாயும் இராணுவ முறையில் பயிற்சி போதாதவர்களாக இருந்தும், பொதுவாக திருப்திகரமான வேலைகளையே செய்தனர்கள். குதிரைப் படையிலுள்ள நவாபுவின் துருப்புச் சைனியங்கள், கைப்பக்கத்தில் வந்து மாட்டிக்கொண்ட சிறிய கூட்டங்களடங்கிய எதிரி



களின் ஆட்களை எதுவும் செய்துகொள்ள சக்தியற்ற
வர்களாக இருந்தார்கள் என்பதைத் தெரியவும்; அவர்
களிடமிருக்கும் கும்பினிக் குதிரைகளை மறுபடியும்
எடுத்துக்கொள்வதே நல்லதென்று தோற்றிவிட்டது.
இவ்விதமாக இருகக்ஷியினர்களுக்கும் ஒருமணிநேரம்
சண்டை நிகழ, பாளையக்காரர் பக்கம் இறந்த 40
பேரையும் யுத்தகளத்தில் போட்டுவிட்டுக் காயப்பட்ட
வர்களைத் தூக்கிக்கொண்டு போய்விட்டனர். கும்பினி
யார் பக்கம் இறந்தோர் அறுவரேயாவர்.

பாஞ்சாலங்
குறிச்சிக்குத்
திறவுகோல்
குலைய நேரி

கும்பினியாரிருந்த அந்த இடத்தைப் பலப்படுத்
திக் கொண்டதால் பாஞ்சாலங் குறிச்சிக்கோட்டைக்கு
குலையநேரி என்ற திறவுகோலைப் பத்
திரமாகக் கைவசம் வைத்துக்கொண்
டார்கள். இரவு 9 மணிவரை எதுவும்
நிகழாது அமரிக்கையுட னிருக்கும்
போது கும்பினியாரிருந்த இடத்தை
நோக்கிச் சுடப்பட்ட வெடிக்குண்டின் தொனி அமரிக்
கையைக் கெடுத்துச் சந்தடியையும் குழப்பத்தையும்
உண்டாக்கியது. அதற்குமேல் எதிரிகளால் எதுவும்
செய்துகொள்ளமுடியாதுபோயிற்று.என்றாலும்இராவ்
போதுள்ள நித்திரையைப் பங்கப்படுத்திவிட்டார்கள்.
மறுநாட் காலையில் 9 மணிக்குப் பாஞ்சாலங்குறிச்சிப்
பக்கத்துள்ள ஒரு மைதானத்துக்குப் போய் கும்பினி
சைனியம் சேரவும், இடிப்பட்டுக் கிடந்த கோட்டை
ஏதோ மந்திரவாதிகளின் மாத்திரைக்கோல்களால் நிர்
மாணஞ் செய்யப்பட்டதுபோல் ஆறு நாட்களுக்குள்
ஒருபெருத்த கோட்டை கொத்தளங்களுடனும்,1500

பாளையக்காரர்களின் சைனியங்களுடனும் பாதுகாப்பிலிருக்கவும், பார்த்தோர் யாவரும் பெருமூச்செறிந்து திகைத்துவிட்டனர்.

கும்பினிச் சைனிய வியூகங்கள்

மேஜர் உவெல்ஷ் (Major Welsh) துரையின் கருத்தைப் பின்பற்றியுள்ள விவரங்களாவன:-"கோட்டை மதில்களைப் பொடிப் பொடியாக இடித்துத் தள்ளும் முட்டு ஊஞ்சல் பீரங்கிகளின்றியும், அழிமான வேலைகளை நடப்பிவைக்கச் செல்லுஞ் சைனியத்திற்குத் தலைமை பூண்பதற்கு ஐரோப்பியத் தலைவர் எவருமின்றியும், வலுவுள்ளதும் அரண்வாய்ப்புள்ளதுமான அக்கோட்டையைப் பட்டப்பகற்பொழுதின் வெளிச்சத்திற் பிடிக்கச் செல்வது வீணான பைத்தியமென்பதையும் நான் தெரிந்துகொண்டேன். சுமார் அந்தக் கோட்டையிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள்ளாக இருக்கும் ஓட்டப்பிடாரத்தில் கும்பினியார் சவுக்கமான கூடாரமடித்திருந்தனர். அவர்கள் தங்கியிருந்த வடபாகத்தில் புல்மேடும், அதற்குத் தெற்கில் ஓர் ஏரிக்கரையும், அதன் (கூடாரத்தின்) கீழ்பாகம் அந்த ஊரும், அதற்கு எதிர்த்த மேல்புறம் பாஞ்சாலங்குறிச்சியும் எல்லைகளாக இருந்தன. கும்பினிச் சைனியம் சிறிது அங்கிறங்கி இளைப்பாறிக்கொண்டு சிற்றுண்டிகளையுண்டுவிட்டு இரண்டுவிதமாக "வியூகங்கள்" வகுக்கப்பட்டுப் பொழுது சாயவும் "மம்மலாக" இருக்கும் சமயத்திலேயே இரு கிளைகளாக எதிரிகள் கண்ணுக்குத் தோற்றப்படாமல் கோட்டையைத் தாக்குவதென்று நிச்சயம் செய்துவிட்டார்கள். இப்படி



இருக்குந்தருணத்தில் கும்பினிப்படையிலிருந்து எதிரிகளின் உளவுகளையும் மற்றவைகளையும் தெரிந்துகொண்டுவந்து சொல்லும்படிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஒற்றர்களும் (Spies) சாரணர்களும் (Scouts) எதிரிகள் சைனியங்கள் சுமார் 5000-க்குக் குறைவுபடாமல் கோட்டையிலிருப்பதாகவும், எவருக்குந் தெரியாமல் இராப்பொழுதில் வந்து தாக்க நிச்சயித்திருப்பதாயும் கும்பினிச் சைனியத்தண்டை சொல்லக்கேட்டவர்கள் " இது என்ன ? எதிர்பாராத அனர்த்தம்போலிருக்கிறது ? இதற்கு நாம் என் செய்வோம் ? எதிரிகளின் சைனியங்களோ அளவுக்கு மிஞ்சியதொகையில் சகலவித யுத்த சாமக்கிரிகைகள் சகிதம் தயாராகிவிட்டன. பூமியோடு பூமியாக அழிக்கப்பட்ட கோட்டையோ ஆறு நாட்களுக்குள் மந்திர சக்தியால் எழுப்பிவிடப்பட்ட தன்மையில் அதற்கு இணையுள்ள வேறு மண் கோட்டை கிடையாதென்று சொல்லும்படிக்குப் பெரும்சக்தி வாய்க்கப்பெற்றுள்ளதுடன் கொத்தளங்கள் சகிதம் தோன்றிவிட, அதனைப் பாளையக்காரர் சைனியங்கள் 1500பேர்கள் இமைகொட்டாதபடிக்குக் காத்துக்கொண்டிருக்கின்றன. நாமோ இரண்டு நாட்களாக இடைவிடாத பிரயாணத்தினால் களைத்துப்போயும் இரவில் நித்திரையின்றியு மிருந்திருக்கிறோம். அவர்கள் இரவில் சண்டையை ஆரம்பிப்பார்களேயானால் அதுவுங் கஷ்டமாகவே நமக்குமுடியும். இவைகளையெல்லாம் கவனித்து ஆலோசனை செய்து பார்ப்போமேயானால் இனி இங்கு தாமதிக்க நேரிட்டால் அனர்த்தமாகவே முடியும்" என்று நிச்சயம்செய்துவிட்டார்கள்.

இந்த க்ஷணமே புறப்பட்டுவிடுவது உசிதமென்று
எல்லோரும் ஏகோபித்த மனத்தவராகித் தீர்மானித்
துக் கொண்டனர். உடனே கும்பி
னிச் சைனியங்கள் எல்லாம் தயாராகி
மாலை 2 மணிக்குத் துரிதமாகப் புறப்
பட்டுப் பாளையங்கோட்டையை நோக்
கிச் செல்லும்போது, முன் வரிசையும்
பின் வரிசையுமாகச் செல்லும் சைனி
யங்களின் பாதுகாப்பில் யுத்த சன்னதமான சாமான்
களையும் இவை இரண்டின் மத்தியிலிருந்து செல்லும்
சைனியங்களின் பந்தோபஸ்தில் வெடிமருந்தும் மற்று
முள்ள யுத்ததளவாடங்களும் இருந்தன. பாளையங்
கோட்டையை நோக்கிச்செல்லும் சைனியம் பாஞ்சா
லங்குறிச்சி கண்ணுக்குத் தோற்றப்படுகிறதாவென்று
சிறிது அத்திசையைக் கண்ணெடுத்துத் திரும்பிப்
பார்க்கவும், 1500-க்குக் குறையாமல் பாலாக்களும்
ஈட்டிகளும் ஜமுதாடுகளும் பட்டாக்கத்திகளும் சூரிய
னுடைய வெளிச்சத்தில் பளீர் பளீர் என்று பிரகாசிப்
பதையும் கண்டு கொண்டனர். இதையும் எதிரிகள்
தெரிந்துகொண்டு பாளையங்கோட்டையை நோக்கிச்
செல்லும் கும்பினிச் சைனியத்தைத் தாக்குவதற்குப்
புறப்பட்டு விட்டனர். மார்ச்சு பண்ணிக் கொண்டு
போகிற கும்பினிச் சைனியத்தின் பின்பாகத்தின் தலை
மை பூண்டு நடத்தியவர் கியாப்டன் வீஸே (Captain
Vesey) என்பவர். இவர் கை வசம் 2 ஆறுபவுண்டர்
பிரங்கிகளும் 3-வது ரிஜிமெண்டைச் சேர்ந்த முதற்
பட்டாளத்துள்ள கிரினேடியர் சைனியமுமிருந்தன.

கும்பினிச் சைனியங்கள் பாளையங் கோட்டைக்குச் செல்லல்



கும்பினியாரைத் தாக்கிய எதிரிகளின் சைனியங்கள்
கைக்கெட்டிய தூரம் வரும்வரை யாதொன்றுமே செய்
யக்கூடாதென்று கும்பினிச்சைனியம் தீர்மானித்துக்
கொண்டது. கைக்கெட்டிய தூரத்திற்குள்ளாக வீரா
வேசமாகவும் கூச்சல்களுடனும் வந்து கொண்டிருந்த
எதிரிகளின் மத்தியில் எறி பீரங்கிகளைக் கிரினேடியர்ஸ்
பட்டாளங்கள் பிரயோகிக்கவும், அநேகர் தலைவிறி
கோலமாக ஓட்டம்பிடித்து விட்டனர். எதிரிகளில்
40 பேர் இறக்கக் கும்பினிச் சைனியத்தில் இறந்த
வர்கள் 3 பேராவர். பாளையங்கோட்டையை 10-ம்
தேதி காலையில் சுமார் 9 மணிக்குப் போய்ச்சேர்ந்து
விட்டார்கள்.

பாஞ்சாலங் குறிச்சியின் முற்றுகையின் விஷய
மாக திருச்சிறுப்பள்ளியிலிருந்து மேற்கொண்ட சைனி
யங்கள் வந்ததன்பின்பு செல்வது நல்ல
தென்று மேஜர் மக்காளி துரையும்
மேஜர் ஷெப்பர்டு துரையும் கலந்து
யோசனை செய்துகொண்டு தற்காலம்வரை அதனை
நிறுத்தி வைத்துக்கொண்டு வேறு வகைகளில் தங்களு
டைய கவனத்தைச் செலுத்தலாயினர். காப்பின் பல
மற்றும் கேவலஸ்திதியிலும் காடல்குடிக் கோட்டை
இருப்பதாகத்தெரிந்து கும்பினிச்சைனியங்கள் அதனை
[illegible]-2-1801 தாக்கப் போவதான செய்தியை எதிரிகள்
தெரிந்துகொண்டுஅதன் பந்தோபஸ்துக்கு 2000 சைனி
யங்களைப் பல்வேறு இடங்களிலிருந்தும் தயாரித்துக்
கொண்டார்கள். அங்கு காடல்குடி சென்ற கும்பினிச்
சைனியங்கள் பலவகைகளிலும் தங்களுடைய சாமார்த்

காடல்குடியார் வெற்றி

இயத்தைக் காட்டியும் எதிரிகள் முன்னிலையில் நின்று போராடுவதில் இளைத்தோடி விட்டார்கள். அவர்கள் பக்கம் கொல்லப்பட்டவர் மூவர்; காயமடைந்தவர் 18 பேர். எதிரியின் நஷ்டங்கள் எதுவுமே தெரியவில்லை. இதில் வெற்றி கொண்ட எதிரிகளுக்குத் தைரியமுண்டாகி கவர்ன்மெண்டாருக்கும் அவர்கள் பக்கத்துள்ளார்க்கும் சொந்தமான சிறுசிறு கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பிடிக்கத் துணிந்துகொண்டதில் 1000 வெடிகளையும் அவைகளுக்குள்ள சாமான்களையும் சுளுவில் கைப்பற்றிக் கொண்டார்கள். ஸ்ரீ வைகுண்டத்தையும் எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள் என்ற சங்கதி கும்பினியாருக்குத் தெரிய, மேஜர் ஷெப்பர்டு துரை மூன்றாவது ரிஜிமெண்டு முதலாவது பட்டாளத்துடனும் 2 ஆறு பவுண்டர் பீரங்கிகளுடனும் 16-3-1801ல் ஸ்ரீ வைகுண்டம் போய்ச்சேர்ந்து ஆற்றின் எதிர்கரையிற்போய் தண்டிறங்கவும், புற்றிலிருந்து ஈசல்கள் புறப்படுவதை யொப்பக் கும்பினிச் சைனியங்களை எதிரிகள் சூழ்ந்து கொண்டார்கள். கிரினேடியர் பட்டாளம் நல்லவேலையைச்செய்தது. துருப்புகளும் பாதகமில்லை. எதிரிகள் ஓட்டம் பிடித்து விட்டார்கள். இந்நிகழ்ச்சியின் சேதம் எதிர்பார்த்தபடிக்கிராமல் சிறுத்தே இருந்தது. சுதேசக் கிறிஸ்தவர்களைப் பாளையக்காரர்களின் சைனியம் ஹிம்சை செய்ததும் தகாதவைகளைச் செய்ததும் அவர்களுக்கு நஷ்டங்களை யுண்டாக்கியதுமாகியவைகளை அறிந்து அதைப் பொறுக்கக் கூடாதவர்களிற் சிலர் ஓடி ஒளிய ஆரம்பித்து விட்டனர்.



உவெல்ஷ் துரை சொல்வதில் பிரஸ்தாபத்திலுள்ள பாஞ்சாலங் குறிச்சியாரைக் கட்டபொம்மு என்று சொல்வது தவறு என்றும், அவரைக் கட்டபொம்மு நாயக்கரின் சகோதரரென்று சொல்லவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டனர். இதை பிஷப்கால்டுவெல் துரை ஆக்ஷேபிக்கிறார். இவ்விருதரத்தார்களின் கூற்றுக்களில் எவை சரியாகுமென்பதைச் சிறிது ஆராய்வோம். பாஞ்சாலங்குறிச்சிக்கு, தூக்கிலிடப்பட்டவருக்குப் பின், கைதியாக்கப்பட்டிருந்து தப்பியோடி வந்துவிட்ட, ஊமைக் குமாரசாமி நாயக்கர் தமக்குத் தாமே அதிபதியாக்கிக் கொண்டதால், அவரது ராஜத்துவம் அங்கீகரிக்கப்படாத நிலைமையில் இருந்ததால், அவரைக் கட்டபொம்மு நாயக்கரின் சகோதரர் என்றது தவறாகமாட்டாதென்பதால், உவெல்ஷ் துரை சொல்வதே ஒருவாறு நியாயமாகும்.

கும்பினிச் சைனியத்துக்கு நேர்ந்த கஷ்டங்கள்

இதன் மத்தியில் தூத்துக்குடியைப் பிடித்துக் கொண்டனர். திருச்சிறாப்பள்ளியிலிருந்து சைனியங்களும் கும்பினியாருக்கு மேற் பலமாக வந்துவிட்டன. இப்படி வந்துள்ள சைனியங்கள் சகிதம், எதிரியை நோக்கிப் புறப்பட்டதில் முதலில் ஓட்டிரம்பட்டிக்கும் இரண்டாவதாகப் பசுவந்தனைக்கும் செல்ல, எதிரிகளில் 600 பேர்கள் கும்பினிச் சைனியத்தைநோக்கி எதிர்த்துவந்தார்கள். அவர்களைக் காணவும் குதிரைப்படையை எதிரிகளின் மேல் மேஜர் மக்காளி துரை ஏவினர். அப்படி வந்துள்ள குதிரைப் பட்டாளம் 90 பேர்கள் அடங்கியதாக இருப்பதற்குத்

தீரனும் சாமர்த்தியனுமான ஜேம்ஸ் கிராண்டு துரை என்பவர் தலைமை வகித்து நடத்திவந்தார். அப்படித் தலைமை பூண்டுள்ள கிராண்டு துரை குதிரைப்பட்டாள வீரர்களைப் பார்த்து "செண்டு ஜ்யார்ஜ் நமக்குத் துணை புரிவார். எங்கே! எதிரிகள் மேல் பாய்ந்து விழுங்கள் பார்ப்போம்!" என்றார். உடனே எதிரிகளைத் தாக்கவும் எதிரிகள் நின்று போர்புரிய சக்தியற்றுத் தப்பித்துக் கொண்டனர். என்றாலும், மாறிமாறி பிடிபடாமலும் இடங்கொடாமலும் எதிர்த்துக்கொண்டே யிருந்தார்கள். எதிரிகளின் சீமை கரிசற் பூமியாக இருந்ததால் பிரயாணத்தில் குதிரைப் பட்டாளம், சிரமப்பட்டதிலிருந்து நின்று நின்று சகதிக் காட்டிற்போவதிற் கஷ்டப்படுவதை யறிந்த எதிரிகளால் லெப்டினென்டு கிராண்டு கொல்லப்பட்டார். அதுபோலவே அவரது ஸுபேதார் ஷெயிக் இபுராமும் அவரைச் சேர்ந்தநாலு பேர்களும் கொலையுண்டனர். லெப்டினெண்டு லைனி (Lieutenant Lyne) துரையின் நாயக்கும் 11 துருப்புகளும் காயமடைந்ததுடன், இரண்டு குதிரைகள் வெட்டுண்டிறந்தன. மற்றும் 12குதிரைகள் காயமடைந்தன. இந்த சம்பவம் 30-3-1801ல் நிகழ, அதன் மறு தினத்தில் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கும்படிக்கு நிகழ்ந்ததில் சேர்ந்துள்ள விஷயங்களில் முக்கியமானவைகளாவன: எதிரிகள் தீவிரத்துடன் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கும் மத்தியிற் கும்பினிச் சைனியங்கள் சுறுசுறுப்புடன் சென்றதேயன்றிக் கோட்டையையேனும் எதிரிகளின் வியூகங்களை யேனும் அழித்து விடச் சக்தியற்றிருந்தன. எதிரிகளின்மேல் கும்பினிப்



படைகள் விழுந்து உழப்பியும் எதிரிகளின் உத்சாகம் சிறிதேனும் தளர்வடையவில்லை. எதிரிகளால் போடப்பட்டிருந்த முள் வேலியையும் கடந்து சென்று கோட்டைமதிலின்மீது தொத்துவதற்குப் பலதடவைகளாக எத்தனித்ததும் வீணாகியது. கும்பினிப் படையினர் மேல் ஒட்டிவிட்டுச்செல்லும் ஈக்களுங்கூட, அவர்களைக் கடந்து செல்லாவண்ணம், பிடிவாதமான ஊக்கத்துடன் நின்றுகொண்டு, கும்பினிப் படையினர் எவர்க்கும் உட்புகுதல் என்பது கூடாமை என்று காட்டிவிட்டனர்கள். என்றாலும், அவ்வாறு தப்பியும் தவறியும் மதிலில் ஏறியவர்களை அங்குள்ள வீரர்கள் ஒரேகுத்தாக ஐமுதாடு முதலிய ஆயுதங்களால் குத்திக் கீழே எறிந்துவிட்டார்கள்.

பாளையக்காரர் சைனியங்கள் வல்லய முதலியவைகளை உபயோகித்த விசித்திர வகைகள்

ஆதலால் மதிலில் ஏறியவர்களாலும் கோட்டையின்மீதிருந்து எதையும் செய்துகொள்வதற்கு மார்க்கமில்லாமல் போயிற்று. இதைக்கண்டு கும்பினிச் சைனியங்கள் பின் வாங்கியதில், எதிரிகள் அவர்களில் பின்வருப்பில் செல்பவர்களைப் பாலாவாலும் வல்லயங்களாலும் குத்துவதும், கீழே குத்துண்டு கிடப்பவர்களையும் குத்துண்டு இறந்துகிடப்பவர்களையும் நெஞ்சில்இரக்கம் சிறிதுகூட இல்லாமல் அவர்கள் மீது ஆயுதப்பிரயோகங்களைச் செய்வதுமாக இருந்தார்கள். பாலாக் கழைகளையும் வல்லயங்களையும் அவர்கள் உபயோகித்த சாமர்த்தியத்தினால் கோட்டையின் சமீபத்திற் கும்பினிச் சைனியங்களை அணுகாமற் றடுத்துக்

கொண்டதுடன், அடிக்கடி அவர்களால் உபயோகித்த அக்கினிக் குண்டுகள் என்ற கிச்சுக் குடுக்கைகளும் எதிரிகளின் சமீபத்தில்செல்ல இடங்கொடாது செய்துவிட்டன. சண்டையில் நிகழ்ந்த குழப்பத்தில் எதிரிகள் கையில் ஒரு பீரங்கி சிக்கிக்கொண்டது. அதனைப் பிடுங்கிக் கொண்டு வருவதற்குப் பட்டாள உத்தியோகஸ்தர்கள் 6 பேர்களுடன் 50 சிப்பாய்களும் சென்றார்கள். அவர்களில் ஓர் உத்தியோகஸ்தர் இறந்தும் இரண்டு உத்தியோகஸ்தர்கள் காயமடைந்தும் சிப்பாய்களிற் சிலர் இறந்தும் கடைசியாகப் பீரங்கியை மடக்கிக்கொண்டே வந்துவிட்டார்கள். கோட்டைச் சுவரிலிருந்து 1500 கஜம் தூரமுள்ள ஓர் இடத்தைச் சைனியங்கள் நின்று போர்புரிவதற்கென்று நிச்சயித்துக் கொள்ள, அது எதிரிகளின் கண்ணுக்குத் தெரியாததால்; அங்கேயே ஸ்டோர்ஸ் முதலிய சகலமும் வைத்துக் கொள்ளப்பட்டன. இவ்விதமான நஷ்டங்களை நினைத்து எல்லாரும் ஏகோபித்துச் சிறிது நேரம் மௌனமாகவும் விசனக்குறியை உடைய முகத்தினராகவும் இருந்து, இறந்துபோனவர்களின் ஆத்மா நல்ல கதியை அடையவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்ட காலையில், ஏதோ ஜபத்தைக் கெடுக்காமல் அதனை நடத்துவதில் மனசு வைத்திருந்த எதிரிகள் அந்த மட்டிலும் கௌரவப்படுத்தியது மெச்சத்தக்கதே.

எதிரிகள் எவ்விதமாக வெற்றி அடைகிறார்கள் என்பதையும் கும்பினியார்களுக்குக் கண்டு பிடிக்கக்



கூடியதாக இல்லாததால் ஒரு கால் எதிரிகள் ஜெயம் பெற்று வருவது இந்திரஜாலத் தொழிலின் காரணமாகுமோ என்றும் சந்தேகங் கொண்டனர். ஏனெனில், கோட்டையின் கைப்பிடிச் சுவர்கள் சேதமடைந்துவிட்டமையால், அங்கு நின்று எதிரிகள் எதுவுமே செய்து கொள்ள முடியாதென்பதைக் கும்பினியார் நன்றாகத் தெரிந்துகொண்டனர்.

கும்பினியார் எட்டயபுரத்தாருடன் ஒரு யுத்த ஆலோசனை சபையை நிகழ்த்தல்

இது விஷயமாகப் பட்டாளத்து உத்தியோகஸ்தர்கள் எட்டயபுரத்தாரிடங் கலந்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டதில்; எதிரிகள் நிலவறை ஒன்றைச் செய்து வைத்துக் கொண்டு அதனுள் ஏராளமான யுத்த தளவாடங்கள் சகிதம், அங்கு 5000 சைனியங்களுக்குக் குறைவின்றி ஒளித்திருந்து போர்புரிகின்றனர் என்று சொல்லியதைக் கேள்வியுற்ற கும்பினியார்கள், இனி நிதானமாக யோஜித்துத்தான் அவர்களிடம் போர் புரிவது நலனாகுமென்று தீர்மானப் படுத்துவதற்குள்; எதிரிகள் ஏராளமான குண்டுப் பிரயோகங்களைப் பொழிந்ததுமன்றி அங்கிருந்த ஐயாயிரவர்களின் ஒன்று கூடிய குரவைச் சத்தம் அண்டம் பிளக்கும்படி கிளம்பவும், கும்பினிச் சைனியம் பின் வாங்கியது. ஐரோப்பிய சைனியங்கள் 120-ல் காயமில்லாது பிழைத்தோர் 46 பேராவர். இப்படிக் கும்பினியார்கள் நஷ்டமடைகிறார்கள் எனத்தெரிந்துகொண்ட எட்டயபுரத்தார், ஆயிரம் சைனியங்களுடன் சார்லஸ் டிராட்டர் துரையால் நடத்திவிக்கப்பட்ட ஒரு துண்டங் கும்பினிச் சைனி

யத்துடன் சேர்ந்துகொண்டு, கும்பினியார் மேல் பக்கம் நின்று போர்புரிய அச்சைனியம் மற்றோர் பக்கத்திலிருந்து சண்டை செய்ததெனினும், கடைசியில் யாதொரு பிரயோஜனமுமில்லாதுபோயிற் றென்றாலும், எட்டயபுரத்துச் சைனியம் மிகுந்த தைரியத்துடன் இருதரத்தாருக்கும் பெரும் சேத முண்டாகும் வரை ஊக்கத்தை விடாமல் போர் புரிந்தது. மேஜர் மக்காளி துரையால் நடத்தப்படும்சைனியமும் அப்போது கும்பினியார் பக்கமுள்ள ஆயுதங்களும் போதுமானதாக மாட்டாவெனத் தெரியவும், வேறு உபாயத்தை நாடுவதானார்கள். அதாவது, கர்நாடக தேசத்துப் பட்டாளமும், மலையாளத்திலுள்ள ஹிஸ் மேஜஸ்டிஸ் 74 பட்டாளமும், மேற்கொண்ட குதிரைப்பட்டாளமும், திருச்சினாப்பள்ளியிலிருந்து சரியானதரமுள்ள பீரங்கிப்பட்டாளமும் வந்து சேரவேண்டுமென்று நிச்சயம் செய்யப்பட்டது.

**கர்னல் அக்னியு துரையின் நியமனம்**

மேஜர் மக்காளிதுரையின் ஸ்தானத்தில் வேறு சரியான ஒருவரை நியமனஞ் செய்ய வேண்டுமென்றும் நிச்சயம் செய்யப் பட்டதால் கவர்ன்மெண்டார், இராணுவ அனுபவத்திற் சிறந்தவராயும் வெகு காலமாக இராணுவத்தில் அட்ஜுடண்டு ஜெனரலாகவுமிருந்த கர்னல்பீட்டர் அக்னியு (Colonel Peter Agnew) துரையை நியமனஞ் செய்துவிட்டார்கள். இவரைத்தான் அக்னி சாஹிப் என்று நமது ஜில்லாவாசிகள் சொல்வார்கள். மேஜர் மக்காளிதுரை இந்தயுத்தத்தைத் திருப்திகரமாக நடத்திக் கொள்ள



மாட்டா ரென்றதை எட்டயபுரத்தார் முன்னமே தெரிந்து கொண்டனர்.

**கலெக்டர் துரையின் தவறு**

திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டர் கவர்ன்மெண்டாரின் சாங்கிஷனைப் பெற்றுக் கொள்ளாமல், தானாகவே கொழும்புத் துரைத்தனத்தாருக்குப் பாளையக்காரர்களின் கலக நிமித்தம், தன்னிடம் சைனியம் போதுமானபடிக்கு இல்லாததால் தனக்குச் சைனியச் சகாயம் வேண்டுமென்று கேட்டு வாங்கிக்கொண்டார். இந்த விஷயம் சென்னபட்டணம் கவர்ன்மெண்டாருக்குப் பின்னால் எட்டிவிடவும், கலெக்டர் செய்கையை அங்கீகாரம் செய்யாமல்க் கண்டித்துவிட்டனர்.

**எதிரிகளின் கைகளில் கும்பினியாரின் பீரங்கிகள் சிக்கிக் கொள்ளல்**

இடியும் மழையும் புயல்க்காற்றும் மின்னலும் 22-4-1801-ல் நேரிட்டன. வெடி மருந்துகளை உபயோகிப்பவர்களுக்குக் கேடாயும், பட்டாக் கத்திகளையும் பாலாக்கழைகளையும் வல்லயங்களையும் உபயோகிப்பவர்களுக்குச் சீராகவுமிருந்தன. ஒரு மின்னல் மின்னவும், அதன் பின் ஏற்பட்டுள்ள ஓர் இடியின் சப்தம் நின்றும் நிற்காமலும் இருக்கும் சமயத்தில், கும்பினியாரின் சைனியத்திலிருந்து 6 பவுண்டர் பீரங்கியின் தொனி முழங்கிற்று. இது முழங்கியதின் பக்கத்தில் இருந்த கும்பினிச் சைனியத்தோடு ஒரு பீரங்கிப் பட்டாளமும் இருந்தது. லெப்டினெண்டு ஹெச். டே துரை (H.Dey) இச்சைனியத்திற்குத் தலைவராக இருந்தார். எதிரிகள் கும்பினிப் பீரங்கிகளில் ஒன்றைப்

பிடுங்கிக் கொண்டுபோய் விட்டார்கள். பீரங்கியைக்
கைப்பற்றிக்கொண்ட சண்டையில் கும்பினியார் பக்
கம் 8 பேர்களைக் கொன்றுவிட்டு கரிசற் காட்டு வழி
யாக அதனைக்கொண்டுபோய் விட்டார்கள். லெப்டி
னென்டு டே துரைக்கு மற்றோர் லெப்டினென்டு
(Lieutenant Classon) கிளாஸன் துரையையும் அவ
ரது சைனியத்தையும் அனுப்பி வைத்தார்கள். ஒன்று
சேர்க்கப்பட்ட இரண்டு கும்பினிச் சைனியங்களும்
எதிரிகளால்கொண்டு போகப்பட்டிருந்த பீரங்கியைப்
பற்றிக் கொண்டன. எதிரிகள் பலமான போரைத்
தொடுத்தார்கள். அப்படித் தொடுக்கவும் அது சமயம்
கும்பினிப் பட்டாளம் பின் வாங்கிவிட்டது. ஒன்று
சொல்லி வைத்திருந்ததுபோல, இரண்டு கட்சிக்காரர்
களும் தங்கள் தங்கள் பக்கங்களில் வீழ்ந்துள்ள மரண
ஜாப்தாவைக் கணக்கிட ஆரம்பித்து விட்டார்கள்.

கர்னல் அக்னியு துரையின் வெற்றி

கர்னல் அக்னியுதுரை 21-5-1801ல் சார்ஜை ஒப்
புக்கொண்டார். இவர் சார்ஜு எடுத்துக் கொண்ட
தினத்திலிருந்து 24-ம் தேதிவரை
கோட்டையை உடைத்துச் செல்வதில்
வெகு தீவரமான வேலைகளைச் செய்ய
வும், அவ்வேலைகள் நமக்குக் கூடிய சீக்
கிரம் அனுகூலத்தைக் கொடுத்து விடுமென்ற நம்பிக்
கையை உண்டுபண்ணும்படி ஒவ்வொன்றாக எளிதில்
முடிவுபெற்றுக்கொண்டேவந்தன. மதிலில் இடிபட்டுத்
திறந்திருந்த உடைப்பு வாசல்கள்தோறும் கும்பினிச்
சைனியம் உட்பிரவேசியாம லிருக்கும்படி பெரும்
கவை முள்ளுள்ள உடைமரங்களின் தூர்களைவைத்து



அடைத்து மூடியதில் உட்பிரவேசம் சிறிது தடங்
கலுக்குக் காரணமாக நின்றது. கோட்டையின்தென்
மேற்கிலுள்ள கொத்தளத்தை நோக்கி 23-5-1801
காலையில் 2 பீரங்கிகளை ஏககாலத்தில் பிரயோகிக்க
வும், அதேசமயத்தில் பெரிய பீரங்கியைக் கோட்டை
யின் தெற்குப் பக்கத்திலுள்ள மூலையிற் பிரயோகிக்க
வும், அப்பக்கங்கள் இடிபட்டுவிட்டன. இவ்விதமாக
இடிபட்டுள்ளவைகளை ரிப்பேர் செய்வதில் எதிரிகளின்
முயற்சிகளைச் செல்லவிடக் கூடாதென்று கருதி, இரவு
பூராவும் கோட்டையை நோக்கிக் குண்டுகள் ஓயாது
பொழிந்துகொண்டிருந்தன. மறுநாட்காலையிலும் கோட்
டையைப் பிடித்து உட்புகும் வேலையிலேயே கண்ணுங்
கருத்துமாக இருந்து, டவர் பீரங்கியை ஏற்றுவிக்கும்
படிக்குச் செய்துகோட்டையை அந்நாளிரவு ஒருமணிக்
குள் தகர்த்தாய்விட்டது. ஸ்டார்மிங்கு பார்ட்டி என்ற
அழிமானம் செய்யும் சைனியமும் உள்ளேபிரவேசிக்க
எத்தனித்துக் கொண்டது. இவ்வித நிலைமைக்கு எதிரி
களைக் கொண்டுவந்தும் அவர்கள் தங்களுடைய தைரி
யத்தை இழக்கவில்லை. கும்பினிச் சைனியம் எவ்வள
வோ தைரியமாக இருப்பதை அவர்களறிந்தும் அல
கூிய புத்தியுடன் அவர்களைப்போய் மோதிப் பாய்ந்து
விரட்டிவிடத் துணிய எத்தனித்தனர். கோட்டையின்
மேல் சென்றிருந்த கும்பினிச் சைனியத்தை, அங்கு
கோட்டையின்மீது ஏறிய அரைமணி நேரகாலத்திற்
குள், குண்டுப் பிரயோகங்களை உபயோகித்து விரட்ட
எத்தனித்துத் தீவிரமான வேலைகளைச் செய்தனர்.
இப்படி 15 நிமிஷம்வரை தீவிரமாக எதிரிகள் கும்

பினியாருடன் சண்டைசெய்ததில் எதிரிகளில் அநேகர் கொல்லப்பட்டனர். எறி பீரங்கிகள் நாலா பக்கங்களிலும் பிரயோகிக்கப் பட்டதிலும்கூட எதிரிகள் அஞ்சாமல் கோட்டையைக்காப்பாற்றிக்கொள்ள யத்தனித்தும் கடைசியில் பயனின்றிக் கோட்டையை யிழந்து விட்டனர். இறுதியில் போருக்காற்றாது ஓடியும் விட்டனர். கும்பினிப் பக்கத்துளாரில் காயமடைந்தோரும் இறந்தோரும்:—

(1) 74-வது பட்டாளத்து லெப்டினென்டு ஜில்கிரைஸ்டு.

(2) 77-வது பட்டாளத்து லெப்டினென்டு களானஸ்பால்டிங்கு என்பவரும் காம்பல் என்பவரும்

(3) 4-வது பட்டாளத்து லெப்டினென்டு பிரேஸர்.

(4) காயப்பட்ட மலேயா பட்டாளத்து லெப்டினென்டுகளான மாக்ளின் (M'clean), ஸ்காடச்சு பிரிகேட்டு கியாப்டன் உவிட்லி.

(5) முதலாவது குதிரைப் பட்டாளத்து லெப்டினென்டு வாலன்டைன் பிளாக்கர்.

(6) 74-வது பட்டாளத்துக் காம்பெல்.

(7) 4-வது பட்டாளத்துக் கியாப்டன் பார்ச்சு.

மேலே காட்டியுள்ள 4, 5, 6, 7 என்ற இலக்கங்களில் குறிப்பிடப்பட்டோர் காயமடைந்தோராவர். இதிலடங்கிய காயப்பட்டவர்களுக்கும் மரணமடைந்தவர்களுக்குமுள்ள லிஸ்டில் மொத்தம் கண்டுள்ளது 223 என்றும், அதில் ஐரோப்பியருள் கொல்லப்பட்டார் 19 என்றும், அதில் அவருள் காயமடைந்தோர்



76 என்றும், சுதேசிகளில் கொல்லப்பட்டோர் 24 என்
றும், காயமடைந்தோர் 96 என்றும், அவர்களுடன் சேர்
ந்தோர் வேறுசிலருள்பட மொத்தம் 223 என்றதுமாம்.
இச்சைனியங்களில் வந்திருந்த ஐரோப்பிய லெப்டி
னென்டுகளான ஜேம்ஸ் கிராண்டும் பிளாக்கரும் மகா
தைரியசாலிகளாவார்கள் என்று தெரிவதுடன் பாஞ்சா
லங் குறிச்சிச்சண்டையில் பிளாக்கர்துரை காட்டியுள்ள
ஆண்மையையும் இராணுவப் பயிற்சியையும் கவனிக்
கின், மிக்க வலிபடைத்தோரென்று அவரைச் சொல்
வது தகுதியானதாகும். இவரது சரித்திரத்தை நன்கு
ஆராய்ச்சி செய்தோர் இவரை 1799-ம் வருஷம் நீல
நதிக்கரையில்நிகழ்ந்த சண்டையில் குறிப்பிடப்பட்டிரு
க்கும் கஸாபியன்காவென்ற பாலிய வீரரைப் போன்ற
வர் என்பேம் என்றதை மறுக்குநர் யாவர்?

பிடிபட்ட கோட்டைக்குள் பிரவேசித்துப் பார்
த்த கும்பினிச் சைனிய உத்தியோகஸ்தர்கள் அதன்
சிறுமையைக் கண்டு அலக்ஷியமடைந்
தார்களெனினும், அதன் வலுவையும்
அதைக் கட்டி முடிக்கப்பட்ட கண்ணி
மைப் பொழுதை ஒத்த இந்திரஜால

இந்திர ஜாலக்
கோட்டையின்
வியப்பு

நொடியின் அளவையும், எதிரிகளின் மாயா வித்தையின்
திறமையையொத்த சாமர்த்தியத்தையும், அவர்கள்
பிரயோகித்த ஆயுத முறைகளின் தேர்ச்சியையும்
கண்டு பிரமித்துவிட்டார்கள். அத்துடன் நிலவறையின்
தன்மையை ஆழ்ந்து யோசித்துவிட்டு இஞ்சினீரின்
சக்தியால் இத்தகைய நிலவறை ஒன்றை இதுபோன்ற
பூசாரமான நாட்டில் செய்து முடிப்பது அசாத்திய

மான காரியமாகவே முடியுமென்றும் மெச்சிக்கொண்ட
னர். இடிபடாமல் ஆங்காங்கு நிற்கும் கோட்டைக்
கட்டைச் சுவர்களைக் கியாப்டன் ஹாஜார்டு துரையின்
அதிகாரத்தின் கீழ்விட்டு இடிக்க ஏற்பாடு செய்துவிட்
டனர்.

**தன்னலமறுத்த இரண்டு இராஜ விசுவாசிகள்**

கர்னல் அக்னியு துரையின் வெற்றியில் காயப்
பட்டோருள் ஊமைக் குமாரசாமி நாயக்கருமொருவ
ரெனத் தெரியவும், அவரை எட்டய
புரத்தார் கண்டு எடுத்துக்கொள்ள
வேண்டுமென்ற நோக்கத்துடன் காய
மடைந்தும் இறந்தும் கீழே கிடப்ப
வர்களை ஒவ்வொருவராகப் பார்வையிட்டுக் கொண்டு
வர, இராப்பொழுதானதால் இனம் சரியானபடி தெரி
யாமலிருக்க, அதுசமயம் தன்னுடையமகனைக் காணே
மென்று இறந்தும் இறக்குந் தருணமாயும் கிடந்த கூட்
டத்தில் தேடித் திரிந்து கொண்டிருந்த ஒருத்தி, தன்
னுடைய மகனைக் கிட்டி ஆவலுடன் எடுத்துத்தோளிற்
போட்டுக்கொள்ள எத்தனிக்கவும், "அம்ம! என்
னுயிரை நீ காப்பாற்றுவதிலும் அதோ விழுந்து கிடக்
கும் நமது சாமியின் (ஊமைக் குமாரசாமி நாயக்கரின்)
உயிரைக் காத்துவிடு. என்பாடு எப்படியானாலுஞ் சரி"
என்றனன். அவ்வாறே அவளும் தன் மகனின் உயிரி
னும் தன் எஜமானனும் இராஜனுமான ஊமைத்துரை
யின் உயிரே சிறந்ததாகுமென்று அவரை ஒரே தூக்
காகத் தூக்கித் தோள்மேலிட்டுக்கொண்டு செல்ல, வழி
யில் அதென்னவென்று கேட்டோருக்கு "வைசூரியி
னாற் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி" என்று கையில்



வேப்பங்குழை சகிதம் சமயோஜிதமான பதிலைச்
சொல்லி இராஜனின் உயிரைக் காத்துக்கொண்ட இந்த
இராஜ விசுவாசிகளின் பக்தியை என்னென்போம்! தன்
னல மறுத்தலில் இவளினும் இன்னவளது மகனினும்
சிறந்தோர் வேறு எவரேனு முளரோவெனச் சரித்திர
நிகழ்ச்சிகளின் சம்பந்தமாக யாம் தேடி ஆராய்ந்தன
வற்றுள் வேறு எவருமே இலர் என்ற எமது கொள்கை
மறுத்தற் பாலதன்றென்பேம். மேலும் ஒருகால் சர்
பிலிப் சிட்னி துரையை இணை கூறுவோமெனின், அஃ
தும் பொருத்தமுடைத் தன்றென்றது கீழேகண்ட
நியாயத்தால் தெரியவரும். நாம் பிரஸ்தாபிக்கும் சர்.
பிலிப் சிட்னி துரை, வீரருள் வீர சிங்கமாயும், நிரம்பிய
கல்விச் செல்வம் வாய்க்கப் பெற்றவராயும், ஆங்கில
பாஷையில் பத்தியமும் கத்தியமும் எழுதி, அப்பாஷை
யை இலத்தின், கிரீக் முதலிய பாஷைகளுக்குப் பின்
னிடாது சமத்துவமெனக் காட்டிய கல்விச் சிங்கமாயும்
விளங்கி, ஜட்பனில் (Zutphen) நிகழ்ந்த போரில் காய
மடைந்து கிடக்குந்தருணத்தில் தண்ணீர்விடாய்மீதுற
அதனை அவர் வேண்டிக் கேட்கவும், ஒரு கோப்பை
நிரம்பியஜலத்தை அன்னாரிடம் ஒரு சேவகன்கொண்டு
வந்து கொடுப்பதை, அவர் மாட்டுக் கிடந்துள்ள மற்
றோர் காயமடைந்த வீரனின் கண்கள் ஆவலுடன்
நோக்கவும், அதனை அறிந்துகொண்ட சர் பிலிப் சிட்னி
துரை "எனக்குள்ள தாகத்திலும் அவனுக்குள்ள
தாகவிடாய் அதிகமாக இருப்பதால், அக்கோப்பையின்
ஜலத்தை அவனுக்கே கொடுத்து விடுங்கள்" என்றன
ராம். இச்செய்கையின் காரணமாக சர் பிலிப் சிட்னி

யைத் தன்னல மறுத்தலுக்குச் சான்றாக மேனாட்டார் கூறுவர். ஆனால் நாம் பிரஸ்தாபிக்கும் வீரனோ "கோப்பையின் ஜலத்தைக் கொடு" என்ற வார்த்தைகளிலடங்கியுள்ள பொருளின் பலனிலும் பன்மடங்குசிறந்துள்ள தன் உயிரைத் தன் எஜமானனின் பொருட்டுத் தியாகம் செய்தனன்! அன்னோனது தாயாரும் தன் மகனிடந் தனக்கியற்கையிலுண்டாம் புத்ரவாஞ்சையையுங் கவனியாது எஜமானது உயிரே சிறந்ததெனக் கருதினள்!! சர் பிலிப்சிட்னி என்பார் கல்வி, அந்தஸ்து முதலியனயாவும் ஒருங்கே அமையப் பெற்றவராதலால், அவருக்கு அதுசமயம் தோன்றிய தன்னலமறுத்தலையும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைமேட்டில் விழுந்துகிடந்த சாமான்ய அறிவிலும் சிறுத்திருந்த வீரனது தன்னலமறுத்தலையும், ஒப்பிட்டு நோக்குநர்க்கு நெதர்லாண்ட்ஸ் தேசத்திலுள்ள ஜட்பனில் விழுந்துகிடந்த வீரரது தன்னல மறுத்தல் சாதாரணமெனத் தோற்றப்படுமென்பது நிச்சயம்.

இவ்விதமாக அம்மாது ஊமைத் துரையைக் காப்பாற்றி யிராவிடில்; அன்று சிறிதுக்ஷணப் பொழுதில் எட்டயபுரத்தார் கையில் அவர் அகப்பட்டுக்கொள்ள சமயம் நேரிட்டிருக்கும். அவ்விதமாயின், பிற்காலத்திய நமது ஜில்லாவின் சரித்திர விஷயங்களும் இப்போதிருப்பனவற்றுள் சில மாறுபாடுகளை யடைந்திருக்க நியாயமுண்டென்போம்.

---

## பதினாறாம் அத்தியாயம்

### தற்காலத்தியது

கும்பினியார் எட்டயபுரத்தாரிடம் ஊமைத்துரையைப் பிடித்துக் கொடுக்கவேண்டுமென்றல்

இவ்விதமாகத் தப்பித்துக் கொண்ட ஊமைத்துரை, எவருக்குந் தெரியாமல் சிலகாலம் அக்ஞாதவாசம்போல வசித்திருந்துவிட்டு, காடல்குடியாருடன் சேர்ந்து கமுதி முதலிய இடங்களில் கொள்ளையிட்டுக் கடைசியாக, சிவகங்கைச் சீமையிலுள்ள சிறுவயலில் சின்ன மருது பெரிய மருது ஆகிய இருவர்களின் கக்ஷியிற் சேர்ந்து கும்பினியாருக்கு விரோதமான ஆலோசனைகளைப் பலவாறாக நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட கும்பினியார் எட்டய புரத்தாரிடம் ஊமைக் குமாரசாமி நாயக்கரைப் பிடித்துக் கொடுக்கும்படி வற்புறுத்த, அதன்பிரகாரம் அன்னோர் தன்னுடைய தண்டுதளவாடங்களைச் சித்தப்படுத்திப் புறப்படத்தயாராக இருக்கும்போது, அவர்கள் காளையார் கோயிலிலிருப்பதாயும், பசலை என்ற பறளச்சிக் கிராமத்தில் வைத்து இங்கிலீஷ் சைனியத்துக்குச் சொந்தமான பீரங்கிஒன்றைப் பிடித்துக் காளையார்கோயிற்காட்டிற்குள்சென்று அதனை வைத்திருப்பதாயும், எட்டய புரத்தாருக்குச் செய்தி எட்டியது. இதைக் கேள்விப்பட்ட அக்னியுதுரையும் சகிக்காதவராகி, எட்டயபுரத்தாரைச் சிறிதளவேனுங் காலந் தாழ்த்தாமல் இது சம்பந்தமாக எவைகளைச் செய்துவைக்க வேண்டுமோ அவைகளை

அங்கு சென்று திருப்திகரமாக முடித்துத்தரவேண்டு
மென்று கேட்டுக்கொள்ள, அவர்களும் யுத்த சன்
னத்தர்களாகி அங்கு செல்லவும், அவர்களுக்கு உதவி
யாக அனுப்பப் பட்டிருந்த ஷெபேர்டு துரையின்
சைனியங்களுடன் சேர்ந்து எதிரிகளின் சீமைகளிற்
செல்வதைக் கண்டுகொண்ட மருதுக்களின் வகையாட்
கள், சிறுவயல் என்ற ஊரை எதிரியான அக்னியுதுரை
யால் அனுப்பப்பட்ட சைனியங்கள் பிடித்து அழித்து
விடுவதிலும், எதிரியின் பெயரான அக்னியு என்றதைத்
தொனியார்த்தத்தில் சிறிது ஒத்துள்ள அக்கினி பகவா
னுக்குக் கொடுத்துவிடுவதே நலமென்று தீர்மானித்து
அதனை அக்கினிக்கு ஆகுதிசெய்துவிட்டனர். எட்டய
புரம் குதிரைப் படை வீரர்களுக்குள் தலைமை பூண்
டிருந்த கட்டாலங்குளம் அழகுமுத்துச் சேர்வை, கும்
பினிச் சைனியத்தை எட்டயபுரம் சைனியத்துடன்
சேர்த்துக்கொண்டு காளையார்கோயில் ஆரணியத்துட்
பிரவேசித்து, எதிரிகளைத் துரத்தி அடித்து பீரங்கியை
யும் மடக்கிக் கொண்டுவந்தனர். இவ்வெற்றியால் கும்
பினியாருக்கு எட்டயபுரத்தார்மீது சந்தோஷம் பிறந்து
அவர்களைக் கௌரவப் படுத்துவதற்குச் சின்னங்க
ளாக இரண்டு இங்கிலீஷ் யூனியன் ஜாக்குக் கொடி
(பாவட்டா) விருதுகளையும், இங்கிலீஷ் யுத்ததம்புருகளை
யும் கொடுத்தனர். அவைகளை எட்டயபுரத்தில் இன்
றுங் கண்டு கொள்ளலாம். இதனை யடுத்த அக்டோபர்
மாதத்தில் இரண்டு மருதுகளும் பிடிபடலாயினர்.
அவர்களுடன் ஊமைத்துரை, அவர் சகோதரர் செவத்
தையா என்ற சுப்பா நாயக்கர், தளவாய் பிள்ளை, குல



சேகர பட்டணம் மூப்பன் முதலியவர்களும் பிடிபட்ட
னர். செவத்தையா என்ற சுப்பா நாயக்கரை ஸ்ரீவில்லி
புத்தூரில் வைத்துப் பிடித்துப் பாளையங்கோட்டைக்
குக் கொண்டு போயினர். இவரும் தன்னுடைய சகோ
தரரைப் போலச் சிறந்த தைரியசாலியாவர். இவ்விதம்
பிடிபட்டவருள் சின்ன மருது பெரிய மருது ஆகிய
இருவரையும் திருப்பத்தூரில் வைத்துத் தூக்கிலிட்
டுக் கொன்றுவிட்டார்கள். ஊமைக் குமாரசாமி நாயக்
கரையும் செவத்தையாவையும் பாஞ்சாலங்குறிச்சியில்
வைத்துத் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்கள். தள
வாய் பிள்ளை, மூப்பன் வகையராவுள்பட 70 பேர்களை
யும் பிரின்ஸ் ஆப் உவேல்ஸ் தீவுக்கு த்வீபாந்தர
சிக்ஷை விதித்துத் தண்ணீர்க்கப்பால் அனுப்பிவிட்டார்
கள். அந்த எழுபது பேர்களில் ஒருவர் சிவகங்கைச்
சீமையின் சின்ன மருதுவின் குமாரராவர். த்வீபாந்தர
சிக்ஷை விதிக்கப்பட்டிருந்தவர்களைத் தூத்துக்குடியி
லிருந்து கப்பலிலேற்றி அனுப்பிவைக்கப்பட்டதில்
நிகழ்ந்த சம்பவங்கள் திருநெல்வேலிச் சீமையின்
தொடர்ச்சியாவதால் அவைகளையும் இங்கு எடுத்துச்
சொல்லல் பொருத்தமுடைத்தே. இதன் முழு விவ
ரங்கள் பின்னர் குறிப்பிடப்படும். இதன் மத்தியில்
உவேல்ஷ் துரை நேரிற்கண்டு ஆச்சரியமடைந்த சில
வீரர்களைப்பற்றிக் கூறி முடிப்போம்.

1. “ஷேக் இபுராஹிம் என்றவர் போர் முனையில்
மிகுந்த ஆண்மையுடன் யுத்தஞ் செய்து பல காயங்
களைப் பெற்றிருந்தாரெனினும், தனிமையாக நின்று
உயிர் போகுந் தருவாயிலுங்கூட எதிரிகளின்மீது அஞ்

சாது பாய்ந்து, அணிகளைப் பல தடவைகளில் உடைத்துச் சென்று அவர்களில் பல்லோர்களை அவரது கை வாளால் விண்ணுலகுக்கு அனுப்பிவிட்டு, அவரும் வீர சொர்க்கம் புகுவதற்குக் காரணங்களாக நின்ற அன்னாரது சாகசங்களான செயல்கள், உவேல்ஷ் துரையின் கண் முன்னுக்குப் பிற்காலத்திலுந் தோற்றப்படுவன போலிருந்தன" என்கிறார்.

2. "மிக்கேல் ஈகான் என்றவோர் இங்கிலீஷ் வீரர் முதனாட் போரில் கோட்டையின்மீது ஏறியிருந்த முதலணிப் பட்டாளத்துள்ளாருள் ஒருவரெனினும், அவரது தேகம் முழுமையும் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டிருப்பதாகக் கண்ட எல்லோரும் அவர் கீழே விழுவதைப் பார்த்து இறந்துவிட்டனரென நினைத்தனர். அதுசமயம் சைனியத்தைப் பின்னிட்டுப் போகும்படியான உத்தரவை எக்காளமூலம் சமிக்ஞை செய்தவுடனே, ஒரு பேரிரைச்சல் கிளம்பவும் அணியிலுள்ள சைனியமுங் கலையத் தலைப்பட்டுவிட்டது. அப்பொழுது உவேல்ஷ்துரை 74-வது பட்டாளத்து எறிகுண்டு பீரங்கிப்படையில்காயப்பட்டவர்களைச் சௌக்கியமாக்கிக்கொண்டு சேர்ப்பிவிக்கும் முயற்சியிலிருக்க, அதே தருணம் அவர் தற்செயலாகத் திரும்பிப்பார்க்கவும், ஈகான் துரையைச் செத்துவிட்டாரென்று கருத, அவர் திடீரென்று எழுந்து எதிரிகளைத் தாக்கி அநேகரைக் கொல்லவும், இதையறிந்த பாளையக்காரர் சைனியத்தைச் சேர்ந்தோரில் சிலர் ஜமுதாடு, வல்லயங்களை எடுத்துக்கொண்டு அவரைத் தாக்கினார்கள். இரு தரத்தார்களுக்கும் சண்டை நிகழக் கடைசியில் அவர் உயிர்



நீத்தனர். சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டுக்
கீழே இறந்துகிடந்த ஈகான் துரையை நாங்கள் எல்
லோரும் கட்டிக்கொண்டு அழத் தொடங்கினோம். அது
போலவே எங்களைச் சேர்ந்த சுதேசப் பட்டாளத்து
உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் அவரைக் கட்டி
அழுதார்கள். அவரை இரும்புபோன்ற தேகவலுவை
யுடையவரென்றும் மகா கருணைவாய்ந்துள்ளவரென்
றும் சொல்லிக் கொள்வார்கள். அவருக்குப் போதிய
கல்வி இருந்திருக்குமேயானால் இராணுவத்தில் அவர்
பெரிய அந்தஸ்தை அடைந்திருப்பார்."

3. "இந்தச் சண்டையில் இங்கிலீஷ் காரர் பக்
கத்தில் துணையாக நின்று போதிய சகாயத்தைச் செய்
தது எட்டயபுரம் ஆயினும், அதன் இராஜ குடும்பத்
தைச் சார்ந்த ஒரு வீரரது பெருமையையும் இங்கு
எடுத்துச் சொல்வது அவசியமானதால் அதனையுங்
கூறல் வேண்டியது முக்கியம் என்று உவெல்ஷ்துரை
குறிப்பிட்டுள்ளார். சண்டையின் நிகழ்ச்சியில் அன்
னாருள் ஒருவர் மரணகாயமடைந்து உயிர் போகுந்
தருணத்தில்தன்னை ஒரு நாற்காலிப்பல்லக்கில் வைக்கச்
சொல்லி, அதனை மேஜர் மக்காளிதுரை இருக்கும் பாச
றைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட, அதன்
படி செய்யவும், அவர் மேஜர் மக்காளிதுரையைக் கூப்
பிட்டு 'ஐயா, மேஜரே! வீரரின் குடும்பத்திற் பிறந்த
என்னை ஒத்தார் சாகவேண்டியது போர்முனையில் மார்
பில் காயமேந்தி என்பதனைக் காட்ட வந்துளேன்'
என்று சொல்லி அவரது இருகரங்களாலும் மீசையை
முறுக்கிக்கொண்டு பேசியபொழுது உயிர் துறந்தனர்."

என்றதால் பாளையக்காரர் கலகத்தை மக்காளி துரை சரிவர முடித்துக்கொள்ளாரென்பதை இவர் முன்னமே தெரிந்து கொண்டனர் என்றது பெறலாயிற்று.

4. முன்னம் நாம் சொல்லியுள்ளபடி எட்டயபுரம் சைனியம் சார்லஸ் டிராட்டர் துரையின் சைனியத்துடன் சேர்ந்து போர்புரியும்போது, எட்டயபுரம் சைனியத்துள்ள ஒருவனைப் பாஞ்சாலங்குறிச்சியார் யுத்தக் கைதியாகப் பிடித்து ஊமைத்துரையை அஞ்சலி செய்யும்படி கேட்க, அதற் கவன் சம்மதிக்கவில்லை என்று தெரிய, அப்படிச் செய்வதானல் அவனை விட்டு விடுவதாகவும் வாக்குறுதி செய்தனர். இதற்கு அவன் மறுதளித்தால் அவனை உயிருடன் வாய்ச்சி யாடுவதாயும் கண்டிப்பாகச் சொல்லினர். இதையும் அவன் ஒரே அடியாக மறுத்துவிட, அவனை வாய்ச்சியாடும்படி கட்டளையிட்டனர். அவனை வாய்ச்சி கொண்டு சீவியும் சீவாமலுமிருக்கும் சமயத்தில் 'என்ன சொல்லுகிறு' யென்றனர். அதற்கு அவ்வீரன் "எட்டனைத் தொழுத கை கட்டனைத் தொழாது" * என்று சொல்லிவாய்ச்சியின் சீவுதலுக்குட்பட்டு உயிரை நீத்தான் என்றதும் இங்குள்ளார் பலர் இப்போதும் சொல்லிக் கொள்வர். வாய்ச்சியாடப்பட்டிறந்த இவ்வீரனது பேரனை ஒரு கிழவர் அய்யவ நாயக்கர் என்ற தோக்கில்வாரினத்தைச் சேர்ந்தவர், இது சம்பந்தமானவைகளைச் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னம் எங்களிடம் கதை

* எட்டன் என்றது எட்டயபுரத்து அரயரது பட்டப் பெயரான எட்டப்பன் என்றதனையும், கட்டன் என்றது கட்டபொம்மு என்றதனையுங் குறித்தனவென்க.



போலச் சொல்வர். இவரது சந்ததியினர் எட்டயபுரத்துச்சீமையைச் சேர்ந்த பேரிலோவன்பட்டி என்ற கிராமத்தில் வசிக்கின்றனர். வாய்ச்சியாடல் என்றது வாய்ச்சி (Adze) என்ற ஆயுதத்தைக் கொண்டு ஒரு மனிதனைக் குப்புறப்படுக்கும்படி செய்து அவனது முதுகில் சிறுகச் சிறுகச் சீவி உயிர் போகும்படி செய்யும் ஒருவகை கொடூர தண்டனையாகும்.

5. "சடையக்க தேவரின் நேர் சந்ததியினர் என்று சொல்லிச் சிவகங்கைச் சீமையைப் பிடித்து 21 வருஷங்களாக ஆட்சிபுரிந்து, கட்டபொம்மு, ஊமைத்துரையாதியவர்களுக் குதவிபுரிந்து, கும்பினித்துரைத்தனத்தாருக்கு விரோதிகளாக இருந்த சின்னமருது பெரியமருது என்ற இருவரில் வெள்ளைய சேர்வை என்ற பெரிய மருது என்பார், சீமைக் காரியங்களை நடாத்துவதில் கவலை யற்றவர். ஆனால் அவருக்கு வேட்டை யாடுவதில் மிகுந்த ஆசைபடைக்கப்பட்டதினிமித்தம் அவரது வாழ்நாட்களை வேட்டையாடுவதிலும் தேகவலி படைத்துள்ள பலிஷ்டத்துவமுள்ள விளையாட்டுகளிலும் உத்சாகமாகப் போக்கினர். அவர் தேக பலத்நிதானத்துக்கு மிஞ்சிய உயரமுடையவர். அக்காலத்திலோ அவரை ஒப்பாரும் மிக்காரும் இப்பிராந்தியங்களில் வேறு எவருமிலர். அதிக தேகவலி வாய்க்கப் பெற்றிருந்ததுபற்றி காட்டுறை மிருகங்களான கரடி, புலி முதலிய துஷ்ட மிருகங்களை எவரது சகாயத்தையும் நாடாமல் தனிமையாகவே நின்று வேட்டையாடிக் கொல்வர். அதுவுமின்றி அப்போது 'செலாவணி'யாய் விளங்கிக்கொண்டிருந்த ஆற்

காட்டு முழுரூபாயைக் கையில்வைத்துத்துாள்கள் தூள் களாக ஆக்கிவிடுவார். இராஜ்ய பாரத்தில் அவருக்குச் சிறிதுகூட அக்கரையின்மையால் சுயேச்சையாக வன வாசிகளைப் போல அலைந்துகொண்டிருந்தார். அக்காலத் தில் இவரை மகாபலிஷ்டரெனக் கொண்டாடிய தஞ் சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை முதலிய ஜில்லாக் களில் வசித்த வெள்ளைக்காரத் துரைமார்கள் வேட் டைக்கு இவரைக் கூட்டிச் செல்வது வழக்கமாகஇருந் தது. வெள்ளைக்காரர்கள் வேட்டைக்குச் செல்லுங் காலங்களில் பெரிய மருதுவின் சகாயத்தைநாடிக்கேட் டுக்கொள்வார்கள். இன்ன இன்ன இடங்களில் இன்ன இன்ன வேட்டை கிடைக்குமென்பது பெரிய மருது ஒருவருக்கே தெரிந்திருந்ததால் அவருடன் சென்றால் வேட்டை கிடைக்காது போகாதென்றதும் துரைமார் களுக்கு நன்கு தெரிந்ததாம். பெரிய கடுவாயைக் கண்டுகொண்ட துரைமார்கள் ஆயுத பாணிகளான வேட்டை ஆட்களின் மத்தியில் சூழ்ந்திருப்பினும் பெரியமருது அத்தகைய கடுவாயைத் தனிமையாகவே நின்று எதிர்த்துக் கொன்றுவிடுவார். இதுபோன்ற வேட்டைகளில் காலங்கழிப்பது அரண் அற்ற நாட்டி னர்களுக்குச் சோம்பேறித்தனமெனத் தோன்றினும் அரணும் மலையுமடர்ந்த நாட்டினர்க்கு இதுஇன்றி யிருத்தல் அபாயத்திற் கிடனாகுமென்றது நிச்சயம். துஷ்ட மிருகங்களொழிந்த முயல், மான், மிளா முத லியவைகளையும் பக்ஷி ஜாதிகளையும் வெள்ளைக்கார ஷிகாரிகளிடம் விரட்டிவிட்டு அவர்களுக்கு வேட்டை காண்பிப்பார். நிமிராடை யொத்த இவரிடமிருந்து



உவெல்ஷ்துரை மதுரையிலிருந்த காலமான 1795ல் அநேக சௌகரியங்களைப் பெற்றிருந்தார். சின்ன மரு துவே சிவகங்கைச் சீமைக்கு இராஜனாக விளங்கினார். அவருக்கு வாசஸ்தலம் சிறுவயலென்ற ஊர். அவர் கருமையான நிறமுடையவராயும் பார்வைக்குக் கெம் பீரத் தோற்றத்துடன் சுலக்ஷண புருஷராயும் காணப் பட்டவராக இருந்தார். அவரை யாவரும் எச்சமயத் திலும் பேட்டிகண்டு உரையாடலாம். ஒரு பெரியநாட் டிற்கதிபதியாக இருந்தும் நிர்ப்பயமாகத் திறந்தவெளி யான பங்களாவில் கட்டுங் காவலுமின்றி குடியிருந்த னர். உவெல்ஷ்துரை அன்னாரை 1795-ம் வருஷம் பெப்ரவரிமாதம் பார்க்கும் சமயத்தில் அவரிடம் இன் னார்தான் என்ற கட்டுப்பாடற்று எவரும்வந்து பேட்டி கண்டு கொண்டும் போய்க்கொண்டுமே இருந்தார்கள் என்றும், அப்படி அங்கு வந்துகொண்டும் போய்க் கொண்டுமிருந்தோர் அவரது புகழைக் குறித்து வாழ் த்துநர்களும் கட்டியங்கூறுநர்களுமாகியவர்களின் சத் தம் சதா கிண்ண்ண் என்று தொனித்தவண்ணமாகவே யிருந்து கொண்டிருக்குமென்றுங் குறிப்பிட்டுள்ளார். உவெல்ஷ்துரை இதற்கு முன் ஒருசமயம் தற்செய லாகச் சிவகங்கை நாட்டுவழி போகும்படி நேரிட, அப்போது இவர்களுக்குள் சிநேகமுண்டாயது. அதே வருஷம் சிறிதுகாலம் தொடர்ச்சியாக மதுரையில் வசி க்கும்படிக்கு உவெல்ஷ்துரைக்கு நேர்ந்தபோது, அடிக் கடி ஒருவகையான இனிப்புள்ள பம்பளி மாஸுப் பழங் களையும் ஒருவகை உயர்ந்த சம்பா அரிசியினையும் சிவ கங்கையிலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அது

போன்ற நல்ல ஜாதிப்பழக்கத்தை இந்தியாவில் வேறு எப்பாகத்திலுங் கண்டதில்லை என்று உவெல்ஷ்துரை கூறியுள்ளார். ஈட்டி, வல்லயமாகிய ஆயுதங்களைப் பிரயோகிக்கும் முறையை உவெல்ஷ்துரைக்குக் கற்பித்துக் கொடுத்தோர் 'அவ்விருவரே ஆவர். வளரி (Bcomerang) கொண்டு எறியும் விதத்தையும் துரைக்குச் சொல்லிக் கொடுத்தவர்களும் அவர்களே. வளரி கொண்டு எறிவதானல் ஆயிரம் கஜம் தூரம் வரை லக்ஷியம் விலகாதென்றதையும் துரைக்கு மெய்ப்பித்துக்காட்டியுமிருக்கிறார்கள். இத்தகைய சூரர்களைக்கால கதியால் யுத்தமென்ற காரணத்தை முன்னிட்டுச்சாதாரண மனிதர்களைக் கொண்டு வேட்டையாடிக் காயப்படுத்திப் பிடித்துக் காவலில் வைத்துக் கடைசியில் தூக்கிவிட்டு அவ்விருவர்களைக் கொல்ல நேர்ந்ததும் கால வித்தியாசந்தான் என்று பரிதாபத்துடன் கூறியுள்ளார்." பெருந் தேங்காயளவுள்ள இருப்புக்குண்டு ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டு தன் முழுவலியுடன் பெரிய மருது எறிவதானல் தென்னை, பனை முதலிய மரங்களின் தலைப் பாரத்திலுள்ள காயின் குலைகளும் மட்டைகளும் அறுந்து விழும் என்பார் அக்காலத்திய பெரியோரென்றது கர்ணபரம்பரை. மருதுக்களைப்பற்றி உவெல்ஷ்துரை கூறியிருப்பவை இதை வாசிக்கும் பெரும் பாலர்களுக்கு உயர்வு நவிற்சியணி (அதிசயோக்தி) என்று தோற்றல்கூடும். அற்றன்று. பாளையப் பட்டுகளில் வசிப்போர்களுக்கு இவை போன்ற செய்கைகள் சாதாரண மன்றென்றாலும் அவை உண்மை என்பதைக் கண்கூடாக்கண்ட காட்சியின் பயன் என்



பேம். இற்றைக்குச்சிறிது இரண்டாண்டுகளுக்கு முன்
னர் காலஞ்சென்ற எட்டயபுரத்து அரசர் அவர்கள்
வாலிபப்பருவத்தில் பழகிக்கொண்டு வந்த ஜோடிக்கா
லாக் கட்டைகளை உள்ளூரிலுள்ளாரும் பஞ்சாப், காஷ்
மீர்போன்ற வடநாடுகளிலிருந்து வந்துள்ள பலிஷ்டர்
களான மல்லக செட்டிகளும், மற்றோர்களும் ஜோடி
யாகவேனும் தனிமையாகவேனும் சுற்றுவதற்கு அசக்
தர்களாக இருந்தார்கள் என்றதை எவரே மறுத்துக்
கூறுவர்? தேகபலத்தில் இவர்களது அடைப்பம் முத்து
ராக்கு மணியத்தின் தேக வலியிலும் உள்நாட்டினருள்
ளும் வெளிநாட்டினருள்ளும் எவரே மிகுத்துக் காட்
டும் வல்லுநராக இருந்தனர்? இவர்களது மற்றோர்
அடைப்பம் சின்னணமணியம் ஒரு பெருங்கல்லைக்
கையிலெடுத்துக் கொண்டு தென்னை, பனை முதலிய
தலை மரங்களில் எறிவதாக இருந்தால் அவைகளிலுள்ள
காய்கள் துண்டந்துண்டங்களாகச் சிதறுண்டு விழப்
பார்த்தோர் பலராவர். எட்டயபுரத்து வடக்கு வாசலி
லுள்ள பெரிய தெப்பத்தின் ஒரு கரையிலிருந்து மற்
றோர் கரைக்கப்பாலுள்ள தென்னந்தோப்பிலிருக்கும்
ஏதேனுமொரு மரத்தை லக்ஷியம் வைத்து, அதனைக்
கல் கொண்டு எறிவதாக இருந்தால் சிறிதுகூட லக்ஷி
யம் பிசகாமல், அடுத்த எதிர்கரையிலுள்ள அதன் மீது
படாது போகாதென்பதுஞ் சாதாரண மென்பேம்.
சாதாரணமாகக் கையால் எறியப்படுங் கல்லொன்று
200 கஜம் தூரத்துக்கப்பாற் செல்லும் எனில் வளரி
1000 கஜமுள்ள தூரம் செல்வதும் சகஜமென்பேம்.
சுமார் 70 வருஷங்களுக்குமுன்னம் எட்டயபுரத்தரச

ராக விளங்கிய இரண்டாவது ஜ்யேஷ்ட மகாராஜா
என்பார் பெருந்தாமான எருதையேனும் எருமைக்
கடாவையேனும் வாலிற்பிடித்துக்கொள்ள, மற்றொரு
வர் அதனைச் சவுக்கு கொண்டு மோத, அது நின்ற
விடம் விட்டுப் பெயராது நிற்கும் என்பார் அதனை அப்
போது நேரிற் கண்டோர். இடவங்கை கெச்சிலப்ப
எட்டப்ப மகாராஜா என்பாரும் ஒரே வெட்டில் குதி
ரையையும் அதன் மீதிருந்த ஒரு வீரனையும் இரண்டு
துண்டங்களாக இடது கையால் வெட்டியதின் காரண
மாக அன்னாருக்கு "ஆளும் பரியும் அறவெட்டினோன்"
என்ற சிறப்புப்பேர் ஏற்படலாயிற்று. இன்னோரும் எட்
டய புரத்தரசர்களிலொருவராவர். சிவகங்கை அரயர்
களிலொருவரான கௌரி வல்லவரும் பலிஷ்டத்துவம்
வாய்க்கப் பெற்றோருள் ஒருவராவர்.

பிரின்ஸ்-ஆப்-உவெல்ஸ் த்வீபங்களுக்கு த்வீபாந்
தர சிக்ஷை விதிக்கப்பட்டு அனுப்பப்பட்ட 70-பேர்க
ளில் ஒருவரான சின்னமருதுவின்குமா
ரரை 18-வருஷங்களுக்குப் பின்னர்
உவெல்ஷ்துரை பினங்கில் வைத்துக்
கண்டுகொண்டனர் என்பதை மட்டும்
பிஷப் கால்டுவெல்துரை தன்னுடைய
திருநெல்வேலிச் சரித்திரத்தில் கூறி
விட்டுச் சும்மா இருந்துவிட்டனர் என்

கைதிகள் 70-பேர்களை பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவுகளுக்கு அனுப்பி விடல்

றது சரியாகத் தோற்றப்படாததால் அதன் முழு விவ
ரங்களை நாமிங்கு சொல்ல நேரிடுவதால் நாம் பிரஸ்தா
பிக்கும் காலத்தில் அந்தச் சிவகங்கைச் சீமையும் லஷிங்
டன் துரையின் ஆட்சியிலிருந்தமையாலும் அங்கிகழ்ச்



சியின் சம்பந்தம் திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்
துள்ளதின் பயனுவதாலும் இங்கு அதனை எடுத்துச்
சொல்வது அவசியமாம் என்க. கலகங்களும் சச்சரவு
களும் அடங்கியதன் பின்னர், தென் சீமைப்பட்டா
ளத்தைப் பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்து
விட்டு, உவெல்ஷ் துரையை அப்பட்டாளத்திலிருந்
தும் துண்டித்துக் கப்பலில் ஏற்றுவித்துத் தீவாந்தரங்
களுக்கு அனுப்புவதற்கென்று முன்னமே தயாராகக்
கொண்டுவந்து தூத்துக்குடியில் வைக்கப்பட்டிருக்கும்
கைதிகளின் மேல்விசாரணைக் கர்த்தாவாக நியமன
மடைந்ததால்; அந்த உத்தரவின் பிரகாரம் அவர் தூத்
துக்குடி போய்ச் சேர்ந்தனர். அங்கு அன்னோர் செல்ல
வும், அவருடைய பழய சிநேகிதரான சின்னமருதுவின்
குமாரருள் இறந்துபோனவர்களை நீக்கி மீந்துள்ள ஒரே
குமாரரும் ஆயுள்வரை த்வீபாந்தர சிக்ஷை விதிக்கப்
பட்டவருமான துரைசாமி என்றவரை விலங்கிட்டுப்
பூட்டப்பட்டிருப்பதையும் 70 பேர்களில் அவரும் ஒரு
வரென்பதையும் தெரிந்து மனம் நொந்தவராயினர்.
சாத்மீகத்துடனும் பெருந்தன்மை யுடனும் அச்சிறு
வர் தனக்கு விதித்துள்ள தண்டனையைக் குறித்துச்
சிறிதளவிலுங்கூட முணு முணுக்காது காணப்பட்டா
ரென்றாலும், அவரை அந்நிலையில் காணும் எவருக்கும்
அவர் மாட்டு இரக்கம் தோன்றாது இருக்கமாட்டா
தென்பது நிச்சயமாகும். உவெல்ஷ் துரையின் பந்தோ
பஸ்தில் அவரை வைக்கப்பட்டிருந்ததாலும் அவ்விரு
வரும் ஒரே ஜாகையில் வசிக்க நேர்ந்த காரணமாகவும்
அவர்கள் வசித்த இல்லம் ஒரு அரண் அமைந்துள்ள

மாளிகையாக இருந்தபடியாலும் தன்னைவிட்டு அவர்தப்
பித்து ஓடிவிடல் கூடாமை என்று அறிந்து அவருடைய
விலங்குகளைக் கழற்றிவிடும் சந்தோஷகரமான சந்தர்ப்
பம் உவெல்ஷ் துரைக்குக்கிட்ட, அவ்வாறே செய்தது
மின்றி அவரைச் சூழ்ந்திருந்த பழைய வேலையாட்கள்
யாவரையும் நீக்கிவிட்டார். அகப்பட்டுக்கொண்ட அச்
சிறுவர், சிக்கிக்கொண்டதினின்றும் (?) தப்பித்தோடல்
என்றது இனி அவரால் இயலாதென்பதைத் தெரிந்த
உவெல்ஷ்துரை, அவரை ஒரு சௌகரியமான அறையி
லிருக்கும்படி செய்து, ஜெயிலரின் குழந்தைகளுட
னும் தன்னுடைய குழந்தைகளுடனும் விளையாட்டுப்
போக்கில் உத்சாகமாகக் காலப் போக்கினைச் செய்து
கொள்ளவேண்டிய ஏற்பாடுகளை அவருக்கு அமைத்துக்
கொடுத்ததுடன் அவரது சொந்த ஜாதியினரும் மதத்
தினருமான வேலையாட்களைக்கொண்டு சமைத்துவைக்
கப்பட்ட போஜனாதிகளை அவருக்குப் படைக்கவும்
வேண்டிய சௌகரியமான ஏற்பாடுகளைச் செய்தும்
வைத்தனர்.

இதன் மத்தியில் 70 கைதிகளையும் ஏற்றிக்கொண்டு
போவதற்கென்று துரைத்தனத்தார் ஒரு கப்பலை
அனுப்பிவைத்தார்கள். கைதிகளின் பிரயாணப் போக்
கின் பந்தோபஸ்துக்கென்று ஆறாவது ரிஜிமெண்டைச்
சேர்ந்த லெப்டினென்டு ராக்கெட்டு (Lieutinant Roc-
ket) துரை தலைமை பூண்டிருந்தனர். இவரைச் சாதா
ரண உத்தியோகமுறையில் அனுப்பிவைக்கப்பட்டிரு
ந்ததென்றதாவது அல்லது ஸ்பெஷலாக இதற்கென்று
அனுப்பிவைக்கப்பட்டதென்றதாவது தனக்குத்தெரி



யாதென்று உவெல்ஷ்துரை குறிப்பிட்டுள்ளார். என்றா
லும், இத்தகைய அலுவலுக்கு இவரிலும் சிறந்தோர்
வேறு எவருங் கிடையாதென்பதையுஞ் சுட்டிக்காட்டி
இருக்கிறார். இவருக்கும் உவெல்ஷ்துரைக்கும் நேய
மூண்டென்றும், அப்படிக்கு நேர்ந்துள்ள நேயம் போர்
முனையிலிருந்து உண்டாயதென்றும், அவர்கள் தங்
களின் யுத்தப்பயிற்சிகளின் திறமைகளைக் காட்டுவத
ற்கு ஆதாரமாக இருந்தநாட்டிற்கு இளவரசரான கைதி
யின் சிநேகத்தை யடையும்படியான கால அளவிற்குள்
வந்து சேர்ந்ததும் ராக்கெட்டுதுரையின் அதிர்ஷ்ட
மே யென்கிறார். கப்பலுக்குத் தலைமை பூண்டவர் லீ
துரையாவர். இவரும் அங்குள்ளவரிடம் சேர்ந்து
கைதிகளை—அதிலுங் குறிப்பிட்டுக் கைதியாக வுள்ள
இளவரசை—க் குறித்துக் கப்பலின்மீது தட்டுமுட்டு
களையும் உணவுப் பொருள்களையும் ஏற்றும் போதுள்ள
இடையில் கிடைத்துள்ள சாவகாச வேளையில் ஒரு
வருக்கொருவர் பரிதாபம் அடைந்தவராகிப் பேசிக்
கொண்டனர். தூத்துக்குடித் துறைமுகத்தில் வைத்து
தன் பந்தோபஸ்திலிருந்தவர்களை ராக்கெட்துரையிடம்
ஒப்படைக்கும் போதுண்டான நிகழ்ச்சியின் செயல்
களைத் தன்னுடைய வாழ்நாட்களில் எப்போதும் மறக்
கப்போவதில்லை யென்று உவெல்ஷ்துரை கூறியுள்
ளார்.

ராக்கெட்டுதுரையிடம் துரைசாமியைநான்போட்
டில் ஒப்படைக்கவும் அவரை அன்பெனும் பாசம்
(களை) ஒரு பக்கம் என்னுடன் சேர்த்துக்கட்டி இழுக்க,
இனியேது என்ற நம்பிக்கை மற்றோர் பக்கம் வாட்ட

அப்போது அவர் முகத்தில் தோன்றிய குறிகளைக் கண்டாருள் எவரே மன மிளகாதார்? அது போலவே அவருடன் சேர்ந்த ஏனையக் கைதிகளும் இனி அவரவர்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பும் வழியில்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்தவர்களாகி மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தார்கள். கப்பலும் கைதிகளை ஏற்றிக்கொண்டு கரையைவிட்டுக் கிழக்குநோக்கிப் புறப்பட்டுவிட்டது. எனக்கும் துரைசாமிக்குமுள்ள சிநேகம் இத்துடன் முடிவுற்றதென்று நானுங் கருதினேன். ஆனால் சிறிது காலத்துக்குப்பின் வேறு ஒரு பரிதாபமான விஷயம் தோன்றி என்னுடைய மனதைப் புண்படுத்திவிட்டது என்று உவெல்ஷ்துரை கூறியுள்ளார். அதாவது அவருடைய தேக சௌக்யத்தின் பொருட்டுக் கடல் யாத்திரை செய்ய நேர்ந்த 1818-ம் வருஷம் அவர் பினாங்குக்குப் போய்ச் சேரவும், சமீபத்தில் பார்த்திருந்ததென்ற ஞாபகஞ் சிறிதுகூட அவருக்குத் தோன்றாத வண்ணமாக மெலிந்துந்தேய்ந்தும் பரிதாப நிலைமையிலு மிருந்த ஒரு கிழவர் அவரைத் திடீரென்று பேட்டி கண்டுகொள்ளப் போனார். அப்படி வந்துள்ளாரை உவெல்ஷ்துரை பார்த்துவிட்டு அன்னோர் பெயரையும் அன்னார் வந்துள்ள காரியத்தையும் முறையே கேட்க, அதற்கு அவர் துரையின் முகத்தைச் சிறிது நேரமாகப் பார்த்தபடியே யிருந்தனர். அதன் பின் திரைகள் நிரைந்து விழுந்துள்ள கன்னங்களின் வழியாகத் தாரை தாரையாகக் கண்ணீரோடக் கடைசியாகத் துரை கேட்ட கேள்விகளுக்கு விடையாக 'துரைசாமி' என்ற சொல்லொன்று அன்னார்வாயி



னின்றும் பிறந்தது. அவ்விதம் பிறந்த சொல் உவெல்ஷ்துரையின் நெஞ்சிற்பாய்ந்த ஈட்டிபோ லிருந்ததாம். உடனே அவரைத் துரைசாமிதான் என்று தெரிந்துகொண்டார். அப்படித் தெரிந்துகொள்ளப்பட்டதுரைசாமி பயங்கரமான மாறுதலுடைய தோற்றங்களுடன் காணப்பட்டாரெனினும் மனதின் நிலைமையைப் பொறுத்துள்ள தன்மைகளில் அவரிடம் எவ்வித மாறுதல்களும் காணப்படாதவராகிப் பழைய காலத்திய நிகழ்ச்சியின் ஞாபகத்திலும் சிநேகத்திலும் பிரீதியடைந்த மனத்தினராக இருந்தாரென்றதுங் காணப்பட்டது. ஏதோ துரையின்பெயர் அவர் காதில் விழவும், அவருக்குத் துரையினிடமுள்ள பழமை பூண்டுள்ள சிநேகம் தளிர்க்க ஆரம்பித்துவிட்டது. இவ்விதம் தளிர்த்ததும் கிளைத்ததுமான சிநேகத்திற்குத் துரையின்பதவி முன்னதிலும் உயர்ந்திருந்தும் எவ்விதமான உபகாரத்தையும் செய்துவைத்து அவரைத் திருப்திக்குள்ளாக்கும் வகைக்குக் கூடாததாக இருந்ததென்ற எண்ணம் உவெல்ஷ் துரையை வாட்டிற்று. துரையிடம் ஜீவந்தர்களாக இருக்கும் தன்னுடைய பந்துக்களுக்குத் தன்னால் கொடுக்கப்படுகிற கடிதங்களைக் கொண்டு அவர்களிடம் கொடுக்கும்படி தயவாய் வேண்டிக்கொள்ள, அவர் இதற்குமுன் தங்களுக்குக் கும்மாந்தாராகஇருந்த மேஜர் பானர்மான் துரையே இப்போது இங்கு கவர்னராக இருப்பதாலும், அவர் பக்ஷமும் நிதானமும் வாய்க்கப்பெற்ற குணமுடையவரென்றாலும், அப்படிச் செய்துவைப்பது தேசத்தின் சட்டத்துக்கு மாறுபட்

டதாவதால் அவரால் கூடாத காரியமாகும் என்று சொல்லி மறுத்துவிட்டனர். ஆயினும் இப்படிக்கு துரைசாமி கேட்டுக் கொண்டதற்கு மறுக்கப்பட்ட விஷயங்கள் யாவும் அவர் வெகுகாலங்களாகச் சேவித்துள்ள கும்பினித் துரைத்தனத்தாரின் கீழுள்ள நல்ல மனதுடைய அதிகாரிகள் எவருக்காவது தெரிந்து தேசத்தின் நிலைமையோ அமைதியுற்று ஒழுங்குபடுத்தப்பட்டதென்பதைக் காரணமாக வைத்துக்கொண்டும் இனி தேசம் புரட்சிக்குள்ளாக மாட்டாதென்ற காரணத்தைக் கொண்டும் நிரபராதியான அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் முழுவதையும் நீக்காது போயினும் சிறிதளவிலாவது அவர்மீது கருணைகூர்ந்து நன்மையை அவருக்குச் செய்துவைப்பதில் யாதொரு தீங்கும் நிகழமாட்டாதென்றும் சொல்லிவிட்டு இச்சம்பவத்தை உவெல்ஷ்துரை முடித்திருக்கிறார். இதற்குச் சிறிது காலத்துக்கப்பால் கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தரவை ஆதாரமாகக் கொண்டு பினாங்கிலுள்ள கவர்ன்மெண்டார், சின்ன மருதுவின் குமாரரான துரைசாமி என்பாரை விடுதலை செய்தனரென்றும், அவர் திரும்பவும் சிவகங்கைச் சீமைக்கு வர அங்கிருந்து கொண்டிருக்குங் காலையில், ஏதோ சில காரணங்களால் திடீரென்று இறந்து விட்டனரென்றும், சொல்லிக் கொள்ளப்படுவதில் உண்மை எவ்வளவென்பதைக் கண்டுகொள்ளக் கூடாததாலும் அக்காரணங்களைப்பற்றி நமக்குத் திட்டமாகத் தெரியாததாலும் அவைகளை இதுசமயம் நிறுத்திக்கொண்டோம்.



முன்னம் 83, 116, 117 வது பக்கங்களிற் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள கும்மாந்தந்து வசவப்ப நாயக்கர் என்றவர் கும்பினிச் சைனியத்தில் அந்தஸ்து படைக்கப்பட்ட உத்தியோகத்திலிருந்ததுமன்றி அன்னார்களது மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரராயுமிருந்தனர். நாயக்கர் என்றது இங்கு ஜாதியின் பட்டப்பெயர்க்குறியன்று. அஃது சைனியத்துள்ளார்களுக்குள் ஏற்பட்டுள்ள வோர் கௌரவப் பெயராகும். வசவப்பநாயக் எனச்சொல்வது வசவப்ப நாயக்கர் என்று வழக்கில் இங்கு வந்துளது. ஹைதர்நாயக் என்றதனை ஒப்பிடுக.

வசவப்பநாயக் எட்டயபுரம் திவானாதல்

இவர் ஆக்டிவ் சர்விஸிலிருந்து விலகவும் கும்பினியாரின் அனுமதியின்பேரில் எட்டயபுரம் திவானாக உத்தியோகத்திலமர்ந்தனர். இவர் மைசூர் சமஸ்தானத்தில் ஜனித்தவர். இவரது பிதா குப்பண்ணு வென்பவர். விஜயநகர சம்ஸ்தானாதிபதிகளின் பிரதிநிதிகளாக மங்களூர் முதலிய பிராந்தியங்களிலிருந்த இக்கிரி வம்சத்திலுதித்தவராவர் (Ikkeri Dynasty). இவரது ஒன்றுவிட்ட தாயாதியினரான வசவப்பநாயக் என்ற மற்றொருவர் மங்களூர்க் கோட்டையை 1739—1754ல் கட்டி முடித்தவராவர். பிரஸ்தாபத்திலுள்ள வசவப்பநாயக் எட்டயபுரம் திவானாக நியமனமான போது மிக்க வயோதிகராக இருந்திருத்தல் வேண்டுமென்றது நிச்சயம். இறக்கும்போது அவருக்குவயது தொண்ணூறிருத்தல் கூடும். வசவப்ப நாயக்கைக்

குறித்துள்ள செய்யுள்கள் பலகாணப்படுவனவுள் இரண்டைமட்டுங் கீழே குறிப்பிடுகிறோம்:—

“ பருதியாக மகமாக மூர்மதிபணை
    யெக்காளம் வெடியாமலாம்பு
விருதியாகமகன் வச்ரமாமிவை
    மின்பொறுத்திடுமோ சேர்திருவருட்
கொருதியாக மகவாசகங் கற்றோர்க்
    குற்பனுவெங்கள் குப்பண வேண்மைந்தா
வருதியாக மகமேரு நேர்செல்வ
    வன்யாராய வசவப்ப தூயனே.”

“ நகத்துவாா யிலாங்கண்ணி கொங்கைகணைய
    வாரறத்தைத் தவழித் தென்றல்
புகத்துவாரஞ் செய்தாலந்த வேளம்பைப்
    பொறுக்க வாரம்புயக் கண்ணி தந்துசேர்
சகத்துவாரஞ் செயுந் தென்னிளசை
    ராஜத் துவாரத்துக்கோர் மந்திரியாய் வந்த
மகத்துவாரஞ் சிதவசனு
    காவாகனு நம் வசவப்பதீரனே.”

குறிப்பு :—தென்னிளசை என்றது இங்கு எட்டயபுரத்தினைச் சுட்டிற்றெனத் தெரிக. செய்யுட்களில் எட்டயபுரம் என்றதை இளசையெனக் குறிப்பிடலே மரபாம்.

இரண்டு வருஷங்களுக்கு முன்னர்நிகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி முதல் யுத்தத்தில் கைதி செய்யப்பட்டிருந்த சொக்காரர் வீரபாண்டிய நாயக்கர், சின்ன

பாஞ்சாலங்குறிச்சிச்சங்கம சொத்துக்களை விற்றுவிடல்

பொம்மு நாயக்கர், தளவாய் சாமி நாயக்கர், குமாரஅக்காநாயக்கர், பாண்டிய நாயக்கர், சின்னபொம்மு நாயக்கர், சிறிய தகப்பனுர் கொட்டிவில்லி நாயக்கர், தாயார் ஆறுமுக மங்கையம்மாள், பெண்சாதி சக்கம்மாள், கொழுந்திஞான முத்



தம்மாள் மைத்துனர் பெண்சாதி சோகலம்மாள் மற்
றொரு கொழுந்தி சுந்தர வடிவம்மாள், சிறிய தகப்ப
னுர் ஸ்திரியும் பாளையக்காரருக்குச் சிறிய தாயாரு
மான சிக்கம்மாள் ஆகிய இவர்களைத் தூத்துக்குடிக்கு
அனுப்பிவைக்கப் பட்டிருந்தன ரென்பது மட்டுங்
தெரியவருகிறதே யன்றி மற்றெதுவுமே அவர்களைப்
பற்றிய பிந்திய விவரங்கள் தெரிந்திலவென்று சரித்
திர நூலோர் சொல்லுகின்றனர். இதனைச் சிறிது
ஆராயுமிடத்து இவர்களும் தூத்துக் குடியிலிருந்து
த்வீபாந்தர சிக்ஷைவிதிக்கப்பட்டார் 70 பேருள் அடங்
கியவர்களாக ஒருகாலிருக்கவும், ராக்கெட்டுத் துரை
யிடம் உவெல்ஷ் துரையால் தூத்துக்குடித் துறை
முகத்தில் வைத்து ஒப்படைப்புக் கொடுக்கப்பட்டோ
ருள் அடங்கியவர்களாகவும் இருக்கலாமென்று யூகிக்
கிறோம்.

மேலே சொல்லியுள்ள நபர்களிற் கண்ட சிக்கம்
மாள் என்றவரது கைவசமிருந்த சொர்ண நகைகளையும்
சொர்னம், வெள்ளிகளாலாக்கப்பட்ட பண்டபாத்திர
வகைகளையும் கோசுகுண்டில் ஒருவரிடம் ஒப்படைத்
திருந்ததைக் கேள்விப்பட்டு, அதன் விவரப்படிக்குத்
திரும்ப அவைகளைப் பெற்றுச் சரிபார்த்து ஒப்புக்
கொண்ட மேஜர்பானர்மான் துரை, அவைகளை விற்று
விட்டு அதிற்கிடைத்த முதலையும் பாஞ்சாலங் குறிச்
சிக்குச் சேர்ந்திருந்த யானைகள் குதிரைகள் இதா
கால்நடைகள் முதலியவைகளையும் விற்றதிற் கிடைத்
துள்ள நாணயத்தையும் கும்பினிச் சைனியங்களுக்
குள் பங்கிட்டுக் கொள்ளும்படிக்கு ஒரு உத்தரவை

28-9-1799ல் அனுப்பிவைத்திருந்தாரென்று தெரிய வருகின்றது.

பாளையக்காரர்களின் சீமைகளிலிருந்த கோட்டைகளை இடித்துவிடும்படிக்கும் அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கும் உத்தரவு பிறந்தவண்ணம் பாளையக்காரர்கள் எல்லோரும் அவ்விதமே கீழ்ப்படிந்து நடந்துகொள்ள, மறுபடியும் தேச நிலைமையைச் சீர்தூக்கி ஆராய்ந்த கும்பினியார், எட்டயபுரத்தாருக்கு ஆயுதங்களின்றி யிருப்பதும், அச்சீமையில் கோட்டைகள் இல்லாதிருப்பனவும் காரணமாக அங்கு மோசத்தை எதிரிகள் நினைத்த அளவிலேயே செய்யக் கூடுமென்று தீர்க்காலோசனையின்மீது தெரிந்துகொண்ட கலெக்டர் லஷிங்டன் துரையும், மேஜர் மக்காளி துரையும் முன்னூறு துப்பாக்கிகளையும், அவைகளுக்குவேண்டிய மருந்துகளையும், இங்கிலீஷ் சைனிய பந்தோபஸ்தில் கோவிற்பட்டிவரை அனுப்பிவைத்து அங்கிதற்கென்று முன்னமே தயாராகக் காத்துக்கொண்டிருந்த எட்டயபுரத்துச் சைனியங்களிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். எட்டயபுரத்தில் மறுபடியும் ஒரு கோட்டையை ஏற்படுத்திக் கொள்ளும் விஷயமாயும், அதனை இன்ன தன்மையில் அமைத்துக் கொள்ளவேண்டுமென்ற நிபந்தனையையும் சொல்லி அதனை உண்டாக்கிக் கொடுத்துவிட்டுப் போவதற்கு எட்டயபுரம் வந்திருந்த லாட்டன் துரை, லண்டன்

எட்டயபுரத்துக்கு ஆயுதமும் கோட்டையும் அவசியம் என்று கவர்ன்மெண்டார் தெரிந்து கொள்ளல்



துரை, வரன்துரை ஆகியமூவர்களும் முதலாவதுபாஞ்
சாலங் குறிச்சி யுத்தம் முடிந்தவுடன் எட்டயபுரத்
தாரிடங் கலந்துகொண்டு நல்ல முகூர்த்த தினம் ஒன்
றில் ஒரு டெம்பரரிக் கோட்டையையும் ஸ்தாபிக்க
அஸ்திவாரம் செய்த பின்பு மேற்கொண்ட சைனி
யங்கள் ஆயிரம் பேர்களுக்குப் போதிய ஆயுதங்களை
யும் சப்ளை செய்தனர்கள். இதன் சம்பந்தமாகவுள்ள
மக்காளிதுரை கை எழுத்துவைத்து 11-2-1801ல்
பாளையங் கோட்டையிலிருந்து அனுப்பி விடுத்த நிரு
பம் ஆதாரமாகின்றது. கோல்வார்பட்டியில் பாஞ்சா
லங் குறிச்சியாருக்கும் எட்டயபுரத்தாருக்கும் முன்
னம் நிகழ்ந்துள்ள யுத்தத்தில் கட்டபொம்மு நாயக்கர்
ஆறுபேர்களுடன் தப்பித்தோட, சுப்பிரமணியபிள்ளை
யைப் பிடித்து நாகலாதபுரத்தில் அப்போதங்கிருந்த
மேஜர்பானர்மான் துரையிடம் ஒப்புவித்ததில், கவர்ன்
மெண்டாருக்குச் சந்தோஷமுண்டாகி, எட்டயபுரத்தா
ருக்கு வேண்டிய சகாயங்களைச்செய்து வைப்பதாக
வாக்குறுதிகளைச்செய்து, அதற்கு அறிகுறியாக ஜோடி
சால்வையும் குதிரையும் சன்மானமாகக் கொடுக்கப்
பட்டபொழுது ; எட்டயபுரத்தாருக்கு இந்தப் பிராந்
தியங்களில் அதிக மதிப்பும் செல்வாக்கு மிருப்பது
டன் ஜனங்களுக்கு அன்னாரிடம் அளவுக்குமிஞ்சி விசு
வாசமிருப்பதால் அவர்களைக் கொண்டே நாம் நமக்கு
வேண்டிய சௌகரியங்களுக்குத் தக்கபடி இணைத்துக்
கொண்டு போவதானல் காரியங்களைச் சுளுவில் முடித்
துக் கொள்ளலாமென்று மேஜர்பானர்மான் துரையும்
கலக்டர் லஷிங்டன் துரையும் அபிப்பிராய மடைந்து

கவர்ன் மெண்டாருக்குத் தெரிவித்தார்களென்று 19-9-1799ல் எழுதிய நிருபத்தால் தெரிய வருகிறது. கும்பினித் துரைத்தனத்தாருக்கு வேண்டிய ஏனைய பாளையக்காரர்களுக்கு, எட்டய புரத்தாருக்கு மறுபடியும் கோட்டைகளை அமைத்துக் கொள்ளல் முதலிய விஷயங்களில் தயவு காட்டியது போலச்செய்துள்ளார்களா என்றதை ஆராய்ந்து பார்த்ததில், அவ்வாறுசெய்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படி எவர்களுக்கேதேனுமிருக்திருப்பின் அதனைக் குறித்து எமக்கு எழுதின் அதனை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பில் பிரசுரஞ் செய்வேம்.

*எட்டயபுரம் பாதுகாப்புக்கு கவர்ன் மெண்டார் பீரங்கி அனுப்புதல்*

லாட்டன் துரை, லண்டன் துரை, வரன் துரை ஆகிய மூவர்களும் எட்டயபுரத்துக்குத் திரும்பவும் வந்து நிபந்தனையின்படியே டெம்பரரிக் கோட்டையை ஸ்தாபித்திருக்கிறார்களா என்றதை ‘ அயிமாஷ் ’ செய்துவிட்டு அவர்களுடன் கொண்டு வந்திருந்த பீரங்கிகளை உபயோகிக்கும் விதங்களையும் காட்டிவிட்டு அவைகளையும் எட்டயபுரத்தாரிடமே கொடுத்துவிட்டுச் சென்றனர்கள் எனத்தெரிவதில் அவைகளின் எண்ணம் எவ்வளவென்று நன்கு புலப்பட்டில. ஆனல் அவைகளை எவருக்கு எப்பொழுது எங்கே எட்டயபுரமிருந்து திரும்பவும் அனுப்பப் பட்டனவென்ற விஷயமும் நிச்சயமாகத்தெரியவில்லை. மேலே சொல்லியவைகள் முதலாவது யுத்தம் நிகழும்போதும் அது முடிந்த பிற்பாடும் நடந்தன.



கும்பினியாருக்கு உதவி புரிந்த எட்டயபுரத்தா
ருக்குப் பிடிபட்டுள்ள பாஞ்சாலங் குறிச்சி நாட்டுக்கு

*பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டை எட்டயபுரத் தாருக்கு ஜாரி செய்தல்*

அப்போது சொந்தமாயுள்ள கிராமங்
கள் 114-ம் வணிதம் ஆறில் அடங்கி
யிருந்தன. அவ்வாறு வணிதங்களையும்
இராஜாங்க பஹிரங்க விளம்பரமென்ற
புரக்ளமேஷன் படிக்கு, சூரிய சந்திரா
ளிருக்கும்வரை வாரீஸ் கிரமப்படிக்கு
அனுபவித்துக் கொள்ளும் படிக்கும்
அதற்கேற்பட்ட சர்க்கார் கிஸ்தைச் செலுத்திவிடும்
படிக்குமான நிபந்தனையில் சர்வசுதந்திர பாத்தியதை
யுடன் விடப்பட்டதுமன்றி கர்நாடக தொட்டிற் பல்
லக்கொன்றும், தங்கக் கலசம் வைத்த கூடாரமும், இர
ண்டு பிரிட்டிஷ் யுத்தபேரிகைகளும், (War Drums)
இங்கிலீஷ் பாவட்டாக்களும், 30 ஆயிர ரூபாய் பெறு
மான பாஜிபந்து ஒன்றும், பச்சைத்துறியும், ஜில்மே
லாம், துருப்புக் குதிரைகளில் அநேகங்களும் வெகு
மதிகளாகக் கொடுக்கப்பட்டன. அக்காலத்தில் எட்
டயபுரம் முதலிய சில பாளையக்காரர்களுக்கு உத்தி
யோக முறையில் இராஜாங்க விஷயங்களை எழுதுவது
லெட்டர் பாரத்திலிருந்திருப்பதாகத் தோற்றப் படு
கிறது. பாஞ்சாலங் குறிச்சியில் மீதமுள்ள 18 கிரா
மங்களில் சில கிராமங்களை மணியாச்சி முதலிய சில
ருக்கும், காடல்குடி குளத்தூர் ஆகிய பாளையங்களிலி
ருந்து மேல் மார்தைக்குச் சில கிராமங்களையும் கொடு
திருக்கின்றனர். பாஞ்சாலங் குறிச்சியில் மீந்துள்ள

இரண்டொரு கிராமங்களை அயனுக்குச் சேர்த்துக் கொண்டார்கள். சண்டைகளின் ஆரம்பத்துக்குமுன் பாஞ்சாலங் குறிச்சியாருக்குச் சொந்தமான 96 கிராமங்களுடன் வேறு 14 கிராமங்களும் எட்டயபுரத்தாருக்கு ஏறக்குறைய அப்போது 250 கிராமங்களுமிருந்திருக்கின்றன எனத் தெரியவருகின்றது. செட்டில்மென்டுகாலத்தில் மேலே சொல்லிய 14 கிராமங்களையும் தாவா கிராமங்கள் என்று மாக்ஸ் வெல்துரை தீர்மானஞ் செய்துளார். ஆறு வணிதங்களில் 4 வணிதமட்டும் எட்டயபுரத்துக்குக் கொடுபட்டதென்று பிஷோப்கால்டு வெல்துரை கூறுவது பிசகென்க.

ஆர்டனன்ஸ் பிளானில் பாஞ்சாலங் குறிச்சியை எடுத்துவிடல்

பாஞ்சாலங் குறிச்சியை ஆர்டன்னஸ் பிளான் படத்திலிருந்து எடுத்துவிட இராஜாங்க உத்தரவு பிறந்து அதனை எடுத்துவிட்டாலும், பாஞ்சாலங் குறிச்சியின் பாழ்நிலம் என்று பிளான்களில் காட்டுவது வழக்கமாக இருக்கிறது. கலெக்டர் லஷிங்டன் துரை 28-5-1802ல் திருநெல்வேலியிலிருந்து எட்டயபுரத்தாருக்கு அனுப்பிவைத்த ஒரு நிருபத்தில் பாஞ்சாலங் குறிச்சியை உழுது கொட்டைமுத்து விதைத்து அந்த இடம் தெரியாது செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, அதன்படி செய்துவைத்து, அதன் விவரத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இத்துடன் பாளையக்காரர்களின் கலகமும் ஒடுங்கலாயிற்று.

அக் காலங்களில் கவர்ன்மெண்டார் எட்டயபுரத்தாருக்கு எழுதும் வக்கணையில் 'இத்தியாது நிஷான்



எட்டயபுரத்துக்கு கவர்ன்மெண்டார் எழுதும் வக்கணை

எட்டயபுரம் பாளையக்காரரான பாபியத்து பாஷந்து ராஜ ஜகவீரராம வேங்கடேசுர எட்டப்ப நாயக்கர் அய்யன் அவர்கள்' என்று கண்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் அக்காலத்தில் இந்த ஜில்லாவிலுள்ள மற்றப் பாளையக்காரர்களுக்கு எழுதிக்கொள்ளும் வக்கணை கிடைக்காததால் அவைகளை இங்குக் காட்டிக் கொள்ளல் சாத்தியப்படாது போயிற்று.

ஐரோப்பியர்களில் மாணமானவர்களின் ஜாபிதா

பாஞ்சாலங் குறிச்சி யுத்தத்தில் 74-ம் ரிஜிமெண்டைச் சேர்ந்த காப்டன் ஜான்காம்பல், லெப்டனன்றுகளான ஏ. காம்பல், டி. ஜி. கிளாஸ்டு, பி. ஷாங்கு; 77-ம் ரிஜிமெண்டைச்சேர்ந்த லெப்டனன்றுகளான ஸ்பால்டிங்கு, ஏ. காம்பல், N. I. 3-வது ரிஜிமெண்டு ஒன்றாவது பட்டாளம் லெப்டனன்று எம். ஈகான், N. I. நாலாவது ரிஜிமென்று முதலாவது பட்டாளம் லெப்டனென்றுகள் பிரேஸர், மான்ங்கினால், N. I. ஒன்பதாவது ரிஜிமெண்டு முதலாவது பட்டாளம் லெப்டனென்று ஸி. டோரியானேவும் இறந்தவர்களாவர்கள். 74-ம் ரிஜிமெண்டைச் சேர்ந்த டீகால்டு ஜில்கிரைஸ்டு மகா வீரனாகி விளங்க வேண்டிய சகல குணங்களும் பொருந்தி இருந்தும் அவருடைய அதிபாலியப் பருவமான 21-ம் வயதிற்குச் சரியான 24-5-1801-ல் சுத்த வீரனாகயுத்த முனையில் நின்று பாஞ்சாலங் குறிச்சியில் போர் புரிந்து வீர சொர்க்கம் புகுந்தனர்.

பாஞ்சாலங் குறிச்சியில் கர்னல் ஹிரான், கிஸ்து பாக்கிக்காக நபர்ஜாமீனைக் கொண்டு போனபோது 1755-ல் ஆண்டவர் ஒருவர். இரண்டாவதாக அவருக்குப்பின்வந்தவர் 1760-ல் பாளையக்கார ரான கட்ட பொம்மு நாயக்கர் ஒருவர். 1760-ல் பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட கட்டபொம்மு நாயக்கர் 1767-ல் நாடு கடத்தப்பட்டு அவருடைய ஸ்தானத்தில் வேறு ஒருவர் நியமிக்கப்பட்டதிலிருந்து அந்த ஸ்தானத்திலிருந்தவரைக் கொன்றுவிட்டு மறுபடியும் சீமையைக் கைப்பற்றிக்கொண்டனர் என்பது ஞாபகமிருக்கலாம். மூன்ருவதாக மற்ருெரு கட்டபொம்மு நாயக்கர் 1791-ல் பட்டத்துக்கு வந்து, 1799-ல் கயத்தாற்றில் வைத்துத் தூக்கப்பட்டார். ஊமைக்குமாரசாமி நாயக்கர் பான்னர்மான் பாளையக்காரர் கலகத்தில் எடுபட்ட பாஞ்சாலங் குறிச்சிக்குப் பாளையக்காரராக அரசாங்கத்தார் சம்மதமின்றித் தன்னை ஆக்கிக்கொண்ட இவரையும் சகோதரர் செவத்தையாவென்ற சுப்பா நாயக்கரையும் 1801-ல் பாஞ்சாலங் குறிச்சியில் வைத்துத் தூக்கிவிட்டார்கள். கட்டபொம்முநாயக்கர்களைத் தான் ஜெக வீர கட்டபொம்மு நாயக்கர்களென்று சொல்வது வழக்கத்திலிருந்து கொண்டிருந்தது.

எட்டயபுரத்தில் கர்னல் ஹிரான் கிஸ்து பாக்கிக்காக நபர் ஜாமீன்களைக் கொண்டு போன காலத்தில் பட்டத்துக்குடையவர்களாக யிருந்தவர்கள் ஒருவர். பாளையக்காரர் கலகத்தில் பட்டத்திலிருந்தோர் முன் சொல்லியவர்களின் ஜ்யேஷ்டகுமாரர்கள். இவர்களைத்தான் நமது ஜில்லாவில் சண்டை ராஜாவென்றும் சண்டை தாத்தாவென்றும் சொல்வது. இக்காலத்தில் எட்டயபுரம் பாளையப்பட்டிலிருந்த 6000 சைனியங்களை 10,000 வரை அதிகரித்து யுத்த சன்னதமாக வைத்திருந்ததுடன், 300 குதிரைப்படையை, 500 குதிரைப்படையாகத் தயாராக்கி வைக்கப்பட்டிருந்தது. இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரிடம் மாருத விசுவாசங் காட்டிய ராஜ விசுவாசியுமாவார்கள். இவர்கள் மரணத் தருவாயிலிருக்கும் போது தன்னுடைய குமாரரும் அடுத்த வாரிசு மானவர்களை அழைப்பித்து "இராஜ விசுவாஸமில்லாமல் நடந்து கொண்டு தங்கள் தலையில் கொள்ளியைச் சொருகிக் கொள்ளும் மற்றப் பாளையக்காரர்கள் உங்களிடம் இச்சகமாகவும் ஆசையூட்டிய தன்மையாகவும் சொல்லும் பேச்சுக்களில் நம்பிக்கை கொண்டு கும்பினியாருக்கு விரோதமாக நீங்களும் உங்கள் பின் சந்ததியாரும் நடக்காதிருக்க வேண்டுமென்றதை வற்புறுத்திக் காட்டி" அன்னாரிடமிருந்து உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டார்கள். அவ்விதமாகவே இப்போதும் எட்டயபுரத்தார் உள்ளும்புறமுமாக இராஜாங்கத்தாரிடம் ஒரே தன்மையான விசுவாசத்துடனிருந்து கொண்டே வருகிருர்கள்.

ஊமைக்குமாரசாமி நாயக்கரின் கலகத்தின்போது தூத்துக்குடியைச் சிறிதுகால அளவு பாஞ்சாலங் குறிச்சியார் பிடித்து வைத்திருந்தனர் என்று முன் சொல்லியது ஞாபகமிருக்கலாம். தூத்துக்குடியைக் காத்துக்கொண்டிருந்த சைனியங்களின் ஆயுதங்களைப்

பிடுங்கிக் கொண்டு அங்கிருந்த இங்கிலீஷ்காரரை வேற்றிடங்களுக்குப் போகும்படிக்குக் கப்பலில்ஏற்றி அனுப்பிவைத்ததில் தூத்துக்குடி மாஸ்டர் அட்டெண்டண்டு பதவியிலிருந்த பாகாட்டு (Mr. Baggot) துரையையும் கப்பலில் ஏற்றி அனுப்பிவைக்கவும், அன்னாரின்பெண்சாதி பாளையக்காரரைப் பாஞ்சாலங்குறிச்சி வரை பின்தொடர்ந்து அவரிடம் விண்ணப்பம்செய்து கொள்ள, ஏதோ பின் இரக்கங்கொண்டு அவரை விடுவித்தனராம்.

# பதினேழாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

ர்நாடகச் சீமைமுழுவதையும், 31-7-1801ல் கும்
பினியாருக்கும் நவாபுக்கும் நடந்த உடன்படிக்கையில்
அந்த நாட்டைப் பொறுத்துள்ள சகல விதமான அதி
காரங்களுடன்; கும்பினித் துரைத்
தனத்தாருக்கே நவாபு ஒப்படைத்து
விட்டு விலகிக்கொண்டதால், திருநெல்
வேலியிலுள்ள "அமிலுக்கு" சர்வவித
மான கணக்கு வழக்குகளை எல்லாம்
கும்பினியாரின் பிரதிநிதியாகத் திரு
நெல்வேலி ஜில்லாவில் நியமனமாகியிருக்கும் கலக்டர்
லஷிங்டன் துரையிடம் கொடுத்து விடும்படிக்கும்,
அவரே கவர்ன்மெண்டாருக்குச் சகல விதமான நட
வடிக்கைகளுக்கும் ஜவாப்தாரி என்றதையும், குறித்த
உத்தரவு பிறப்பித்தவகையின் ஆதாரத்தால், கர்நாடக
தேசத்துள்ள மற்றநாடுகளுக்கு ஒப்பத் திருநெல்வேலி
யும் இங்கிலீஷ் துரைத்தனத்தார் வசமாயிற்று. இனி
இந்த நாட்டில் நவாபுக்கு துரைத்தன சம்பந்தமாக
இருந்தனவெல்லாம் இத்துடன் நீங்கிவிட்டன என்ற
தால் ஆட்சி கும்பினியாருடையதாகியது.

நவாபுடன் கும்பினியார் செய்து கொண்ட உடன்படிக்கை

நவாபு ஆட்சியின்கீழ் டோரின் துரை முதலிய
லக்டர் காலத்தில் திருநெல்வேலி, மதுரை, திருச்சி
ப்பள்ளி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய சீமை
ளில்கும்பினியார் அதிகாரம் வகித்திருந்ததால் அவ்
விதமான கலக்டர்களைக் கொள்ளிடத்திற்குத் தெற்கி

லுள்ள பாளையக்காரப் பேஷ்கிஸ் கலக்டரென்று சொல்வதுண்டு.

**ஜில்லாக்களின் பிரிவினைகளின் விவரங்கள்**

ஆனால் லஷிங்டன் துரை கலக்டராக இருந்த சமயத்தில் அவருக்குள்ள உத்தியோகப்பேர்கள் பலவகையாக ரிக்கார்டுகளில் காணப்படுகின்றன. அவையாவன : திருநெல்வேலி, மதுரை, திருச்சினாப்பள்ளி, இராமநாதபுரம், சிவகங்கை ஜில்லாக்களுக்கு ஜமீந்தார் பாளையக்காரப்பேஷ்கிஷ் கலக்டரென்றும், பாளையக்காரப் பேஷ்கிஷ்க்கும் இராமநாதபுரத்துக்கும் கலக்டரென்றும், அசைண்டு பேஷ்கிஷ் கலக்டரென்றும், தென்னாட்டுப் பேஷ்கிஷ் கலக்டரென்றும், திருநெல்வேலிக்கலக்டரென்ற தனிப்பெயருடனும் காணப்படுவனவுமாம். ஆனால் 31-7-1801ல் நடந்த முன் சொல்லியுள்ள உடன்படிக்கையின்படி சென்டு ஜ்யார்ஜ் கோட்டையைச் சேர்ந்த இராஜதானியின் கவர்னர் பிரபு அவர்களால் லஷிங்டன் துரையவர்களுக்குக் கொடுத்த நியமன உத்தரவில் தென்னாட்டுப் பேஷ்கிஷ் கலக்டர் லஷிங்டன் துரையைத் திருநெல்வேலி மாகாணத்துக்கு (ஜில்லாவிற்கு) கலக்டராக நியமனம் என்று கண்டிருக்கிறது. 1781 முதல் 1801 வரைக்கும் நமது நாட்டில் கலக்டர்என்ற உத்தியோகம் தாசில்தார் முதலியவர்களைப் போன்ற சுதேச உத்தியோகஸ்தர் பார்த்துவரும் வேலைக்குச் சமானமானதாக இருந்தது. இப்பொழுது நமது ஜில்லாவில் நியாயத்தினின்றும் விலகாத வாதங்களின் தீர்ப்புகளை, "அவைகள் லஷிங்டன் தீர்ப்புகளாக்கும். இங்குவரை போனாலும் அவைகளை மாற்றிக்கொள்ள முடியாது"



என்ற வோர் பழமொழி நம்மவருள் இன்றும் வழங்கி வருகிறது. இப்பழமொழியினால் லஷிங்டன் துரை எந்தவித நிலைமையிலும் நீதிக்குக் கட்டுப்பட்டு, சமரசப் புத்தியுடன் ஆண்டாரென்றது பெறப்படலால், அவரது பெயர் நமது நாட்டில் சாமானியர்களுக்குள்ளும் இன்னும் நிலையுற்றிருக்கின்றது. மேலே சொல்லியபடி திருநெல்வேலி ஜில்லா தனிமையாகப் பிரிவுபடவும், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய மூன்றுமடங்கியவைகளுக்கு இராமநாதபுரம் ஜில்லாவென்ற பெயரைக் கொடுத்தனர். இதற்கு முதலாவது கலக்டராக இருந்தவர் பாரிஷ் (Collector Parish) துரையாவார். துண்டிக்கப்பட்ட புதுத் திருநெல்வேலி ஜில்லாவிற்கு காக்ரேன் என்ற துரை (Collector Cochrane) கலக்டராக நியமனமானார். திருநெல்வேலி ஜில்லாவிற்கு நியமனமான கலக்டரின் கீழ் அந்த ஜில்லாவிலுள்ள பாளையப்பட்டுகளைச் சேர்க்காமல் இராமநாதபுரம் ஜில்லாக் கலக்டரின்கீழ் அவைகளைச் சேர்த்துவிட்டனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஜில்லாக்களின் பாளையப்பட்டுகளும் மதுரை திண்டுக்கல் முதலிய ஜில்லாக்களிலுள்ள பாளையப்பட்டுகளும் மருங்காபுரிப் பாளையப்பட்டும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையப்பட்டுகளும், இராமநாதபுரம் ஜில்லாவில் அடங்கி யிருந்தன. இது இராமநாதபுரத்திற்கு ஒரு கௌரவமென்று பிஷோப் கால்டுவெல் துரை அபிப்பிராயப் படுகிறார். இந்த விதமாக இணைக்கப்பட்டிருந்தது 1808-ல் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையங்களைத் திருநெல்வேலி

ஜில்லாவின் கலக்டரின்கீழ் அதிகாரத்தில் சேர்த்து விடும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்து விட்டனர். அதுவே இப்போதும் அமுலிலிருந்து வருகின்றது. இதற்குப்பிற்காலத்தில் மதுரை ஜில்லா என்றதை தனிமையான ஒரு ஜில்லாவாக ஏற்படுத்தி அதில் இராமநாதபுரம் சிவகங்கை திண்டுக்கல்லாகியவைகளைச் சேர்த்து விட்டார்கள். இதன் பின்னால் மேலே சொல்லியவைகளை மதுரை இராமநாதபுரமென்ற இரண்டு தனி ஜில்லாக்களாகப் பிரித்து இராமநாதபுரம் ஜில்லாவிற்குத் திருநெல்வேலி ஜில்லாவின் வடபாகத்திலிருந்த சாத்தூர் ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தாலுக்காக்களையும் சேர்த்துவிட்டார்கள். இந்தப் பிரிவினைகள் தான் இப்போது அமுலிலிருக்கின்றன. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலியாகிய இந்த மூன்று ஜில்லாக்களுக்கும் தனித்தனியே வெவ்வேறு கலக்டர்களும் அவைகளுக்கு மற்றைய ஜில்லா அதிகாரிகளும் தனித்தனியே இருந்து கொண்டு அந்தந்த ஜில்லாக்களின் காரியங்களை நிர்வாகித்து வருகின்றனர்.

இனிநாம் சிவகங்கைச் சீமையின் உற்பத்தியைக் குறித்துப் பேசி முடிப்போம். முன் சொல்லியுள்ள

**சிவகங்கைச் சீமையைப் பற்றியவை**

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் பாண்டிய நாட்டிற்கு இராஜாவாகவிளங்கிய காலத்துள்ள இராமநாதபுரத்து அரசரான சேதுபதி சடையக்கதேவர் என்பார் தன்னுடைய நாட்டினை ஐந்து பங்குகளாக வைத்துத் தனக்கு மூன்று பங்கும், ஸ்ரீ தனத்தின் பொருட்டு சசிவர்ணத்தேவர் என்பாருக்கு இரண்டு



பங்குமாக வைத்துக் கொடுத்து விடவே, அக்காலத்
தில் அங்கு சகல செல்வாக்குகளையும் அடைந்து,இராம
நாதபுரத்தில் இராஜ்ய விஷயங்களை நடாத்திவந்த
வெள்ளையன் சேர்வையென்பார் தளவாய்ப்பட்டத்தை
வகித்துக்கொண்டு வருங்காலத்தில், சடையக்கதேவர்
1752-ல் இறந்துவிடவும் அன்னார் குமாரர் 4, 5 வாரங்
களாக அரசியலை நடாத்தி விட்டுக் காலஞ்சென்றார்.
இராமநாதபுரத்தில் இது சம்பந்தமாக அரசியலில்
குழப்பங்களுண்டாகவும், சர்வாதிகாரியாக அப்போது
விளங்கிய வெள்ளையன் சேர்வை, ராக்கத்தேவர்
என்றவருக்கு முடிசூட்டுவித்து அரசனாக்கினார். இவ்
வாறு வலுவோங்கிக் கொண்டுவந்த வெள்ளையன்சேர்
வையும் சிவகங்கை ஸ்தானாதிபதி தாண்டவராயபிள்ளை
யும் கியாப்டன் கோப்புத்துரையுடன் கலகங்களைச்
செய்து, இராணிமீனாக்ஷியம்மாளின் குமாரரை மது
ரைக்குக் கர்த்தாவாக்கினார்கள். அப்படிக்குப் பாண்
டிய நாட்டிற்கு இராஜ்யத்துவத்தை வகித்துப் 16
மாதங்களுக்குள் பட்டத்தை அவர் இழக்கவும், இதன்
பின்னர் வெள்ளையன் சேர்வை தஞ்சாவூர் மதுரை
முதலிய ஜில்லாக்களிலுள்ள பாளையக்காரர்களை யெல்
லாம் இராமநாதபுரத்துக்குள் அடக்கமானவைகள்
தான் என்று அவர்களை யெல்லாம் ஏகோபித்து ஒத்
துக்கொள்ளும்படிக்குச் செய்துவிட்டுப் பின்னர் தன்
னுடைய கொள்கையைத் திருநெல்வேலிச் சீமையி
லுள்ள பாளையக்காரர்களிடம் புகட்டி அடக்கி விட
எண்ணங்கொண்டு திருநெல்வேலிச் சீமைக்குள் பிர
வேசித்து, அங்கும் யாவர்களையும் அடக்கிவிட்டு எட்
டயபுரத்துக்கு வர, ஆண்டும் அவ்விதம் செய்து

பார்த்ததில் தன்னுடைய காரியம் நிறைவேற மார்க்கமில்லையென்பதைப் போர்முகத்தாற்றெரிந்துகொண்டு, ஒருவரிடமும் தோல்வியடையாத தன்னைத் தோற்கும் படிக்குச் செய்துள்ள மகாவீரரான எட்டயபுரத்தாரை யினிமேலாக வெள்ளையன் சேர்வை குருவாக நினைப்பதாக உறுதி மொழி சொல்லிவிட்டார் என்பதைத் தெரிந்த சேதுபதி, அவரை உடனே அழைப்பிவிக்கவும், சேதுபதிக்கும் விரோதமாக வெள்ளையன் சேர்வை கிளம்பிவிட்டார். நாளடைவில் சேர்வையின் செல்வாக்கு குறையத் தலைப்பட்டதைக் கண்ட ஏனைய பாளையக்காரரும் சுவாதீனம் அடைந்து சேதுபதிக்குக் கீழ்ப்படிதலை மறுத்துவிட்டார்கள். பொன்னுசாமித் தேவர் பிமோராண்டம் என்ற குறிப்புப் புஸ்தகத்தில் வெள்ளையன் சேர்வை செய்துள்ள அட்டூழியங்களைக் குறித்து எழுதப்பட்டிருப்பவைகளுள் உண்மை எம் மட்டும் என்பதை நிச்சயிக்கக்கூடவில்லை. பெரிய மருதுவுக்கும் வெள்ளையன் சேர்வை என்றொரு பேருண்டு. இவ்விருவரும் வெவ்வேறுவர்.

பஞ்சுப் பொதிகளைக் கட்டும் ஸ்குரு இயந்திரங்களை ஸ்தாபித்தல்

இங்கிலீஷ் ஜாதியாரான முன்னம் சொல்லியுள்ள பாகாட்டுத் துரையைப் பாஞ்சாலங்குறிச்சியார் தொந்தரவுக்குள்ளாக்கிப் பின்னர் மன்னித்தாரென்றாலும், அதுசமயம் தூத்துக்குடியிலிருந்த டச்சுக்காரர்கள் பாளையக்காரருக்கு வேண்டியவராக இருந்தவர்களாதலால் அவர்களை எதுவும் செய்யவில்லை. மேலே சொல்லிய பாகாட்டுத் துரையின் குமாரர் நமது ஜில்லாவில் பஞ்சுகளைப்



பொதியாகக் கட்டிப் பேல்களாகச் செய்யும் ஸ்குரு இயந்திரங்களை ஸ்தாபித்தவராவர். இப்படி நமது ஜில்லாவில் பேல்கட்டுகளில் பஞ்சை ஸ்குரு செய்து இங்கிருந்து சீமைக்கு நேராகப் போய்க்கொண்டிருக்கும் வழக்கத்தை நமது ஜில்லாவிலேயே 1831-ல் ஸ்தாபித்து, நேர்முகமாகப் பஞ்சு வியாபாரத்தைத் தூத்துக்குடிக்கும் சீமைக்கும் போக்கு வரத்துள்ள வசதியுடன் ஏற்படுத்தினர்.

## பதினேட்டாம் அத்தியாயம்

# தற்காலத்தியது

*முத்துச் சிலாபம்*

மார்க்கோபோலோவின் சொந்த நாட்டினரான ஸீஸர் பெரிடரிக் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவில் 1563 முதல் 1581 வரையுமிருந்த அனுபவத்தைக் கொண்டு அங்கு நடந்த சிலாபத்தைக் குறித்து எழுதுவதாவது :— "திருநெல்வேலிச் சீமையின் கீழ்கரைப் பக்கம் காயல் முதலியவைகளை அடுத்துள்ள சமுத்திர பாகத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில் 15 தினங்கட்குக் குறைவு படாமல் முத்துச் சிலாபங் குளிப்பதுண்டு. ஒவ்வொரு வருஷமும் வெவ்வேறு இடங்களில் குளித்துப் பூராவும் முடிந்துவிட்டால் தவணைப்படி முறையாக ஆங்காங்கு குளிப்பதே வழக்கமாகும். இவ்விதமாக அங்குள்ள கடலில் வருஷந்தோறும் குளிப்பு இருந்துகொண்டே இருக்கும். சிலாபங் குளிப்போரெல்லாம் கிறித்தவராகவே இருந்தனர். போர்த்துகல் தேசத்திய அரசருக்கு ஒவ்வொரு குளிப்புக்கும் ஏதோ காணிக்கை கொடுப்பதும், செண்டு பால்ஸ்சர்ச்சிலுள்ள சந்நியாசிகளின் தர்மத்துக்குச் சிறுக உதவி செய்வதும் வழக்கத்தி லிருந்திருக்கின்றன. சிலாபம் குளிப்பவர்களைக் கடற் கொள்ளைக்காரர்கள் வந்து கொள்ளையடித்துக் கொண்டு போகாதிருக்கும்படியாக ஆயுதபாணிகளாக நின்றுகொண்டிருக்கும் காவலாளிகளுடைய துணைத் தோணிகளும் தயாராக இருப்பதுண்டு. சிலாபம்



குளிக்கச் செல்லுகிற தோணிகளை நங்கூரமிட்டு, ஒரு கயிற்றின் நுனியில் பெருங் கல்லைக் கட்டி மற்றொரு நுனியைக் கப்பலிலிருப்பவன் கைவசம் வைத்துக் கொண்டு, குளிக்கச் செல்பவன் காலிற் கல்லை இறுகக் கட்டி, அவனுடைய காதுகளைப் பூராவும் நன்றாக அடைத்து வைத்துத் தேக முழுமையிலும் எண்ணெயைத் தடவிக் கழுத்திலாவது தோளிலாவது ஒரு கூடையைத் தொங்கவிட்டுக் கொண்டு இறங்குவது வழக்கம். கூடை நிறையச் சிப்பிகளை நிறைப்பியாகவும், கயிறை ஆழத்திலிருந்து குளிக்கிறவன் இழுத்து அசைக்கவும், கப்பலின்மேல் இருப்பவன் கைவசமுள்ள மற்ற நுனி வரையும் கயிறு அசைவதைப் பார்க்கவும் உடனே உயர இழுத்து விடுவான். இவ்விதமாக ஒவ்வொருவரும் சிப்பிகளைக் கொண்டுவந்து கப்பலிற்றட்டவும் கப்பல் நிறைந்துவிடும். உடனே அதே பக்கத்திலுள்ள ஊரில் இராக்காலங்களிலிருந்து விட்டு அவர்களுடைய சொந்த ஸ்தலங்களுக்குச் சென்று சிப்பிகளைக் குவித்து விடுவார்கள். சிலாபம் அந்த வட்டத்தில் பூராவும் முடிந்த பின்பு குவியல்களைத் தொட ஆரம்பிப்பார்கள். அதற்குள் சிப்பிகளும் காய்ந்து விடுகின்றன. சிப்பிகளையும் அவைகளினுள்ளிருக்கும் முத்துக்களையும் விலை மதிப்பதற்கு கோட்டக்காரச் செட்டிமார்கள் எண்ணிறந்தோர் அங்கு வந்து கும்பல் கும்பல்களாகக் கூடி யிருப்பார்கள். முத்துக்களின் குணத்துக்குத் தக்கபடிக்கும் பருமனுக்குத் தக்கவாறும் அவர்கள் விலையைக் குறிப்பிடுவார்கள். முதல் தரமான முத்துக்களுக்குப் "போர்த்

துக்கல் தேசத்திய அயயா" (Aiya) என்பார்கள். இவைகளை போர்த்துக்கேசியருக்குப் பிரீதியானவைகள். இரண்டாந்தரம் உருண்டை வடிவமானதாக இருக்க மாட்டா. இவைகளை "வங்காள தேசத்து அயயா" என்பார்கள். வங்காள நாட்டினர்களுக்கு இவைகளில் பிரீதியாக இருக்கும். இரண்டாம் வகுப்புக்குத் தாழ்ந்ததான மூன்றாம் இனத்து முத்துக்களைக் "கன்னட தேசத்திய அயயா" என்பார்கள். இவைகள் விஜயரங்க நரசிங்க பூபால சக்கரவர்த்தியாருக்கு உவந்தவைகளாம். நான்காவது தர்ஜாவிலுள்ள முத்துக்களைக் "காம்பே தேசத்து அயயா" என்று சொல்வர். இவைகள் சூரத்து, காம்பே முதலிய நாட்டினர்கள் விரும்பப் பட்டவைகளாம். அவ்வகை முத்துக்களை அந்தந்த தேசத்தினர்கள் அடைய ஆசைகொள்வார்கள். மார்ட்டின் என்ற பாதிரியார் 1700ல் நிகழ்ந்த முத்துச் சிலாபத்தைக் குறித்துச் சொல்லிய விவரச் சுருக்கம் :—"ஒவ்வொரு பிரதி வருஷமும் டச்சுக் கப்பல்கள் பத்துப் பன்னிரண்டுகளைச் சமுத்திரத்தில் நாலா பக்கங்களிலும் அனுப்பிவித்து எவ்வெவ்விடங்களில் சிலாபங் குளிக்கலாமென்றதைத் தெரிந்து அவ்வவ் விடங்களிலிருந்தும் ஆயிரம் சிப்பிகள் வரை எடுத்துக்கொண்டு வந்து சோதித்துப் பார்த்ததில் சமாதானமடைந்த பின்னர்தான் முத்துச் சிலாபங் குளிப்பது வழக்கம். ஒவ்வொரு குவியலிலும் காணப்பட்ட சிப்பியின் முத்துக்கள் கோட்டக்காரர்களால் "எக்கு" (Eccu) என்ற தொகைக்குக் குறையாது மதிப்பிக்கப் பட்டால் அந்தச் சிப்பிகளுடைய பாறை



களை சிலாக்யமானவை என்றும், அதிக விலைக்குப் போகக்கூடியவைகள் என்றும், அதிக லாபகரமென்றும் நிச்சயித்துக் கொள்வார்கள். எக்கு என்றது ஒரு பூவராகனுக்குச் சிறிது கூடியது. முப்பது "சௌ" (Sow) அதாவது முத்துச் சிப்பி ஒன்றுக்கு முக்கால் ரூபாய்க்கு விலைப் போகாதென்று தெரிந்துகொண்ட முத்துக்களுள்ள பாறைகளில் எடுப்பதானால் நஷ்டம் என்றுஞ் சொல்லிக் கொள்வார்கள். இப்படிக்கு வெள்ளோட்டம் பார்ப்பதில் இலாபங் கிடைக்குமென்பது நிச்சயமாகி விட்டால் சிலாபத்துக்கு விளம்பரம் செய்வார்கள். இல்லாவிட்டால் நிறுத்திக் கொள்வார்கள். முத்துச் சிலாபங் குளிப்பதென்பது நிச்சயமாகி விட்டால் சிலாபத்துக்கு விளம்பரங்களை நாலா பக்கங்களிலும் பஹிரங்கம் செய்வார்கள். குறிப்பிட்ட தினத்துக்குச் சிறிது நாட்களுக்கு முன்னும் அன்றும் பல்வேறு தேசங்களிலிருந்தும் நானாவித மான ஜாதியார்களிலுள்ள பெரும் வியாபாரிகள் அளவிடக்கூடாத பெருந் தொகைகளை முடிந்து போட்டுக் கொண்டு அங்கு வந்து காத்துக்கொண்டிருப்பார்கள். கடற்கரைப் பக்கங்களில் பல சிறிய ஊர்கள் காணப்படும். கடலினுள் அந்நிய நாட்டுத் தோணிகள் ஏராளமாக நிறைந்து தோற்றப்படுவதில் அப்பாகங்களும் ஒவ்வோர் நகரமாகவே காணப்படும். பார்ப்பவர் கண்களுக்கு அதி ரம்மியமாயும் மனதிற்குக் குதூகலமாகவு மிருக்கும். குறிப்பிட்ட தினத்தில் பேரிகைகளின் முழக்கங்களும் அதிர் வெடிகளின் செவிடுபடும்படியான தொனிகளும் கூட்டங்களின் இரைச்சல்களும் "கிண்ண்ண்" என்று ஒரே

பேரிரைச்சலாகக் கேட்கும். இதன் மத்தியில் கொழும்பிலிருந்து டச்சுக் கமிஷனர் ஆரவாரங்களுடன் வந்திறங்கவும், அங்கு மரியாதைக்குண்டுகள் முழங்கப்படும். அதற்கப்பால் அவர் முத்துச் சிலாபங்குளிக்க உத்தரவு பிறப்பிப்பார். முத்துச்சிலாபம் நாம் முன் சொல்லியபடியே அநேகமாகக் குளிப்பது வழக்கம். சிறு பான்மையே குளித்தலில் முன் சொல்லியுள்ளதற்கு வித்தியாசமெனலாம். முத்துச்சிலாபங் குளிப்பதற்கென்றே சிலர் பாலியமுதல் தயாராகின்றனர். இப்படிப் பழகுவதினால் நாளாரம்பத்தில் அவர்கள் முத்துக் குளித்தலில் கைதேர்ந்த ஆசாமிகளாகிறார்கள். ஒவ்வொருவரும் தண்ணீரில் மூழ்குவதில் "நான் சமர்த்தன்," "நீசமர்த்தன்" என்று வீரம் பேசிக்கொண்டு தண்ணீரில் அதிக நேரமாக ஆழ்ந்திருந்து சாகிறவர்களும் அநேகர்களாவார்கள். தண்ணீரில் ஆழ்ந்து முத்துக் குளிக்கும் சமயத்தில் ஒருவரின் சாக்குப் பையில் போட்டிருக்கும் சிப்பிகளை மற்றொருவர் சாக்குப்பையில் போட்டு நிறைத்துக் கொள்ள ஆசைகொண்ட சிலாபக்காரர்களுமுண்டு. இவ்விதம் நேரிடல் கூடுமென்று சிலாபம் குளிப்பவர்கள் தங்கள் தங்கள் இடுப்புகளில் ஒவ்வொருவரும் ஜமுதாடுகளைக் கட்டிக்கொண்டு குளிப்பது வழக்கம். இப்படி ஒருவரெடுத்த சிப்பிகளை மற்றொருவர் பிடுங்கிக்கொள்ள எத்தனித்துச் சமுத்திரத்தின் அடியில் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டும் குத்திக்கொண்டும் மாய்வது சகஜம். முதல் வகுப்புக்காரர் சிப்பிகளைக் கொண்டுவந்து விட்டு இரண்டாம் வகுப்புக்காரர் வரும்வரை காத்துக்கொண்டிருக்கவேண்டும். அவர்



கள் வந்த உடன் இவர்கள் குளிக்க நீரினுட் செல்லலாம். இதுவே முறையாக இருந்தது. எப்பேர்ப்பட்ட அநுபவசாலிகளும் ஒரு நாளைக்கு 7, 8 தடவைகளுக்கு மேல் குளிக்கமாட்டார்கள். ஒவ்வொரு நாளிலும் சிலாபம் மத்தியானத்துடன் தீர்ந்துவிடும். சிப்பிகளைக் கரையிற் கொண்டுபோய் இறக்கி ஒரு தோட்டத்திற்குள் அவைகளை எடுத்துச் சென்று அங்கு 2, 3 நாள்வரை போட்டு வைக்கவும், சிப்பிகள் வெடிக்க, அவைகளின் உள்ளிருக்கும் முத்துகள் வெளிக் கிளம்பும். கிளம்பிய முத்துகளைக் கழுவியெடுத்து, அவைகளைப் பருமனுக்குத் தக்கபடி பிரிப்பதற்கு ஒரே வட்டத்தட்டில் அநேக தகடுகள் தரவாரியாகச் சிறிய துவாரங்களும் பெரிய துவாரங்களுமாக அடங்கியிருக்கும் ஒரு சல்லடையில் போட்டு தரவாரியாகப் பருமனுக்குத் தக்கபடி எடுத்துச் சேர்த்து விடுவார்கள். இதனை இங்கிலீஷில் Colander என்று சொல்வது. எறும்புக்கண் போன்ற துவாரத்தட்டிலிருந்து சிறிது பெருத்த துவாரங்களை ஒன்றின்பின் ஒன்றாகக் கொண்ட தட்டுகள் ஒன்றுக்கு மேலொன்றாகப் பெருத்துக்கொண்டே வந்து பெரியதில் சுண்டுவிரல் நுனி போகும்படியான துவாரமுள்ளதாக வந்து முடியும். அதன் பின்பு ஒவ்வொரு இனமாக அவைகளுக்கு விலையை மதித்துக் கிரையம் போடுவார்கள். இதில் எந்த இனத்தில் அதிக நயமுடையதென்று தெரிகிறதோ, அதற்குத்தான் டச்சுக்காரர்கள் விலை கொடுத்து வாங்குவார்கள். ஆனால் அவர்கள் அவைகளைத் தங்களுக்கே கொடுக்கவேண்டுமென்று எவரையும் கட்டாயம் செய்வதில்லை. முதற் குளிப்பில் அகப்படுகிற முத்துக்கள் சேதுபதிக்கே உரியன. சிலாபம் குளிக்

கும் இடங்களை டச்சுக்காரர்கள் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டதில்லை. 1700-ம்வருஷம் நடந்த சிலாபம் சிறிது உத்சாகத்தை ஊட்டியதாகவிருந்தும் பிரயோஜனமற்றதாகவே கடைசியில் முடிவுற்றது. அந்த வருஷத்தில் சமுத்திரத்தின்கீழ் ஏதோ ஒரு நீரோட்டம் மேற்பட்டு முத்துச் சிப்பிகள் உள்ள பாறைகளை மணல் மூடிக்கொண்டதென்கிறார்கள். இதனால் அநேக வியாபாரிகளுக்கும், கப்பலாளிகளுக்கும் நஷ்டமாகவே முடிந்தது. ஸர்பெரிடரிக் என்றவர் தம்முடைய திருநெல்வேலி ஜில்லாவின் அநுபவத்தில் முத்துச்சிலாபத்தைக் குறித்து 1563—1581 வருஷங்களில் நிகழ்ந்த குறிப்புகளில் சேதுபதிக்குப் பங்கு குறிப்பிடப்படாமலிருக்க, 1700 கி.பி.யில் ஆங்கு நடந்த சிலாபத்தைக் குறித்து மார்டின் பாதிரியார் கூறியதில் சேதுபதியின் பேர் காணப்படலால் திருமலை நாயக்கருக்கும் எட்டயபுரத்தாருக்கும் நிகழ்ந்த போரில் இராமநாதபுரத்தார் திருமலை நாயக்கருக்கு அச்சண்டையில் செய்த உதவியின் பொருட்டு மன்னார் தீவையும் அங்கு நடக்கும் முத்துச் சிலாபத்தில் பங்கையும் சேதுபதிக்குக் கொடுக்கப்பட்டனவென்று நாம் முன்னம் (பக்கம் 40-ல்) சொல்லியுள்ளது ஞாபகமிருக்கலாம். அதுவே காரணமானதால் திருமலை நாயக்கர் காலமுதல் அதாவது 1623-க்கும் 1659-க்கும் இடையிலுள்ள காலத்திலிருந்து சேதுபதிக்குச் சிலாபத்தில் சுதந்தரமேற்படலாயிற்று என்று மதுரை ஜில்லாச் சரித்திரத்தில் நெல்ஸன் துரை கூறியிருக்கிறார்.

---

## பத்தோன்பதாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

இது சம்பந்தமாக நமது புஸ்தகத்தின் ஆரம்பத்திலேயே ஆங்காங்கு சிற்சில விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளோம். இனிப் பிரான்சிஸ் சவுரிநாதரைப்பற்றிச் சொல்லி முடிப்போம். இந்த ஜில்லாவின் கீழ்கரைப்பக்கமாக இவர் 1542 கி. பி.யின் கடைசியில் வந்து சேர்ந்து ஆங்கிரண்டு வருஷங்களாகத் தேவ ஊழியத்திலீடுபட்டுச் சேவை செய்துளார். இங்கு வரவும், கர்த்தரின் ஜெபம், ஆவாமரியாள், டிகாலோக் என்ற பத்துக் கற்பனைகள், மதக்கொள்கையின் அனுஷ்டானமாகியவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து அவைகளை மனப்பாடமாக்கிக் கொண்டார். (The Lord's Prayer, The Ave Maria, The Decalogue, The Creed). கோவாவில் போர்த்துக்கேசிய பாஷையைப் பேசத் தெரிந்துகொண்ட தமிழர்களைத் தனக்கு முனிஷியாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு கிராமந்தோறும் கையில் மணி ஒன்றை எடுத்து ஆட்டிக்கொண்டு ஜனங்களுக்கு உபதேசித்தனர். இவருக்குச் சாமர்த்தியமும் பக்தியும் மிகுந்திருந்தன வென்றது உண்மை என்றாலும், கல்வியில் போதிய பாண்டித்தியம் வாய்க்கப் பெற்றிருந்தாரல்லர் என்பதை அவர் அங்கிருந்துள்ள காலம் முழுவதிலும் தமிழைப் பிழையறப் பேசக்கூடக் கற்றுக்கொண்டிலர் என்றது சான்றாகும். தமிழ்நாட்டில் பெஸ்கி என்ற வீரமாமுனிவரும் ராபர்ட்-டி-நோபிலி

கிறித்தவ மத ஸ்தாபனம்

யாகியவரும் தமிழில் சிறந்து விளங்கினர். ஸ்டீவன்ஸ் என்ற ஒரு இங்கிலீஷ்காரரும் ஆர்நால்டு என்ற ஒரு இத்தாலியரும் ஹாங்க்ஸ்லீடன் (Hanxleden) என்ற ஒரு ஜர்மனியாரும் இதே சபையில் சேர்ந்தோரெனினும் மேல் கரைப்பக்கத்து வாசிகளாக இருந்ததன் பயனாக அந்நாட்டுப் பாஷைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர்களென்றது யாவர்களுக்குந் தெரிந்ததே.

சவுரி நாதர்

"கிறித்தவர் சங்கத்தில் சேர்ந்துகொள்ள வருகிறவர்களின் தொகுதி இவ்வளவென்று சொல்லக்கூடாதனவான பெருந் திரள்களாக மொய்க்கின்றனர்கள் என்பதை அவர்களுக்கு ஞானஸ்நானம்செய்து வைப்பதினால் என்கை களைத்துவிடுகின்றது. ஸ்தோத்திர மந்திரங்களை உச்சரிப்பதனால் என்னுடைய தொண்டையினின்றும் கிளம்புந் தொனி சக்தியிற்குறைந்து சிறிது தூரமே கேட்குந் தன்மையுடையதாகின்றது. நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு கிராமத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் இப்படிச் செய்யும்படிக்கு நேரிடுகிறதென்றது காரணமாகும். ஒவ்வொரு கிராமமாகச் சென்று முப்பது கிராமங்களில் இப்படிக்குச்செய்து முடித்திருக்கிறேன். எனக்கு உதவியாக இருந்தவர் பிரான்ஸிஸ் மான்ஸியாஸ்" என்று சவுரிநாதர் எழுதியுள்ளார்.

இவர் கத்தோலிக் மதத்தினர் என்றாலும் தமிழில் அபாரஞானம் படைத்துள்ளார் என்றதின் பயனாக 'தேம்பாவணி', 'வேதியர் ஒழுக்கம்', 'கலம்பகம்', போர்த்துக்கல் தேசத்து இராணிகாதரைன் அம்மை



பெஸ்கி என்ற வீரமா முனிவர் அல்லது தைரியநாத சாமியார்

யார்மீது மாலை சதுர அகராதி முதலிய பல்வேறு சிறந்த நூல்களை யாத்துத் தமிழ்ப் பாஷையில் முதற்றரமான கவிகளுக்குச் சமத்துவமென்ற பெரும்புகழைத் தமிழுலகம் நிலைக்கும்வரை சாஸ்வதமாகச் செய்து கொண்டதால் இவர் தமிழ் நாட்டில் அழியாப் புகழுடன் விளங்குவாராயினர். புராடஸ்டண்டு கிறித்தவர்களும் இவரைப் பெருமை வாய்ந்துள்ள சமநோக்குக் கொள்கையுடைய ஒரு மகான் என்று கொண்டாடுகின்றனர். லத்தீன் பாஷையில் இவரால் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறளை வாசித்தறிந்தோர் அம்மொழி பெயர்ப்பும் அதன் முதல் நூலை ஒத்துச் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்ற உத்திகள் பொதிந்துள்ள தென்பார். எட்டயபுரத்துச் சீமையைச் சேர்ந்த காமய நாயக்கன்பட்டியில் வசித்திருந்த காலத்தினிடையிலேயே இவர் தமிழில் வல்லமை அடைந்துளார் என்றதற்குப் பல்வேறு சான்றுகளுள. இவர் சீறுப்புராணம் பாடிய இஸ்லாம் மதத்தினரான எட்டயபுரம் உமறுப் புலவரின் சமகாலத்தவர். திருச்சினாப்பள்ளியில் சண்டா சாஹிபை பெஸ்கி கண்டு பேசுவதற்காக இரண்டுமாத காலத்துக்குள் ஹிந்துஸ்தானியும் பார்ஸீகத்தையும் பேசவும் எழுதவுங் கற்றுக்கொண்டு தனக்குள்ள அப்பாஷைகளின் விற்பன்னத்துவத்தையும் காட்டியதில் நவாபு இவரது மனோசக்திக்கும் தேவ ஊழிய பக்திக்கும் வியந்தவராகி இவரை ஒரு ஞானி எனக்கொண்டிருந்தும் லௌகிக

மார்க்கமான ஒரு உத்யோகத்தை இவருக்குக் கொடுக்கக் கருதி சிறிது காலம் திவானாகவும் ஏற்படுத்திக் கொண்டனர். இராயவேலூருக்குச் சென்று டாஸ்டு அலிகான் என்ற நவாபையுங் கண்டு உரையாடியிருக்கிறார். சண்டாசாஹிபுவின் திவானாக இருந்தபோது திருச்சினாப்பள்ளியை மஹாராஷ்டிரத் தலைவரான ரகுஜிபோன்ஸலேயும் வுட்டாசிங்கும் சண்டா சாஹிபுக்கு விரோதமாகக் கிளம்பித் திருச்சினாப்பள்ளியைப் பிடித்துக்கொள்ளவும், தன்னையும் ஏதேனும் செய்துவிடுவார்கள் என்ற அச்சங்கொண்டவராகி எவர்க்குந் தெரியாமல் இராமநாதபுரத்துச் சீமைவழியாகத் திருநெல்வேலிக்கு அலைவாய்க்கரையை அடுத்து மணபாட்டிற்கு வந்துசேர்ந்தார். அங்கு அவரது 66ம் வயதில் இறந்துவிட்டார். அவர் இறந்த இடத்தைச் சிலர் திருச்சினாப்பள்ளியை யடுத்துள்ள மணப்பாறையென்கிறார். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணப்பாடு என்றது முதலில் அவர் வந்திறங்கிய இடமாவதாலும், அதில் ஒருகால் பிரீதியடைந்து அவருடைய அந்திய காலத்திலும் அங்கு சென்று உயிரை நீக்கியும் இருக்கலாமென்றதே பொருத்தமுடையதாகின்றது. அத்துடன் அவர் திருச்சினாப்பள்ளியில் மகாராஷ்டிரர்களின்படையெடுப்புக் கஞ்சிக்கொண்டு அதை விட்டு ஓடியகாலத்து இராமநாதபுரத்துச் சீமை மார்க்கமாக அலைவாய்க்கரைவழி சென்றதாகக் காணப்படலாலும், திருச்சினாப்பள்ளியிலிருந்து நேர்தெற்கு நோக்கிச் சென்றிலர் என்றதாலும் மணப்பாறை போதல் கூடாதென்பது உறுதியே. மணப்பாடு என்றதைப்போல் திருச்சினாப்



பள்ளியிலுள்ள மணப்பாறையும் ரோமன் கத்தோலிக் மதஸ்தினர்களின் ஸ்தானமாக இருப்பதால் இவை இரண்டு ஸ்தலங்களையும் இங்கிலீஷிலும் பிரஞ்சிலும் உச்சரிக்க நேரிடின் "ட" "ற" என்றவை பேதப்படல் சகஜமாவதால் சரித்திர ஆராய்ச்சி செய்பவர்களைக் கலக்கத்துள்ளாக்கியதெனலாம். மிஷியன் - தி - மதுரா என்ற கத்தோலிக் சங்கக் குறிப்பிற் கண்ட 1720 முதல் 1743 வரைக்குமுள்ள கடிதங்களில் பெஸ்கியைக் குறித்து எதுவுங் கூறியிருப்பதாகத் தோற்றப்படவில்லை. ஆயினும் வடுகபட்டி ஆயூர், தஞ்சாவூர் முதலியவைகளிலுள்ள திருச்சபைகள் பெஸ்கியின் கீழிருக்க நல்ல ஸ்திதியில் விளங்கியிருந்தனவென்பது நிச்சயமெனத் தெரிகிறது. காலாந்தரத்தில் தெய்வ வழிபாட்டில் சிறிதுகூட. குறைவு படாமலிருந்திருக்கின்றனர் என்றாலும் இராஜனை யொத்த வாழ்க்கையில் டாம்பீகமாகவு மிருந்தனரென்றும் இவரைச் சிலர் பழிப்பதுமுண்டு. ஆனால் இவர்மீது அவ்வாறு சுமத்தப்படுகிற பழிச்சொற்கள் ஆதாரமற்றவையென்றும் இவர்மீது பொறாமை கொண்ட சிலர் கட்டிவிட்ட அவதூறுகளுமாம் என்பார் மற்றோர் சாரார். மதுரைத் திருச்சபையார் சண்டாசாஹிபையும் வேலூர் நவாபையும் பெஸ்கி சிநேகங் கொண்டிருந்ததையும் ஐரோப்பிய திருச்சபைகளுக்கு எழுதி டாஸ்டு-அலி-கானுக்கு வேண்டிய வெகுமதிகளை அனுப்பிவைக்கும் படிக்குச் செய்திருந்தாரென்பதையும் டாஸ்டு - அலி - கானாலும் சண்டா சாஹிபாலும் போதுமான சன்மானங்களை நாணய ரூபமாகவும் வேறு வகைகளாலும் அடைந்

திருந்தா ரென்பதை ஒத்துக்கொள்வதில் பெஸ்கிக்குக் கொடுக்கப்பட்டதாக சொல்லுகிற இனாங்கள் நவாபுவால் கிறித்தவ சபைகளுக்குக் கொடுக்கப்பட்ட இனாங்களாக இருக்கலாமென்றும் திவான் உத்தியோகம் பேருக்குமட்டும் கௌரமாக அவரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கலாமென்றும் சந்தேகங் கொள்ளற் கிடமாகின்றன. இவர் 1747-ல் திருவாங்கூர் இராஜ்யத்தைச் சேர்ந்த அம்பலக்காட்டில் இறந்ததாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். இஃது முற்றிலும் பொருத்தமுடையதன்று.

காமய நாயக்கன் பட்டி

இங்கு ஒரு காங்கிரிகேஷன் கூட்டத்தை 1660 கி. பி. க்கு முன்னம் ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பெரும்பாலும் தீங்குகள் நேரிடாது காத்துக்கொண்டு வந்தது எட்டயபுரத்தின் சகாயத்தைக் கொண்டே என்பது ரிகார்டுகளில் தெரிய வருகின்றன. அந்தக் கோயிலுக்கும் எட்டயபுரத்தாரால் சில நன்கொடைகளும் கொடுக்கப்பட் டிருந்திருக்கின்றன வென்பது அவர்களில் ஒருவருக்கு ஏற்பட்டிருந்த நோய் நீங்குவதற்கு அக்கோயிலைப் பிரார்த்திக்க அந்நோய் நீங்கி விடவும் அதற்குக் காணிக்கையாகச் சிலவைகள் கொடுக்கப்பட்டன வென்பதும் அக்கோயிலைப் பிறருடைய தீங்குகளிலிருந்தும் எட்டயபுறத்தார் காத்துக் கொடுப்போமென்பதற்குச் சான்றாகவும் அங்கு ஒரு சாசனம் எட்டப்பன் என்ற கையெழுத்துச் சகிதம் கல்லில் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்வூரிலுள்ள கோயில் 1683—1685-ல் ஜாண்-தி-பிரிட்டோ



என்ற அருளானந்தசாமியாரால் விருத்திக்குக்கொண்டு வரப்பட்டது.

சர்ச் ஆப் இங்கிலாந்து மிஷன்

இந்த ஜில்லாவிலேற்பட்ட இச்சபை தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சபையின்கிளைச்சபையாக ஆதியிலேற் பட்டதென்று ஸ்வார்ட்ஸ் பாதிரியார் எழுதியுள்ள ஞாபகக்குறிப்புப் புஸ்தகத்திலிருந்து வெளியாகின்றது. அக் காலத்திலும் திருநெல்வேலியில் கிறித்தவர்களிருந் திருப்பதாகச் சொல்லியுள்ளார். இதன் ஸ்தாபனம் 1771 கி. பியில் ஏற்படலாயிற்று. 1778-ம் வருஷத்தில் பாளையங்கோட்டையில் வைத்து ஒரு பார்ப்பனக் கைம்பெண்ணை ஞானஸ்நானம் செய்து வைத்தனர். முதலில் பாளையங்கோட்டையில் சர்ச்சையுண்டாக்கியவர் இவரே. திருச்சினாப்பள்ளிக்குத் தெற்கில் உண்டான முதல் புராட்டஸ்டண்டு சர்ச்சு பாளையங்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டதாம். இங்கு காங்கிரிகேஷன் கூட்டத்தார் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதைக் கண்ட ஸ்வார்ட்ஸ் துரை தஞ்சாவூரில்அப்போதுசிறந்துவிளங்கிய சத்தியநாதன் என்பவரை அதற்குப் போதகராக அனுப்பி அதனையும் அவரது சார்ஜுலேயே ஒப்படைத்தார். இந்த சர்ச்சு நாளுக்கு நாள் விருத்தியாவதைக் கண்டும் காங்கிரிகேஷன், சுற்றியுள்ள கிராமங்களில் பரவி விட்டதைக் கண்டும் மனக்கிளர்ச்சி யடைந்த ஸ்வார்ட்ஸ் பாதிரி 1797-ல் ஜேனிக் (Jaehicke) என்ற ஜெர்மனியரை ஏற்படுத்திவிட்டார். மேலே சொல்லியுள்ள சத்திய நாதன் மூலமாகவே திருநெல்வேலியில் சாணார்

கள் கிறித்தவமதத்தில் சேர்க்கப்பட்டனர். அக்காலத்தில் கலெக்டராக இருந்த டோரின் துரையுடன் இந்த ஜேனிக் என்ற பாதிரி துரை திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்து திருக்குற்றாலம், பாண தீர்த்த முதலியவைகளைப் போய்ப் பார்த்துவிட்டு களக்காடு, பாப்பான் குளம் முதலியவைகளுக்குச் சென்று 25-2-1792-ல் பாளையங் கோட்டைக்குத் திரும்பவும், மலைக்காச்சலாற் பீடிக்கப்பட்டு மிகத் தொந்தரவுக்குள்ளாகி, ஏதோ தெய்வாதீனமாகப் பிழைக்க, மணப்பாடு, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார். மணப்பாட்டிலுள்ள காங்கிரிகேஷன் கூட்டத்தினர் நெசவுத் தொழிலாளர்களாக இருந்தாலும் அந்தக் கூட்டமே திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள புராட்டஸ்டண்டு கூட்டங்களில் எல்லாம் பெரிதாக இருந்தது.

திருநெல்வேலி ஜில்லாவில் கிறித்தவமதப் பிரவேசமான நாடார் வகுப்பினில் முதலானவர் சாத்தான் குளத்துக்குச் சமீபத்திலுள்ள காலங் குடியிருந்த சுந்தரமென்றபேரை தாவீது என்று மாற்றிக் கொண்ட ஒருவராவர். இவரைத் தஞ்சாவூரில் வைத்து கோஹல் ஹாப் (Kohlhoff) என்பவர் ஞானஸ்நானம் பண்ணிவைத்துச் சேர்த்துக் கொண்டார். இப்படிக்குச் சேர்ந்துகொண்ட இவரைப் பாளையங்கோட்டைச் சர்ச்சுக்கு உதவிபோதகராக நியமித்துக் கொண்டார்கள். அதன் பின்பு விஜயராமபுரத்திற்குப் போய் அங்கு அவர் செய்யவேண்டிய வேலைகளையும் செய்திருக்கின்றனர். அடையல் என்ற ஒரு கிராமத்தில்



கியாப்டன் வெரெட்டு என்பவரின் சிபார்ஷின்பேரில் ஒரு துண்டு நிலத்தை ஜேனிக் துரையின் பேருக்கு வாங்கி ஒரு சர்ச்சையும் ஒரு கிணற்றையும் உண்டு பண்ணி அதனைக் கிறுத்தவ ஊராக அமைத்து அதற்கு "முதலூர்" என்றபெயரையுங் கொடுத்தனர். அங்கு 28 பேர்களை ஆதியில் குடியேற்றினர். அங்குள்ள ஜனங்களோ இப்போது 1500-க்கு அடுத்துள்ளார்கள். சென்னை இராஜதானியிலுள்ள மற்ற எந்த ஜில்லாக்களிலும் திருநெல்வேலி ஜில்லாவே அதிகமான கிறுத்தவர்களை யுடையதாகும். புராட்டஸ்டெண்டு மிஷன் விருத்திக்கு வந்ததற்கு, இவருக்குப்பின் ஹாக் (The Rev. J. Hough) என்ற பாதிரித்துரையும் காரணமாவார். ரோமன்கத்தோலிக் மதத்தில் ஊத்துமலைப் பாளையத்தை யடுத்துள்ள குருக்கள் பட்டியில் ஒரு பிராமணரை ஞானஸ்நானம் செய்துவைத்து கிறித்தவ மதத்தில் சேர்த்தவர் பெஸ்கி என்ற வீர மாமுநிவர். இவரைத் தைரியநாத சுவாமியென்றும் சொல்வதுண்டு. தமிழ்ப் பாஷைக்கு அகராதியை முதலாவதாக உண்டு செய்தவர் பெஸ்கியே. அந்த அகராதியை இன்னும் வீரமாமுநிவர் சதுர அகராதி என்று சொல்வதுண்டு. ரோமன்கத்தோலிக் கிறித்தவப் பாதிரி துரைமார்களும் புராட்டஸ்டெண்டு பாதிரித் துரைமார்களும் தமிழின் நயத்தையும் உருசியையும் தெரிந்து அதனைக் கற்று அதனுட் புகுந்து கிடக்கும் பாஷா இரகசியங்களையும் நுட்பங்களையும் கண்டு மனம் உவந்தவராகி அஃது க்ஷீணித்துவிடும் தருணத்திலிருக்கப் பார்த்து ஜீவோத்தாரணஞ் செய்து நிலைநிருத்தியதற்குத் தமிழ்

உலகம் அவர்கட் கென்றென்றும் கடமைப்பட்டுளது. தமிழ் உலகினராகிய நாம் அவர்கட்குதவுங் கைம்மாறு நமது மனப்பூர்வமாயுள்ள நன்றியறிதலே யாகும். அவர்களுள் வீரமாமுனிவர் என்றும் தைரியநாதசாமி யென்றும் அழைக்கப்படும் பெஸ்கி ஞானியாரும், ராபர்டி நோபிலபஸ் ஞானியாரும், போப்பு ஐயரும், கால்டுவெல் துரையும் ஆகிய மகான்கள் குறிப்பிடத் தக்கவர்களாக இருக்கிறார்கள்.

# இருபதாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

வெள்ளமும் கொள்ளை நோயும்

திருநெல்வேலியில் 1810-ம் வருடத்தில் கலெக்டராக யிருந்த ஹெப்பரன் என்ற துரையின் ஆக்ஷியில் ஒரு பெரும் வெள்ளம் அதற்கு முந்திய காலத்தில் இருந்திருப்பதில்லை என்று சொல்லும்படியான தன்மையில் நிகழ, அநேக உயிர்ச் சேதங்களும் கால்நடைகளின் சேதமும் பெரும்பொருள் நஷ்டமுமாகி க்ஷாமத்திற்குக் காரணமாகவும் நின்றதுடன், ஆழ்வார் திருநகரியில் 500 வீடுகள் வரை அரித்துக் கொண்டு போகப்பட்டன. இதனையடுத்துக் கொள்ளைக் காச்சலும் நாட்டிற்குட் பிரவேசித்து வெகு ஜனங்களை நாசஞ் செய்து விட்டது. செல்வ மருதூர் என்ற கிராமத்தில் 50 வீட்டிலிருந்த ஜனங்கள் முழுவதும் இறக்க, அவைகளடைபட்டு விட்டன. மற்றோர் கிராமத்தில் கொள்ளைக் காச்சலுக்கு அஞ்சி ஓடிப் போனவர்களை நீக்கி மற்றெல்லோரையும் கொள்ளைக் காய்ச்சல் வாயிற் போட்டுக்கொண்டது. இந்த வியாதியால் உண்டான சேதத்தால் ஜில்லா பூராவும் நடுக்கங் கொண்டுவிட்டது. இதன் காரணத்தைப் பலர் பலவாறாகச் சொல்லத் துணிந்து விட்டனர். சிலர் உப்பளத்திலிருந் துண்டான ஒரு கெட்ட வாடைக் காற்றென்றும், மற்றுஞ்சிலர் கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை முதலிய இடங்களில் இந்நோய் தோன்ற அங்கிருந்து வந்த ஜனங்கள் மூலமாகப் பரவியதென்றும்

கடைசியாகப் பழனிக்குச் சென்று திரும்பிய யாத்திரை வாசிகளாலேயே என்றுந் தீர்மானித்துக் கொண்டதின்பின் இதனைப் பற்றி விசாரித்துத் தடுப்பதற்கென்று (மெடிகல்) வைத்திய விசாரணைச் சபை ஒன்று நியமிக்கப் பட்டது. திண்டுக்கல் சீமையில் மொத்தம் இந்த வியாதியால் இறந்தோர் 33,000 ஜனங்களென்றும் மதுரையில் 100-க்குப் 10 பேர்கள் என்றும் இராமநாதபுரத்தில் 100-க்குப் 17 பேர்கள் என்றும் தெரியவந்தன.

திருநெல்வேலிச் சீமையில் இந்தநோய் பரவியது கள்ளை வடிப்பவர்கட்குள் அதிகமான பிடிவாதத்துடன் இருந்ததென்றும் தெரியவருகிறது. இந்தவியாதி ஆரம்பித்தகாலத்தில் நோயாளிகளுக்குள் மரணம் அதிகமாக யிருந்தது. காச்சல் வருகிற தினத்தன்றே கொடுமையாக யிருப்பதும், இரண்டாம்நாள் ஜன்னி தோஷம் காணப்படுவதும், மூன்றாம்நாள் இறப்பதுமாக இருந்திருக்கின்றது. மூன்றாம் நாளில் மரணத்துக்குத் தப்பிப் பிழைத்துக்கொண்டால் ஒன்பதாம் நாளில் காச்சல்தோன்றுவதில்லை எனினும்அதிலிருந்து பதினைந்து தினங்கள்வரை அதிக பலஹீனமான ஸ்திதியிலிருந்து அப்புறமாகச் சிறுகச் சிறுக பலமடைந்து தேறுவதற்கு ஒருமாதம் வரையுமாகும். இந்தக் கொள்ளைக் காச்சல் தோன்றிய ஆரம்பத்தில் நாள்தோறும் காய்ச்சல் இருந்து கொண்டிருக்க அதன் பின்பு இரண்டு தினங்களுக்கொரு முறையாகவும் தீராதவிதமாகவும் இருப்பதனால் நோயாளிகளுக்கு இரத்தம் வெளிப்படலாகும். இவ்வியாதி வேறுவகை



சிகிச்சைகளில் தீராதென்று வேப்பம் பட்டையே சிறந்த ஔஷதமென்றுந் தெரிந்து அதன்கஷாயத்தை சிகிச்சையாக உபயோகித்து வந்தார்கள். அதிற் குணமிருந்ததென்று தெரியவந்தது. மேலே நாம் பிரஸ்தாபித்துள்ள வெள்ளமானது 1810-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6.7.தேதிகளில் நிகழ்ந்ததாகும். இதற்கப்பால் ஒரு பெரும் வெள்ளம் 1827-ம் வருஷத்தில் சம்பவிக்க, அப்போது ஒரு அஸிஸ்டண்டு இஞ்சினீர் ஸ்ரீவைகுண்டம் ஜலத்தால் மூடப்பட்டதைத் தெரிந்து தன்னைத் தப்பித்துக்கொள்ளும் வண்ணம் மூன்று நாட்களாக அங்குள்ள கோபுரத்தில் வாசஞ் செய்தனர். 1847-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலும் ஒரு பெரும் வெள்ளம் நிகழ்ந்தது. 1867-ம் வருஷம் நிகழ்ந்த வெள்ளத்தின் போது அம்பாசமுத்திர முதலிய பக்கங்களில் நீர்நிலைத் திட்டம் 24 அடி என்று கணக்கிட்டிருக்கின்றனர். 1869-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த பெரும் வெள்ளத்தால் சுமார் ஆறு லக்ஷம் ரூபாய் வரை சேதமென்று தெரிவதுடன் திருநெல்வேலியில் சுலோசன முதலியார் பாலத்தில் நான்கு கண்களும் உடைந்துவிட்டன. அவை பின்னர் புதிப்பிக்கலாயின. 1874-ம் வருஷம் நவம்பர் மாதம் 24-ந் தேதியில் நேரிட்ட வெள்ளத்தின்போது பாளையங்கோட்டையில் நீர் நிலைத்திட்டம் 23 அடி என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. அதே வருஷம் டிசம்பர் மாதம் 5-ந்தேதியில் மற்றொரு பிரவாகம் ஏற்படக் கலெக்டர் துரையின் ஜாகையில் ஜலமிகுத்தேற, அங்குள்ளார் தப்பியது

மிக சிரமமாயது. 1895-ம் வருஷம் டிசம்பர் மாதம் 29-30-31 தேதிகளில் நிகழ்ந்த வெள்ளத்தில் சிந்து பூந்துறைத் தைப் புஷ்ய மண்டபத்திலிருந்தார் 13 பேர் ஜலத்தால் வாரிக்கொண்டு போக, அவர்களில் ஒரே நபர் மாத்திரம் உயிர் தப்பித்துக்கொண்டார். 1914-ல் நிகழ்ந்த பிரளயத்தால் ஸ்ரீ வைகுண்ட முதலிய இடங்களில் பெருத்த சேதமுண்டாயது. 16-12-1923ல் ஒரு பெரியவெள்ளம் தோன்ற, அதன் காரணமாக கொக்கரகுளம் கச்சேரிகளுக்குள் வெள்ளப்பெருக்கு ஏறி அநேக சேதங்களை யுண்டுபண்ணியதுடன் ஸ்ரீ வைகுண்டத்துப் பக்கங்களிலும் சேதம் அதிகமாயது.

## இருபத்தோராம் அத்தியாயம்

### தற்காலத்தியது

பூதக்களும் புதையல்களும்

ஆழ்வார் திருநகரியை அடுத்துள்ள தென் திருப்
பதி என்ற தென் திருப்பேரை யூரை அடுத்துள்ள
இடத்தில் ஸ்ரீ வைகுண்டம் அணைக்
கட்டின் தென்பாகத்திலிருந்து புதுக்
குடிக்கால்வாயில் திருச்செந்தூர்ப் பக்
கத்துக்கு வெட்டிக் கொண்டிருந்த சில கூலியாட்களுக்
குப் பூமியின்கீழ் நாணயங்கள் காணப்பட்டன. அவை
கள் எல்லாம் ஒன்று நீங்கலாக அராபிய நாணயங்
களாக இருந்தன. அவைகள் 13-ம் நூற்றாண்டினவை
களாகவு மிருந்தனவால் மார்கோபோலோ இந்தியா
விற்கு 1292-க்கு வருமுன்னரே சில அராபிய வியா
பாரிகளால் கொண்டு வரப்பட்டனவென்று யூகிக்க
நியாயமிருக்கிறது. வாய்க்காலை ரோட்டுப் பக்கமாகத்
திருப்புஞ் சமயம் ஒரு பாத்திரத்தில் இந்த நாணயங்
கள் காணப்பட்டன. அந்த ரோட்டு காயற்பட்டணத்
திற்கும் காயலுக்கும் செல்லும் வழியாகும். அக்காலத்
தில் திருநெல்வேலியில் கலெக்டராக இருந்த ஆர்.கே.
பக்கிள் துரை போர்டுக்கு 25-10-1873-ல் எழுதிய
ரிப்போர்ட்டு " ஸ்ரீ வைகுண்டம் அணைக் கட்டில்
25-12-1872-ல் வேலைசெய்து கொண்டிருந்த சிலகாங்
குக் கூலியாட்கள் ஒரு பெரிய செம்புப்பானையில் தங்
கக்கட்டிகளும் நாணயங்களும் இருக்கப் பார்த்தார்கள்.
அந்தப் பானை சென்னப்பட்டணம் முத்திரிப்படிக்கு
ஆறுபடி பிடிக்கும் அளவுள்ளது. அதில் சொர்னக்

கட்டிகளும் நாணயங்களுமாக நிறைந்திருந்தன! அதன் உத்தேசக்கிரயம் ஒரு லக்ஷம் ரூபாயாகும்!' "கூலியாட்களதனைப் பங்கிட்டுக்கொண்டு ஓடி விட்டார்கள். தாசில்தாருக்குத் தெரிந்ததில் அவர்களிடமிருந்து எண்ணாயிரம் ரூபாய்கள் மதிப்புள்ள தங்கக்கட்டிகளும் நாணயங்களும் வாங்கப்பட்டன. சோதனை போடப் போயிருந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பதறிவிட்ட ஒரு சிறிய பெண் குழந்தை சட்டி ஒன்றை எடுத்துக் கொண்டுபோய் நடு நடுங்கி அவர்களுக்கு முன்பாக அதனைப் போட்டுடைத்து விட்டதால் மேலே கண்ட தொகையில் பெரும்பாகம் இவ்விதமாகக்கிடைத்தது." "ஒரு கூலிக்காரனுக்கு இதில் தொளாயிரம் ரூபாய்கள் பங்கு கிடைத்ததாயும் அதனை ஒரு காவற்காரனிடம் கொடுத்துவைக்க அதனைத் திரும்பிக்கொடுக்க அவன் மறுத்து விட்டதாவுங் கேள்வி" "புதையல் சமாசாரத்தைக் கேட்டதும் கெஜட்டுகளில் நான் சட்டப்படிக்கு அமுல் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய விளம்பரம் செய்தேன். வேறு எதுவும் மேற்கொண்டு துலங்கவில்லை. கையிற் கிடைத்ததை சிவில் கோர்ட்டாரிடம் ஒப்புவித்து விட்டேன். விளம்பர வாயிதாக்கழியவும் அதனைப்பற்றி விசாரித்துப் பைசல் செய்யப்படுமென்று தெருவித்தேன்." "அகப்பட்ட நாணயங்களிலிருந்து ஒரு ஐரோப்பிய நாணயம் நீங்கலாக மற்றவைகள் எல்லாம் அராபிய நாணயங்களாகும். 1236-ல் அடிக்கப்பட்ட காஸ்டைல்ஜோவன்னவின் முத்திரை யுடையதொன்று. மற்றொரு நாணயம் 71ம் ஹிஜிரா வருஷத்தியது. ஏனையவைகளனைத்தும்



ஸுல்தான் சாலாடின் பெயரை யுடையதாக இருக்கின்றன." "பூமியைத் தோண்டி சோதனை செய்வதைக் காயல் முதலிய இடங்களிலிருக்கும் ஜனங்கள் புதையல் நிமித்தமே அவ்வாறு செய்வதாக நினைத்துக் கொண்டு எங்களிடம் புதையல்களைத் தோண்டி எடுப்பதில் பூதங்களின் கோபத்திற்குப் பாத்திரராகாமலிருந்துகொள்ளுங்கள்என்று எங்களை எச்சரிப்பதுண்டு. கொற்கையை நான் தோண்டிச் சோதனை செய்யும் போது என்னிடம் சிலர் கோயிலண்டையும் விக்கிரகங்களண்டையும் தோண்டக் கூடாதென்று மிக்க ஆத்திரத்துடன் கேட்டுக்கொண்டதில் அங்கு ஏதேனும் புதையல்களிருக்கக் கூடும் அவைகளைப் பூதங்களும் பிசாசுகளும் காத்துக்கொண்டிருப்பதால் உங்களுக்கு மோசம் சம்பவிக்குமென்றும் சொல்லினர். அவர்கள் சொல்லியபடி கோயிலண்டையும் விக்கிரகங்களண்டையும் போவதில்லை என்று உறுதி சொன்னேன். என்னுடைய சிநேகிதரான ஆறுமுக மங்கலம் M.—என்றவர் முந்திய கலெக்டர் மிஸ்டர் பக்கிள்துரைக்கு காயலண்டை ஒரு புதையலை எடுப்பதற்குச் சகாயம் செய்ததால் அதைக் காத்துக்கொண்டிருந்த பூதங்களுக்கும் பிசாசுகளுக்கும் கோபம் பிறந்ததால் அவரைத் தொந்தரவு செய்துவிட்டனவாம். காயலண்டைதோண்டிப்பார்த்த அன்றிரவே அங்குள்ள புதையலின் குவியைக் காத்துக்கொண்டிருந்த ஒரு பூதம் அவருக்குக் கனவிற் றோன்றி உரத்த தொனியுடன் 'என்னுடைய காப்பிலுள்ள புதையலைத் தோண்டி எடுக்க நீ யார்' என்று கேட்க, அவர் [illegible] எழுந்து

ருக்கும்போது கழுத்துக்கும் காலிற்கும் ஒன்று சேர்த்துக் கட்டிப்போட்டது போலிருந்ததாகவும் பிறரைக் கூப்பிட்டு அதனை அவிழ்க்கும்படியாகச் சொல்லியது தோற்ற மாத்திரத்திலன்றி உண்மையிலுமிருந்ததாம். இனிமேலாகநான் அத்தகைய அலுவல்களுக்கு அழைத்துக்கொண்டு போவதில்லை. நீர் நடந்தவைகளைச் சர்வ சாதாரணமாகச் சொல்லும் என்று கேட்டேன். அவர் நடந்தவைகளை எல்லாஞ் சொல்லினர். அப்படிச் சொல்லும்போது அவருக்கு அந்த முன்னுள்ள பீதி அப்பொழுது மிருந்ததாகத் தெரிந்தது. ஐரோப்பியர்களுக்குத் தாங்கள் இப்பேர்ப்பட்டவைகளை நம்பமாட்டோமென்று சொல்வது பேச்சில் மாத்திரமேயன்றி அந்தரங்கநம்பிக்கையுண்டு. திருநெல்வேலியில்கொஞ்சகாலத்துக்கு முன்பு கலெக்டர் ஒருவரிருந்தனர். அவர் ஓர் இடத்தில் ஒரு ஸ்திரியின் அடுத்த ஜன்மத்திற்கு எடுத்துக்கொள்வதென்று மறைத்துவைத்துப் பூமியில் பெரும் நிதியைப் புதைத்து வைத்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டு, அதனைத் தோண்டி எடுக்க முயற்சி செய்தார். அதனைத்தோண்டி நீர் எடுப்பீராகில் அதன் கூலியின் பயனை அடையவேண்டியதாக இருக்கும். நீர் அப்படிச் செய்யலாகாதென்று தடுத்தும் அவ்விதம் சொல்லுகிறவர்கள் பேச்சை எல்லாம் உதறிவிட்டு முதல்நாள் தானும் மறுதினங்களில் வேலையாட்களையும் விட்டுத் தோண்டும்படி செய்ய ஏற்பாடு செய்தார். அப்படித் தோண்டிக்கொண்டிருக்கும் ஒரு நாளிரவில் ஒரு கல்பாண்டம் தோன்றுவதைக் கண்ணுற்ற கலெக்டர் அந்த இடத்தில் சரியானபிரகாரம் பந்தோபஸ்துடன் ஆட்களை ஏற்பாடு செய்துவிட்டு மறுநாட்



காலையில் அதனை எடுத்துச் சோதிக்கலாமென்று நித்திரை செய்வதற்குத் தன்னுடைய கூடாரத்திற்குள் போய்விட்டார். விடியவும், அவருடைய கூடாரத்துக்குள் அவரைக் காணப்படாமல் வெகு தூரத்திலுள்ள பாளையங் கோட்டையிலிருக்கும் அவருடைய பங்களாவிலிருந்தனர். இஃது உண்மையாயின் புதையல்கள் உள என்றதும், அவைகளைக் காத்துக் கொண்டிருப்பன பூதங்களும் பிசாசுகளுமா மென்றதும், அவைகளைத் தோண்டி எடுப்பவர்களுக்குக் கேடு பிடரியிலிருக்கிற தென்றதும் நிச்சயமென்னலாம்.”

சிலர்களுக்கு இவைகளின் தொந்தரவுகளின்றியே கிடைத்திருப்பனவாகவும் கேள்விப் படுகிறோம். மதுரையில் திருமலை நாயக்கரின் அரண்மனையை அடுத்துள்ள பக்கங்களிலும், தஞ்சாவூர் அரண்மனை மேட்டுப் பக்கங்களிலும், இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளிலிருந்த பொந்தம் புளிய மரங்களிலுள்ள பொந்துகளிலும் புதையல்க ளிருந்தன வென்றும் அவைகளைச் சிலர் எடுத்துத் தனிகர்களாயினர்கள் என்றதுங் கர்ண பரம்பரை. வைப்பாறு என்ற நதியின் கரையில் முன்னம் ஒரு பைசாசங் காத்துக்கொண்டிருந்த புதையலை எடுத்ததாயும் அதன்காரணமாகவே ஒருவர்பண்டு தொட்டு அந்நதிக்கு ‘வைப்பாறு’ என்று பேராயதாயுங் கூறுவர். வைப்பு என்ற சொல்லுக்குப் ‘பூமியின் கீழ்ப்புதைத்து வைக்கப்பட்ட பொருள் என்றது’ பொருளாகும். இது பற்றியே அந்நதிக்குச் சம்ஸ்கிரதத்தில் ‘நிக்ஷேப நதி’ என்று பேர் வந்தது. நிக்ஷேபம் என்றது புதையல் என்றதின் பிறமொழி.

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

## தற்காலத்தியது

**வித்வான்களிற் சிலர்கள்**

ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ள அகஸ்தியரைத் தமிழ் முநி என்றோம். அவரிருந்த நாடும் நமது ஜில்லாவானதால் நமது ஜில்லாவின் பெருமை மற்றெந்த நாட்டிற்கும் ஏற்படமாட்டாதென்பது ஒருபுறமிருக்க, திராவிட மகா பாஷிய கர்த்தரான மாதவச் சிவ ஞான முநிவர், ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரசாமி, ஒப்பிலாக் கலைஞர் சுப்பிரமணியத் தம்பிரான், நன்னூலுக்கு விருத்தியுரை எழுதிய சங்கர நமச்சிவாயப் புலவர், நம்மாழ்வார், பெரியாழ்வார், உள்ளமுடையான், ஈசானிய தேசிகர், கடிகை முத்துப் புலவர், உமறுப் புலவர், பெத்தண தளவாய், அரிச்சந்திர புராணம் பாடிய வீரகவிராயர், திரிகூடப்ப ராஜக் கவிராயர், வடமலைப் பிள்ளையன், அருமருந்த தேசிகர், திருநெல்வேலிப்பேட்டை ஆறுமுகம் பிள்ளை, மயிலேறும் பெருமாள் பிள்ளை, தலைமலைகண்ட தேவர், சிவசங்கரப் பாண்டியப் புலவர், நாகூர் முத்துப் புலவர், இவரது கொள்ப்பேரன் நாகூர் முத்துப் புலவர், சண்டமாருதப் புலவர், தெய்வநாயகப் புலவர், சுப்பிரமணியப் புலவர், குமாரெட்டுப் புலவர், முத்துக் குமாருப் புலவர், கடிகை நமசிவாயப் புலவர், துரிதகவி திருமலைக்கொழுந்துக் கவிராயர், காளிமுத்து, குமரசாமியார், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டி, ஹெயிச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை, அழகிய சொக்கநாதம் பிள்ளை, இன்ப கவிராயர் என்ற சவுரியார், ஹென்றிக் லேமோன், அதிவீரராம பாண்டியன், வரகுணராம பாண்டியன், வசைகவி ஆண்டான், தண்டாயுதபாணி சாமி என்ற சந்தக்கவி முருகதாஸசாமி, ஸ்ரீநிவாச அய்யங்கார், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, சாமி விருதை சிவஞான யோகி, சுப்பிரமணியக் கவிராயர், கா. சுப்பிரமணிய பிள்ளை, எட்டயபுரம் ஸி. சுப்பிரமணிய பாரதி

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் என்பார் இந்த ஜில்லாவிலுள்ள கடையத்திற் பிறந்து எட்டயபுரத்துச் சீமையைச் சார்ந்த ஈரால் கிராமத்தில் வசித்தனரென்றும் அவரை க்ஷத்திரிய சான்றோரின் குருவென்றும் அவரை மதிப்புடன் வியந்து கொண்டாடியவர் எட்டயபுரத்திலுள்ள புங்கவர் நத்தம் கிராமத்தில் வசித்த ஒரு தனிகரான வெளிகண்ட நாடாரென்றும் ஒருசாரார் சாதிக்கின்றனர். மற்றொரு சாரார் அவரை வைணவரென்றும் காஞ்சிபுர வாசியினரென்றும் சாதிக்கின்றனர். இதன் உண்மையைக் குறித்து இது சமயம் நாம் நிச்சயமாகக் கூறும் நிலைமையில்லாததால் அதனைக் குறித்துப் பலரும் நன்காராய்ச்சி செய்து முடிவுக்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்ளுகிறோம். காஞ்சிபுரத்தினர் என்றதைத் தொண்டமண்டல சதகம் கூறுகின்றது. ஆனால் ஈராலிலோ பரிமேலழகரின் சமாதி ஒன்றுளது. அச் சமாதியில் அடைந்துள்ளோரைக் குறள் உரை ஆசிரியர் என்கிறார். சந்தக்கவி முருகதாஸ சாமியின் சமாதி தென்னாற்காட்டு ஜில்லாவிலுள்ள திருவாமாத்

தூரி லிருக்கின்றது. சங்கீத வித்வான்களில், உலகப் பிரஸித்திபெற்ற முத்துசாமி தீக்ஷிதர், அன்னோர் சகோதரர் பாலசாமி தீக்ஷிதர், இன்னோர் குமாரர் சுப்பராம தீக்ஷிதர், வைணீகர் இராமசாமி தீக்ஷிதர், இராமச்சந்திர பாகவதர், ஸ்ரீ வைகுண்டம் சுப்பையா பாகவதர், கடையம் சுப்பய்ய சாஸ்திரி, இலத்தூர் இராமசாமி சாஸ்திரி, கல்க்குளம் பாஸ்கர பாகவதர், மீனைய பாகவதர் முதலியவர்களாவார்கள். ஆந்திர ஸம்ஸ்கிருத வித்வான்களில் குப்பணையங்கார்* சாமி தீக்ஷிதர், வேங்கடபதி அய்யங்கார், கிருஷ்ண அய்யர், சங்கர சாஸ்திரி, குருநாத சாஸ்திரி, திரு. வீ. சாமி அய்யங்கார், செல்லபட்டர், T. S. முருகேசப் பிள்ளை முதலியவர்களாம்.

சிற்பம்

கழுகுமலை, தென்காசி, கிருஷ்ணபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் காணப்படும் கல்வேலைகளும் சிறந்து தோன்றலால் சிற்பவேலைத் திறனிலும் இந்த ஜில்லா பூர்வமுதல் தேர்ச்சி பெற்றதென்று தெரிய வருகிறது.

---

* இன்னோர் சந்ததியினர் ஸ்ரீரங்கத்தில் வசிக்கின்றனர். போலீஸ் டிப்டி சூப்பிரண்டண்டெண்டு ராவ்சாஹிப் நாராயண அய்யங்கார், வக்கீல் ஸ்ரீநிவாசசாரியார் முதலியவர்களாவார்கள்.

## இருபத்துமூன்றும் அத்தியாயம்

## தற்காலத்தியது

கும்பினித் துரைத்தனத்தாரின் ஆட்சியில் வந்துள்ள இந்த ஜில்லாவில் சமாதானம் நிலையூன்றி நீதி தழைத்தோங்க ஜனங்கள் யாவரும் பேரானந்தமடைந்து வாழும் நாட்களில் 'நல்ல எருமையில் ஒரு நரை விழுந்ததென்பதை' ஒப்ப, சில பொறுப்பற்ற பேர் வழிகளால் அவ்வப்போது பொதுஜன சமாதானத்திற்கு ஆங்காங்கு சிறுகச் சிறுகச் சஞ்சலங்களும் கலகங்களும் ஏற்பட்டுவிட்டன என்றதில் கீழே கண்டுள்ளவைகள் முக்கியமானவைகள். ஆதலால் அவைகளையும் சிறிது கூறி முடிப்போம். இந்த ஜில்லாவில் 1858-ம் வருஷம் கலெக்டராக இருந்த வி. ஹெயிச் லெவிஞ்சு துரையின் காலத்தில் திருநெல்வேலியிலிருந்து ஒரு பிரேதத்தைப் பாளையங்கோட்டைக்குச் சாமிசந்நிதி வீதி வழியாகக் கொண்டுபோவதைச் சிலர் கூடாதென்று தடுத்துக்கலகம் செய்ய, உடனே கலெக்டர் ஜனங்களுக்கு வேண்டிய சமாதானஞ் சொல்லியும் அதனை அவர்களில் எவரும் சிறிது கூடப் பொருட்படுத்தாததுடன் அவரைத் தூஷணமாகப் பேசிக் கலகத்துக்கு எத்தனிக்கவும், தன் பக்கம் நின்றுகொண்டிருந்த சிரஸ்ததார் வீரபத்திர பிள்ளை என்பாரிடங் கலந்து ஒரு முடிவு செய்வதற்குள் துரைமீது சரமாரியாகக் கற்களைப் பொழியக் கண்ட சிரஸ்ததார் நடுநடுங்கித் துரையவர்களைக்கொண்டு கூட்டத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தாலன்றி வேறு மார்க்

கங் கிடையாதெனவும், துரையும் அவருடைய அபாய நிலைமையை உத்தேசித்துச் சுடும்படிக்கு ஆர்டர் செய்யவும், சூட்டிற் சிலர் இறக்கவும், சந்தடியும் நின்றுவிட்டது. இப்படி இறந்தாருள் * சிரஸ்ததார் வீரபத்திர பிள்ளையின் குமாரரும் ஒருவராவர்.

2. காலஞ்சென்ற ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியார் பிரின்ஸ்ஆப் உவேல்ஸாக இருந்த காலத்தில் இந்த ஜில்லாவிற்கு 10-12-1875-லும் 1889-90-ல் பிரின்ஸ் ஆல்பர்ட்டு விக்டர் இளவரசரும் விஜயஞ்செய்தனர்.

3. இதன் பின்னர் 1898—1899-ல் ஆக்டிங் கலெக்டராக இருந்த இ. ஸ்காட்டுத் துரையின் காலத்தில் நாடார்களுக்கும் பிற ஜாதியினர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஜாதிச் சண்டையில் சிவகாசி, விருதுபட்டி, சுரண்டை முதலிய இடங்களில் ஒருவருக்கொருவர் வீணைக் குத்திக்கொண்டும் இறந்துகொண்டும் வீடுகளைக் கொளுத்தி எரித்தும் ஜனங்களைத் திடுக்குறுமாறு செய்துவிட்டனர். இக்கலகத்தில் பல்லுயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களுமுண்டாயின. ஸ்காட்டுத்துரை ரஜாவில் செல்லவும், 1899-ல் கலெக்டர்

* கலெக்டர் வி. ஹெயிச். லெவிஞ்சுதுரை பிற்காலத்தில் சர்ப்பட்டம் அடைந்தனர். திருநெல்வேலித்தெற்குப்புதுத்தெருவில் ஜுபிலிஹால் திருமலையப்பபிள்ளை என்றவர் சிரஸ்ததார் வீ. பிள்ளையின் இரண்டாவது குமாரர். இவரது புத்திரரும் சிரஸ்ததார் வீ. பிள்ளைக்குப்போனுமான வீரபத்திரபிள்ளை என்பார் ஒருவர் ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்டுமெண்டில் குமாஸ்தாவாக இருக்கின்றார்.



பெட்வோர்டுதுரை கலெக்டராகவும் சச்சரவுகள் நின்றுவிட்டன.

4. சுதேசி ஸ்டீம்நாவிகேஷன் கம்பெனியின் காரணமாக 1908-ல் வக்கீல் வி. ஓ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலியவர்கள் செய்துவந்த பிரசங்கங்களால் சிலருக்குத் தலைகால்தெரியாது வேண்டியவாறு மனப்பாலைக் குடித்துக்கொண்டு கவர்ன்மெண்டாருக்கும் பொதுஜன சமுகத்திற்கும் இடுக்கண்களை இழைக்கலாயினர். திருநெல்வேலியிலுள்ள முனிசிபல் ஆபீசையும் சர்ச் மிஷியன் காலேஜையும் போலீஸ் ஸ்டேஷனையும் வேறு சிலவற்றையும் நஷ்டப் படுத்திவிட்டுத் தெருக்களிலுள்ள விளக்குகளையும் சேதப்படும்படி செய்துவிட்டனர். இதையறிந்த கலெக்டர் எல். யம். உவிஞ்சுதுரை நேரிற்போய் வேண்டிய சமாதானத்தை கலகக்காரர்களுக்குச் சொல்லியும் அவர்கள் அதனைக் கேளாமல் மூர்க்கமாக துரையின்மீது கற்களை எறியவும், இனிவேறு வழியில்லையென்று தெரிந்த கலெக்டர் கூட்டத்துக்குள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய, 2,3, பேர் இறந்தனர். கலகமும் ஓய்ந்தது. இவ்வகையில் திருநெல்வேலி தச்சநல்லூராகிய இடங்களில் கலகம் செய்தவரில் 53 பேர் வழிகளும் தூத்துக்குடியில் 36பேர் வழிகளும் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனைக் குள்ளானார்கள். தூத்துக்குடியில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 36பேர் வழிகளில் ஒருவர்மாத்திரம் விடுதலையடைந்தார்.

5. செங்கோட்டை ரெகுபதி அய்யரின் குமாரனும் பாரஸ்ட்டில் கார்டாகவு மிருந்துவிட்டுப் புதுச்

சேரி முதலிய இடங்களுக்குச்சென்று மறுபடியும் இங்கு திரும்பிவந்து செங்கோட்டை, புனலூர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய இடங்களில் அந்தரங்கமாக இராஜத் துரோக சபைகளைக் கூட்டிப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமான தீர்மானங்களை முடிவுசெய்து வைத்திருந்த முன் தீர்மானத்துக்குச் சரியாகத்தானோ அன்றேல் வேறெக் காரணத்தானோ 6-7-1911ல் கொடைக்கானல் செல்லக்கருதிப் புகைவண்டியிலேறிய கலெக்டர் ஆஷிதுரையைப் பின்பற்றி அதே வண்டியில் ஏறிச்சென்ற மேலே சொல்லியுள்ள ரெகுபதி அய்யரின் குமாரனான வாஞ்சி என்ற பாதகன் மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் வைத்துக் கலெக்டர் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டான். அவனும் பின்னர் கக்கூசுக்குள் புகுந்து தன் வாயின் வழியாகச் சுட்டுக்கொண் டிறந்து விட்டான். அவன் கையிலிருந்த துப்பாக்கி ஹாம்பர்க் ரிவால்வரென்று பின்னர் தெரியவந்தது. இக்கொடிய நிகழ்ச்சியின் மூலகாரணம் இன்னதுதானென்றது நிச்சயப்படாமலிருக்கும்பொழுது கல்கத்தாவில் அது சமயமிருந்த தஞ்சாவூர் ஜில்லா எறுக்கூர் நீலகண்ட பிரமச்சாரி என்பார் மூலம் சிறுகச் சிறுக வெளிவரவும் அவரும் மேலே சொல்லிய இடங்களில் நிகழ்ந்த சபைகளில் ஆஜரா யிருந்தாரென்று தெரியவர அவருள்பட்டு 14 பேர்வழிகளைச் சார்ஜு செய்யப்பட்டதில் 9 பேர் மட்டும் தெண்டனை யடைந்தனர். அப்போது கலெக்டராக வந்திருந்த கில்மேன் துரையின் நிதானமான புத்தியும் ஆழ்ந்த அறிவும் பிறர் சொல்லுக்கிணங்கி



[illegible]தையும் அவசரப்பட்டு செய்யாமையுமாகிய சிறந்த நற்குணங்களே அநேக நிரபராதிகளையும் தப்பித்து விட்டதற்குக் காரணமாக நின்றன.

## முடிவுரை

நம்முன்னோர்கள் நிலையற்ற தன்மையில் திருடர்கள் பயத்துக்கும், துஷ்டர்களின் அக்கிரமச் செய்கைகளுக்கும் கொடுங்கோன்மைக்கும் ஆட்களாகிக் காலங் கழித்து வருவதைக் கண்ணுற்ற சர்வக்ஞரான கடவுள் கருணைகூர்ந்து ஈஸ்ரவேலர்கள் வனாந்தரப் போக்கில் பசிப்பிணியாலடைந்த கஷ்டங்களைச் சகியாதவராகி எங்ஙனம் அன்னோர்களின் பசிப்பிணியை மன்னாவென்ற அப்பங்களை வானினின்றும் பொழிந்து ஆற்றி வைத்தனரோ, அங்ஙனமே இந்தியநாட்டின் புதல்வராகிய நம்மவரடைந்த கஷ்டங்களைச் சகியாமல் அதனை நிவிர்த்தி செய்து வைப்பதற்கென்றே ஆங்கிலேயரை நமக்கு அருள; அன்னோர்களின் ஆட்சியின் கீழ் நாமடையும் நன்மைகள் எண்ணிறந்தனவாகின்றன. துஷ்டர்களின் அக்கிரமச் செயல்களையும் திருடர்களாற் பீடித்திருந்த பயங்களையும் கொடுங்கோன்மையால் ஏற்பட்டிருந்த கஷ்டங்களையும், மன்னாவைக் கண்டெடுத்துப் புசித்த ஈஸ்ரவேலர்களின் பசிப்பிணியைத் தீர்த்து அவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்ததை ஒப்ப, ஆங்கிலேய ஆட்சி என்ற மன்னா ஒருங்கே தொலைத்து விட்டது. நீதியே உருவெடுத்து வந்துள்ள ஆங்கில அரசு நம் நாட்டில் ஓங்கித் தளிர்த்து நீடூழி காலம் நிற்குமாறு பிரார்த்திக்கிறோம். சுபம்.

## இந்த ஜில்லாவில் உத்தியோகம் வகித்த கலக்டர்களின் விவர அட்டவணை

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 1790 | பெஞ்சமின்டோரின் |
| 1792 | ஜே. லண்டன் |
| 1794 | ஜே. பவுனி |
| 1797 | டப்ளியு. வி. ஜாக்ஸன் |
| 1799 | எஸ். ஆர். லஷிங்டன் * |
| 1801 | ஷை |
| 1803 | ஜ்யார்ஜ்பாரிஷ் (ஆக்டிங்) |
| ஷை | ஜே. காக்ரேன் |
| 1806 | ஜே. ஹெப்பான் |
| 1807 | ஜே. ஹான்புரி (ஆக்டிங்) |
| ஷை | ஜே. ஹெப்பான் |
| 1810 | ஜே. ஹான்புரி (ஆக்டிங்) |
| ஷை | ஜே. ஹெப்பான் |
| 1812 | ஜே. வி. டரன்புல் (இன்சார்ஜு) |
| 1812 | ஜே. ஹான்புரி (ஆக்டிங்) |

* பிற்காலத்தில் சென்னைக் கவர்னராயினர்.

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| ஷை | ரிகார்டில்லே |
| 1814 | ஜே. காட்டன் |
| 1816 | இ. ஹெயிச். உவுட்காக் (ஆக்டிங்) |
| ஷை | ஜே. காட்டன் |
| 1819 | ஆர். ஹெயிச். யங்க். (ஆக்டிங்) |
| 1820 | ஷை பெர்மனன்று. ஜே. தாமஸ்(இன்சார்ஜு) |
| ஷை | ஹடில்ஸ்டன் |
| 1823 | இ. பானர்மான் (இன்சார்ஜு) |
| ஷை | ஜே. ஏ. மன்ரோ |
| 1827 | ஹெயிச். டப்ளியூ. கிண்டர்வலி |
| 1728 | ஜி. டி. ஒரூரி |
| 1832 | ஏ. மெல்லர் (இன்சார்ஜு) |
| ஷை | ஆர். ஈடன் |
| ஷை | ஸ்டோன்ஹவுஸ் (ஆக்டிங்) |
| ஷை | ஜே. பிளாக்பான் (ஷை) |
| 1833 | ஆர். ஈடன் |
| 1834 | ஜே. பிஷோப் (இன்சார்ஜு) |

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 1834 | ஜே. வி. ராட்டன் (ஆக்டிங்) |
| 1837 | ஜே. பிஷோப் (இன்சார்ஜு) ஆர். ஈடன் (பெர்மனன்டு) |
| ஷை | இ. பி. தாம்ஸன் (ஆக்டிங்) |
| 1839 | ஆர். ஈடன் |
| ஷை | வி. ஜே. பெர்டு (இன்சார்ஜு) |
| 1840 | இ. பி. தாம்ஸன் (பெர்மனன்று) |
| ஷை | டப்ளியு. வி. ஓஜில்வி (ஆக்டிங்) |
| 1841 | ஹெயிச். வி. மாண்ட்கோமரி* |
| 1842 | இ. பி. தாமஸ் (ஆக்டிங்) |
| 1843 | ஷை (பெர்மனன்று) உவிட்டிங்காம்(ஆக்டிங்) |
| ஷை | இ. பி. தாமஸ் |
| 1846 | எப். பி. எல்ட்டன் (ஆக்டிங் இன்சார்ஜு) |
| ஷை | ஆர். டி. பார்க்கர் (ஆக்டிங்) |
| 1847 | எப். பி. எல்ட்டன் (ஆக்டிங்) |
| 1848 | இ. பி. தாமஸ் |
| ஷை | வி. உவிட்டிங்காம் (இன்சார்ஜு) |
| ஷை | எப். பி. எல்ட்டன் (ஆக்டிங்) |
| 1849 | வி. உவிட்டிங்காம் (இன்சார்ஜு) |

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 1849 | வி. ஜே. பெர்டு (ஆக்டிங்) |
| 1851 | ஷை பெர்மனன்று |
| 1855 | ஜே. வில்வர் (ஆக்டிங்) |
| 1856 | ஷை பெர்மனன்று |
| 1858 | டி. மெயிலி |
| ஷை | வி. ஹெயிச். லெவிஞ்ச * (ஆக்டிங்) |
| 1859 | ஜே. வில்வர் |
| 1865 | ஜி. பான்புரி (ஆக்டிங்) |
| ஷை | ஏ. வெட்டர்பான் |
| 1866 | மாக்கிர்கோரி (இன்சார்ஜு) |
| 1866 | ஆர். கே. பக்கிள் |
| 1868 | ஜே. பி. பென்னிங்டன் (ஆக்டிங்) |
| ஷை | வி. டி. லாங்லி (ஆக்டிங்) |
| 1870 | ஏ. ஜே. ஸ்வேர்ட்டு (ஷை) |
| ஷை | ஜே. ஆர். ஆர்பத்நட் (ஷை) |
| ஷை | ஆர். கே. பக்கிள் |

* இவ்விருவர்களும் பின்னர்சர்பட்டம் பெற்றனார்கள்.

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 1874 | டப்ளியு. ஏ. ஹாப்பல் (ஆக்டிங்) |
| ஷை | டப்ளியு. ஹெயிச். கோமின் (ஷை) |
| ஷை | ஆர். கே. பக்கின் |
| ஷை | டப்ளியு. ஹெயிச். கோமின் |
| 1875 | டப்ளியு. ஏ. ஹாப்பல். (ஆக்டிங்) |
| ஷை | ஜே. பி. பென்னிங்டன் (பெர்மனன்று) |
| ஷை | ஏ. ஜே. ஸ்வேர்ட்டு (ஆக்டிங்) |
| 1876 | டப்ளியு. ஹெயிச். கிளன்னிங் (ஷை) |
| ஷை | ஏ. ஜே. ஸ்வேர்ட்டு (ஷை) |
| 1877 | ஜே. பி. பென்னிங்டன் |
| 1880 | ஏ. எல். லிஸ்டர் (ஆக்டிங்) |
| ஷை | ஜே. பி. பென்னிங்டன் |
| 1883 | ஏ. ஜே. பி. அட்கின்ஸன் (ஆக்டிங்) |
| 1884 | ஜே. லீவார்னர் |
| 1885 | ஹெயிச். எம். உவிண்டர் பாதம் |
| 1886 | எஸ். ஏ. உரைனி (ஆக்டிங்) |
| ஷை | ஜே. லீவார்னர் |
| 1887 | வி. எப். மாக்விஸ்டே (ஆக்டிங்) |
| 1888 | எப். ஏ. நிக்ல்ஸன் (ஷை) |

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 1888 | ஜே. தாம்ஸன் (ஆக்டிங்) * |
| 1889 | ஏஸ். ஏ. நிக்ல்ஸன் (ஷை) |
| ஷை | ஜே. ஹெயிச். டிரிம்னியர் (ஷை) |
| 1890 | எப். ஏ. நிக்ல்ஸன் (பெர்மனன்று) |
| 1891 | ஜி. எஸ் பார்பஸ் |
| 1894 | பி. மாக்ளியாட் (ஆக்டிங்) |
| ஷை | ஏ. டப்ளியு. ஹெக்கின்ஸ் |
| 1897 | ஆர். பி. கிளக் (ஆக்டிங்) |
| 1898 | ஏ. டப்ளியு. ஹெக்கின்ஸ் |
| ஷை | இ. ஸ்காட்டு (ஆக்டிங்) |
| 1899 | பெட்போர்டு (ஷை) |
| 1900 | எல். இ. பக்ளி (ஷை) |
| 1904 | ஆர். எப். ஆஸ்டின் (ஷை) |
| ஷை | எல். இ. பக்ளி. |
| 1905 | டி. டி. மர்டாக் |
| 1907 | எப். ஏ. கோல்ரிட்ஜ். |

* இவர் சர்பட்டதாரியாகி சென்னபட்டணம் ஆக்டிங் கவர்னராகவு மிருந்தனர்.



| கி. பி. | [illegible] |
|---|---|
| 1907 | எல். எம். [illegible] |
| 1908 | எஸ். டப்[illegible] ஹெயிச். மாக்வீர் (ஆக்டிங்) |
| 1909 | எல். டேவிட்ஸன். |
| 1910 | ஆர். டப்ளியு. டி. இ. ஆஷி. |
| 1911 | ஹெயிச். எஸ். டப்ளியு. கில்மான் |
| ஷை | டப்ளியு. பிரான்வலிஸ் |
| 1912 | ஜே. வி. மலோனி (ஆக்டிங்) |
| 1913 | ஜே. ஹெயிச். பி. ஜாக்ஸன் (ஷை) |
| 1914 | வி. ஜி. டாட்ஹண்டர் |
| 1915 | எப். ஆர். ஹெம்மிங்வே (ஆக்டிங்) |
| 1916 | ஹெயிச். டி. ரெயிலி 21-9-16 / 26-11-16 |
| 27-11-16 / 13-8-17 | ஏ. எம். ஏ. வி. காலெட்டி |
| 16-8-17 / 20-10-18 | எஸ். டப்ளியு ஜி. மாக்வீர் |
| 21-10-18 / 7-11-20 | ஏ. ஆர். காக்ஸ் |
| 8-11-20 / 9-7-23 | இ. ஏ. டேவிஸ் |

| கி. பி. | மிஸ்டர் |
|---|---|
| 10-7-23 / 15-11-23 | இ. எம். கான்னி |
| 26-11-23 / 10-7-25 | ஹெயிச். ஹெயிச். பர்கட்டு |
| 11-7-25 / 20-11-25 | இ. எம். கான்னி |
| 21-11-25 / 12-10-27 | ஏ. எம். வி. ஜி. வி. தம்பு |
| 13-10-27 / 27-11-27 | கே. சிதம்பரம் அய்யர் |
| 28-11-27 / 6-8-29 | ஏ. எம். ஏ. வி. காலெட்டி |
| 7-8-29 / 5-10-29 | டி. பகவானக்தகுப்தா (ராவ்பகதூர்) |
| 6-10-29 / 28-3-30 | ஏ. எம். ஏ. வி. காலெட்டி |
| 29-3-30 / 27-8-31 | வி. என். விஸ்வநாதராவ் (ராவ்பகதூர்) |
| 28-3-31 | உவுட் ஹவுஸ் |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 29 | 2 | [illegible]ரம் | தேசம் |
| 35 | 27 | சிலொனை | சிலோனில் |
| 47 | 28 | இடத்தில்தான் | இடத்தில்த்தான் |
| 53 | 15 | அரசருக்கு | அரசர் |
| 66 | 28 | அடைத் | அடைந் |
| 74 | 21 | எட்டயபுத் | எட்டயபுரத் |
| 88 | 7 | ஜமேதர்கள் | ஜமேதார்கள் |
| 92 | 12 | தனக்குத் | தனக்குக் |
| 113 | 17 | பாக்கிகளுக்கும் | பாக்கிகளுக்கு |
| 118 | 7 | ஸ்ரீரெங்கப் | ஸ்ரீரெங்க |
| 118 | 27 | அத | அந்த |
| 119 | 7 | சொல்லிவிட்டார்கள் | சொல்லிவிட்டார் |
| 120 | 6 | Morquis | Marquis |
| 122 | 18 | பாக்கிகளுக்காகக் | பாக்கிகளுக்காகக் |
| 124 | 17 | குறிக் | குறிச் |
| 131 | 23 | ரும்பிவரும் | திரும்பிவரும் |
| 134 | 27 | இதற்குப் | இதற்குச் |
| 136 | 14 | குப்பினிச் | கும்பினிச் |
| 152 | 23 | ஆலி, னாயக்கின் | ஆலிநாயக்கின் |
| 156 | 19 | முகம் | முக |
| 159 | 12 | இச்சையின் | இச்சைகளின் |
| 166 | 21 | னே | லே |
| 209 | 15 | பேஷி | பேஷ் |
| 247 | 7 | சமஸ்தா | சம்ஸ்தா |
| 247 | 21 | முதலியார். | முதலியார், |
| 247 | 22 | இவர் | நீக்கிவிடுக |
| 258 | 23 & 24 | பிரகாரம் சென்னப்பட்டணத்துச் | பிரகாரம் பதிப்பிக்கப் பட்ட சென்னப்பட்டணத்துச் |
| 267 | 1 | சத்தியற்ற | சக்தியற்ற |



| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 271 | 27 | சாமார்த் | சாமர்த் |
| 272 | 17 | ஈசல்கள் | ஈசெல்கள் |
| 276 | 17 | எல்லாரும் | எல்லோரும் |
| 296 | 7 | வளாரி | வளரி |
| 302 | 24 | நிரைந்து | நிறைந்து |
| 333 | 15 | தென்பார் | தென்பார். |
| 336 | 5 | கௌரமாக | கௌரவமாக |
| ” | 23 | எட்டயபுறத்தார் | எட்டயபுரத்தார் |
| ” | 25 | கையெழுத்துச் | கையெழுத்து |
| 346 | 12 | கூலிக்காரனுங்கு | கூலிக்காரனுக்கு |
| ” | 15 | விட்டதாவுங் | விட்டதாயுங் |
| 350 | 23 | ஹெயிச், | ஹெயிச். |
| ” | 24 | கிருஷ்ணப்பிள்ளை | கிருஷ்ணபிள்ளை |
| ” | ” | சொக்கநாதம் பிள்ளை | சொக்கநாத பிள்ளை |
| 351 | 8 | பாரதி | பாரதி. |

32517